216652

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

ஏப்ரல் 4, 1997 தொகுதி - 28
எண் 1.

D
V211.31 N97
N 7.28.1
216652

வெளியீடு 30-4-98 Issued 30-4-98

1161/98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 4, 1997 – தொகுதி 28 – எண் 1

Friday the 4th April, 1997 – Volume 28 – No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

N.211, 31 N97.
11 . 28.1.
216652

04–04–1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | x v-xxv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-43 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| (அ) சிதம்பரனார் மாவட்டம், கடம்பூர் காவல் நிலையத்தில் கைதி மரணம் | 44-51 |
| (ஆ) லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தை முடித்து வைக்க அரசு எடுத்த நடவடிக்கை | 51-61, 110-111 |
| *3.* **விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை--** | |
| முன்னாள் இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்தி கொலையுண்டபோது ஏற்படுத்தப்பட்ட சொத்துச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க ஒரு நபர் ஆணையம் நியமனம் | 61-63 |
| *4.* **தகவல் கோரல்--** | |
| மழை காரணமாக சட்டமன்ற நூலகம் பாதிப்பு | 63-64 |
| *5.* **கவன ஈர்ப்பு--** | |
| மதுரை, பசுமலை மகாலட்சுமி மில்ஸ் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு | 64-68 |

| | பக்கங்கள் |
|---|---|
| 6. அறிக்கைகள் அளித்தல்— | |
| மனுக்கள் குழு .. .. | 68–69 |
| 7. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. | 69-109,111-150 |
| (ஆ) கோரிக்கை எண் 50-சுற்றுலா .. .. | |
| மாண்புமிகு திரு. கே.என். நேரு .. .. | 69, 73,136-142,143 |
| *மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் .. | 70, 74 125-136 |
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 69, 71, 74-82 |
| திரு. வெ.அ. ஆண்டமுத்து .. .. | 82-87 |
| *திரு. எஸ்.வி. கிருஷ்ணன் .. | 87-89 |
| திரு. எல். மூக்கையா .. | 89-93 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் .. | 94-98 |
| திரு. துரை. சந்திரசேகரன் .. .. | 98-102 |
| *திரு. பி.என். வல்லரசு .. .. | 102-106 |
| *திரு. பி. வெங்கடசாமி .. | 106-109 |
| திரு. ஜி.கே. மணி .. .. | 112-115 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் .. .. | 115-117 |
| *திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் .. .. | 118-125 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—.. .. | 151-152 |


216652



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச்சீட்டு. |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகு கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு, கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. **வணிக வரிகள் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:**
வணிக வரிகள்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:**
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.*

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
*இந்து சமய அறநிலையத் துறை.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
*சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:
*சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
*கதர் வாரியம், பூமிதானம் மற்று கிராமதானம், எழுதுபொருள் மற்று அச்சுத்துறை, அரசு அச்சகம்.*

26. மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
*மீன் வளம் மற்றும் மீன்வளர்ச்சிக் கழக மகளிர் மற்றும் குழந்தைகள் நல இரவலர் காப்பு இல்லம்.*



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education**.. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport**.. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation.** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Pulavar B.M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes.

| | |
|---|---|
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi and Printing** .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| **26. Minister for Fisheries** .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்*

**பேரவைத் துணைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி*

***மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. டாக்டர் வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ.சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்.சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்.சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. டி. சுந்தரராஜலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. சு. ராஜகுரு, | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ. , பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். .. வீரபாண்டி
24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.
31. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
32. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ.எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மைலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்
54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா. .. சிவகங்கை
59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 65. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 66. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 67. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 68. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |
| 69. | கோவிந்தன், திரு. வி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 70. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 71. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 72. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 73. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 74. | சந்தானம், திரு. எல். | .. சோழவந்தான் |
| 75. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 76. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 77. | சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ். | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 78. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 79. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 80. | சற்குண பாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 81. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 82. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 83. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 84. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 85. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 86. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |



| | | |
|---|---|---|
| 87. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 88. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 89. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |
| 90. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |
| 91. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 92. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 93. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 94. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 95. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 96. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 97. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 98. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 99. | சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 100. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 101. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 102. | சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 103. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 104. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 105. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 106. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராய நகர் |
| 107. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 108. | செல்வராஜ், திரு. டி. | .. உடுமலைப்பேட்டை |

109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
110. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு.. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
134. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ
145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே.என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்... பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161 புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்



176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்
180. மணிநாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
191. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
193. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
196. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
213. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கோ.க. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 22, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 ஏப்ரல் 4, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கடனறிந்து காலம் கருதி இடனறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை"*

ஆற்றவேண்டிய கடமையை அறிந்து, அதற்குரிய காலத்தையும் இடத்தையும் தேர்ந்து, சொல்ல வேண்டியதைத் தெளிவாகச் சிந்தித்துச் சொல்பவனே சிறந்த தூதனாவான்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 441, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**441—**

**சிப்காட் தொழில் மையத்திற்கு முதலீட்டாளர்கள்**

**292*—**திரு. நா. பெரியசாமி :**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழில் மையத்திற்கு முதலீட்டாளர்கள் விண்ணப்பித்து உள்ளார்களா?*

*(ஆ) முதலீட்டாளர்களை ஈர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

[1997 ஏப்ரல் 4

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். ஆனால் தொழில் மையம் பெருந்துறையில் அமைப்பது சிப்காட் அல்ல; பெரியார் மாவட்டம் பெருந்துறை மற்றும் ஈங்கூர் கிராமங்களில் சுமார் 2800 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தால் (டாசிட்) மைய அரசு ஆதரவு திட்டத்தின் கீழ் தொடங்கவுள்ள வளர்ச்சி மையத்தில் நில ஒதுக்கீடு கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) பொதுவாக, அரசினால் ஏற்கெனவே தொழில் தொடங்க தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டு வருகின்ற சலுகைகளைத் தவிர இத்திட்டத்திற்கென்று தனியாக முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான செயற்குறிப்பு இல்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை, 'டாசிட்' தொழில் வளர்ச்சி மையத்தில் முதலீட்டாளர்களுக்கு வழங்கக்கூடிய நிலத்திற்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா அல்லது வாடகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 524 தொழில் முனைவோரிடமிருந்து, 1,100 ஏக்கர் நில ஒதுக்கீடு கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றிற்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா அல்லது வாடகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்ற கேள்விக்கு விவரமான பதில் என்னிடத்தில் இல்லை. என்றாலும்கூட, பெரும்பாலும், விலை நிர்ணயிக்கப்பட்டுத்தான் அந்த இடங்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்காக நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு, அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக, வீட்டுமனைகள் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கான மனை போக, மீதமுள்ள இடம் மட்டுமே அவர்களிடமிருந்து பெறப்படும்.



1997 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய இந்த தொழில் வளர்ச்சி மையத்தில் மாநில அரசு முதலீட்டில் ஒரு பெரிய தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வளாகத்தில் சிறிய தொழில்கள் மாத்திரமல்ல, பெரிய தொழில்களையும் அமைக்கலாம். இப்பொழுது இந்த வளாகத்தை அமைப்பதற்கு ரூ. 30 கோடி தேவைப்படுகிறது. இந்தத் தொகையினை, மைய அரசின் மூலம் ரூ. 10 கோடியும், மாநில அரசின் பங்காக ரூ. 5 கோடியும், அகில இந்திய நிதி நிறுவனங்களின் மூலம் ரூ. 4 கோடியும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் ரூ. 1 கோடியும்—இந்த வகையில் ரூ. 20 கோடியும்—வெளிச் சந்தையிலிருந்து ரூ. 10 கோடியும் சேர்த்து, ஆக மொத்தம் ரூ. 30 கோடி பெறலாம் எனக் கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால், நிதி நிறுவனங்கள் தங்களது பங்கினைச் செலுத்தாத காரணத்தினால், மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டு, மைய அரசின் பங்குத் தொகை ரூ. 10 கோடி, மைய அரசு கடன் ரூ. 5 கோடி, மாநில அரசு பங்குத் தொகை ரூ. 5 கோடி, மாநில அரசு கடன் ரூ. 10 கோடி, ஆக மொத்தம் ரூ. 30 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கே ரூ. 10 கோடி கடன் வழங்க வேண்டியுள்ள நிலையில் மாநில அரசு இருப்பதால், இந்த வளாகம் அமைந்த பிறகு, அது வளருகின்ற விதத்தைப் பார்த்து, மாநில அரசின் சார்பாக, பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ ஒரு தொழிற்சாலை அமைக்க முன்வரலாமா என்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 442, திரு. கே.ஆர்.ஜி. தனபாலன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**442—**

**பணிக்காலத்தில் காணாமல் போன அரசு ஊழியர் குடும்பத்திற்கு உதவி வழங்குதல்**

*2752—**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பணியாளர் ஓய்வு பெற்றபின் அல்லது இறந்துவிட்டபின் ஓய்வூதியம் பணிக்கொடை மற்றும் இன்ன பிற உதவித் தொகைகள் வழங்கப்படுவதுபோல் அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் காணாமல் போய்விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

*முற்பகல் 9-35*

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரத்தில் பொன்னம்மாள் பேட்டையைச் சேர்ந்த தனகோடி என்பவர், தமிழ்நாடு மின்சார வாரியத்தில், இளநிலைப் பொறியாளராகப் பணியாற்றி வரும்போது, கடந்த 10 ஆண்டுகளுக்குமுன், ஒரு நாள் வேலைக்குச் சென்றவர், இதுநாள் வரை வீடு திரும்பவில்லை. காவல் துறையிலே புகார் செய்தும், இது நாள் வரை தகவல் ஏதும் இல்லை. அவர் பிரிவால், அவருடைய மனைவி நோய்வாய்ப்பட்டும் உள்ளார். அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனவே, அவருடைய குடும்பத்திற்குக் கிடைக்க வேண்டிய குடும்பநலத் தொகை, வைப்புத் தொகை, பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்களை அளிப்பதற்கும், அந்தக் குடும்பத்திற்கு, வாரிசு அடிப்படையிலே, வேலைவாய்ப்பு அளிப்பதற்கும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்துடன் பரிசிலிப்பாரா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா, அரசுப் பணியாளர் காணாமல் போய்விட்டால், அவருடைய குடும்பத்திற்கு ஓய்வுத் தொகை வழங்கப்படுமா என்பதுதான். அதாவது, இறந்து போய்விட்டால் வழங்கப்படுகிற உதவித் தொகையைப் போல, காணாமல் போய்விட்டால் வழங்கப்படுமா என்பதுதான் கேள்வி. உண்மையில் காணாமல் போனால் வழங்கப்படும். எதையாவது எடுத்துக் கொண்டு காணாமல் போய்விட்டால், வழங்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர், மின்வாரிய ஊழியரைப் பற்றிக் கேட்கிறார். அரசு ஊழியர் காணாமல் போனால்தான், இரண்டாண்டுகள் கழித்து, அவரைத் தேடிப் பார்த்தும் காணவில்லை என்று காவல்துறையினர் அறிவிப்புத் தந்த





பிறகு, அவருடைய குடும்பத்திற்கு பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் இவையெல்லாம் வழங்கப்படுகிறது. காணாமல் போய், 7 ஆண்டுகள் ஆகிவிட்டால், இறந்து விட்டதாகக் கருதி, அவருடைய குடும்பத்திற்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி ஒரு இலட்சம் ரூபாய் தரப்படும். இதுதான் இன்றுள்ள நிலைமை, அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில். மின்வாரிய ஊழியர்கள் காணாமல் போனால், என்ன என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி 7 ஆண்டுகள் ஒருவர் காணாமல் போய்விட்டால், அது 'சிவில் டெத்' என்று சட்டத்திலே இருக்கிறது. அதன்படிதான் இப்போது அரசு வழங்குகிறது என்று கருதுகிறேன். அதை, கேள்வி கேட்பதற்கு முன்னாலேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்ட காரணத்தினால், என்னுடைய கேள்விக்கே இடமில்லை என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் வருடத்தில், கல்குளம் வட்டத்தில், வேளாண்மைத் துறையில், இதுபோன்ற அதிகாரி ஒருவர் வேலைக்குச் சென்றவர், பின் வீடு திரும்பவே இல்லை. அந்த அலுவலகத்திலே விசாரித்த பின்னரும்கூட, எந்தத் தகவலும் தரப்படவில்லை. காவல் துறையும் உரிய நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. அந்தக் குடும்பத்தில், அவருடைய மனைவி, இரண்டு குழந்தைகள் உள்ளனர். அவர்களுக்கு, இந்தத் தொகை காலம் பிறழாமல் கிடைக்க, நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. மணி அவர்கள் பல நேரங்களிலே என்னிடத்திலே சிபாரிசுச் சீட்டுகள் கொடுப்பதுண்டு. அதுவும் தனிப்பட்ட சீட்டாக இருக்காது. பொதுப் பிரச்சினை குறித்துத் தான் இருக்கும். அது அவருடையத் இயல்பு; பாராட்டக்கூடிய இயல்பு. அப்படிக் கொடுக்கப்பட்ட சீட்டுகளில், இதையும் அவர் கொடுத்திருந்தால், இந்நேரம் கண்டுபிடித்து, அவருக்கு நான் அறிவித்திருப்பேன். இனிமேலாவது அதுபற்றிய விவரத்தைத் தனியாக எனக்கு எழுதித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் 1995-இல், இதுபோலவே, பொதுப்பணித் துறையில் பணியாற்றிய திரு. லிங்கேசன் என்ற என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர், மணிமுத்தாறு அணையைப் பழுதுபார்க்கும் பணிக்குச் சென்றபோது, காணாமல் போய்விட்டார். ஆனால், கடந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், இப்போது மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் கொடுக்கப்பட்ட மனுமீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால், இதிலே வாரிசுச் சான்றிதழ் - 'லீகல் ஹேர் சர்டிபிகேட்' — வழங்குவதற்கு, வட்டாட்சியர், இறப்புச் சான்றிதழ் — 'டெத் சர்டிபிகேட்' - இருந்தால்தான் வழங்கமுடியும் என்று சொல்கிறார். எனவே இப்படிப்பட்ட நிலைமையில், காணாமல் போனவருடைய 'பேமிலி டிக்ளரேஷனை' வைத்து, அவர் பணியாற்றிய அலுவலகத்தில் கொடுக்கப்படுகிற 'பேமிலி டிக்ளரேஷனை' வைத்து, அவருடைய வாரிசுதாரர் இவர்தான் என்று நிர்ணயம் செய்து, அந்தச் சலுகைகள் அவருடைய வாரிசுதாரருக்கு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உரிய முறைப்படிதான் காணாமல் போனவர்களைப் பற்றிய விவரங்களைக் கண்டறிந்து, இந்த நிதி, ஓய்வூதியங்கள் இவையெல்லாம் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் கூறுவதுபோல, தனிப்பட்ட நிலைமைகள் எதுவாக இருந்தாலும், அதைப்பற்றி அரசுக்குத் தனியாக புகார் செய்து விட்டால், அதுபற்றி முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 9-40

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்போது இதுபோன்ற ஓய்வூதியங்கள் வழங்குவதற்கு, தனிப்பட்ட முறையிலேயும், பொதுவாகவும், முயற்சிகள் எல்லாம் எடுப்பதாகக் கூறினார்கள். ஓய்வூதியம் கொடுப்பதோடு, இறந்து விட்டவர்களுக்குக் கருணை அடிப்படையிலே கொடுக்கக்கூடிய அந்தப் பணியினையும், அவருடைய வாரிசுதாரருக்குக் கொடுக்க வேண்டும். கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு 1,300 பேர்கள்கூட வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். யாராவது குடும்பத் தலைவர் இறந்துவிட்டால், ஒருவேளை கல்வித் துறையில்



1997 ஏப்ரல் 4]

வேலைவாய்ப்புகள் இல்லாவிட்டாலும் மாற்றுத் துறையிலாவது கருணை அடிப்படையில் அவர்களுக்கு ஓராண்டிற்குள் வேலைவாய்ப்பு அளிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரசு உதவி பெறும் கல்வி நிலையங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்கள்கூட பணிக் காலத்தில் காணாமல் போய்விட்டால் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படுகின்றன. அரசு ஊழியர்கள் உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்கள், அவர்கள் ஓய்வூதியம் பெறும்போது காணாமல் போய்விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும் குடும்ப ஓய்வூதியம் பெற்றுவருபவர்கள் காணாமல் போய்விட்டால்கூட அவர்களுக்கு அடுத்தபடியாக குடும்ப ஓய்வூதியம் பெற யார் தகுதி உடையவர்களோ அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்துடன் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் கூறிய அந்தக் கருத்தும் இணைக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாக சித்தசுவாதீனம் இல்லாமல் போன அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரக்க சிந்தனையோடு அதுவும் ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் டெத் முடிந்து 7 ஆண்டு காலம் ஆகி, 8-வது ஆண்டு அல்லது 9-வது ஆண்டு அவர் திரும்பி வந்தால் அவருடைய குடும்பத்திற்கு கொடுத்த பணத்தை அரசு திரும்ப வசூல் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் திரும்பி வந்தால் அதுபற்றி யோசிக்கலாம்.

அதுவரையில் யாரையும் மாண்புமிகு உறுப்பினர் ஒளித்து வைத்திருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்கள் ஓய்வுபெற்ற பிறகு இறந்துபோனால், மாதா மாதம் அவர்கள் செலுத்த வேண்டிய 20 ரூபாயைச் செலுத்தியதற்குப் பின்னால் ஓராண்டு முடிந்ததற்குப் பின்னால் அவர்கள் இறந்துவிட்டால், அவர்களுக்கு 25,000 ரூபாய் வழங்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது சென்ற வருடம் கடைசி மாதத்தில் இது அறிவிக்கப்பட்டது என்று கருதுகிறேன். இப்போது 3 மாதங்களுக்குள்ளாகவே பல பேர் மரணமுற்றிருக்கிற காரணத்தினாலே அந்தச் சலுகை அவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே உத்தரவிட்ட தினத்திலிருந்தே அந்தச் சலுகையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரவிடப்பட்ட தினத்திலிருந்தே சலுகை அளிக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அலட்சியப்படுத்தப்படாமல் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைத்தியலிங்கம்.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல காணாமல் போவதிலே பல வகைகள் இருக்கின்றன. ஆனால் அரசு ஊழியர்கள் திடீரென்று ஏற்படுகின்ற மழை, வெள்ளத்தில் காணாமல் போகிறபோது அடித்துக்கொண்டு சென்றுவிடுகின்றபோது அதற்குரிய சாட்சியங்கள் இருந்தாலும் உடல் கிடைக்காத காரணத்தால் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று நிரூபிக்கமுடியாமல் போய்விடுகிறது. அப்படிப்பட்ட குடும்பங்களுக்கும் 2 ஆண்டு காலம் கழித்துத்தான் 'லீகல் ஹேர் சர்டிபிகேட்' வழங்கமுடியும் என்று சொல்கிறார்களே, அந்த முறையைத் தளர்த்தி சாட்சியங்களை விசாரித்து அந்தச் சான்றிதழைத் தருவதற்கு ஏற்பாடு செய்யமுடியுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்த நிகழ்வு விதிவிலக்கு நிகழ்வாகும். அப்படிப்பட்ட விதிவிலக்குகளில், கட்டாயமாகப் பழைய விதிமுறைகளைப் பின்பற்றாமல், அதற்கேற்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.ஜி. சம்பத்.

**திரு. ஏ.ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்கள் இறந்துவிட்டால் கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது கல்வித் துறையைப் பொறுத்தமட்டிலே 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் பலருக்கு அந்த வேலைவாய்ப்பு கிட்டாமல் இருக்கிறது. எனவே கல்வித் துறையில் அப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தால் வேறு துறையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையைப் பொறுத்தவரையில் அந்த உரிமை புறக்கணிக்கப்படவில்லை. இருந்தாலும் வேலைவாய்ப்புகளுக்குரிய சூழ்நிலை இல்லாத காரணத்தால் அவைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கக்கூடும். அது கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 443, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**443—**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்.**

*695—**திரு. அ. வெங்கடாசலம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, திருவரங்குளம் ஒன்றியம், சூலமங்கலம் தெற்கு அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 4

(அ) செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சூலமங்கலம் தெற்கில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்குரிய கருத்துருக்கள் சென்ற ஆண்டும் அரசுக்கு அனுப்பப்பட்டன. இந்த ஆண்டும் அந்தப் பரிந்துரைக் கடிதங்கள் அரசுக்கு வரப்பெற்றிருக்கின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சரிடத்திலேயும் இந்த ஆண்டு உயர்நிலைப்பள்ளி வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். ஆகவே, கருத்துருக்கள் அனுப்பப்பட்டிருக்கிற நிலையில், அந்த நடுநிலைப் பள்ளியை இந்த ஆண்டே உயர்நிலைப் பள்ளியாக அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு சில விதிமுறைகள் குறைந்தபட்சம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அடிப்படை உள்ளது. அவை எல்லாம் நிறைவேற்றப்பட்டதாகக் கருத்துரு வருமானால் அதற்கு முன்னுரிமை தந்து கவனிக்க முடியும். மேலும், அங்கே 8 ஆம் வகுப்பு பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் 50 ஆக இருக்க வேண்டுமென்று விதி இருந்தபோதிலும் இப்போது 80, 100 என்ற அளவுக்கு அந்த எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகின்றது. எனவே, அந்த அடிப்படையில், மற்ற விதிமுறைகளும் நிறைவேற்றப்பட்டதாக முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக அல்லது மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக தகுந்த பதிவேடுகள் அனுப்பப்பட்டிருக்குமானால் அது முன்னுரிமை அடிப்படையிலே கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. கல்வியின் மூலம்தான் இந்த நாடு சரியான முன்னேற்றத்தை அடையும் என்று நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எல்லா இடங்களிலும் அறிவித்து வருகிறார்கள்.



1997 ஏப்ரல் 4]

எனவே, குறைந்த அளவு தகுதியின் அடிப்படையிலே, பொதுமக்களால் நிலம் போன்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட நடுநிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் தரம் உயர்த்துவதற்காக முன்மொழிவுகள் வழங்கப்பட்டிருக்கிற எல்லா இடங்களுக்கும் கொடுப்பது சாலப் பொருத்தமாக இருக்கும். ஆகவே, எல்லா முன்மொழிவுகளுக்கும் இந்த ஆண்டிலேயே கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களுக்கும் வழங்குவதற்கு நிதிநிலை இடம் தரவில்லை. நிதிநிலை வசதியைப் பொறுத்து மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை, உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை, நடுநிலைப் பள்ளிகள் எத்தனை, துவக்கப் பள்ளிகள் எத்தனை என்று முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது. அந்தப் பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து ஆய்வு செய்ய ஓர் உயர்மட்டக் குழு இருக்கிறது. மிகமிக பின்தங்கிய வட்டாரம், சுற்றுப்புறத்தில் பள்ளிக்கூடங்கள் இல்லை, மாணவர்கள் சென்று படிப்பது கடினம், போன்ற நிலைமைகட்கு முன்னுரிமை இருக்கிறது. ஆனாலும்கூட அதே வகையில் 10 பள்ளிக்கூடங்கள் இருக்குமானால், அவைகளுக்கு இடையில் மறுபடியும் மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து, அதனால் பயனடையக் கூடியவர்களின் எண்ணிக்கையை வைத்து, கணக்கிடப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக்குவதற்கு இருக்கக்கூடிய தகுதிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் தகுதியிலே ஒன்று அருகாமையில் இருக்கக்கூடிய பள்ளியிலே 'நோ அப்ஜெக்சன் சர்டிபிகேட்' வாங்க வேண்டுமென்று ஒரு விதிமுறை இருக்கிறது. ஆனால் எனது தொகுதியான மேலப்பாளையத்தில் இருக்கக்கூடிய காயிதே மில்லத் நடுநிலைப்பள்ளி மாநகராட்சியால் நடத்தப்படுகிறது. அருகாமையிலே இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் தனியாரால் நடத்தப்படுகின்றன. தனியார் பள்ளிகள் அதற்கு 'நோ அப்ஜெக்சன் சர்டிபிகேட்' கொடுப்பதற்கு தயாராக இல்லை. எனவே, மாநகராட்சியால் நடத்தப்படுகின்ற பள்ளிகளின் வளர்ச்சியைக் கருதியும், அங்கே இருக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும், இப்படிப்பட்ட பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளாக இருந்தாலும்கூட, பெரும்பாலான பள்ளிகள் அரசின் நிதியுதவியிலேதான் நடத்தப்பெறுகின்றன. எனவே, அரசாங்க நிதியினைச் செலவிட்டு பக்கத்திலே ஒரு தனியார் பள்ளி இதற்கு முன்னாலேயே நடைபெறுகின்றபோது மாநகராட்சிப் பள்ளியையோ, நகராட்சிப் பள்ளியையோ அதே இடத்தில் தரம் உயர்த்துவது என்பது அரசினுடைய செலவை இரட்டிப்பாக்குமே தவிர பயன் குறைவாகத்தான் இருக்கும். அந்தத் தனியார் நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள் எந்தக் காரணத்தாலேனும் குறைபாட்டுக்கு உரியதாக இருக்குமானால் அப்போது இதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில் கண்ணாட்டுவிளை என்று சொல்லக்கூடிய உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்காக 50 ஆயிரம் ரூபாய் கட்டியாகிவிட்டது. பாக்கியையும் உடனே கட்டிவிடுவார்கள். எனவே, வெகுவிரைவில் அதை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுவதும் கட்டிய பலபேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். முழு நிதியையும் கட்டி எல்லா வசதிகளையும் செய்து தந்தவர்களுக்கு நாம் அளிக்கக்கூடிய பள்ளிகளிலே முன்னுரிமை வழங்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதற்கு அடுத்து நிதி கட்ட வேண்டியவர்கள் பற்றி அரசு கவனிக்கும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 444, திரு. அ. அசோகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**444—**

**திருவாரூரில் பெண்கள் கல்லூரி அமைத்தல்**

*2907—**திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 4]

திருவாரூரில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் துவங்கப்பட்ட மாவட்டங்களில் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தை ஒரு தாழ்த்தப்பட்ட மாவட்டம் என்றே கூறலாம். காரணம் நான்கு ரிசர்வ் தொகுதிகள், அதாவது நன்னிலம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், வலங்கைமான் போன்ற ரிசர்வ் தொகுதிகள் அடங்கிய மாவட்டம். அதில், திருவாரூரைச் சுற்றியுள்ள கிராமங்களில், பெரும்பாலான தாழ்த்தப்பட்ட பெண்கள் பட்டப்படிப்பைத் தொடர கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், 30 கி.மீ. தூரத்தில் உள்ள நாகப்பட்டினத்திற்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதுவும் அங்கிருப்பது தனியார் கல்லூரி. அந்தத் தனியார் கல்லூரியில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பு. மேலும் நன்கொடை என்ற பெயரால் அதிகமாகப் பணம் வசூல் செய்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகிற கல்வியாண்டிலாவது, எங்களது மாவட்டத்தினுடைய நிலைமையை உணர்ந்து, மறுபரிசீலனை செய்து, ஒரு பெண்கள் கல்லூரியைத் துவங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை என்ற கேள்விக்கே இடமில்லை. முதல் பரிசீலனையே நடக்கவில்லை. கல்லூரி தொடங்குவது என்பது அரசாங்கத்தினுடைய நிதி வாய்ப்பு முறையில், அதைப் பயன்படுத்த வேண்டிய வகையில், உள்ளபடியே தொடக்கப்பள்ளி, அதற்கு அடுத்து, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளினுடைய தேவைகளையே முழுவதும் நிறைவேற்றுவதற்கு பல ஆண்டு காலமாகும். எனவே, கல்லூரி தொடங்குவதில், தனியார் விருப்பப்பட்டு தொடங்கினால் தவிர, அரசு தொடங்கக்கூடிய நிலை தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

[1997 ஏப்ரல் 4

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி ஒன்று இருக்கின்றது. அந்தக் கல்லூரி 'கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி' என்று இயங்கி வந்தது. இடையிலே வந்த அரசினரின் பெருந்தன்மை குறைவு காரணமாக, தலைவர் கலைஞர் பெயரை மாற்றி 'அரசினர் மகளிர் கலைக் கல்லூரி' என்று மட்டும் இப்போது இயங்குகிறது. ஆனால், இன்று மிகுந்த பரந்த மனப்பான்மையோடு மற்ற கட்சித் தலைவர்கள் பெயரை எல்லாம், அரசு நிறுவனங்களுக்கு வைக்கின்ற, பெருந்தன்மை கொண்ட, தாய் உள்ளம் கொண்ட தலைவர் கலைஞரின் பெயரை அரசு மீண்டும் புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு வைக்க முன்வருமா என்பதைப் பணிவோடு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து என்றாலும் அதற்கு முறையான வேண்டுகோள் வர வேண்டும். முறையான வேண்டுகோள் அந்தக் கல்லூரி முதல்வரிடமிருந்தோ - தொடர்புடையவர்களிடமிருந்தோ கிடைக்குமானால் எளிதாக அந்தப் பெயரை வைக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி வேண்டும் என்று கேட்பவர்கள், குறிப்பாகப் பெண்கள் கல்லூரி வேண்டும் என்று கேட்பவர்கள், 10 ஏக்கர் நிலம், நான்கு, ஐந்து கட்டிடங்கள், ஹாஸ்டல் கட்டிடம் மற்றும் ஆபீஸ் கட்டிடம் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கு முன்வருகிறார்கள், இவற்றையெல்லாம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள், நானும் அவர்களைத் தூண்டி அவைகளையெல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். இதற்குப் பிறகாவது, தயவு செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்படி எங்கேயெல்லாம் கேட்கிறார்களோ அவர்களுக்கு, கல்லூரிகளை சாங்ஷன் செய்வதற்காக, உதவி செய்வதற்காக முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சொன்னது போல, இவ்வளவு செய்கிறவர்களுக்கு, அந்தப் பெருமை அவர்களை விட்டுப்



1997 ஏப்ரல் 4]

போய்விடக்கூடாது என்பதால் அவர்களே நடத்த வேண்டுமென்று அரசு கேட்டுக் கொள்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பள்ளிகள், கல்லூரிகள் அமைப்பதில் அரசாங்கத்திடம் போதுமான நிதியில்லை என்ற முறையில் அது மறுக்கப்படுகிறது என்று நான் அறிகிறேன். ஆனால், சிலர் புரவலர் குழு அமைத்து பள்ளிகள் அல்லது கல்லூரிகள் அமைக்க முன்வருகிற நிலையில் இடப்பற்றாக்குறை என்கிற பிரச்சினை பெரும் பிரச்சினையாக எழுகிற நிலையில், கோவிலுக்கு என்று இருக்கின்ற அந்த இடங்களை, குறிப்பான இடங்களை, அந்த நிலத்தின் தன்மை குறித்த நம்பர்களைக் கூட குறித்து மனு போடும் பட்சத்தில், அறநிலையத் துறையிலிருந்து, கல்வித் துறைக்கு உரிமை மாற்றம் செய்வதில் விரைவான முறையில் உரிமை மாற்றம் செய்து அந்த இடத்தை பள்ளிகள் அல்லது கல்லூரிகள் அமைப்பதற்கு தனியார்களுக்கு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையின் நிலம், தங்களுக்குத் தேவையென்று அவர்கள் கருதினால் அரசுத் துறைக்கு—அதாவது அரசின் இன்னொரு துறைக்கு— மாற்றுவதை அவர்கள் எளிதாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இரண்டாவது, அறநிலையத் துறை நிலம் என்று தனியாக இல்லை. ஒவ்வொரு குறிப்பிட்ட கோவிலுக்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு மடத்திற்கோ சொந்தம். அவர்கள் அந்த நிலத்தைத் தருவதற்கு இசைவார்களா என்பது ஒரு பெரிய கேள்வி. இரண்டாவது, தனிப்பட்டவர்கள் கல்வி நிலையம் நடத்துவதற்கு இப்படி நிலம் கிடைக்கும் என்ற அடிப்படை இருக்குமானால், பலபேர் இந்த அடிப்படையிலேயே கல்வி நிலையம் துவங்க ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே, இந்த நிலம் அவர்களுக்குத் தரப்படுமானால் உரிய விலைக்கு விற்பதற்கு அறங்காவல் துறையைச் சேர்ந்த அந்த அமைப்பு ஏற்றுக்கொண்டு விலைக்கு விற்கலாமே தவிர, நேரிடையாக வழங்க முடியாது.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 445, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**445—**

**மின்சாரத்திற்கு அளிக்கப்படும் வரிவிலக்கு**

*3674—**திரு. ஜி.பி. வெங்கிடு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சர்க்கரை ஆலை, காகித ஆலை மற்றும் சில இரசாயன ஆலைகளில் அவைகளாலேயே சுயமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு அளிக்கப்படும் வரிவிலக்கு புதியதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்கும் நீட்டிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காகிதம், இரசாயனம், சர்க்கரை மற்றும் துணி ஆலைகள், அவர்களாலேயே சுயமாக உற்பத்தி செய்து அவர்களாலேயே நுகரப்படும் மின்சாரத்திற்கு அளிக்கப்படும் மின்வரி விலக்கு இவ்வாறான புதிதாகத் தொடங்கும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்".

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 446, திரு. ஆ. ஜெ. மணிக்கண்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**446—**

**ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்**

*4582—**திரு. ஆ.ஜெ. மணிக்கண்ணன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், திருநாவலூர் ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தவும், அதற்குப் புதிய கட்டிடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநாவலூரில் தற்போது செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையமே போதுமானதாகும். அது அரசுக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது. இதில் தினசரி வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கை 39 மற்றும் உள்நோயாளிகளின் எண்ணிக்கை 4 ஆகும். இதை அரசு மருத்துவமனையாக உயர்த்தி அதற்குப் புதிய கட்டிடம் கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ஆ. ஜெ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பித்து சுமார் 40 ஆண்டு காலம் ஆகிறது. அந்தக் கட்டிடம் மிகவும் பழுதுபட்ட நிலையில் இருக்கிறது. பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அவர்கள் கூட அந்தக் கட்டிடம் பயன்படாது என்று சான்றளித்துள்ளார்கள். இப்போது ஆரம்பச் சுகாதார நிலையம், மருத்துவர் விடுதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. நமது ஆட்சி பொறுப்பேற்றவுடன் மிகச் சிறப்பாக டாக்டர்கள் சிகிச்சை அளிப்பதால் மக்கள் மிகவும் வரவேற்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் எல்லோரும் அந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தை அப்-கிரேடு செய்து 25 படுக்கை வசதிகளுடன், மகப்பேறு மற்றும் சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே தினந்தோறும் வரக்கூடிய புறநோயாளிகளின் எண்ணிக்கை 39 ஆக இருக்கிறது. அந்த எண்ணிக்கையானது குறைந்தபட்சம் 300 அல்லது 400 வரை வருமானால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, அப்படிப்பட்ட வசதிகள் செய்துதரப்படும். அதற்காக நோயாளிகள் அந்தப் பகுதியிலே அதிகம் வரவேண்டும் என்று நான் விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்-கிரேடட்—நிலை உயர்த்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தமிழகத்திலே சில இடங்களில் உள்ளன. அந்த அப்-கிரேடட் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே, தாலுக்கா

மருத்துவமனைகளிலே உள்ளது போன்று அனைத்து வசதிகளும் இருப்பதோடு, மருத்துவர்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாக உள்ளன. இப்போது, 1997-98ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் என்று அறிவித்துள்ளார்கள். ஆனால், இப்போது எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் சராசரியாக இரண்டு மருத்துவர்களே பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். அப்படி 24 மணி நேரமும் இயக்கப்படுகின்ற அந்த ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையம் நிலை உயர்த்தப்படுவதோடு அனைத்து வசதிகளும், கண்டிப்பாக தாலுக்கா மருத்துவமனைகளில் உள்ள அனைத்து வசதிகளும் கொண்டதாக இருக்குமா, அங்கே மருத்துவர்கள் கூடுதலாகப் பணியமர்த்தப்படுவார்களா என்று கேட்பதோடு, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை ஒன்றியம், தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம்-இராமசாமி படையாட்ச்சியார் ஆகிய மாவட்டங்களிலே மிகப்பெரிய ஒன்றியமாகும். கிட்டத்தட்ட 1,50,000 மக்கட்தொகை கொண்ட பகுதி. அந்த ஒன்றியத்திலே ஒரே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதுவும் இலவநாசம் கோட்டையிலே இருக்கிறது. கிளியூர் மற்றும் ஆசனூர் ஆகிய இரண்டு இடங்களிலே ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்கான அனைத்து வசதிகளும் உள்ளன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கையிலே பேசுவது மாதிரி வினா நேரத்தில் பேசக்கூடாது, உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, அப்-கிரேடு செய்யப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே, தாலுக்கா மருத்துவமனைகளிலே இருப்பது போன்ற எல்லா வசதிகளையும் செய்து தர முடியாது. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அடிப்படை வசதிகள், முதலுதவி போன்ற சிகிச்சைகளை அளிப்பதற்காக தொடங்கப்பட்டு, செயல்படுகின்ற மருத்துவமனைகள். ஆனால் தாலுக்கா மருத்துவமனையில் போஸ்ட் மார்ட்டம் முதற்கொண்டு எல்லாவிதமான நோய்களையும் போக்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே அப்-கிரேடட் ஆரம்பச் சுகாதார நிலையத்திலே அதிக டாக்டர்கள் நியமிக்கப்படுவார்களா என்று



கேட்டார்கள். அதிகபட்சமாக 5 டாக்டர்கள் நியமிப்பதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 447, திரு லி. அய்யலுசாமி, திரு. என். பெரியசாமி, மற்றும் திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**447—**

### மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கட்டிடம்

*866—**திரு. லி. அய்யலுசாமி :**

*1095—

**திரு. என். பெரியசாமி :**

**திரு. எம். ஆண்டி அம்பலம் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடப் பணி தொடங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முடிவுறும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்காக மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு, கட்டிடப்பணிக்காக ரூ.400 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப்பணி 1997 மார்ச் திங்களில் துவக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கட்டுமானப் பணி 18 மாதங்களுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டாட்சியர் அலுவலகம் கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மிக்க நன்றி. அந்த மாவட்டாட்சியர் அலுவலகத்தில், மாவட்டத்தினுடைய ஏனைய அரசு அலுவலகங்களையும்

ஒரே இடத்தில் கட்டுவதற்கு உத்தேசம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் விளக்கமாகவே சொல்கிறேன் அரசு ஆணை நிலை எண் 1119, வருவாய், நாள் 21-7-1987-இல் புதிதாக ஏற்படுத்தப்பட்ட சிதம்பரனார் மாவட்டத்திற்கான மாவட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட இதர அலுவலகங்களைக் கொண்ட மாவட்டப் பெருந்திட்ட வளாகம் ஏற்படுத்த வேண்டி, தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்காக, சிப்காட், தூத்துக்குடி வட்டம், மீளவிட்டான் கிராமத்திலே கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் சுமார் 244.16 ஏக்கர் நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்ற ஆணையிடப்பட்டது. மேற்கண்ட நிலங்களைக் கையகப்படுத்தியதை எதிர்த்த நிலச் சொந்தக்காரர்களுக்குச் சாதகமாக நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டதன் விளைவாக, இந்த நிலங்களில் கட்டடம் கட்டும் பணி தடைப்பட்டது. எனவே மாற்று இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி தூத்துக்குடி நகராட்சிக்குச் சொந்தமான மீளவிட்டான் கிராமம் புல எண் 1543-ல் 30.47 ஏக்கர் நிலமும், மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான புல எண் 229-ல் 30 ஏக்கர் நிலமும் சேர்த்து, 60.47 ஏக்கர் நிலத்தில் சிதம்பரனார் மாவட்டப் பெருந்திட்ட வளாகம் ஏற்படுத்த அரசு ஆணை எண் 713, வருவாய்த் துறை, நாள் 25-8-1993-இல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சிதம்பரனார் மாவட்டத்தில் மாவட்டாட்சியர் அலுவலகம் கட்டப்படும் என்று சொன்னார்கள், அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1989-ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்த நேரத்தில், அதற்கு அடிக்கல் நாட்டப்பட்ட நேரத்தில் சிப்காட் வளாகத்தில் அடிக்கல் நாட்டிவிட்டு, அப்போது ஒரு அறிவிப்பைக் கொடுத்தார்கள். மறைந்த காமராஜ் அவர்களை ஈன்றெடுத்த அன்னையார் சிவகாமி அம்மையார் பெயர் வளாகத்தின் ஒரு பகுதிக்குச் சூட்டப்படும் என்றும், இன்னொரு பகுதிக்கு மறைத்த கழக முன்னோடி கே.வி.கே. சாமி அவர்கள் பெயர் சூட்டப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு அறிவித்தார்கள். மீண்டும் அதே பெயர்கள் அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே அறிவித்ததற்குப் பிறகு, அதுதான் முடிவும் இறுதியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 448, திரு. ச. அழகிரி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**448—**

## பழுதடைந்த பாலத்தைக் கட்டுதல்

*216-**திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமுட்டம் பேரூராட்சி புதுக்குப்பத்தில் பழுதடைந்துள்ள பாலத்தை அரசு மீண்டும் கட்டித் தருமா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமுட்டம் பேரூராட்சியில், புதுக்குப்பத்தில் பழுதடைந்துள்ள பாலத்தை மீண்டும் கட்டுவதற்கு சுமார் ரூ.10/- இலட்சம் செலவாகும். இதனைக் கட்டுவதற்கு நெடுஞ்சாலைத் துறையிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் இதனைக் கட்ட முடியுமா என்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த புதுக்குப்பம் பாலம் திருமுட்டம் பேரூராட்சி எல்லைக்கு உட்பட்டது. 1993-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள பாதிப்பின்போது அந்தப் பாலம் விழுந்துவிட்டது. இதுவரை பல்வேறு திட்டங்களிலே அது சேர்க்கப்பட்டும்கூட, நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பாலத்தை கட்டுவதற்கு உள்ளாட்சித் துறையின் மூலமாக நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு, பேரூராட்சி மன்றத்தில், பேரூராட்சி எல்லைக்குள் பணியாற்றுவதில் இருக்கிற சங்கடம் தெரியும். இருந்தாலும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சரும் என்னிடத்தில் 2,3 முறை இதைப்பற்றித் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே

மாவட்ட ஆட்சியருக்கு, எப்படியாவது எந்தத் துறை மூலமாவது அதைக் கட்ட வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுத்து, அவரிடம் கேட்கப்பட்டது. பரவலாக்கப்பட்ட திட்டத்திலாவது இதை மேற்கொள்ளலாம் என்ற கருத்தும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே, இப்பாலப் பணியினை நடப்பு ஆண்டில் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கான கருத்துருவை மாவட்ட ஆட்சியருக்குப் பரிந்துரை செய்யுமாறு திருமுட்டம் பேரூராட்சி நிர்வாக அதிகாரிக்குப் பணிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பணியை அவர் செய்து முடித்த பிறகு, மாவட்ட ஆட்சியருடைய தகவல் கிடைத்ததும், மீண்டும் நான் நேரிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 449, திரு.எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**449—**

**நவீன கழிப்பிடக் கழிவுகளை அகற்ற பவர்டில்லர்கள் வழங்குதல்**

*4316—**திரு. எஸ். எஸ். பொன்முடி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர், பல்லடம் ஒன்றியங்களில் பேரூர் மற்றும் கிராம பஞ்சாயத்திற்கு நவீன கழிப்பிடக் கழிவுகளை அகற்ற பவர்டில்லர்கள் வாங்க வசதியில்லாத ஊராட்சிகளுக்கு அரசே வழங்க ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், பல்லடம் ஒன்றியங்களில் பேரூர் மற்றும் கிராம பஞ்சாயத்திற்கு நவீன கழிப்பிடக் கழிவுகளை அகற்ற பவர்டில்லர்கள் வாங்க வசதியில்லாத ஊராட்சிகளுக்கு அரசே வழங்க ஆவன செய்யுமா என்ற கேள்விக்கு, தற்சமயம் நிதிநிலையை ஒட்டி, அது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றக் கூடாது என்ற அடிப்படையில்



4 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு குறிப்பிட்ட தினத்திலிருந்து உலர் கழிப்பிடங்களைப் பயன்படுத்தக் கூடாது என்ற அரசு உத்தரவின் காரணமாக அனைத்து உலர் கழிப்பிடங்களும் மூடப்பட்டன. அந்த அடிப்படையில், அவரவர் வசதிக்கு ஏற்ப நவீனக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. அந்த நவீன கழிப்பிடங்களிலிருந்து அகற்ற வேண்டிய கழிவுகளை அகற்றுவதற்கு வசதிகள் இப்போது எதுவும் இல்லை. திரும்பவும் துப்புறவுப் பணியாளர்களை வைத்து அந்தக் கழிவுகளை மொத்தமாக அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** சில நேரங்களில் அதிகமாகப் பணம் கொடுக்குமாறு வற்புறுத்துகிறார்கள். இதை எளிதாக்கிட, அந்த மனிதக் கழிவுகளை உறிஞ்சி அப்புறப்படுத்த பம்புகள் பொருத்தப்பட்ட டேங்குகள் இணைந்த பவர்டில்லர் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தானே மூலக் கேள்வியில் கேட்டு இருக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்கள் பல கிராமங்களை உள்ளடக்கி உள்ளன. ஏறத்தாழ 17 கிராமங்கள் ஒரு ஒன்றியத்திலும், அடுத்து, 20 கிராமங்கள் இன்னொரு ஒன்றியத்திலும் இருக்கின்றன. அவற்றிலே நிதிநிலை எப்படி இருக்கிறது என்பது அவருக்கும் தெரியும். இருந்தாலும், கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட நிகழ்வுகளில் வண்டிகள் வழங்குவதற்கு நிதி உதவி செய்தாலும், அவற்றை நிர்வகிக்கின்ற பொறுப்பில் அவர்களுக்கு ஏராளமான கஷ்டங்கள் ஏற்படும் என்பதையொட்டி, அதற்கு வேறு வகையிலே ஏதாவது செய்யலாமா என்பதை அரசு ஆலோசித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் பேரூராட்சி, 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு பேரூராட்சி. மேச்சேரி பேரூராட்சி 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பேரூராட்சி. இந்த இரண்டு பேரூராட்சிகளிலும் இதுவரை நவீனக் கழிப்பிடங்கள் தண்ணீர் வசதியோடு இல்லை. வரும் நிதியாண்டிலாவது அந்த இரண்டு பேரூராட்சிகளுக்கும் நவீன கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியார் ஊராட்சி ஒன்றியம் பற்றியது. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 450, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**450—**

**வேளாண்மைத் துறை நுட்பங்களை விளக்கும் அலுவலர் பணியிடங்களை நிரப்புதல்**

*3459-**திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை நுட்பங்களை விளக்கும் அலுவலர் பதவி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளமையால் அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு, விவசாயிகள் பயனபெறுமாறு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், காலியாக இருந்த தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லும் வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் அதாவது, தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திடமிருந்து தெரிவு செய்யப்பட்ட வேளாண்மை அலுவலர் பட்டியலைப் பெற்று, அனைத்து காலியிடங்களும் 1996-ஆம் ஆண்டு ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையினுடைய நுட்பங்களை விளக்கக்கூடிய அலுவலர் பணியிடங்கள் தமிழகத்தில் எத்தனை இடங்கள் காலியாக இருந்தன? எவ்வளவு பேர் அந்த இடங்களிலே அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்? அதோடு ஏற்கெனவே, வேளாண்மைத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய அலுவலர்கள் மேலும் அதிலேயே



படித்து அந்தத் தகுதியைப் பெற்றிருக்கிறவர்களைக் கொண்டு 2 சதவீதம் அரசு பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று அரசு உத்தரவு இருக்கிறதே, அப்படி நிரப்பப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 170 காலியிடங்கள் இருந்தன. 185 பேர்கொண்ட தெரிவுப் பட்டியல் ஒன்று தமிழ்நாடு தேர்வாணைக் குழுவிடமிருந்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் 170 இடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மற்றும் வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) 38 இடங்கள், வேளாண்மை அலுவலர் (கால்வாய்) 5 இடங்கள், வேளாண்மை அலுவலர் (இரசாயனம்) 31— இவற்றில் கீழ்க்கண்ட பணியிடங்கள் ஆதிதிராவிடர்களுக்குச் சேரவேண்டியவைகளாக் கணக்கிடப்பட்டுள்ளன:

வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) : 127

வேளாண்மை அலுவலர் (இரசாயனம்) : 31

ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆணை, நாள் 2-1-1997ன்படி நிரப்பக் கேட்டு அரசுக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 451, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**451—**

**ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைத்தல்**

*4304—**திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, வெலக்கள்நத்தம் கிராமத்தில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனை மையத்தை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 4

வெலக்கள்நத்தம் கிராமத்திற்கு அருகாமையில் 10 கிலோமீட்டர் தூரத்தில் திருப்பத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் உள்ளது. வெலக்கல்நத்தம் கிராம விவசாயிகள் பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றை திருப்பத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவந்து தங்கள் பொருள்களை விற்பனை செய்யலாம். இந்நிலையில், காய்கறிகள் மற்றும் பழங்களை விற்பனை செய்ய வெலக்கள்நத்தம் கிராமத்தில் தனியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்றாம்பள்ளி தொகுதியிலுள்ள வெலக்கள்நத்தம் என்னுடைய கிராமம். அங்கே காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் நீண்ட நாட்களாகக் கோரி வருகிறார்கள். ஒரு நாளைக்கு சுமார் 25 லாரி மாம்பழம், வாழைப்பழம், சீத்தாப்பழம் போன்ற பழ வகைகளும், 10 லாரி அவரைக்காய், புதினா, கொத்தமல்லி போன்ற காய்கறி வகைகளும் அங்கேயிருந்து ஏற்றுமதி ஆகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து எங்கள் கிராமத்திற்கு ஒழுங்குமுறை விற்பனை மையம் அமைக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெலக்கள்நத்தம் கிராமத்திற்கு அருகில் திருப்பத்தூரில், ஒழுங்குமுறை விற்பனை கூடம் உள்ளது. 10 கிலோமீட்டர் தூரத்திற்கு அருகிலேயே திருப்பத்தூர் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சொந்தக் கிராமம் என்பதற்காக அங்கே ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 452, திரு. எம். முத்துராமலிங்கம் மற்றும் திரு. கோ. தளபதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**452—**

**நிலையூர் கால்வாய்த் திட்டப் பணிகள்**

*2150—**திரு. எம். முத்துராமலிங்கம்:**
**திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 ஏப்ரல் 4]

வைகை ஆற்றிலிருந்து நிலையூர் கண்மாய்க்குச் செல்லும் நிலையூர் கால்வாய்த் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலையூர் கால்வாய்த் திட்டத்தில் இரண்டு திட்டங்கள் உள்ளன. ஒன்று, வைகை ஆற்றிலிருந்து நிலையூர் கண்மாய் வரையிலும் சீரமைக்கிற திட்டம், இன்னொன்று நிலையூர் கண்மாயிலிருந்து கம்பிக்குடி கண்மாய் வரையிலும் சீரமைக்கிற திட்டம். அந்த இரண்டு திட்டங்களும் அரசினுடைய பரிசீலனையில் உள்ளன.

முற்பகல் 10-15

**திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நிலையூர் கால்வாயை பற்றிக் கேட்டது கம்பிக்குடி வரையில் இதை நீட்டிப்புச் செய்து தர வேண்டும் என்பதற்குதான். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இதனுடைய முக்கியத்துவம் அனைத்தையும் நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். எனவே, இதை உடனடியாக நிறைவேற்றி, அங்கே வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிற அளவில் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தில் இந்தக் கேள்வி அமையவில்லை. இந்தக் கேள்வியினுடைய நோக்கமே நிலையூர் கண்மாய்த் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதுதான். ஏற்கெனவே திட்டம் இருக்கிறது, நல்ல நிலையில் இருக்கிறது என்று சொல்லலாம். சோழவந்தான் பக்கத்திலிருந்து வைகை ஆற்றிலிருந்து நிலையூர் கண்மாய் வரை இப்போது தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிற திட்டம் இருக்கிறது. அதைச் சீரமைக்க வேண்டும், தூர்வார வேண்டும், கரையை உயர்த்த வேண்டும் என்பது ஒரு திட்டம். அதுவரையில் செய்தால் முத்துராமலிங்கம் அவர்களுக்கு சரி. ஆனால் நிலையூரிலிருந்து கம்பிக்குடி கண்மாய் வரையில் திட்டத்தை நீட்டிக்க வேண்டும். அப்படி நீட்டித்தால்தான் அந்தத் திட்டம் திருப்பரங்குன்றம் இராமச்சந்திரன் அவர்களுடைய தொகுதியின் பெரும்பகுதிக்கும், மாண்புமிகு அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களுடைய பகுதிக்கும் பயனளிக்கும். அந்தத் திட்டம், நிலையூர் கண்மாயிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு புது கால்வாய் வெட்டி கம்பிக்குடி கண்மாய்க்கு கொண்டு போனால் மதுரை மாவட்டத்தில் 50 ஏரிகள், காமராஜர் மாவட்டத்தில் 21 ஏரிகள்,

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் 23 ஏரிகள், ஆக 91 ஏரிகளுக்கு தண்ணீர் வசதி அளிக்கக்கூடிய ஒரு திட்டம். ஆகவேதான் ஏற்கெனவே பலமுறை இந்தத் திட்டத்தைப் பற்றி நான் தெரிவித்து இருக்கிறேன். முதற்கண் இந்த ஆண்டு வைகை ஆற்றிலிருந்து நிலையூர் கண்மாய் வரையில் அபிவிருத்தி செய்கிற வேலையை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். அடுத்த ஆண்டில் நிலையூர் கண்மாயிலிருந்து கம்பிக்குடிக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு அரசு ஆவன செய்யும் என்று நான் தெரிவித்து இருக்கிறேன்.

**திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வி போட்டபோது கம்பிக்குடி வரையில் நீட்டிப்புச் செய்து தர வேண்டுமென்றுதான் போட்டிருந்தேன். அது மாறுதலாக வந்திருக்கலாம். ஆனால் கம்பிக்குடி வரையில் நீட்டிப்புச் செய்தால்தான் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியும் பயன்பெறும் என்ற காரணத்தால் மீண்டும் மீண்டும் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டிலாவது இதை நிறைவேற்றித் தருவதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் வைகையிலிருந்து நிலையூர். பிறகு நிலையூரிலிருந்து கம்பிக்குடி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலையூர் கண்மாய் வைகை ஆயக்கட்டில் சேர்ந்தது. அதற்கு அப்பால் இருக்கக்கூடிய கம்பிக்குடி, அதற்கு அப்பால் இருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 50, 60 கண்மாய்கள் வைகை பூர்வீக ஆயக்கட்டில் சேராதவை. அப்படித்தான் நான் கருதுகிறேன். இவைகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்று சொன்னால், வைகையில் இருக்கிற தண்ணீர் வைகை ஆயக்கட்டில் இல்லாத பகுதிகளுக்குத் திருப்பிவிடப்படும் சூழ்நிலை ஏற்படுமே, அதன் காரணமாக பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டங்கள் பாதிக்கப்படுமே என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது. எனவே, வைகை தண்ணீர் வைகை பூர்வீக ஆயக்கட்டுகளுக்கு இல்லாமல், ஆயக்கட்டில் சேராத பகுதிகளுக்குத் திருப்பி விடப்படமாட்டாது என்ற உறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருட்டிணன் அவர்களிடத்திலிருந்து இந்தக் கேள்வி இன்னும் வரவில்லையே என்று எதிர்பார்த்தேன். காரணம் இப்போது வைகைப் பாசனத்தில் நிலையூர் கண்மாய் வரையில் பாய்ந்து கொண்டிருக்கிறது. இதை மேலும் நீட்டித்து 94 குளங்களுக்கு தண்ணீரைக் கொடுத்தால் வைகையில் கீழே இருக்கிற பாசனதாரர்களுக்கு தண்ணீர் கிடைக்காதே என்று அவர் கேட்கிறார். இதை அரசு நினைக்காமல் இல்லை. கடை மடையில் இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படவேண்டும் என்பதுதான் நீர்வள ஆதாரத் துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எனவே அந்த வகையில் எப்போது இந்தக் கம்பிக்குடி கண்மாய்க்கு, அந்தப் பகுதிக்கு தண்ணீர் அனுப்பலாம் என்றால், வைகை அணையும் நிரம்பி, இராமநாதபுரத்தினுடைய ஏரியும் நிரம்பி, மிகையான நீர் போகிறது என்ற நிலை உருவானால், அந்த மிகையான நீரை மட்டும்தான் கம்பிக்குடி கண்மாய் வரை கொண்டு போகலாம் என்பதை அரசினுடைய திட்டமாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். இதிலே சில சாதக பாதகங்கள் உண்டு. இரண்டாவது முறை திட்டத்தை முழுமையாகப் பரிசீலிக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் கருத்தில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கெனவே நேரில் விண்ணப்பித்ததன் மூலம் எடுத்துச்சொல்லிய பெரியார் மாவட்டம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வைகை ஆறு பற்றியா கேட்கிறீர்கள்?

முற்பகல் 10-20

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை ஆறு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அதனால் எல்லாவற்றையும் கேட்க முடியுமா? (சிரிப்பு)

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே பவானி தொகுதிக்கும் அந்தியூர் தொகுதிக்கும்

[1997 ஏப்ரல் 4

உட்பட்ட சித்தாற்றின் குறுக்கே அட்டவணைப்புதூரில் அணைக்கட்டுக் கட்டி அந்தச் சுற்று வட்டார பகுதியிலே இருக்கக்கூடிய கிணறுகள் பயனடையக்கூடிய அளவிற்கு மாண்புமிகு அமைச்சர், அடுத்த நிதியாண்டிலாவது சேர்த்துக் கொடுப்பார்களா என உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்டவணைப்புதூரில் நீர் வரத்து எப்படியிருக்கிறது என்பதை அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. பொதுவாக, சில இடங்களில் அணைகட்டலாம் என்ற எண்ணம் இருக்கும். ஆனால் நீர்வரத்து இருக்கிறதா என்பதை அறியவேண்டும். அப்படி அறியப்பட வேண்டிய ஒன்றில்தான் சாஸ்தா கோயில் அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது, அது நம்முடைய ராஜனுடைய தொகுதி. அதை 5 ஆண்டு காலம் நீரை அளந்து பார்த்து விட்டோம். பிறகு அரசு அடுத்த நடவடிக்கைக்கு போகிறது. உங்களுடைய அட்டவணைப்புதூரைப் பொறுத்தவரையில், மழைக்காலங்களில் எவ்வளவு நீர் வருகிறது என்பதை மூன்று ஆண்டுகளுக்காவது அளந்து பார்த்தால்தான், கொள்ளளவு சரியாக இருக்கிறதா என்பதை நாம் நிர்ணயிக்க முடியும். இல்லாவிட்டால் அணையைக் கட்டிவிட்டு நீர் இல்லாவிட்டால் என்ன செய்வீர்கள்? எனவே 'நீர் இல்லா நெற்றி பாழ், நீர் இல்லா குளம் பாழ்.'- என்று மாற்றிக் கொள்ளட்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் முத்துராமலிங்கம் அவர்கள் தன்னுடைய கேள்வி இங்கே சரியாக வரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அவர் எதை எழுதிக் கொடுத்திருக்கிறாரோ அதுதான் இந்தக் கேள்விப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. அவரே பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சேடப்பட்டி எம்.எல்.ஏ. தளபதி எழுதிக் கொடுத்தது. அதை என் கேள்வியோடு சேர்க்கச் சொல்லி இருக்கிறார். நான் எழுதிக் கொடுத்தது, கம்பிக்குடி வரை நீட்டிப்பு வேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் நீங்கள்தான் கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள், திரு. தளபதி அவர்களின் கையெழுத்து இல்லை.

வினா எண் 453, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 4]

**453—**

## குண்டம்பாச்சி நீர்த்தேக்கத் திட்டம்

*2326—**திரு.எல். மூக்கையா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் ஒன்றியம், பூம்பாறைக்கு அருகில் குண்டம்பாச்சி நீர்த்தேக்கத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

கொடைக்கானல் ஒன்றியம், பூம்பாறைக்கு அருகில் குண்டம்பாச்சி நீர்த்தேக்கத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முதனிலை அறிக்கை ரூபாய் 277 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு விரிவான ஆய்வறிக்கை மேற்கொள்வதற்கு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை பார்ட்-2 ஸ்கீமில் எடுத்துக்கொள்ளலாமா என்பதுபற்றி அரசு ஆய்வு செய்யும்.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலைப் பகுதியில் பூம்பாறை விவசாயிகளுக்கு ஆற்றுப் பாசனமோ, கண்மாய் பாசனமோ, கிணற்றுப் பாசனமோ கிடையாது. மழையை நம்பித்தான் மானாவாரியாக பூண்டு, உருளைக்கிழங்கு, கோசு, காரட், நூக்கல் போன்ற காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள். மழை பொய்த்துவிட்டால் விவசாயப் பயிர்கள் எல்லாம் காய்ந்து பெருத்த நட்டத்திற்கு ஆளாகிறார்கள். எனவே பூம்பாறை விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையான குண்டம்பாச்சி நீர்த்தேக்கத் திட்டத்தை இந்த அரசு விரைவாக இந்த ஆண்டே கட்டித்தந்து பாசன வசதி செய்துதர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் கொடைக்கானல் ஒன்றியத்தில் பூந்துறை என்கிற கிராமத்தில் ஏற்கெனவே ஒரு சிறிய கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாயிலிருந்துதான் தண்ணீரை இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கண்மாய்க்குக் கீழே அந்தப் பூம்பாறை கிராமத்தில் - அதில் ஒரு பிரச்சினை இருக்கிறது—பூம்பாறை கிராமத்தின் அருகே அவரைப்பள்ளமேடு என்ற

ஒரு பகுதி இருக்கிறது. அங்குதான் இந்த ஓடை உற்பத்தி ஆகிறது. குண்டாச்சி பாச்சி. பிறகு அது அங்கிருந்து 31 கி.மீ. ஓடி நீர்வீழ்ச்சியில் விழுகிறது. இல்லையா? நீர்வீழ்ச்சியில் இருந்து வண்ணாந்துறை என்ற ஆறாக மாறுகிறது. வண்ணாந்துறையோ குண்டாற்றினுடைய கிளை நதியான பாலாறு பொறந்தலாற்றில் சேருகிறது. பாலாறு பொறந்தலாறோ ஷண்முகா நதியில் சேருகிறது. ஷண்முகா நதியோ அமராவதியிலே சேருகிறது. அமராவதியோ காவிரியில் சேருகிறது. இதிலே சில சிக்கல்கள் உண்டு என்பதற்காகத்தான் இதைக் கோடிட்டுக் காட்டினேன். இருந்தாலும் இந்த முறை இதற்கு விரிவான ஆய்வு நடத்தப்படும் என்ற உறுதியை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 454, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**454—**

### கடலூர் நகரில் இரயில்வே மேம்பாலம்

*99—**திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் நகரில் இரயில்வே மேம்பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கடலூர் நகரில் இரயில்வே மேம்பாலம் அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டுக்கான இருப்புப்பாதை துறைமுகப் பணிகள்



திட்டத்தின்கீழ் ரூ. 3.75 கோடி செலவில் கடலூரில் தொடர் வண்டி நிலையம் அருகிலே இருப்புப் பாதை மேம்பாலம் அமைக்க முன்னுரிமை அளித்ததற்காகவும், அப்பணிகளுக்காக தொழில்நுட்பக் கருத்துக்கள் தென்னக இருப்புப் பாதை நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டு அனுமதி பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும். என்ற ஓர் அறிவிப்பினை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்ததற்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். தென்னக ரயில்வே நிர்வாகம், அதற்காக முழு அளவிலே தன்னுடைய பணியினைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்ற நிலையிலும், நம்முடைய அரசு அறிவித்ததன் காரணமாக அந்தப் பணிகள் தொய்வு இல்லாத நிலையில் ஆர்வலர்களும், நானும் இணைந்து இடையில் ரயில்வே நிர்வாகத்திடம் பேசி, அதற்கான ஒப்புதலைப் பெற்றுத் தந்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் ஆக்கிரமிப்பை அகற்றுகின்ற அந்தப் பணிகளுக்கான திட்ட மறு ஒதுக்கீட்டினை உடனடியாகச் செய்து, இந்த ஆண்டே பணிகள் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நிலத்தைக் கையகப்படுத்துவதிலேதான் சில பிரச்சினைகள் இருந்து வருகின்றன. 1991-லே திட்டம் தீட்டப்படுகிறபோது, 5 லட்சம் மட்டுமே அதற்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்போது நிலத்தைப் பெறுவதற்காக மட்டும் அதில் சுமார் ஒரு கோடி ரூபாய் தேவைப்படுகிற நிலைமை உருவாகி இருக்கிறது. இப்போது இடமும் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு இருக்கிற காரணத்தால், இதுபோன்ற சிக்கல்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மற்றவர்களும் அந்த நிலத்தைத் கையகப்படுத்துவதற்கு உதவி செய்வார்கள் என்று சொன்னால், உடனடியாக அதை எடுத்துக் கொள்வதில் அரசுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 455, திரு. சி. கோபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 4

**455—**

**பாலாற்றில் மேம்பாலம் அமைத்தல்**

*385—**திரு. சி. கோபு :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, பள்ளிகொண்டா-குடியாத்தம் சாலையில் உள்ள பாலாற்றில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. கோபு, இருக்கையில் இல்லை. வினா எண் 456, திரு. அ.லெ.சுப்பிரமணியன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**456—**

**திருநெல்வேலி சட்டக் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள் துவங்குதல்**

*6416-**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி சட்டக்கல்லூரியில் வருகின்ற கல்வியாண்டிலிருந்து மாலை நேர வகுப்புகள் துவங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி சட்டக் கல்லூரியில் வருகின்ற கல்வி ஆண்டிலேயிருந்து மாலை நேர வகுப்புகள் துவங்குவதற்காக 1-4-97 அன்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. வருகின்ற கல்வி ஆண்டிலிருந்து



1997 ஏப்ரல் 4]

மாலை நேர வகுப்புகளுக்கு 80 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ.லெ.சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆம் என்று சொல்லிய பிறகு இதிலே என்ன துணைக் கேள்வி?

**திரு. அ.லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. அத்தோடு ஒரு துணைக் கேள்வி. மாலை நேரக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு ரொம்ப மகிழ்ச்சி. அங்கே 300 முதல் 400 வழக்கறிஞர்கள் பக்கத்திலே உள்ள நீதிமன்றத்திலே பணிபுரிகிறோம், பி.எல். படித்தவர்கள். எனவே, எங்களுக்கு வாய்ப்புத் தருகிற விதத்திலே எம்.எல். பட்டப் படிப்பை இந்த ஆண்டு துவங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிக்காகப் புதிய கட்டிடங்கள் எழுப்பப்பட்டு, நூல் நிலையங்கள் எல்லாம் ஒழுங்காக அமைக்கப்பட்டவுடன், இந்த எம்.எல். வகுப்புக்கான அனுமதியையும் அரசு விரைவில் வழங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாக மாண்புமிகு அமைச்சர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எங்களுக்குக் கொடுத்த பதில் வேறு, நீங்கள் திருத்திப் படிக்கின்ற பதில் வேறு. நீங்கள் திருத்திப் படிக்கின்ற பதிலை எங்களுக்கு ஏற்கெனவே அறிவித்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உங்களுக்குத் தந்திருந்த அந்தப் பதில் தவறானது என்பதைத் துறையைச் சேர்ந்தவர்கள் என்னிடத்தில் தெரிவித்ததன் காரணமாகத்தான் திருத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் சார்பில் சொல்லப்படுகின்ற கருத்துத்தான் அதிகார பூர்வமானது. மற்றவை அவையிலே வைக்கப்பட்டவை அல்ல என்பதை உங்களுக்குக் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்வி பதிலைப் பார்த்துவிட்டு, பதில் சரியில்லை என்றால் திருத்திய பதிலை முதலிலே என்னிடம் சொல்லிவிட்டுத்தான் படிக்கவேண்டும். அதுதான் விதி. திரு. வ. அன்பழகன்.

[1997 ஏப்ரல் 4

**திரு. வ. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு குடிமகனும் சட்டத்தைப் பற்றி அறிந்துகொள்ள போதிய நடவடிக்கை எடுப்பது அரசினுடைய கடமையாகும். எல்லோருக்கும் முழு நேரக் கல்லூரிகளிலோ அல்லது மாலை நேரக் கல்லூரிகளிலோ சட்டம் பயில வாய்ப்புக் கிடைப்பதில்லை. எனவே, அனைத்து மக்களும் சட்டத்தைப் பற்றி அறிந்துகொள்கிற வகையில், அஞ்சல்வழியாகச் சட்டம் பயில அரசு ஆவன செய்யுமா ? ஒருவேளை தொழில் செய்யக் கூடிய வழக்கறிஞர்களுக்கு பாதிப்பு உண்டாகும் என்று நம்முடைய அரசு கருதினால், அப்படி அஞ்சல் வழியாகக் கல்வி பயில்கிறவர்களுக்கு சில நிபந்தனைகளோடு அஞ்சல் வழியிலே கல்வி பயில்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சல் வழிக் கல்லூரி நடத்தவேண்டுமானால் அதற்காகத்தான் நாங்கள் பல்கலைக் கழகம் அமைக்க ஆசைப்படுகிறோம். எனவே, டாக்டர் அம்பேத்கர் பெயரிலே அமைக்கப்படுகின்ற சட்டப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதும், அஞ்சல் வழிக் கல்வியும் ஆராயப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருநெல்வேலி சட்டக் கல்லூரியில் 3 ஆண்டு சட்டப் படிப்பு மட்டும்தான் கற்றுக்கொடுக்கப்படுகிறது. வருகிற ஆண்டில் 5 ஆண்டு சட்டக் கல்வி முறை அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டுவதற்கான வேலைகள் தீவிரமாக முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. அந்த இடவசதிக்கான ஏற்பாடு செய்யப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 457, திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 4]

**457—**

### குடிதண்ணீர் கைப்பம்புகள் அமைத்தல்

*6036—**திரு. வீ. தமிழ்மணி :**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கைத்தறி நெசவாளர் குடியிருப்புப் பகுதிகளில் குடிதண்ணீர் கைப்பம்புகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், காஞ்சிபுரம் சரகத்திலுள்ள, திருக்கழுக்குன்றம், தேசுமுகிபேட்டை, கானகோயில்பேட்டை, வள்ளுவர் நகர் ஆகிய நெசவாளர் குடியிருப்புகளில் கைப்பம்புகள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்காக ஒரு ஆழ்துளைக் கிணறு 1993-94-ல் அமைக்கப்பட்டுள்ளது. தேசுமுகிப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்காக 1994-95-ல் 1 ஆழ்துளைக் கிணறும், 1995-96-ல் மகளிர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்காக ஒரு ஆழ்துளைக் கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் நகரில் உள்ள நெசவாளர்களின் நலன்கருதி கானக்கோயில்பேட்டை, மகாகவி பாரதியார் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக வரும் நிதியாண்டில் ஆழ்துளைக்கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளுக்கு ஆழ்துளைக் கிணறு அமைத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்ற இந்த வேளையில் அவர்கள் அன்றாடம் பஞ்சு சம்பந்தப்பட்ட பொருட்களிலே தொழில் செய்கின்ற காரணத்தினால் அவர்களுக்குக் காசநோய் வருவதற்கு உண்டான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்ற காரணத்தால் வாரம் ஒரு நாள் அனைவரையும் மருத்துவர்கள் வந்து நேரிலே பரிசோதித்து அந்தக் காச நோய்க்கான சிகிச்சை அளிப்பதற்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகளால் நெசவாளர் நலவாழ்வுச் செறிவுத் திட்டம் என்று 'பேக்கேஜ் புரோகிராம்' அடிப்படையில் மாநிலம் முழுவதும் இப்படிப்பட்ட காரியங்களுக்காக பல நேரங்களிலே தொகைகள் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக கலைஞருடைய ஆட்சி வருகை தந்த பின்பு தொடர்ந்து நடைபெறுகின்ற இப்படிப்பட்ட செறிவுத் திட்டங்கள் எல்லாம் சுகாதாரத்திற்கும், குடிதண்ணீருக்கும், பிரசவத்திற்கும் பயன்படுகின்ற விதத்திலே அவை முறையாகச் செய்யப்படுகிறதா என்பது 15 தினங்களுக்கு ஒரு முறை கண்காணிக்கப்பட்டு, அந்தச் செறிவுத் திட்டம் சிறப்பாக இப்போது செயலாற்றி வருகிறது. சுகாதாரத் துறையும் அதிலே அடக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிதண்ணீர் கைப்பம்புகள் அமைப்பதில் இன்று ஒரு பிரச்சினை இருக்கின்றது. தென் மாவட்டங்களில் இருக்கக்கூடிய வறட்சியின் காரணமாக அங்கே உள்ளாட்சி அமைப்புகள் எல்லாம் திருச்சியிலே உள்ள டான்சி நிறுவனத்திற்குத்தான் இந்த மார்க் 2 என்ற பம்புகளை நீங்கள் வழங்கவேண்டுமென்று முன்பணம் அனுப்பியிருக்கின்றார்கள். ஆனால் ஒரே நேரத்தில் பல உள்ளாட்சி அமைப்புகள் மிகுதியாக பணத்தை முன்பணமாகச் செலுத்தியும்கூட, அந்த திருச்சியிலுள்ள டான்சி நிறுவனத்தால் அந்தக் கைப் பம்புகளைச் சரிவர சப்ளை செய்ய முடியவில்லை. இதனால் வறட்சி நிவாரணப் பணியே பெரிதும் பாதிக்கப்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தனிக்கவனம் செலுத்தி திருச்சியிலுள்ள டான்சி நிறுவனம் மார்க் 2 பம்புகளை உடனடியாக வழங்க இயலவில்லை என்றாலும்கூட, மாற்று ஏற்பாடுகளைச் செய்தால்தான் தென் மாவட்டங்களிலுள்ள வறட்சியைச் சமாளிக்க ஏதுவாகும் என்ற கருத்தினை இங்கே கூறி, அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க முன்வருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் இதற்கு எப்படிப் பதில் சொல்லமுடியும்? திரு. வீ. தமிழ்மணி.





**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காசநோய்ச் சிகிச்சைக்காக, பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் ரூ.1,500 இனாமாக வழங்குகிறார்கள். அது போதாது என்பதனால் இந்த மருத்துவர்களே சிகிச்சை செய்து, அவர்களுக்கு மாத்திரைகளையும், அதற்குண்டான வசதிகளையும் செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் நலன் குறித்த பல திட்டங்கள் மத்திய, மாநில அரசுகளால் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1,500 ரூபாய் காசநோய்க்குப் போதாது என்றால் மேற்கொண்டு அதற்கான மருந்து, மற்றவைகளெல்லாம் தக்க இடத்திலே முறையாகக் கிடைப்பதற்கு இன்று வாய்ப்பு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சில இடங்களிலே இருக்கின்ற நிலைமைகளை எங்களுக்குக் குறிப்பிட்டுச் சொன்னால், நிச்சயம் தக்க நடவடிக்கை எடுப்பதற்கும், அந்தத் திட்டத்தின் கீழேயே செயல்படுத்துவதற்கும், அவர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 458, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**458—**

**செம்மறி ஆடுகள் பட்டிக்கான கட்டண வேறுபாடுகளை நீக்குதல்**

***4714—திரு. ரா. சேதுநாதன் :**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக வனத் துறை மூலம் செம்மறி ஆடுகள் பட்டி அமைப்பதற்கு மாவட்டந்தோறும் உள்ள கட்டண வேறுபாடுகளை நீக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனத் துறை மூலம் செம்மறி ஆடுகள் மற்றும் கால்நடைகள் பட்டி அமைப்பதற்கு எல்லா மாவட்டங்களிலும் ஒரே கட்டணமாக ரூ.2.50

தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேறுபாடு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. சேதுநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆடுகளை மேய்த்து வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் தங்களை மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் சேர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்திருக்கிறார்கள். மேலும், அவர்கள் மற்றொரு வேண்டுகோளாக, தமிழக வனத் துறையிலே மேய்கின்ற ஆடுகளுக்கு ஏற்கெனவே 10 ரூபாய் வரி இருந்ததாகச் சொல்கிறார்கள். இந்த வரியைக் குறைத்து அவர்களுக்கு அரசு ஆதரவு அளிக்குமா என்று கேட்க விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு 1989-ல் இந்தக் கட்டணம் 10 ரூபாயாக இருந்தது. ஆனால், அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதால், நீதிமன்ற ஆணைப்படி இப்போது ரூபாய் 2 1/2 ஒரு ஆட்டுக்கு வாங்கப்படுகிறது. ஆகவே, இது மிகவும் அதிகம் என்று சொல்வது சரியில்லை. ஒரு ரசீது போடுவதற்கே ஏறத்தாழ 75 பைசாவிற்கு மேல் செலவாகிறது. ஆட்டின் விலை இப்போது ஏறியிருக்கின்ற காரணத்தினால், அந்த விலையோடு கணக்கிட்டால் இது மிகவும் குறைவான தொகைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை மூலம் தமிழகத்தில் எத்தனை செம்மறி ஆட்டுப் பட்டிகள் இயங்கி வருகின்றன. அதற்குண்டான பட்டியை அமைப்பதற்கு என்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் தற்போது சுமார் 300 முதல் 400 வரை செம்மறி ஆட்டுப் பட்டிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சுமார் 100-க்கு மேற்பட்ட மாட்டுப் பட்டிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேற்படி பட்டிகள் அமைப்பதற்கான விதிமுறைகளின்படி, மேய்ச்சலுக்கு மூடப்பட்ட பகுதியில் பட்டிகள் அமைக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது. பட்டிகள் அமைப்பதற்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்ட பிறகுதான் காப்புக் காட்டில் அனுமதி வழங்கப்படுகிறது.



பட்டிகள் அமைந்த இடத்தில் தீப் பிடித்துக் கொண்டால், அதற்கான நஷ்டஈட்டுக்கு துறை பொறுப்பு ஏற்காது. வருடத்திற்கு ஒருமுறைதான் பட்டிகளை அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டப்படி வனவிலங்கு சரணாலயங்களில் பட்டி அமைக்கக் கூடாது என்று தடையுத்தரவு உள்ளதால், கண்டிப்பாக வனவிலங்கு சரணாலயங்களில் பட்டிகள் அமைக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 459, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**459—**

## ஒகேனக்கல்லில் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்

***3603—திரு. ஜி.கே. மணி :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல்லில் மலைவாழ் மக்கள் வளம் பெற இயற்கைப் பொருள் சேகரிக்கும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லிவிட்டார்கள். என்னுடைய பெண்ணாகரம் தொகுதி எவ்விதத் தொழில் வளமும் இல்லாத, காடும், மலையும் நிறைந்த பகுதி. அங்கே ஒகேனக்கல்லிலே காவிரி ஆறு பாய்கிறது. அதைச் சுற்றிலும் காடுகள் நிறைந்த பகுதி. ஆறுகளில் மீன் பிடிப்பதைத் தவிர அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்களுக்கு வேறு தொழில் இல்லை. காடுகளிலே உதாரணத்திற்குச் சொன்னால், கல்பாசம், மர்ப்பாசம், கடுக்காய்,

[1997 [illegible] 4

பூச்சாங்கொட்டைக்காய் [illegible] துயார்க்கக் கூடிய [illegible] எருக்கம்பூ, உருளைக்கிழங்கு, [illegible] இயற்கை வளங்கள் எல்லாம் கிடைக்கின்றன. அவைகள் எல்லாம் வீணாக அழிகின்றன. அந்தப் பகுதி மக்களுக்குத் தொழில் கிடைப்பதற்கு, அந்த இயற்கை வளங்களையெல்லாம் எடுத்து விற்பனை செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அவர்களுக்கு வாழ்வு அளிக்கும் விதத்தில் இந்த நேரத்திலே நீங்கள் உதவி செய்ய முன்வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கின்றார்கள். அதே நேரத்தில் அந்தப் பகுதியில் விளையக்கூடிய இயற்கைப் பொருட்களையும் பட்டியலிட்டுக் காண்பித்தார். ஏற்கெனவே, பெண்ணாகரத்தில் 2 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ஒன்று, தொழில் கூட்டுறவு ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம். அடுத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் என்று இரண்டு சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. ஒகேனக்கல் மலைப் பகுதியில் ஊத்தமலை என்ற ஒரே ஒரு கிராமம் மட்டுமே உள்ளது. இதில் மொத்த மக்கள்தொகை 1200 மட்டுமே. அதில் மலைவாழ் மக்களின் எண்ணிக்கை சுமார் 100 மட்டுமே இருக்கிறது. தற்போது இம்மலைப் பகுதியில் கிடைக்கும் பொருள்களைச் சேகரிக்க வனத் துறையினர் தனியாருக்கு குத்தகை ஒப்பந்தம் வழங்கி உள்ளார்கள். மலைப் பகுதியில் போக்குவரத்து சரியில்லாததாலும், வருஷம் முழுவதும் வனப் பொருட்கள் சேகரிக்கும் பணி இல்லாமையாலும் பெண்ணாகரம் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம் இக்குத்தகை ஒப்பந்தத்தைப் பெற்று நடத்தவும், மேலும் இப்பகுதிவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்கெனவே உள்ள பெண்ணாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் மூலம் பயிர்க் கடன் பெற்றும், ஐ.ஆர்.டி.பி. போன்ற திட்டக் கடன்கள் மூலமும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே இந்தப் பகுதியில் வேறு கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 460, திரு இரா. மதிவாணன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.



1997 [illegible] 4]

460

## மீனவர்கள் இறந்துபோனால் நஷ்ட ஈடு

*1706—**திரு. இரா. மதிவாணன் :**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்யும்பொழுது இறந்து போனால் நஷ்ட ஈடு ரூ.1.00 இலட்சம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள் தமிழ்நாடு மாநில மீனவக் கூட்டுறவு இணையத்தின் மூலம் வருடத்திற்கு ரூ.60 பிரீமியத் தொகையாகக் கட்டி வந்து, அவர் விபத்தில் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்குக் காப்பீட்டுத் தொகை ரூ. 1 இலட்சம் வழங்கப்படுகிறது.

**திரு. இரா. மதிவாணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் மீனவர்கள் மீனவர்களுடைய பங்காக 360 ரூபாயும், மாநில அரசின் பங்குத் தொகையாக 360 ரூபாயும், மத்திய அரசினுடைய பங்குத் தொகையாக 360 ரூபாயும், சேர்த்து சென்ற ஆண்டு 1080 ரூபாயை - மத்திய அரசு பங்குத் தொகை வழங்காத சூழ்நிலையிலும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு - வழங்கினார்கள். தொடர்ந்து இந்த ஆண்டும் அதேபோன்று வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழக அரசின் பங்காக 360 ரூபாயும், மீனவர்கள் பங்காக 360 ரூபாயும் மட்டும்தான் வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சிதம்பரனார் மாவட்டம், கடம்பூர் காவல் நிலையத்தில் கைதி மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : *சிறப்புக் கவன ஈர்ப்பு. சிதம்பரனார் மாவட்டம் கடம்பூர் காவல் நிலையத்தில் கைதி மரணம் அடைந்தது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. வி. அய்யலுசாமி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். முதலில் டாக்டர் க. கிருஷ்ணசாமி.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி** : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறு ஒன்றியம், கடம்பூர் காவல்நிலையத்திற்கு கடந்த 31-3-97 ஆம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு கடம்பூர் அருகே உள்ள கோடங்கால் கிராமத்தைச் சேர்ந்த சுடலைமாடன் என்பவருடைய புதல்வர் திரு. பெரியதங்கவேல் என்பவர் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். நள்ளிரவு 12 மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர் மறுநாள் காலை 7 மணிக்குத்தான் காவல் நிலையத்திற்கே கொண்டு வரப்பட்டிருக்கிறார். 1-ஆம் தேதி மாலை 6 மணிக்கு அவருடைய வீட்டிற்கு அவர் மரணம் அடைந்து விட்டார் என்ற தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நடந்தது என்னவென்றால் அவரை நள்ளிரவு 12 மணியிலேயிருந்து காலை 6 மணி வரையிலும் கடம்பூர் காவல் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள இரயில் ட்ராக்கில் வைத்து அவரை அடித்துச் சித்திரவதை செய்து துன்புறுத்தி பிறகு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கேயும் அடித்து அவர் காவல் நிலையத்திலே மரணம் அடைந்திருக்கிறார். ஆனால் நிலைமைகளை வேறுவிதமாகக் காவல்நிலையத்தார் திரித்துக் கூற முயற்சி செய்திருக்கிறார்கள். அவர் மட்டும் அல்ல; அவருடைய வீட்டிற்கு அருகாமையில் இருக்கக்கூடிய திரு. வேலுச்சாமி என்பவருடைய மனைவி ஆவுடையம்மாளையும் அவருடைய வீட்டிலேயிருந்து காவல்நிலையம் வரை நிர்வாணப்படுத்தி அடித்து அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தப் பெண் ஆவுடையம்மாள் இப்போது தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலே சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். அதுமட்டுமல்ல; ஏறக்குறைய 10 பேருக்கு மேலாக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த வேதனைக்குரிய விஷயத்தை நான் ஏற்கனவே பல*



*முறை இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறேன் கயத்தாறு பகுதியில், குறிப்பாக வ.உ.சி. மாவட்டத்திலும் காவல்நிலையத்தாருடைய அத்துமீறல்கள் எப்படியெல்லாம் இருக்கின்றன என்று நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இந்தக் கொடுஞ்செயல்கள் தொடர்ந்து நடக்கின்றனவே என்ற வேதனையைச் சுட்டிக்காட்டி, தற்போது இதுசம்பந்தப்பட்ட ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு எஸ்ஐ., 2 காவலர்கள் பதவி நீக்கம் மட்டும் - அதாவது தற்காலிகப் பதவி நீக்கம் மட்டும் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது போதாது. (மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : *நீங்கள் சுருக்கமாகப் பேச வேண்டும்.* Already you have taken too much time.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி** : *ஏன் என்றால் சமீபத்தில்* National Human Rights Commission Chairman Thiru Venkatiah *அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்:* ``Under the Law, the Police had not been conferred any right to take away the life of another person. By this act, if a Policeman kills a person, he commits the offence of culpable homicide whether amounting to offence of murder or not, unless it is proved that such killing was not an offence under law ". *எனவே, காவல் துறையினரே அதைச் செய்து இருந்தாலும்கூட அவர்கள் மீது கூட கொலைக் குற்றம் சாட்டி அவர்களும் கைது செய்யப்பட வேண்டும். எனவே, இந்த விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரியான நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். உடனடியாக என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அதிலே சம்பந்தப்பட்ட எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள் உடனடியாக தற்காலிகப் பதவி நீக்கம் மட்டும் அல்ல, அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படவேண்டும். என்ன என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக சிட்டிங் ஜட்ஜ் மூலமாக நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். பாதிக்கப்பட்டு இறந்த பெரிய தங்கவேல் குடும்பத்திற்கும், இன்று மானபங்கப்படுத்தப்பட்டு நிர்வாணப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற ஆவுடையம்மாளுக்கும் ஏற்கனவே அதேபோல் தாக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்ற அனைவருக்கும் நட்ட ஈடு வழங்குவதற்கும் தக்க ஆணை பிறப்பிக்க அன்புடன் வேண்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன் சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு.சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், அவர்களுடைய தொகுதி என்ற காரணத்தால் மிக விளக்கமாக அதைப்பற்றிச் சொன்னார்கள். இதிலே உண்மையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டறிந்து, உண்மையிலேயே பெரியதங்கவேல் என்பவர் காவல்நிலையத்தில் வைத்துத் தாக்கப்பட்டு கொடூரமாகக் காவலர்களால் கொலை செய்யப்பட்டார் என்று இருந்தால் உடனடியாக அவர்கள் மீதும் இ.பி.கோ. 302-வது பிரிவின்படி வழக்குத் தொடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாகக் கடுமையாக உத்தரவு இட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

காவல்நிலையத்தில் சில பொறுப்புகளை நாம் அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறோம். குற்றங்களைக் கண்டுபிடிப்பது அவர்களுடைய தலையாய கடமை. ஒரு கம்பி மேல் நடப்பது போல் அவர்களுடைய பணி இருந்தாலும் கூட இதுபோன்ற கஸ்டடி டெத் என்று வருகின்றபோது அது அரசுக்குத் தான் ஒரு பெரிய கெட்ட பெயரை நிச்சயமாக ஏற்படுத்தும். இப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்கவேண்டுமென்று சொன்னால் காவல் துறை அதிகாரிகள் கொஞ்சம் பொறுப்போடு நடந்து கொண்டு அவர்கள் கைது செய்யப்பட்டவர்களை 24 மணி நேரத்திற்குள் மாஜிஸ்ட்டிரேட் முன்னால் கொண்டு போய் ரிமாண்டு செய்துவிட்டு பிறகு உண்மையை நீதிமன்றம் மூலம் அறியவேண்டும் என்ற அளவுக்கு விட்டு விடுவது தான் நல்லது. இது மனித உரிமையை மீறக்கூடிய ஒரு குற்றம் என்ற காரணத்தால் கஸ்டடி டெத்தே இனி இந்த ஆட்சியில் வரக்கூடாது என்ற அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவாதத்தைத் தந்து, இதிலே தவறு இழைத்த அத்தனை அதிகாரிகளையும் உடனடியாக, உண்மையிலேயே அப்படி அத்துமீறிச் செயல்பட்டு இருப்பார்களானால் அவர்களைத் தண்டிப்பதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதம் 19 ஆம் தேதி கணேசன் என்பவருடைய மனைவி



இந்திராணியைக் கொலை செய்துவிட்டு 70 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகளைப் பறித்துக் கொண்டு சென்றார்கள் என்றும் இதுசம்பந்தப்பட்ட கேஸ் தொடர்பாக பெரியதங்கவேல் என்பவரும் மற்றும் இவருடன் 3 நபர்களும் கடம்பூர் போலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டு இருக்கிறார்கள். அங்கு அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதாகவும், உள்ளூர் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து காட்டியிருப்பதாகவும், பாளையங்கோட்டைக்குக் கொண்டு செல்லுங்கள் என்று சொன்னதன் மூலமாக பாளையங்கோட்டைக்குக் கொண்டு செல்லும்போது இறந்து விட்டார் என்றும் பத்திரிகைச் செய்தி இருக்கிறது. ஆனால் உண்மையிலேயே காவல்நிலையத்தில் இருக்கக்கூடிய ஒரு விசாரணைக் கைதி இறந்தால் அந்தப் பகுதி மக்களுக்குக் காவலர்கள் மேல் சந்தேகம் ஏற்படுவது நியாயம். தான்

முற்பகல் 10-50

ஆகவே, அவரை உண்மையிலேயே காவலாளிகள் துன்புறுத்தி அடித்து இறந்திருந்தால், அவருடைய குடும்பத்தில் மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள், அவர்களுடைய வாழ்க்கை என்னவாகும்? அப்படிப்பட்ட நிலையில், உண்மையிலேயே, காவலாளிகள் அடித்து நொறுக்கியிருந்தால், அவர்கள் குடும்பத்திற்கு நம்முடைய அரசு உதவி செய்ய வேண்டும். மேலும், அதுபற்றி ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து, உண்மையிலேயே என்ன நடந்தது என்பதைத் தெளிவாக விசாரித்து அந்தப் பகுதி மக்களின் பதட்டத்தைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; சிதம்பரனார் மாவட்டம் கயத்தார் அருகே கோடங்கால் என்ற ஊரைச் சேர்ந்த கணேசன் மனைவி இந்திராணி தனியாக வீட்டில் இருந்தபொழுது அவரைக் கொலை செய்து விட்டு ரூபாய் 70 ஆயிரம் மதிப்புள்ள நகைகளைக் கொள்ளையர்கள் கடந்த 19-ஆம் தேதி திருடிச் சென்ற வழக்கைத் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சேர்ந்த சுடலைமாடன் மகன் பெரியதங்கவேல் உட்பட (சிரிப்பு) சுடலைமாடன் மகன் பெரிய தங்கவேல் உட்பட மூவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியானது கடந்த 31-ஆம் தேதி இரவு 12 மணி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்குக் கண்ணாடி போடுகின்ற வயது வந்து விட்டது.

**திரு. பி. ஆர். சுந்தரம் :** 12 மணிக்கு அழைத்துச் சென்றதற்குப் பிறகு அந்தக் கைதி காலை 6 மணிக்குத்தான் போலீஸ் நிலையத்திலே ஆஜர்படுத்தப்பட்டிருப்பதாகவும், அந்த இடைப்பட்ட காலத்திலே அவரைத் துன்புறுத்தியதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. இங்கே கூறும்போது அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு அவர் இறந்துவிட்டார் என்று செய்திகள் கூறியிருக்கின்றன. இதைப் பொறுத்தவரையில் ஒரு ஆய்வாளர் உள்பட 4 பேரை இடை நீக்கம் செய்திருப்பதாகச் செய்திகளெல்லாம் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அதே கருத்தையும் நான் கூறி, இதற்கு ஒரு நீதி விசாரணை உடனடியாக நடத்த வேண்டும் : போலீஸ்காரர்கள் தவறு செய்திருந்தாலும் அவர்களை உடனடியாகக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் தேவேந்திரர் சங்கத்தின் சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அய்யலுசாமி அவர்களும், அ.தி.மு.க. சார்பில் சுந்தரம் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளுக்குக் கண்டனத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இதுபோன்ற நேர்வுகளில் காவல் துறையின் சார்பாக வருகின்ற அறிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு அதற்கு வக்காலத்து வாங்குகின்ற பழக்கம் எனக்கு இல்லை என்பதை இந்த அவையிலே உள்ள நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன் காரணமாகத்தான், இந்த ஆட்சி மீண்டும் பொறுப்புக்கு வந்த இந்தக் காலகட்டத்தில் ஏறத்தாழ 10 மாதங்களில், காவல் நிலையங்களில் இதுபோன்ற சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக



ஒன்றிரண்டு நடைபெற்றிருந்தாலும்கூட உடனடியாக நடவடிக்கை எடுத்து, அதற்குக் காரணமான காவல் துறை அதிகாரிகள் அல்லது காவல் துறையினர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன எபதையும் இந்த அவை மிக நன்கறியும் : நாடும் நன்கறியும்.

இப்பொழுது இங்கே வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அரசுக்கு வந்துள்ள அறிக்கையையும், எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் நான் படித்துக் காட்ட விரும்புகின்றேன்.

கோவில்பட்டி வட்டம் கோடங்கால் கிராமத்தில் 19-3-97 அன்று இரவு சுமார் 10 மணி அளவில் அடையாளம் தெரியாத சில நபர்கள் திரு. கணேசன் என்பவருடைய வீட்டிலே புகுந்து அவரது மனைவி இந்திராணி என்பவரைக் கொலை செய்து, ரூபாய் 70,400 மதிப்புள்ள 352 கிராம் தங்க நகைகளைத் திருடிச் சென்று விட்டதாகக் கடம்பூர் காவல் நிலையத்தில் மேற்படி கணேசன் கொடுத்த புகாரின் பேரில், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 302, 457 மற்றும் 380-இன் கீழ் 20-3-97 அன்று வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. புளியம்பட்டி காவல் ஆய்வாளரும், கடம்பூர் காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளருமான திரு கோவிந்தன் என்பவர் இந்த வழக்கு தொடர்பாக விசாரணை மேற்கொண்டார்.

முற்பகல் 10-55

இந்தக் குற்ற வழக்கு தொடர்பாக 8 பேர் மீது சந்தேகம் ஏற்பட்டு 31-3-97 அன்று இரவு மாடசாமி என்பவருடைய மகன் 25 வயதுடைய பாலமுருகன் என்பவரும், முத்தையா என்பவர் மகன் 35 வயதுடைய சக்கையா என்பவரும் காவலர்களால் பிடிக்கப்பட்டு, கடம்பூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டார்கள். மறுநாள் 1-4-97 அன்று காலையில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மேலும் 6 பேர் காவலர்களால் பிடிக்கப்பட்டு கடம்பூர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார்கள். மாடசாமி என்பவருடைய மகன் 35 வயதுடைய மாணிக்கம், வெள்ளையா மாடசாமி என்பவருடைய மகன் ஈஸ்வரன், ஜேசு இராமசாமி நாயக்கர் என்பவருடைய மகன் ராமமூர்த்தி என்ற பாப்பா, பெருமாள் நாயக்கர் என்பவருடைய மகன் 55 வயதுடைய நெல்லையா, பெருமாள் நாயக்கர் என்பவர் மகன் சீனிவாசன், சுடலைமாடன் என்பவரின் 20 வயதுடைய மகன் பெரியதங்கவேல். காவல் துறை சார்பில் தரப்பட்ட அறிக்கையின்படி,

விசாரணையின்போது பெரியதங்கவேல் என்பவருக்கு மூச்சுத் திணறலும், மயக்கமும் ஏற்பட்டதால், உள்ளூரில் திரு கலைகுமாஜ் என்ற சித்த வைத்திய மருத்துவரைக் காவல் துறை ஆய்வாளர் அழைத்து வந்து, பெரியதங்கவேல் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்ததாகவும், மேலும் தொடர் சிகிச்சை செய்வதற்காக நெல்லை பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு காவல் துறையினரால் அனுப்பி வைக்கப்பட்டதாகவும், 1-4-97 அன்று பிற்பகல் 3.45 மணியளவில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே, பெரியதங்கவேல் இறந்துவிட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து காவல் நிலைய குற்ற எண் 3/97, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 176-வது பிரிவின் கீழ், 1-4-97 அன்று மாலை 5¼ மணிக்கு வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, கோவில்பட்டி கோட்டாட்சியருக்கு பிரேத விசாரணை மற்றும் புலன் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. போலீஸ் விசாரணையில் சந்தேக எதிரியான பாலமுருகன், தங்களைக் காவல் துறையினர் சிலர் தாக்கியதாக மணியாச்சி உதவிக் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் ஒன்றை அளித்தார். உதவிக் காவல் கண்காணிப்பாளர் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்து 145-வது பிரிவின் கீழ் விசாரணை மேற்கொள்ள கோவில்பட்டி வருவாய் வட்டார அதிகாரிக்கு அனுப்பி வைத்தார். மேலும், சந்தேக எதிரிகளான பாலமுருகன் மற்றும் இதர 6 நபர்களையும் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை, திருநெல்வேலி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். காவல் துறைக் கண்காணிப்பாளர் 1-4-97 அன்று கடம்பூர் சென்று இரவில் தங்கி பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துள்ளார். கோவில்பட்டி வருவாய்க் கோட்ட அலுவலர் இச்சம்பவம் தொடர்பாக ஆரம்ப விசாரணையை மேற்கொண்டபோது, காவல் நிலைய காவலர்களின் துன்புறுத்தலால்தான் மேற்படி பெரிய தங்கவேல் என்பவர் இறந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அறிக்கை அளித்துள்ளார். நேற்றையதினம் இதை என்னுடைய கவனத்திற்கு, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கொண்டுவந்தபோது, உடனடியாக நான் அந்த மாவட்டத்திலேயுள்ள அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு விசாரித்ததில், இந்த நிகழ்ச்சி தொடர்பாக காவல் ஆய்வாளர் கோவிந்தன், காவல் சார்பு ஆய்வாளர் ஒளிமுத்து, காவலர்கள் சீனிவாசன் மற்றும் காளிமுத்து ஆகியோர் 2-4-97 அன்று காவல் துறைக் கண்காணிப்பாளரால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று எனக்குத் தகவல் வந்தது. வேலை நீக்கம் போதாது, அவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர வேண்டுமென்று உடனடியாக நான்



ஆணை பிறப்பித்தேன். அதற்கேற்ப பெரியதங்கவேல் காவல் துறை விசாரணையின்போது மரணமுற்றது குறித்து மணியாச்சி உதவிக்காவல் துறைக் கண்காணிப்பாளர் கொடுத்த புகாரின் பேரில் தூத்துக்குடி மாவட்ட குற்றப் பிரிவு குற்ற எண் 5/97, பிரிவு 341, 342, 323, 384, 302, இ.த.ச.-வில் கோவிந்தன், ஒளிமுத்து, காளிமுத்து, சீனியர் என்கிற சீனிவாசன் ஆகியோர் மீது 3-4-97 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நான்கு எதிரிகளும் தற்போது தலைமறைவாக உள்ளார்கள். இவர்களைக் கைது செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தை முடித்து வைக்க அரசு எடுத்த நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 31-3-97 இரவு முதல் லாரி உரிமையாளர்கள் நாடு தழுவிய, காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ம. அப்துல் லத்தீப், ப. ரங்கநாதன், ஜி. பழனிசாமி, எஸ். திருநாவுக்கரசு, பி. வெங்கடசாமி, டி. மணி மற்றும் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இன்று காலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த லாரி உரிமையாளர்களோடு பேசியிருப்பது நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாக அவர்கள் கருத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, திரு. லத்தீப் அவர்களை அழைக்கின்றேன்.

முற்பகல் 11-00

**திரு. ம. அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கவலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை, உரியவர்களோடு பேச இருக்கின்றார்கள் என்ற பத்திரிகைச் செய்தியைக் கண்டு நாமெல்லாம் மகிழ்ச்சி அடைந்திருக்கின்றோம். பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்து சகஜ நிலை திரும்பவேண்டும் என்பதில் எல்லோரும் அக்கறை கொண்டிருக்கின்றோம். ஏற்கெனவே விலைவாசிகள் ஏறி வருவது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அந்த ஏற்றத்தைத் துரிதப்படுத்துகின்ற அளவுக்கு நாடு முழுவதும் இப்படியொரு நிலையைப் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்த்துக்கொள்ளாமல் உருவாக்கியிருப்பது வேதனைக்குரிய ஒன்று. இருந்தாலும் மத்திய அரசு

தொடர்புடைய இந்தப் பிரச்சினையில் விலைவாசியைப பொறுத்தவரையில் மாநில அரசுக்கும் கவலையுண்டு, மாநில மக்களுக்கும் கவலையுண்டு என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. அதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இன்றைக்குப் பேச இருக்கின்றார்கள். எனவே இதனுடைய விவரத்திற்குள் நான் செல்லாமல் பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்து சகஜ நிலை திரும்புவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயல்வார்கள் என்பதில் எங்களுக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

லாரி உரிமையாளர்களும் நாட்டின் நிலைமையை உத்தேசித்து மேலும் விலைவாசி உயர்ந்து மக்களுக்கு இன்னல்கள் தொடராமல், நாட்டின் பொருளாதாரத்திற்கும் அவர்கள் உதவி செய்யும் வகையில் ஏறிவருகின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் தங்களுக்கும் கடமை உண்டு என்ற அடிப்படையில், அந்தக் கடமை உணர்வோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி, இந்த வேலை நிறுத்தத்தை இன்றோடு முடித்துக்கொள்வதற்கு, அவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொண்டு வரவேண்டும். அதன்படி அவர்கள் ்பச வேண்டுமென்பதில் இந்த அவை மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக உரியவர்களுக்கு எடுத்துச் சொல்லி, இந்தப் பிரச்சினை தீரவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். எனவே இதுகுறித்து மேற்கொண்டு எதுவும் முன்கூட்டியே சொல்ல விரும்பவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையை நாம் தேசியப் பிரச்சினையாகக் கருதி, உரிய முறையில் உடனடியாகத் தீர்ப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் தங்கள் மூலமாக உரியவர்களைக் கேட்டுக் கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தேசிய அளவில் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். லாரிகள் ஓடாது நின்றுவிட்ட காரணத்தினால், இன்றைக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களின் விலைகள் தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையில் ஏறிவிட்டன. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இது



மத்திய அரசுப் பிரச்சினையாக இருந்தாலும், இந்த விலையேற்றத்தைத் தடுக்கின்ற வகையில், லாரி உரிமையாளர்களோடு சுமுகமான முறையில் பேச்சுவார்த்தையைத் துவக்க இருக்கின்றார்கள். இதை நாங்கள் வரவேற்பதோடு, குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களைப் பொறுத்தவரையில், இந்த லாரி உரிமையாளர்களோடு பேசுகின்ற நேரத்தில், அந்தப் பொருட்கள் அங்காடிகளுக்கு வருவதற்குத் தாங்கள் நல்ல முடிவினை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, லாரி உரிமையாளர்களுடன் பேசுவதில் மத்திய அரசும் உடனடியாக முயற்சியில் ஈடுபடுவதற்குத் தாங்கள் மத்திய அரசோடும் தொடர்பு கொண்டு, இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன், வணக்கம்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 31-ஆம் தேதியிலிருந்து லாரிகள் நாடு முழுமையும் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டுள்ளன. குறிப்பாக நிலைமை ஸ்தம்பித்துப் போய்விட்டது என்றுகூடச் சொல்லலாம். இதன் மூலமாக, நாட்டு மக்களுடைய உணவுத் தானியங்களின் ஏற்றுமதி இறக்குமதி இன்றையதினத்திலே தடைபட்டுள்ளது. குறிப்பாக, மக்களிடத்தில் ஒரு பதற்றமான சூழ்நிலைகூட ஏற்பட்டிருக்கிறது. அதுபோல், பெட்ரோல், அழுகும் பொருட்களாக இருக்கக்கூடிய முட்டை, தக்காளி போன்றவைகளுடைய விலைகள் எல்லாம் இன்றைக்குக் கிடுகிடுவென்று உயர்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதிலே லாரி உரிமையாளர்களைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே அவர்களுக்குப் போட்டிருக்கக்கூடிய வரிகளைப் பார்த்தால், பலவிதமான வரிகள் இன்றையதினத்திலே போடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு பெட்ரோலுக்கு வரி, டயரைப் பொறுத்தமட்டில், அவர்கள் 1000 கிலோ மீட்டர் 1500 கிலோ மீட்டர், என்று வண்டியை ஓட்டிவிட்டு, டயரை மாற்றும்போது, அவர்கள் புதிதாக டயர்களை வாங்குகிறபோது அதற்கு ஒரு வரி. அதே போல் அவர்கள் ஆண்டுதோறும் லாரிகளை ஆர்.டி.ஓ.விடம் கொண்டுபோய்க் காண்பிக்கும்போது அங்கே அதற்கு ஒரு வரி. இப்படிப் பலவிதமான வரிகளை நாம் போடுகின்றோம். இருந்தாலும், வரிகளை முற்றிலுமாகக் குறைக்க வேண்டும் என்று நான்

சொல்லவில்லை. இன்றைக்குக்கூட காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாடு பூராவிலும் வேலை நிறுத்தம் நடைபெற்று வருவதால் லாரிகளுடைய உரிமையாளர்களைக் கூப்பிட்டுப் பேசி ஒரு நல்ல முயற்சியை மேற்கொண்டதை, உண்மையிலேயே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய அரசும் இதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும். அதிலேயும், சம்பந்தப்பட்டிருக்கிற அதிகாரிகளே பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாக எந்த ஒரு தீர்வும் காணமுடியாத ஒரு நிலை இன்றைக்கு லாரி உரிமையாளர்களிடத்திலே இருக்கிறது. ஆகவே, அங்கேயும், சம்பந்தப்பட்டிருக்கிற அமைச்சர்கள், அவர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும். இன்னொன்று ; இன்றைக்கு லாரி உரிமையாளர்களின் சங்கத்தின் சார்பாகவும், அரசின் சார்பாகவும் அழைத்துத் தீர்வு காணவேண்டும் என்று சொன்னால், மத்தியிலே இருக்கக்கூடிய அரசு ஒரு குழப்பமான சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அமைச்சர்கள்கூட யோசிக்கலாம். இருந்தாலும் நாட்டு மக்களுடைய நலனைக் கருதி, இன்றைக்கு அத்தியாவசியப் பொருட்கள் நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகின்ற காரணத்தினால், லாரிப் போக்குவரத்தை உடனடியாகத் துவங்குவதற்கு, மத்திய அரசை, நம்முடைய மாநில அரசும் தூண்டுகின்ற நோக்கோடு ஈடுபடவேண்டும். அதற்கான முயற்சியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதில் தமிழ்நாட்டிலேயாவது நிரந்தரமான ஒரு தீர்வு வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற முயற்சிகளைப் பற்றி அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் நடைபெற்று வருகிற லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தத்தால் லாரிப் போக்குவரத்து ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டு, அதே நேரத்திலே மிகுந்த பொருளாதார நெருக்கடியும், பொதுமக்களுக்கு மிகுந்த கஷ்டமும் ஏற்பட்டுள்ளன. விலைவாசி மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது. பெட்ரோல், டீசல் ஆகியவை வந்து சேராத காரணத்தாலே — இன்றைக்குக் காலையிலேகூட புறப்படுவதற்கு முன்னாலே பெட்ரோல் போட வேண்டும் என்று போனால், பெட்ரோல்



பங்க் மூடியிருக்கிறது. அங்கேயும் ஸ்ட்ரைக் என்று தகவல் வந்திருக்கிறது. அனேகமாக அமைச்சர்களின் கார்களுக்கும் பெட்ரோல் கிடைத்திருக்காது என்றுதான் நான் நினைக்கிறேன். எனவே, போகிறபோதே பெட்ரோல் இல்லாமல், மந்திரிகளுடைய வண்டிகளேகூட நின்றாலும் நிற்கலாம்.

அதுபோன்று, பெட்ரோல் பங்க்குகளை மூடுவதற்கான சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது. அதே போல் விலைவாசி, குறிப்பாக காய்கறிகளுடைய விலைவாசிகள் எல்லாம் மிகக் கடுமையாக உயர்ந்துள்ளன. இந்த மூன்று, நான்கு நாட்களுக்கு இடையிலேயே ஒரு கிலோ தக்காளி என்ன விலை, ஒரு கிலோ கத்தரிக்காய் என்ன விலை, என்பதற்குப் பதிலாக ஒரு கத்திரிக்காய் என்ன விலை, ஒரு தக்காளி என்ன விலை என்று சொல்லக்கூடிய அளவிற்குக் காய்கறிகள் கிடைக்காத நிலையில், கடுமையாக விலைவாசிகள் அதிகரித்துள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசியிருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும் ஒரு நிரந்தரமான தீர்வு காணத்தக்க அளவிற்கு லாரி உரிமையாளர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு கண்டு ஒரு சுமுகமான நிலை ஏற்பட மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசையும் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசும் கஷ்டத்திலே இருக்கிறது. 11-ஆம் தேதிதான் அங்கே என்ன நடக்கப் போகிறது என்று இறுதியாகத் தெரியும். இருந்தாலும், இதிலே மத்திய அரசையும் வற்புறுத்தும் விதத்திலே தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இ. கணேசன்.

*முற்பகல் 11-10*

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுடன் நான்காவது நாளாக லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது நாடு தழுவிய போராட்டமாக இருந்தாலும், நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் லாரி உரிமையாளர்களை வரவழைத்து, அவர்களுடைய பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு இன்று நேரத்தை ஒதுக்கியிருக்கிறார்கள்

என்று அறியும்போது, லாரி உரிமையாளர் என்ற முறையிலே நான் கலைஞர் அவர்களுக்கு மனப்பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிட்டத்தட்ட கடந்த 10 மாத காலமாக லாரித் தொழிலில் எந்தவிதமான வருமானமும் இல்லை. சென்னையிலிருந்து டெல்லிக்குச் சென்றுவிட்டு, மீண்டும் சென்னை திரும்பி வரும்போது, லாரி டிரைவர்கள் வெறும் காகிதத்தை மட்டும்தான் கொண்டு வருகிறார்கள். நோட்டைக் கொண்டு வருவதில்லை. குறைந்தபட்சம் 2,000, 3,000 ரூபாய் கொண்டு வருவது என்பதே மிகக் கடினமாக இருக்கிறது. ஐந்து அல்லது ஆறு முறை டெல்லி சென்று வந்தால், லாரியின் டயர்கள் தேய்ந்து விடுகின்றன. இதனால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் எங்களுக்கு நட்டம் ஏற்படுகிறது.

இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம் என்ற வகையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, நாங்கள் 2,500 ரூபாயிலிருந்து 3,500 ரூபாய் வரை கட்டி வந்தோம். ஆனால் இன்று 15,000 ரூபாய்க்கு மேலே கட்ட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் இந்தப் பிரீமியத்தில்கூட 40% உயர்வு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 32 இலட்சம் லாரிகளும், சிறிய லாரிகள் என்ற வகையில் 8 இலட்சம் லாரிகளும் இப்போது ஓடாமல் இருக்கின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 15 இலட்சம் லாரிகள் ஓடாமல் இருக்கின்றன. எங்களுடைய சேலம் மாவட்டம், நாமகககல்லில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள் ஏறக்குறைய 5 கோடி அளவிற்கு அழுகக்கூடிய நிலையில் இருக்கின்றன. கறிக்கோழிகளையும் எடுத்துச் செல்ல முடியாத அளவிற்குச் சூழ்நிலைகள் இருக்கின்றன. அத்தியாவசியப் பொருட்கள் அத்தனையும் விலையேறி விட்டன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மூன்று நாட்களுக்கு முன்பு 5 கிலோ தக்காளியின் விலை 20 ரூபாய். ஆனால் இப்போது அதே அளவு தக்காளி 80 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரைக்கும் விலையேறி இருக்கிறது. இதன் காரணமாக, பொது மக்களும் கடுமையான தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். லாரி உரிமையாளர்களுக்கும் இதனால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, இதையெல்லாம் மனதிலே வைத்து, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய வகையில், இந்த லாரித் தொழில் சிறப்பாக நடைபெறும் வகையில், லாரி



உரிமையாளர்களிடம் பேசி அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில், உடனடியாக 5% சர்வீஸ் சார்ஜ்-ஐக் குறைக்க மத்திய அரசிடம் கலந்து ஆலோசித்து, லாரித் தொழில் சிறப்பாக நடைபெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதும் லாரி உரிமையாளர்களுடைய வேலை நிறுத்தத்தின் காரணமாக இரண்டு விதமான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று, உற்பத்தி செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் முழுவதும் விற்பனை செய்யப்பட முடியாமல் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. மற்றொன்று, இந்தப் பொருட்களை வாங்கி உபயோகிக்க முடியாததால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நாமக்கல்லில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், முக்கியமாகக் காய்கறிகள் எடுத்துச் செல்லப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு மாநில அரசு மட்டும் தீர்வு காண முடியும் என்று சொல்வதற்கு இல்லை. இந்தப் பிரச்சினை பூராவும் மத்திய அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. எனவே என்னுடைய வேண்டுகோளெல்லாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் இதை வலுவாக வலியுறுத்தி, இந்தப் பிரச்சினையை நீட்டித்துக் கொண்டு போகாமல், வேகமாக, விரைவாகத் தீர்க்க முயற்சிக்க வேண்டும். அன்றாடத் தேவைப் பொருள்களின் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க, இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker Sir, All India Lorry owners strike is on the fourth day today. I came to know that the Hon'ble Chief Minister has already taken the issue with the lorry owners and he would discuss the issue today with them. Actually the common man is

[Thiru B. Venkatasamy] [1997 ஏப்ரல் 4

suffering like anything in the towns and at the same time, in the villages also. As said by Hon'ble Member Thiru D. Mony, tomatoe which was sold at one rupee, four days back, is now being sold at Rs.20 at Madras. Neither the ryot nor the consumer is benefitted and vegetables are getting spoiled because of the strike. At the same time, we have to see how many man days have been lost, how many lorries are being kept idle and how many drivers, cleaners and loaders are suffering due to the strike. It is a great national loss.

**Hon'ble Speaker:** You must finish quickly. I gave you one minute only.

**Thiru B. Venkatasamy:** Yes Sir. I appeal to the Lorry Owners to have national interest and request the Hon'ble Chief Minister, Government of India and Lorry owners to see that the strike is called off early.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, ஒரு நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் நடைபெற்று வருகின்ற லாரி வேலைநிறுத்தத்தின் காரணமாக அன்றாடப் பொருட்களின் விலை அபரிமிதமாக உயர்ந்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக ஸ்தம்பித்த நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு இன்னும் தலையிடாவிட்டாலுங்கூட, மாநில அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டுத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி வேலை நிறுத்தத்தைப் பற்றிச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்து, இந்திய தேசிய லீக் சார்பாக திரு. அப்துல லத்தீப் அவர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ரங்கநாதன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. பழனிசாமி அவர்களும், அ.தி.மு.க சார்பாக திரு. திருநாவுக்கரசு அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சி சார்பாக திரு. மணி அவர்களும், ஜனதா கட்சி சார்பாக திரு. வெங்கடசாமி அவர்களும், தேவேந்திரர் சங்கம் சார்பாக டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், லாரி உரிமையாளர்களின் சார்பாகவும், திரு. ஐ. கணேசன் அவர்களும் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.



1997 ஏப்ரல் 4] [மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி]

பொருள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள், 'சர்வீஸ் வரியாக' 5 சதவீதத்தை சுங்க இலாக்கா மூலமாக மைய அரசுக்கு;ச் செலுத்த வேண்டுமென்று மத்திய நிதிநிலை அறிக்கையிலே வெளியிட்டதை ரத்து செய்யக் கோரியும், லாரிகளுக்கான இன்ஸ்யூரன்ஸ் பிரிமியத் தொகை அதிகரிக்கப்பட்டதை ரத்து செய்யக் கோரியும், இந்தியா முழுவதும் 31-3-1997 நள்ளிரவிலிருந்து லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்து, 4 நாட்களாக லாரிகள் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு லாரிகள் வேலைநிறுத்தம் குறித்த செய்தி வந்தவுடன், தமிழக அரசின் சார்பில் நான் விடுத்த வேண்டுகோளில், 'இந்த சர்வீஸ் வரி என்பது யோசனை என்ற அளவிலேதான் மத்திய அரசு நிதி அமைச்சகத்தில் இருப்பதாக' வந்த செய்தியை எடுத்துக்காட்டி இதனால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை விளக்கி, லாரி உரிமையாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு. மத்திய அரசுடன் கலந்து பேசி, பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தேன். இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக பொது விநியோகம் தடைப்பட்டாலும், அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் தேவையான பொருள் இருப்பு இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

மேலும், மாவட்ட ஆட்சியர்கள், தமது மாவட்டங்களிலுள்ள காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள் ஆகியோரின் கூட்டங்களைக் கடந்த இரண்டு, மூன்று நாட்களாக நடத்தி, அத்தியாவசியப் பொருட்களை அரசு மற்றும் தனியார் பேருந்துகளில் எடுத்துச் செல்ல அறிவுரை வழங்கியுள்ளார்கள். அதன்படி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், பேருந்து நிறுவனங்களையும், உரிமையாளர்களையும் இதனைச் செயல்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். பால் மற்றும் தண்ணீர் ஏற்றிச் செல்லும் லாரிகளுக்கு இந்த வேலை நிறுத்தத்திலேயிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், அவற்றின் விநியோகம் பாதிக்கப்படவில்லை என்றாலும், அந்த வாகனங்களுக்கு டீசல் கிடைக்காததால், அதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. காய்கறிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சுட்டிக்காட்டியதைப் போல, இந்த வேலை

நிறுத்தத்தின் காரணமாக, மிக அதிகமாக விலைகள் உயர்ந்துள்ளன 2 கோடி கோழிகளுக்குத் தீவனமே இல்லை என்ற அபயக் குரல் அந்த வட்டாரத்திலேயிருந்து தந்திகள் மூலமாக நேற்றும், இன்றும் அரசுக்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அதேபோல, முட்டைகளையும் விற்பனைக்கு எடுத்துச் செல்ல முடியாமல், வீணாகிப் போகும் நிலைமைக்கு உள்ளாகி இருக்கின்றன என்றும் எனக்குத் தந்திகளும், செய்திகளும் வந்த வண்ணம் இருக்கின்றன.

லாரிகள் வேலை நிறுத்தம் தொடர்வதால், அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தை அமல்படுத்தும்படி, எல்லா மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. உணவு தானியங்கள், பெட்ரோலியப் பொருட்கள் உட்பட, அத்தியாவசியப் பொருட்களின் சப்ளையைத் தொடர்ந்து சீராகப் பராமரிப்பதற்கு வசதியாக, மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம் ஆகியவற்றின் விதிகளை அமல்படுத்துமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. சமரசம் செய்கின்ற வேலையைச் சட்டம் செய்யாது என்பதை நாம் மிக நன்றாக அறிவோம். சட்டம் இன்றைக்கு, இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு ஒரு யோசனையாக, ஒரு முயற்சியாக இருக்கலாமே தவிர, சமரசப் பேச்சுவார்த்தை மூலமாகத்தான் இதை நாம் அடைய முடியும்; இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு அவர்களும் முன்வர முடியும் என்பதை உணர்ந்த காரணத்தினாலேதான், மத்திய அரசு இந்தப் பேச்சு வார்த்தையிலே ஈடுபட்டிருந்தாலும்கூட, தமிழக அரசைப் பொறுத்தவரை, நாமும் மத்திய அரசுக்கு உதவியாகவும், அதே நேரத்திலே லாரி உரிமையாளர்களுக்குத் துணையாகவும், அவர்களுடைய கோரிக்கைகளை முன்வைக்கின்ற வகையிலே நாமும் பங்கு கொள்வோம் என்று எடுத்துரைக்கின்ற வகையிலும், இதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த, இன்றைக்கு அவர்களெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் டில்லியிலிருந்து வரவேண்டிய சூழ்நிலையில், பிற்பகல் அல்லது மாலையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று நான் நம்புகிறேன். இதற்கிடையிலே, மத்திய நிதியமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களிடத்தில் இதுபற்றி நான் பேசியிருக்கிறேன். அவர்களும், இதிலேயுள்ள சங்கடங்களை எனக்கு எடுத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். தமிழக அரசும் லாரி உரிமையாளர்களுடைய கோரிக்கைகளுக்கான பரிந்துரைகளை மத்திய அரசுக்குச் செய்யும் என்ற உறுதியை இந்தப் பேச்சுவார்த்தையின் போது, லாரி உரிமையாளர்களிடத்திலே நான் தெரிவிக்க இருக்கின்றேன்.





அது மாத்திரமல்ல. இந்த 5 சதவிகித வரியை இரத்து செய்யவேண்டும் எனபதையும், இன்சூரன்ஸ் பிரிமியம் தொகை மிக அதிகம் என்பதையும் எடுத்துக்காட்டுகின்ற வகையில், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களானாலும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர்களானாலும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற தோழமைக் கட்சிகளுடைய உறுப்பினர்களானாலும் தமிழகத்தின் சார்பிலே அங்கே அங்கம் வகிக்கின்ற அத்தனைபேரும் குரல் கொடுப்பார்கள் என்ற உறுதியையும் நான் லாரி உரிமையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம் இந்தப் பேச்சுவார்த்தையின்போது தெரிவிப்பேன் என்பதையும் கூறி, இதற்குப் பிறகாவது இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டுமென்று நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இது நாடு தழுவிய போராட்டமாக இருக்கின்றது. அவர்களுடைய சக்தி என்ன என்பதை நான்கு நாட்களாகக் காட்டிவிட்டார்கள். மேலும் சக்தியைக் காட்ட எண்ணி, நாட்டின் சக்தியை வீணாக ஆக்கிவிடக் கூடாது என்ற கோரிக்கையையும் இந்த அவையின் மூலமாக நான் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி அமைகின்றேன்.

## 3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

### முன்னாள் இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்தி கொலையுண்டபோது ஏற்படுத்தப்பட்ட சொத்துச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க ஒரு நபர் ஆணையம் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. இராஜீவ் காந்தி அவர்கள் கொலையுண்டபோது, ஏற்பட்ட சொத்துச் சேதங்கள் காரணமாக இழப்பீடு வழங்கியது குறித்து, பேரவை விதி 110-இன் கீழ் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி வழங்குகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு, மே மாதம், 21-ஆம் நாள் முன்னாள் இந்தியப் பிரதமர், நாட்டின் இளந்தலைவர் இராஜீவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல பகுதிகளிலே கலவரங்கள் ஏற்பட்டு, பொதுமக்கள் பலருடைய கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன

முற்பகல் 11-25

அந்தக் கோடிக் கணக்கான ரூபாய் இழப்பைச் சரிக்கட்ட, பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம், அரசின் சார்பில் இழப்பீடு கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, தமிழகமெங்கும் எழுந்த போதிலும் அந்தக் கொலைக்குப் பிறகு, தமிழகத்தில் நடைபெற்ற கடந்தகால ஆட்சியில், அந்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; அலட்சியப்படுத்தப்பட்டன. எனவே, அந்தக் கலவரங்களிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு, அரசு இழப்பீடு வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கோரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், பேராசிரியர் அவர்கள், சென்னை, உயர்நீதிமன்றத்தில், 1991-ஆம் ஆண்டு, 'ரிட் மனு' ஒன்றினை, 'பெட்டிஷன்' எண் 7940/91 தாக்கல் செய்தார். அந்த 'ரிட் பெட்டிஷ'னில், விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிவாரணத் தொகை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அன்றிருந்த அரசு, நீதிமன்றத்திலே தாக்கல் செய்த பதிலில், அந்தக் கோரிக்கையை ஏற்க முன்வராத போதிலும், சென்னை, உயர்நீதிமன்றம் தி.மு.கழகத்தின் சார்பில் போடப்பட்ட வழக்கை ஏற்று, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்களைச் சிறப்பு ஆணையாளராக நியமித்து, பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, நிவாரணத் தொகை குறித்து பரிந்துரை செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது.

தமிழகத்தில், அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், சிறப்பு ஆணையாளர் திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்கள், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த முறையீடுகளை விசாரித்து, பரிந்துரை செய்த இழப்பீடு, அவர்களுக்கு ஏற்பட்ட நாசத்தின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிக மிகக் குறைவாக இருந்த காரணத்தினால், பாதிக்கப்பட்ட பலர், அந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்றுக்கொள்ள மறுத்து, நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். மேலும், திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் பலருக்கு எவ்வித இழப்பீட்டுத் தொகையையும் பரிந்துரைக்காமல் விட்டுவிட்டார். அவர்களும் நீதிமன்றத்திலே முறையிட்டுக் கொண்டார்கள். இந்த மனுக்கள் எல்லாம் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு, அரசின் பதிலை, நீதிமன்றம் அந்த மனுக்களின் மீது கோரியது. கடந்தகால அரசாங்கம், அதற்கு அப்போது கொடுத்த





பதிலில், அந்தக் கோரிக்கை மனுக்களை நிராகரிக்குமாறு தெரிவித்தது. நீதிமன்றத்திலே, அந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, தமிழகத்திலே ஆட்சிமாற்றம் ஏற்பட்டு தான், இந்தப் பிரச்சினையிலே பாதிக்கப்பட்டவர்களுடைய முறையீடுகளை மனதிலே கொண்டு, அமைச்சரவையில், 11-2-1997 அன்று விவாதித்து, ஏற்கெனவே நீதிமன்றத்திலே நிலுவையிலே உள்ள வழக்குகளில், முந்தைய அரசால் தாக்கல் செய்யப்பட்டிருந்த எதிர் மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, புதிதாகப் பதில் மனு, இந்த அரசின் சார்பில் தாக்கல் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவை, அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத்தின்முன் தெரிவித்ததன் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம், தனது 27-3-'97 நாளிட்ட ஆணையில், அரசின் கருத்துரையை ஏற்றுள்ளது. அதற்கேற்ப, வழங்கிய நிவாரணத் தொகை போதாது என்று எதிர்த்து 'ரிட் பெட்டிஷன்' தொடர்ந்தது உட்பட, பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணத் தொகை பெறும்போது, 'எதிர்ப்புத் தெரிவித்து நிவாரணத் தொகையைப் பெற்றுக் கொண்டவர்களின் கோரிக்கைகளையும் பரிசீலித்து, நிவாரணம் வழங்கிட, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்களை, ஒரு நபர் கமிஷனாக நியமித்து, அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. தகவல் கோரல்

### மழைக் காரணமாக சட்டமன்ற நூலகம் பாதிப்பு

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே கேள்வி கேட்கக்கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் வேறு விஷயமாகக் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய நூலகம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நூலகம். நேற்று பெய்த மழையின் காரணமாக, பல நூல்கள் மழையிலே நனைந்து, இன்றைக்கு வீணாகக்கூடிய ஒரு நிலையிலே இருக்கின்றன. பெருமளவுக்கு நனைந்து, வீணாகியிருக்கின்றன. அதேபோல், சட்டமன்ற வளாகத்திலே இருக்கக்கூடிய 'டிரெய்னேஜ்'கூட தண்ணீர் நிரம்பி வழிந்து, காலையிலே பார்த்தோமானால், சட்டமன்றத்திற்குள்ளேயே அந்தத்

**தண்ணீர்** வரக்கூடிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. நூலகமும் **அதே**போல் பெருமளவுக்கு பாதித்திருக்கிறது. ஆகையால், உடனடியாக **அந்த** நூலகம் வேறு இடத்திற்கு மாற்றியமைக்கப்படுமா என்பதைத் தாங்கள் யோசிக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், மாறறு ஏற்பாடு செய்வதன் மூலமாக, அந்த வரலாற்றுச் சிறப்புமிகக நூலகத்தைப் பாதுகாப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, நிதித் துறை மூலமாக நான் ஒரு பரிந்துரை அனுப்பியிருக்கிறேன். திரு. பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல, 100 ஆண்டுகளுக்கு முன்னாலே நடந்த நிகழ்ச்சிகள்கூட, இந்த நூலகத்திலே இருக்கின்றன. அதைப் பாதுகாப்பது நம்முடைய கடமை. இங்கே, உள்ளே மழைநீர் வராமல் தடுப்பதோடு 100 ஆண்டுகளுக்கும் மேலாக, மிகமுக்கியமான நிகழ்ச்சிகளைக் குறிப்பிடக்கூடிய ஆவணங்களை, குளிர்சாதன வசதி மூலமாகத்தான் காப்பாற்ற முடியும் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதனையும் ஒட்டுமொத்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போவதற்கு, நான் நிதித் துறை மூலமாக அவர்களுடைய கவனத்திற்கு அனுப்பியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக, கனிவோடு இதைப் பரிசீலிப்பார்கள் என்ற நம்பிக்கையையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### மதுரை, பசுமலை மகாலட்சுமி மில்ஸ் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-இன் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து, உறுப்பினர்கள் திரு. சந்தானம், திரு. பி.என். வல்லரசு ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றனர். தீர்மானத்தை மட்டும் படிக்க வேண்டும். திரு. பி. என். வல்லரசு.

முற்பகல் 11.-30

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை பசுமலையில் உள்ள மகாலட்சுமி மில்ஸ் மூடிக்கிடப்பதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது





முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

மதுரை, பசுமலையில் உள்ள மகாலட்சுமி மில்ஸ் 1925-ஆம் ஆண்டு முதல் 1,400 தொழிலாளர்களுடன் 39,000 கதிர்கள் திறனுடன் ஆரம்பிக்கப்பட்டு நன்கு இயங்கி வந்தது. நாளடைவில் வியாபாரப் போட்டி காரணமாக நூல் உற்பத்தித் தேக்கம், குறைவான வேலைப்பளு, அதிக தொழிலாளர்கள் எண்ணிக்கை போன்றவற்றின் காரணமாக நலிவடைந்து ஆலை 25-11-86 முதல் மூடப்பட்டது.

2. ஆலையின் மூடுதலால் பணியிழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலையளிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், தமிழக அரசு தீவிர நடவடிக்கை எடுத்து கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரைத் தலைவராகக் கொண்டு, பஞ்சாப் நேஷனல் வங்கி மற்றும் ஆலையின் உரிமையாளரையும் பிரதிநிதிகளாகக் கொண்டு ஒரு கூட்டு நிர்வாகத்தின் கீழ் ஆலையை 23-7-90 முதல் இயக்க அரசு உத்தரவிட்டது. ஆலைக்கு வட்டியில்லாத விற்பனை வரிக்கடன் ரூ. 43 இலட்சம் வழங்கப்பட்டது. ஆலையை "நிவாரண உதவி பெறும் ஆலையாகவும்" (Relief Undertaking) அறிவித்தது.

3. இவ்வாலை நலிவுற்ற ஆலையாக அறிவிக்கப்பட்ட பின் 1991-ஆம் ஆண்டு தொழில் நிதி உதவி மற்றும் புனரமைப்பு வாரியத்திற்கு (பிஐஎப்ஆர்) பரிந்துரை செய்யப்பட்டது. அவ்வாரியம், இவ்வாலையை, தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து (Co-operative basis) நடத்துமாறு அளித்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள தொழிலாளர்கள் முன்வரவில்லை. இந்நிலையில் ஆலையை நடத்த முன்வந்த தொழில் முனைவோர்கள் அளித்த புனரமைப்புத் திட்ட முன்மொழிவில் சிறந்ததாகக் கருதப்பட்ட திரு. கலில் என்பவரது பிரேரணையை ஏற்று ஆலையை திரு. கலில் மற்றும் திரு. பெரியண்ணன் சண்முகம் ஆகியோரிடம் ஒப்படைக்க அரசு உத்தரவிட்டது. இவ்வாலை கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் இயக்குநரைத் தலைவராகக் கொண்டு, 5 அரசு அதிகாரிகள் உள்ளிட்ட இயக்குநர்கள் குழுவின் கீழ் உள்ளது.

4. இவ்வாலையில் பஞ்சினை நூலாக்கும் பணி மட்டுமே நடைபெற்று வந்தது. அப்போது 531 நிரந்தரத் தொழிலாளர்களும் மற்றும் 133 வாரிசுத்

தொழிலாளர்களும் பணிபுரிந்து வந்தனர். தேசிய புனரமைப்பு நிதியிலிருந்து நலிவுற்ற ஆலைக்கு வழங்கப்படும் உதவியை இவ்வாலைக்கு வழங்கக் கோரி நிர்வாகம் மனுச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

5. இவ்வாலையில் நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்சினைகளான ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்காதது மற்றும் 133 வாரிசுத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்தல் மற்றும் அவ்வப்போது சம்பளம் உரிய தேதியில் வழங்காதது ஆகியவற்றால் நடைபெற்று வந்த "வேலை நிறுத்தங்கள்" போன்றவற்றிற்கு நிரந்தரத் தீர்வு காணும்பொருட்டு தொழிலாளர் ஆணையர் இப்பிரச்சினையில் தலையிட்டு பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டார். தொழிலாளர் ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வரும்போதே 1996, ஆகஸ்ட் மாதத்திற்கான சம்பளத்தினை நிர்வாகம் உரிய தேதியில் வழங்காததால் தொழிலாளர்கள் 8-10-1996 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 14-10-1996 அன்று 63 தொழிலாளர்களைத் தவிர இதரத் தொழிலாளர்களுக்கு சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டது. இருப்பினும், மின்வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை செலுத்தப்படாததால் மின் இணைப்பை 9-10-1996 அன்று மின்வாரியம் துண்டித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. 26-9-1996 அன்று தொழிலாளர் ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது நிர்வாக இயக்குநர், ஆலையின் இயக்குநர் குழுவிடம் அளிக்கப்பட்ட ''மறுமலர்ச்சித் திட்டம்'' ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஆலைக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஆலையை இயக்க முடியும் என்று தெரிவித்தார். 9-9-1996 அன்று ஆலையின் இயக்குநர் குழு (Board of Directors) இதனை ஏற்க மறுத்துவிட்டது. அதனால் ஆலையை நடத்த நிதிவசதி இல்லை, ஆலையை அரசே ஏற்று நடத்தினாலும், அரசு புதிய தொழில் முனைவோரை வைத்து நடத்தினாலும் அவருக்கு ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்துள்ளார். கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி நிதி ஆதாரத்துடன் கூடிய ஒரு சிறப்புச் செயல்திட்டம் 2-12-1996 அன்று இயற்றப்பட்டதாகவும், அச்சிறப்பு செயல் திட்டத்தினைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் தக்க மேல் நடவடிக்கை தொடரப்படுமென அவரது 4-12-1996-ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதுகுறித்த விவரத்தினைத் தெரிவிக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரை தொழிலாளர்



ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தத் திட்டம் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது. அவருடைய அறிக்கை கிடைத்த பின் அதனைப் பரிசீலித்து ஆலையை நல்ல முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அரசின் கைத்தறி, கைவினை, துணி மற்றும் கதர்த் துறை தெரிவித்துள்ளது.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கைப் படித்தேன். கைத்தறி துறை இயக்குநர் அவர்கள் அறிக்கையை சமர்பித்த பின்பு அரசு பரிசீலித்து அதன் பின்பு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், அது காலம் கடத்தும் நிலையை ஏற்படுத்திவிடும். சமீபத்திலே சென்னையிலே மூடிக்கிடந்த பி & சி மில்லை பேச்சுவார்த்தை மூலம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து தொழிலாளர்கள் மத்தியில் ஒரு மிகப் பெரிய பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று இந்த மகாலட்சுமி மில்லும் கடந்த 4, 5 மாத காலமாக மூடப்பட்டு 600க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பங்கள் இன்றையதினம் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கின்றன. பி & சி மில்லைப் போலவே மகாலட்சுமி மில்லும்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசுங்கள், உரை நிகழ்த்தக்கூடாது.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புடைய மில்தான், 1925-ல் 1,400 தொழிலாளர்களைக் கொண்டு தொடங்கப்பட்ட மில். கடந்த 1989-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுவதற்குமுன்பு 3 வருட காலமாக மூடிக்கிடந்தது. 1989-லே கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்பு 3 வருட காலமாக மூடிக்கிடந்த மில்லைத் திறந்து வைத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்விக்கு வாருங்கள். நான் உரை நிகழ்த்தக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் பேசிக் கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மீண்டும் அந்த மில் 4, 5 மாத காலமாக மூடிக்கிடக்கிறது. 600 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அரசு கருணை

உள்ளத்தோடு அதை ஏற்று நடத்த வேண்டும். அரசு அதை ஏற்கமுடியாவிட்டாலும் தனி நபர் அதை ஏற்கத் தயாராக இருக்கிறார்கள். அதனால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியாவது தனிநபர்கள் அதை ஏற்கின்ற நிலைமையையாவது உருவாக்கித் தர வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, மதுரை பசுமலையிலுள்ள மகாலட்சுமி மில்லில் 664 தொழிலாளர்கள் வேலைபார்த்து வந்தார்கள். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 1986-லே அது மூடப்பட்டது. பிறகு 1990-லே தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அந்த மில் திறக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டன. ஆலை உரிமையாளர்க 1996-ஆம் ஆண்டு நிதி நெருக்கடியின் காரணமாக ஆகஸ்ட் மாதச் சம்பளத்தைத் தராத காரணத்தினாலேதான் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள். மின் கட்டணத்தைக் கட்டாத காரணத்தினால்தான் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஏற்கெனவே நலிந்த மில் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் Director of Handlooms and Textiles, அரசுப் பிரதிநிதி ஆலை உரிமையாளரைக் கொண்ட குழு நிர்வாகத்தை நடத்தி வருகிறது. ஆலை உரிமையாளர் நிதி நெருக்கடிக்கு உட்பட்டு என்னால் நிதி போடமுடியாது, நீங்கள் எப்படி வேண்டுமானாலும் ஆலையை நடத்துங்கள், எனக்கு அதில் ஆட்சேபணையில்லை என்று தெரிவித்து விட்டார்கள், ஆகையால் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது மூடப்பட்டிருக்கக் கூடிய இந்த ஆலையை மீண்டும் திறந்து தொடர்ந்து நடத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்று ஆராய்வதற்காகத்தான் Director of Handlooms இச்சிறப்புத் திட்டத்தை ஆய்ந்து வருகிறார். கமிஷனரும் பேசிவருகிறார். உறுப்பினர்களுடைய கோரிக்கையைக் கவனத்தில் கொண்டு விரைவில் ஆலையைத் திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இரா. ஆவுடையப்பன், மனுக்கள் குழுவின் தலைவர்.





**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 1 முதல் 4 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1997-98 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 46 - செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. கோரிக்கை எண் 46, செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.13,09,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1186, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் அண்ணா கலையரங்கத்தைப் புதுப்பித்து இருக்கைகளைப் புதியதாகப் பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,09,85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 661, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,09,85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 248, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்த் திரைப் படங்களில் ஆபாசக் காட்சிகள் இடம் பெறுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,09,85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 245, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் கலைச் சேவை குறித்தும் அவர் திரை உலகிற்கு ஆற்றிவந்த தொண்டு குறித்தும் ஒரு செய்திப்படம் (Documentary Film) தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,09,85,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 50—சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50, சுற்றுலா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.2,12,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1202, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் பாலமதி, செங்காநத்தம், அமிர்தி, காவலூர், ஏலகிரிமலை ஆகிய மலைக் கிராமங்களைச் சுற்றுலாத் தலமாக அரசு அறிவித்து அதை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 691, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 279, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1157, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளுவர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதி, கங்கை கொண்ட சோழபுரத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 689, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஏற்காடு மலை நகரத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் சுற்றுலா வாரியத்தின் மூலம் மேலும் தங்கும் விடுதிகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1552, திரு. ஜி. கே. மணி:

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகாவதி அணையைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 277, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகையில் சுற்றுலா தகவல் மையம் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1311, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு நீர்வீழ்ச்சியை சுற்றுலா மையமாக்க



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,12,90,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 1226, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Honourable Speaker Sir, To discuss the need to increase the number of rooms in the Hotel owned by the Tamil Nadu Tourism Development Corporation and maintain the good Rose garden and lawn to attract more tourists, 'I move—

"That the sum of Rs. 2,12,90,000/- allocated under Demand No.50—Tourism, be reduced by Rs.100/".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 46, மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகுஉணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள@ கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்தைத் தெரிவித்தபின்னர் என்னுடைய பதிலுரையில் அவைகளுக்கெல்லாம் விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50 மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

---

@பக்கம் 153 முதல் 195 வரை இணைப்பு 1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள @கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் எனது பதிலுரையில் அவர்களுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் இதிலே பேச இருக்கிறார்கள். காலத்தின் அருமை கருதி எந்த ஒரு உறுப்பினரும் 7 நிமிடத்திற்கு மேல் போகாமல் அவர்களுடைய பேச்சை 7 நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்காக மூத்த உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களை இங்கே மாற்றுத் தலைவராக உட்கார வைக்கிறேன். இந்த 7 நிமிட வரம்பு திரு. ஞானசேகரன் அவர்களுக்கும் பொருந்தும்; இறுதியாகப் பேச இருக்கிற திருமதி பொன்னம்மாள் அவர்களுக்கும் பொருந்தும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் என்னிடத்திலே ஒரு காகிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இன்று தங்களைச் சந்திக்க வேண்டும் தயவுசெய்து 5 நிமிடங்கள் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே உட்கார்ந்து இருக்கும்போது சந்திக்கலாமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கெடுத்து தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகப் பேசுகின்ற நல்ல வாய்ப்பை நல்கிய உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் நம்முடைய தமிழகத்தில் எல்லா வளமும் இருக்கிறது என்று கொள்கை

@பக்கம் 196 முதல் 214 வரை இணைப்பு 2-ஆக அச்சிடப்பெற்றுள்ளது



விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிற நாடான தமிழ்நாட்டில் தொன்மை வாய்ந்த கோயில்கள், அனைவரையும் ஈர்க்கும் கடற்கரைகள், மனமகிழ்வூட்டும் மலைச்சாரல்கள், வளம் கொழிக்கும் முதுமலை வனவிலங்கு சரணாலயம், அதேபோல் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், அற்புதமான குற்றால நீர்வீழ்ச்சி, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி என பல உள்ளன.

முற்பகல் 11-40

ஆசியாவிலேயே, பெரிய டெலஸ்கோப்பைக் கொண்டு இருக்கின்ற ஜவ்வாது மலையிலுள்ள காவலூர் மலை என்று இயற்கை வளங்கள் எல்லாம், இங்கே தமிழகத்திலே கொழிக்கின்றபோது, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய அளவிற்குக் கூட, நாம் தமிழகத்திலே சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்காதது வருந்தத்தக்க ஒரு செய்தியாகும். கர்நாடகம், பந்தியூர் சரணாலயம், அதே போல பேலூர், அளபேடு, சரவணபெலுகுலா போன்ற இடங்களை மட்டுமே வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் கர்நாடகம் உலக டூரிசம் மேப்பிலே இடம் பெற்றிருக்கின்றது. ஆனால், நம்முடைய தமிழகம் இன்னும் உலக சுற்றுலா மேப்பிலே ஏன் இடம் பெறவில்லை. அதற்காகத் தமிழக அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். எவ்வளவோ வளங்களையெல்லாம் கொண்டிருக்கிற தமிழகத்தில் நாம் இன்னும் சீரிய முயற்சிகளை எடுத்து, உலக டூரிசம் மேப்பிலே நாம் இடத்தைப் பெறக்கூடிய அளவிற்கு முன்னேற்றத்தை எய்த வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும்.

சிறிது நாட்களுக்கு முன்பு குஜராத்தினுடைய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. பரீத் அவர்கள் இங்கே வருகை தந்து, தாஜ் கோரமண்டலில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, இங்குள்ள தொழில் முனைவோர்களையெல்லாம் அழைத்துப் பேசி, சுமார் 7000 கோடி ரூபாய் அளவிற்கு, குஜராத்தில் நீங்கள் வந்து முதலீடு செய்யுங்கள், நாங்கள் உங்களுக்கு இடம் தருகிறோம், மின்சாரம் தருகிறோம், நீர் வசதி தருகிறோம் என்றெல்லாம் சொல்லி இங்கே கலந்து பேசி, தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களை, அங்கு அழைத்துப் போவதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்தச் செய்தி கூட 'எக்னாமிக் டைம்ஸ்' என்ற பத்திரிகையிலே 18 மார்ச் 1997-ல் வெளியாகி இருக்கிறது.

குஜராத்தில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் எல்லாம் முயற்சி எடுத்து, தமிழகத்தினுடைய வளத்தைச் சுரண்டி எடுத்துச் செல்ல முற்படுகின்றபோது, நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், தயவு செய்து இங்கு இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களையெல்லாம் அழைத்துப் பேசி, இங்கேயே, தமிழகத்திலேயே, அது போன்ற முதலீட்டினைச் செய்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று, அங்கு இருக்கக்கூடிய தொழில் முனைவோர்களை எல்லாம் அழைத்துப் பேசி, தமிழகத்திலே வந்து நீங்கள் முதலீடு செய்யுங்கள் என்கிற கோரிக்கையினையும் வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே மலைகளின் ராணி என்று அழைக்கப்படுகிற ஊட்டி இருக்கின்றது. அதைவிட ஒரு சிறந்த மலை, இந்தியத் திருநாட்டிலே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிக மகத்தான ஒரு மலை. அப்படிப் பார்க்கும்போது இன்னும் எவ்வளவோ முயற்சிகளை நாம் எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, கொடைக்கானல், அங்கு எவ்வளவோ வளத்தினைப் பெற்று இருக்கிறோம். அதுபோல, எங்களுடைய மாவட்டத்தில் ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகிற ஏலகிரி மலை. இத்தனை மலைகளை உள்ளடக்கியிருக்கின்ற நம்முடைய தமிழகத்தில், ஏன் சுற்றுலாத் துறைக்கு நீங்கள் மிகக் குறைந்த அளவில் பணத்தை ஒதுக்கீடு செய்கிறீர்கள்?

இந்தக் கொள்கைக் குறிப்பிலே நான் பார்க்கும் போது, கடந்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் அது மிக மிகக் குறைவாக இருக்கின்றது. எட்டாவது ஐந்தாண்டு காலத்தில் நாம் திட்ட முதலீடாக ரூ. 5.25 கோடி செலவிடத் திட்டமிட்டோம். ஆனால், அந்தக் கால கட்டத்தில் நாம் திட்டச் செலவாக ரூ. 13.74 கோடியைச் செலவு செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளத்தில் ரூ. 30 கோடியை இதற்காகச் செலவிடுகிறார்கள். அங்கே ரூ. 30 கோடியைச் செலவிட்டு, சுற்றுலாத் துறையை அவர்கள் வளப்படுத்துகிற போது, நாம் மட்டும் பின்தங்கி இருப்பது கொஞ்சம் கூட நமக்கு ஒத்து வராத விஷயம்தான். சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இளைஞர். நீங்கள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுத்து, கோடிக்கணக்கில் முதல்வர் அவர்களிடமிருந்து பெற்று சுற்றுலாத் துறையை நீங்கள் வளப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையினை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



இங்கு தனியார்கள் ஏன் சுற்றுலாத் துறையிலே முதலீடு செய்ய மறுக்கிறார்கள் என்று சொன்னால், எனக்குத் தெரிந்த கிளப் இண்டியா ரிசார்ட்ஸ், எக்சிகியூட்டிவ் சேர்மன் திரு. இராஜு என்பவர் 1992-ஆம் ஆண்டில் பேச்சிப்பாறையிலும், கொடைக்கானலிலும் ஒரு அப்ரூவலைக் கேட்டு இருக்கின்றார்கள். உள்ளாட்சித் துறை அதற்கான வரைபடத்தையும் அப்ரூவல் செய்ய மறுக்கிறது. அவர் சொந்தக் கட்டிடத்தைக் கட்ட அனுமதி மறுக்கிறது. 1992-லிருந்து ஒரு பிளான் கூட அப்ரூவல் பெற முடியாமல் இன்று அவர் சுற்றுலா மையங்களை ஏற்படுத்த முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார். எனவே, இங்கு இருக்கக்கூடிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஒன்று கூடி, ஒரு சுற்றுலா மையத்தை வளப்படுத்த வரக்கூடிய முனைவோர்களுக்கு, நீங்கள் எல்லா வசதிகளையும் செய்து தருவதற்கு, உங்களுக்குள்ளே ஒருங்கிணைப்பு இருக்கவேண்டும் அல்லது நீங்கள் கம்பைன்டாக ஒரு டீமைப் போட்டு அவர்கள் கேட்கக்கூடிய வசதிகளை ஒரே இடத்தில் செய்து கொடுக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் இதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, அரசு புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருந்தாலும் கூட, அந்த நிலங்களை அவர்களுக்கு வழங்கி, குடிநீர் வசதி, மின்சார வசதி, கழிவுநீர்க் கால்வாய் வசதி போன்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுத்துத் தனியார்களை இதிலே ஊக்கப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது கருத்து, இங்கே இருந்து அதிகாரிகளை எல்லாம் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறீர்கள். இந்த அரசு பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால் இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை, நம்முடைய சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் கூட அழைத்துக்கொண்டு போவீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். காரணம் இந்தியாவுக்கு சுற்றுலாத் துறையிலே இருக்கக்கூடிய நாட்டம் மிகக் குறைவாக இருக்கின்றது. வெளிநாடுகளுக்கு நாங்கள் சென்று எப்படியெல்லாம் அங்கே சுற்றுலா வளப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு, அதுமாதிரி இங்கே சுற்றுலாவை எப்படி வளப்படுத்த முடியும் என்ற ஆய்வினை நடத்தி, உங்களுக்குக் கருத்துக்களை வழங்க எங்களால் முடியும். அதற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள், சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களை அனுப்பி வைக்கக்கூடிய வாய்ப்பினை—பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக

இருந்த நேரத்தில் வெளிநாடுகளுக்குப் போய் வந்திருக்கிறார்கள். எனவே, நீங்கள் எல்லாம் போய் வந்ததைப் போல எங்களுக்கும் ஒரு வாய்ப்பினை—உருவாக்கித் தந்தால், நாங்கள் அரசுக்குச் செலவை மட்டும் கொடுப்போம் என்பது மட்டுமல்ல, நல்ல கருத்துக்களை அங்கேயிருந்து சுமந்து வந்து இங்கே நம்முடைய சுற்றுலாத் துறையையும் வளப்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-45*

சென்ற ஆட்சியிலேகூட 9 இலட்சம் ரூபாய் செலவில் சில அரசுச் செயலாளர்களும், டிடிடிசி. சேர்மன் இவர்கள் எல்லாம் லண்டனுக்குப் போய் வந்தார்கள். அவர்கள் போய் வந்த பிறகு ஏதாவது பலன் இருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றும் பலன் இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை அனுப்புவீர்கள் என்று சொன்னால், நாங்கள் பொறுப்புணர்ச்சியோடு அங்கு சென்று, பல அரிய கருத்துக்களைக் குறித்துக்கொண்டு, நம்முடைய சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காகப் பல திட்டங்களைச் சொல்லுவோம்.

700 மாடிக் கட்டிடங்கள் அமெரிக்காவில் இருக்கின்றன. நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்கூட வெளிநாடுகளுக்குச் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். நீங்களும் தமிழகத்திலே பல மாடிக் கட்டிடங்களைக் கட்ட எப்படியாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அமெரிக்காவில் 140 மாடிக் கட்டிடங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். எத்தனை மாடிக் கட்டிடங்களாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். 100-வது மாடியிலே அவர்கள் ஓட்டல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இங்கே நாம் ஓட்டல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, சுற்றுலாவை இன்னும் வளர்க்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, சன் டி.வி.யைப் போன்று, 'மூன்' டி.வி. ஒன்றை இங்கே நீங்கள் ஆரம்பிக்கலாமா. சன் டி.வி-யாவது இப்போது உலகமெல்லாம் பெயர் எடுத்துக்கொண்டு வருகிறது. அதேபோன்று



'மூன்' டி.வி. என்று ஆரம்பித்து, நீங்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய வளங்களையெல்லாம் படமெடுத்து, அதை எல்லா நாடுகளுக்கும் வெளிபரப்பி, வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் அந்த இடங்களுக்கு வரக்கூடிய வண்ணம் அவர்களை ஈர்த்து, சுற்றுலாவை வளப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** திரு. ஞானசேகரன், நீங்கள் பேச ஆரம்பித்து 10 நிமிடங்களுக்குமேல் ஆகிவிட்டது. உங்களுடைய உரையைச் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதேபோன்று, 'ஓட்டல் தமிழ்நாட்டில்' சில நடவடிக்கைகளை நீங்கள் மாற்றியமைக்க வேண்டும். நாங்கள் கோயம்புத்தூர் மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது, அங்கே தங்க வேண்டிய சூழ்நிலையில், அங்கேயுள்ள அறைகளை நாங்களே சுத்தம் செய்ய வேண்டியிருந்தது. அங்கே இரண்டு டீ, ஒரு சாப்பாடு சாப்பிட்டதற்கு ரூ. 76 பில் போட்டார்கள். ஸ்டார் ஓட்டலுடைய அந்தஸ்துக்குத் தகுந்தமாதிரி விலை போடப்படுகிறது. இப்படி எங்களையே வாட்டி வதைக்கிறீர்கள் என்று சொன்னால், பிறகு நாட்டு மக்கள் எப்படி அங்கே போகமுடியும்? அங்கே வழங்கும் உணவை வாயில் வைக்க முடியவில்லை. ஆகவே, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஓட்டல் தமிழ்நாட்டிலே தரமான உணவைப் படைப்பதற்கும், தகுந்த விலையை நிர்ணயம் செய்வதற்கும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஸ்டார் ஓட்டலுடைய தகுதிக்கு ஏற்றவாறு விலையை அங்கே வைத்திருக்கிறீர்கள். ஆனால் ஸ்டார் ஓட்டலுடைய அந்தஸ்து அங்கே வரவில்லை; எனவே, அதை நீங்கள் இன்னும் மேம்படுத்த வேண்டும். அது அரசினுடைய கழகம். (மணியடிக்கப்பெற்றது)

எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் சுற்றுலா மாளிகையில் தங்கினால் என்ன கட்டணம் வசூலிக்கப்படுமோ அதையே அங்கே வசூலிக்க ஏற்பாடு செய்தால், நாங்களும் அடிக்கடி அங்கே போய் அங்கே உள்ள செயல்பாடுகளைச் செக் பண்ண ஏதுவாக இருக்கும். அப்படி ஏதாவது செய்தால் அதனுடைய தரத்தை வளப்படுத்த முடியும். எனவே, அங்கே கார்ப்பரேஷன் ரேட்டை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் டூரிஸ்ட் சென்டர்கள் வைக்க வேண்டும். வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், சுற்றுலாவைப் பொறுத்த வரையில் நீங்கள் 5 பஸ்களை ஓட்டலாம். அங்கே வரலாற்றுப் புகழ்மிக்க ஜலகண்டேஸ்வரர் கோவில் இருக்கிறது. கோவிலுடன் கோட்டையும் அமைந்திருக்கிறது. அதேபோல, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே மேல்மலையனூரிலே புகழ்பெற்ற கோவில் ஒன்று இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே வள்ளிமலைக் கோவில் இருக்கிறது. அதுபோல ரத்தினகிரி கோவில் இருக்கிறது. திருப்பதி, திருத்தணி, சோளிங்கர் என்று பக்கத்திலே கோவில்கள் நிறைய இருக்கின்றன. வேலூரிருந்து ஐந்து சுற்றுலா பேருந்துகளை வைத்து நடத்தலாம். அதுபோன்று சி.எம்.சி. மருத்துவமனைக்குப் பல வெளி மாநிலங்களிலிருந்து நோயாளிகள் வருகின்றனர். அவர்களுக்கு உறுதுணையாகப் பலர் வருகின்றனர். அப்படி வருகிறவர்களை எல்லாம் அழைத்துச் சென்று சுற்றிக் காண்பித்தால், பல கோடி ரூபாய் வருமானத்தை எங்கள் மாவட்டத்திலேயே சுற்றுலாத் துறை ஈட்டமுடியும்.

அமிர்தி, பாலமதி, செங்கானத்தம் போன்ற மலைகளையும், காவலூர் மலையையும் நீங்கள் சுற்றுலா மையமாக மாற்றி சுற்றுலாப் பயணிகளைக் கவர ஏற்பாடு செய்யலாம். ஏலகிரி மலையையும் நீங்கள் சுற்றுலா மையமாக உருவாக்கி சுற்றுலா வளர்ச்சியடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** திரு. ஞானசேகரன், தயவுசெய்து உங்கள் உரையை முடித்துக்கொண்டு, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்கிறேன். வேலூரில் ஜலகண்டேஸ்வரர் கோவிலைச் சுற்றி, அதாவது கோட்டையைச் சுற்றி அகழி இருக்கிறது. அதிலே மீன் வளர்க்கிறார்கள். சுற்றுலாத் துறை மூலம் அங்கே படகுகளை விட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் தமிழுக்கு எவ்வளவோ சேவைகளைச் செய்திருக்கிறார்கள். சுற்றுலாத் துறை மூலமாக நீங்கள் சென்னையிலேயும், வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத் தலைநகர் வேலூரிலும் அவருடைய திருவுருவச் சிலைகளை அமைத்து, மணி மண்டபங்களையும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வள்ளுவர் கோட்டத்தில் நீங்கள் திருக்குறள் முனுசாமி அவர்களுடைய சிலையை நிறுவி, அவருக்கும் பெருமை சேர்க்கலாம்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேரவையினுடைய தற்காலிகத் தலைவருக்குக் கெட்ட பெயர் உண்டாக்கி விடக்கூடாது. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நல்ல பெயரை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். இன்னும் ஒரு மணித் துளியில் பேச்சை முடித்து விடுகிறேன்.

செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் துறையின் மூலமாக ஏ.பி.ஆர்.ஓ.-க்களை நியமிக்கிறோம். கடந்தகால ஆட்சியிலே அப்படி அவர்களை நியமிக்கிறபோது பல ஊழல்கள் நடந்ததாக முரசொலி நாளிதழிலே முதல் பக்கத்திலே தலைப்புச் செய்தியாக அப்போது வந்தது. எனவே, இப்போதும், ஏ.பி.ஆர்.ஓ.-க்களை நியமிக்கிறபோது அப்படிப்பட்ட ஊழல்கள் நடந்துவிடா வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே அந்தத் துறையில் பல ஆண்டுகளாகப் பணி புரிந்தவர்களுக்கும் 1:1 என்ற அடிப்படையில் அதிலே வாய்ப்பளிக்கலாம்.

புதிதாகத் திறமை அடிப்படையில் Employment Exchange மூலமாக ஆட்களை எடுத்து, ஏ.பி.ஆர்.ஓ. பதவிகளை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

வேலூரில் பொருட்காட்சி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பொருட்காட்சி என்பதை மாற்றி, ஆண்டுதோறும் பொருட்காட்சி நடைபெற வேண்டும். பொருட்காட்சி வருமானத்திலிருந்து வேலூர் நகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை மூன்றாண்டு காலமாக இந்த அரசு கொடுக்கவில்லை. ஆகவே வேலூர் நகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய அந்த வருமானத்தின் பாதிப் பங்கைக் கொடுக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தலைவர் ராஜீவ்காந்தி மறைந்த ஸ்ரீபெரும்புதூர் என்ற இடத்தில் 2 அறைகள் மற்றும் ஓர் உணவகம் கொண்ட சாலையோர விடுதி அமைக்கப்போவதாகக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். இந்தியாவினுடைய இளைய தலைவராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் மறைந்த அந்த இடத்தில் அஞ்சலி செலுத்துவதற்காகப் பல மாநிலங்களிலிருந்து மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தமிழ்நாடு ஓட்டல் 2 அறைகளுக்குப் பதிலாக கிட்டத்தட்ட 40 அறைகளைக் கொண்டதாக ஒரு பெரிய மோட்டலை அந்த இடத்தில் கட்ட வேண்டும். அதுபோல என்னுடைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுக்குத் திருவுருவச் சிலை ஒன்றை ஸ்ரீபெரும்புதூரில் இந்த நடப்பாண்டிலே வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** இத்துடன் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். 12 நிமிடங்கள் ஆகிவிட்டன. அடுத்து திரு. வெ.அ. ஆண்டமுத்து.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி - திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள்மீது இந்த மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், என்னுடைய மாவட்டத் தலைவரும், இங்கே மரியாதைக்குரிய அமைச்சராகவும் இருக்கும் மாண்புமிகு திரு. என்.கே.கே.பி. அவர்களுக்கும் முதலில் நான் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



செய்தித் துறையானது இன்றைய ஜனநாயக உலகிலே ஒரு முக்கிய அங்கமாக விளங்கி வருகிறது. இது அரசுக்கும், மக்களுக்கும் ஒரு பாலமாக அமைந்து இருக்கின்றது. அரசின் நோக்கங்கள், எதிர்காலத் திட்டங்கள், அவற்றையெல்லாம் செயல்படுத்துகின்ற முறை போன்றவற்றை மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கிறது.

நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. நாம் 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நிலையிலே உள்ளோம். மக்கள் எந்த அளவுக்கு அரசுத் திட்டங்களால் பயன் அடைகிறார்கள், மக்களுக்கு இன்னும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்துகொள்வதற்கும், இந்தச் செய்தித் துறை மிகவும் உதவியாக இருக்கிறது.

மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறுகின்ற பொருட்காட்சிகளிலும், சென்னைப் பொருட்காட்சியிலும், அகில உலக பன்னாட்டு வர்த்தகச் சந்தையிலும், அரசு நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் பங்குகொள்ள வேண்டும். அப்படிப் பங்குகொள்ளும்போதுதான் நமது நாட்டின் நிலை என்ன, மற்ற நாடுகளோடு எப்படியெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு, எப்படி முன்னேறுவது என்றெல்லாம் உணர முடியும். இதற்கு நம்முடைய செய்தித் துறை மிக உறுதுணையாக இருக்கிறது.

அடுத்தபடியாக நம் நாட்டின் விடுதலைக்காகவும், சமுதாய உணர்வை ஊட்டி வளர்ப்பதற்காகவும், விழிப்புணர்ச்சியை ஊட்டிய, உழைத்த தலைவர்களான கப்பல் ஓட்டிய தமிழன், மூதறிஞர் இராஜாஜி, மகாகவி பாரதி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்களுக்கு இந்தத் துறை சிலை எழுப்பி, பிறந்தநாள் கொண்டாடுவது, இன்றைய இளைஞர் சமுதாயம், அப்பெரியோர்களின் வழியிலே நடப்பதற்கு, உதவுகிறது; இனி இளைய சமுதாயத்தின் கடமை என்ன என்பதை இந்தத் துறை உணர்த்துகிறது.

வங்கதேச சுபாஷ் சந்திர போஸ் அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாட இருப்பதும், நாடு விடுதலை பெற்று 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி விடுதலைப் பொன்விழா கொண்டாட இருப்பதும், அதேபோல தமிழக சட்டமன்றப் பேரவை ஆரம்பித்து 60

ஆண்டுகள் நிறைவு பெறுவதை வைரவிழாவாகக் கொண்டாட இருப்பதும், தமிழகத்தில் 30-11-1920-ல் தேர்தல் நடத்த ஆரம்பித்து, இப்போது பவள விழாவாகக் கொண்டாட இருப்பதும் இந்த ஆண்டின் முக்கிய அம்சங்களாகும். இவைகள் எல்லாம் ஜனநாயகத்தின் பேரில் நாம் வைத்திருக்கும் அசைக்க முடியாத ஒரு நம்பிக்கையைக் காட்டுகிறது.

திரைப்படத் துறையில் சண்டைக் காட்சிகளில் இறந்த ஸ்டண்ட் நடிகர்களுக்கு ஒரு இலட்ச ரூபாயும், முழு அளவில் ஊனம் அடைந்தால் அவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் வழங்கப்படுவது, சினிமாத் துறைக்கு நாம் கொடுக்கும் ஊக்கம் என்றே கூறலாம். அதேபோல விவசாயக் கூலி வேலை செய்பவர்கள் பணியின்போது இறந்தால் அவர்களுக்கும் இழப்புத் தொகையாக 1 இலட்ச ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிதான் இந்த நாட்டின் முதுகெலும்பு. அவர்களுக்குச் செய்வதை நம் கடமையாகக் கருத வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க இருப்பது, எதிர்காலத்தில் நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கு ஓர் ஒளிச் சுடராக, ஒளி விளக்காக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

மதுரையிலே உயர்நீதிமன்றத்தின் கிளை அமைக்க இருப்பதன் மூலம் நீதித்துறையின் மீது எந்த அளவுக்கு மரியாதை வைத்து இருக்கிறோம் என்பதை நாம் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கின்றோம்.

மத நல்லிணக்கத்தை வளர்க்க, இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்பதற்கு ஸ்விஃப்ட் ஆக்ஷன் ஃபோர்ஸ் என்ற ஒரு பிரிவைக் காவல் துறையில் அமைத்து, அதனைக் கண்காணிப்பதற்காகப் போட்டு இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது ஆகும்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 25 லட்ச ரூபாய் ஒதுக்கி அவர்கள் அந்தத் தொகுதி மேம்பாட்டுக்காக உதவி இருப்பது பாராட்டுக்குரியது ஆகும்.

திருவள்ளுவருக்குக் கன்னியாகுமரியில் 133 அடி உயரத்திலே சிலை அமைக்க இருப்பதன் மூலம், நம் எதிர்கால இளைஞர்களும் நம்முடைய திருவள்ளுவர் வழியிலே வரவேண்டும் என்பதும், மதுரையிலே



அமரர் கக்கன் அவர்களுக்குச் சிலை வைக்க இருப்பதும்—நேர்மையான ஓர் அமைச்சராக இருந்து இந்த நாட்டுக்கு நல்ல முறையிலே அவர் சேவை செய்தார் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக அங்கே சிலை அமைக்கப்பட இருப்பதும்—பாராட்டப்படத் தகுந்தவையாகும். மேலும் ராஜாஜி அவர்களுக்கும், அமரர் ஜீவா, நேத்தாஜி போன்றவர்களுக்கும் மார்பளவுச் சிலைகள் வைப்பதும், அவர்கள்மீது நம் அரசு நல்ல மதிப்பை வைத்து இருப்பதைக் காட்டுகிறது என்று கூறலாம்.

மேலும் பத்திரிகை ஆசிரியர்கள் 25 வருடம் பணியாற்றி இருந்தால், அவர்கள் இயற்கை எய்தினால் 25 ஆயிரம் அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்க இருப்பதும், ஜே.ஜே. திரைப்பட நகரை எம்.ஜி.ஆர் திரைப்பட நகர் என்று மாற்றி இருப்பதும் மிகவும் பொருத்தமானது என்று கூறுவேன்.

சுற்றுலாத் துறை மேம்பட எல்லா மாவட்டங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் தொடங்க வேண்டும். சுற்றுலா என்பது பழங்கால புராதனக் கலைகள், கோயில்கள், பழைய மன்னர்கள் ஆண்ட மாளிகைகள், கோட்டைகள், கடல்கள், வன விலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம் போன்றவற்றை எல்லாம் பராமரித்து அதைச் செம்மைப்படுத்தி மக்களைக் கவர்ந்து, நாட்டுக்கும், மக்களுக்கும்—உழைத்த உள்ளங்களுக்கு எல்லாம் ஒரு உற்சாகம் ஏற்படுத்துவதற்காக நல்ல இடமாக அதை அமைக்க வேண்டும்.

1996-97-லே உலக சுற்றுலாதினம் கொண்டாடப்பட்டது. சுற்றுலா என்பது தொழிலாகக் கருதப்பட்டு இருக்கின்றது. அந்நியச் செலாவணியை அதிக அளவிலே ஈட்ட முடிகின்ற நிலையிலே இருக்கின்றோம். நீலகிரி மாவட்டம் ஓர் அழகான சுற்றுலா மையம். அங்கு உதகை ஏரியின் குறுக்கே ஒரு தொங்கும் பாலம் 61.75 லட்சம் செலவிலே அமைக்க இருப்பது எல்லோரும் பாராட்டப்படக்கூடியது. முதுமலை வனவிலங்கு சரணாலயத்திலே உள்ள தெப்பக்காடு இளைஞர் விடுதியிலே குழந்தைகள் விளையாட்டுச் சாதனம் அமைத்தல், தனியார் நிறுவனத்திற்கு இன்று சுற்றுலாவைத் தொழிலாக அரசு அங்கீகரித்து, தனியார் முதலீடு செய்து சுற்றுலா மேம்பட இருப்பது ஆகியவற்றைப் பாராட்ட வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடவும்.

**திரு. வெ. அ. ஆண்டமுத்து:** குறிப்பாகச் சுற்றுலாத் துறையிலே விஜி.பி., எம்.ஜி.எம். போன்ற தனியார் நிறுவனங்கள் எந்த அளவுக்கு இன்று

தமிழகத்தில் முன்னேறி இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அரசும் முன்வந்து மக்களைக் கவரக்கூடிய அளவுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பவானிசாகரிலே ஓர் அழகான பார்க் இருக்கின்றது. அங்கு ஆடிப் பெருக்கு நாளிலே லட்சோப லட்சம் மக்கள் வருகின்றார்கள். அந்த நேரத்திலே அது சிறப்பாகப் பராமரிக்கப்படாமல் இருப்பதால், அதை அடுத்த ஆண்டிலாவது நன்கு பராமரித்து அதை ஒரு சுற்றுலா மையமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் லட்சக்கணக்கான மக்கள் வருகின்ற இடம். சனி, ஞாயிறு லீவு நாட்களில் 10 ஆயிரம், 20 ஆயிரம் பேர் வருகின்ற இடத்தில் அது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

கொடிவேரியில் ஒரு சிறிய அணை இருக்கின்றது. அதைச் சீர் செய்யவேண்டும். காரணம், கோபிசெட்டிப்பாளையத்திலும் பாதி சினிமா சூட்டிங் நடக்கிறது. அதையெல்லாம் கருத்திலேகொண்டு, அந்த இடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தோம் என்றால், அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றி ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன். தொட்டம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், மாக்கினாம்கோம்பை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய இந்த இரண்டு திட்டங்களும், பவானிசாகர் தொகுதியிலே அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், அவை 1992-லே இருந்து நிறைவேற்றப்படாமல் நிலுவையில் இருக்கின்றது. அங்கு மிகுந்த குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டு மக்கள் துன்பத்துக்கு ஆளாகி இருப்பதால் அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அதில் தவறு செய்த அதிகாரிகள்மீது விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்,

அத்திக்கடவு ஸ்கீம் என்று 134 கோடி ரூபாயில் அத்திக்கடவில் பவானி ஆற்றில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை அமைத்தால் அந்த வறண்ட பகுதிகளுக்கு நீர் கிடைக்கும்; குளம் குட்டைகள் தண்ணீர் பெறுவதால், மீன் வளத்தைப் பெருக்கலாம்; குடிநீர் சிரமத்தைப் போக்குவதற்கும், விவசாயத்துக்கும் அது சிறப்பாக இருக்கும்.

மேமாண்டபாளையம் அருகில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புளியம்பட்டியில்



உள்ள கவர்ன்மெண்ட் ஆஸ்பிட்டல் கேட்பாரற்றுக் கிடக்கிறது. அங்கு ஒரு நாளைக்கு 10 பேஷன்ட்ஸ் கூட வருவது இல்லை. 30,000 பேர் மக்கள் தொகை இருக்கின்ற இடத்திலே நல்ல அரசு மருத்துவமனை கிடையாது. ஆகவே அங்கே நல்ல டாக்டர்களைக் கொண்ட மருத்துவமனையை என் தொகுதியில் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் தொகுதியில் இருக்கின்ற ஆரம்பச் சுகாதார மையத்தையே ஆஸ்பத்திரியாகத் தரம் உயர்த்தி, அதைப்போல புள்ளம்பட்டியில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்தையும் அரசு ஆஸ்பத்திரியாகத் தரம் உயர்த்தி, நல்ல மருத்துவர்களைப் போட்டுப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவேலிபாளையம், குருமந்தூர் ஆகிய ஊர்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகத் தரம் உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து இதோடு உரையை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து திரு. எஸ். வி. கிருஷ்ணன்.

***திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சுற்றுலா, செய்தித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்தமைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முன்னாளில் நல்ல திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. பராசக்தி போன்ற திரைப்படங்கள் வெளிவந்து மக்களுக்கு நல்ல கருத்துக்களை வழங்கி மக்களை நல்வழிப்படுத்தக்கூடிய அளவில் விளங்கின. ஆனால் இன்றைய திரைப்படங்கள் வியாபார ரீதியாக வெற்றி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு, ஆபாசக் காட்சிகளையும், வன்முறைச் சம்பவங்களையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படுகின்றன. இதனால் இளைய தலைமுறையினரும், குழந்தைகளும் தவறான வழியில் அழைத்துச் செல்லப்படுவதோடு, நமது பண்பாட்டுச் சீரழிவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே தொழில் நுட்ப ரீதியாகப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு, புதிய தரமான திரைப்படங்களை எடுப்பதற்கு அரசு நிதி உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலகோடி ரூபாய் செலவு செய்து, சென்னையில் எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தத் திரைப்பட நகரில்

பொருட்காட்சி உருவாக்குவதற்கு வசதி இருக்கிறது. ஆனால் எடிட்டிங் முதலான தொழில்நுட்ப வசதிகளில் போதிய வசதி இல்லை. அதைப் பராமரிப்பு செய்து கொடுக்க வேண்டும். அதனால் எளிதில் திரைப்படம் எடுக்க வசதியாக இருக்கும்.

அரசு அச்சுத்துறையை நவீனப்படுத்தவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்று திரட்டியவர், சாட்டையடி சாணிப்பால் கொடுமைக்கு முடிவு கட்டியவர் அமரர் சீனிவாச ராவ் அவர்கள். அவருடைய திருவுருவச் சிலையை மன்னார்குடியில் அமைக்க வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் சினிமா ஆப்பரேட்டர் பணியில், 15-க்கு மேற்பட்ட பணியிடங்கள் ஏழாண்டு காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதற்கு முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தேர்வு நடத்தப்பட்டு, அந்த முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. ஆகவே இந்த அரசு அந்தத் தேர்வுப் பட்டியலை வெளியிடுவதோடு, அவர்களை உடனே பணியில் அமர்த்தவும் ஆவன செய்ய வேண்டும். திரைப்படத் துறையில் இருக்கும் ஆப்பரேட்டர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சம்பளம் முறையாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். திரையரங்குகளில் மக்களுக்குக் கழிப்பட வசதியும், குடிநீர் வசதியும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

ஜனநாயகத்தில் சட்டம் இயற்றுதல், நிர்வாகம் செய்தல், நீதி வழங்குதல், பத்திரிகை மூலம் கருத்துக்களை வெளியிடுதல் ஆகியவை ஜனநாயகத்தைத் தாங்கும் தூண்களாக இருக்கின்றன. பத்திரிகைகள் மக்களுக்குத் தவறுகள் அற்ற கருத்துக்களைச் செய்தியாக வழங்க அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும். பரபரப்பற்ற நேர்மையுள்ள கருத்துக்களைப் பத்திரிகைகள் வழங்க அரசு உறுதி செய்யவேண்டும். பத்திரிகையாளர்களுக்குச் சென்னை மாநகரத்தில் வழங்கியதைப்போல சலுகைகளை மேலும் விரிவுபடுத்தி அனைத்து மாவட்டங்களுக்கும் தாலுக்கா அளவிலும் அதை விரிவுபடுத்தி, பத்திரிகையாளர்களுக்குப் பேருந்து, ரயில் பயணச் சலுகைகளைச் செய்து கொடுக்க வேண்டும். மேற்கொண்டு குடியிருப்பு வசதிகளும் கொடுக்கவேண்டும்.

சிதம்பரனார் மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரி என்ற ஊரில் நம்மாழ்வார் தோன்றினார். இங்கு தாமிரபரணி நதிக்கரையில் 10 மைல் சுற்றளவுக்கு ஒன்பது பெருமான் கோயில்கள் உள்ளன. இவை தென்மாவட்டங்களின் நவத் திருப்பதிகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த நவதிருப்பதிகளான (1) திருவைகுண்டம், (2) நத்தம், (3) திருப்புளிங்குடி, (4) தெருங்குளம், (5) தென்திருப்பேரை, (6) தேவபிரான்கோயில், சவராமங்கலம், (7) அப்பன்கோயில், சவராமங்கலம், (8) திருக்களார் மற்றும் (9) ஆழ்வார் திருநகரி ஆகிய திருத்தலங்களைச் சுற்றுலா மையமாக அறிவிக்கவேண்டும். நாங்குனேரி தொகுதியில் செண்பக மகாராஜாவால் கட்டப்பட்டிருக்கின்ற ஜெகநாதப் பெருமாள் கோயிலில் சிற்பக் கலைக்கூடம் இருக்கிறது. அந்தச் சிற்பக் கலைக்கூடத்தை மேம்படுத்தி அதையும் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டும். களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலையின் உள்பகுதியில் செங்கல்தேர் என்னும் இடத்தில் கோடைக்காலங்களில், ஊட்டி, கொடைக்கானல்போல் தட்ப வெட்ப நிலை இருக்கிறது. இதையும் சுற்றுலா மையமாக அறிவித்து, போதிய கட்டிட வசதியும் செய்து கொடுக்கவேண்டும்.



பிற்பகல் 12-05

அதேபோல, திருக்குறுங்குடியில் மலையினுடைய உள் பகுதியில் 'நம்பி கோயில்' என்னும் கோயில் உள்ளது. அந்த உள் பகுதியிலே அமைந்துள்ள அந்தக் கோயிலைச் சுற்றுலா மையமாக அமைத்து அங்கே செல்கின்ற பக்தர்களுக்குக் கட்டிட வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இதுவரை பேச வாய்ப்பளித்த பேரவை மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மிக்க நன்றி. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. அடுத்து, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் எல். மூக்கையா,

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றையதினம் இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், சாலையோர உணவு விடுதிகள் இவைகளையெல்லாம் பட்டியலிட்டு 'விடுதிகள் அட்டவணையாக' தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் மூலம் இந்த ஆண்டு வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது, வரவேற்கத்தக்கது. தற்போது புதிதாக வெளியிடப்பட்டுள்ள கையேடுகள் மிகவும் நேர்த்தியாகவும், சிறப்பாகவும் சுற்றுலாத் துறையினுடைய விளம்பரப் பிரிவால் வெளியிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்பதை

மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அட்டவணை வெளியிடப்பட்டிருப்பதால், உலக நாடுகளிலிருந்து வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் தமிழ் நாட்டிற்கு வந்தவுடன், தமிழகத்தில் எந்தெந்த நகரங்கள் சுற்றுலாத்தலமாக இருக்கிறது என்ற விவரங்கள், அதைப்போல எந்தெந்த சுற்றுலாத் தலங்களில் எங்கெங்கு தங்கும் விடுதிகள் இருக்கின்றன என்பதையெல்லாம் அவர்கள் எளிதில் தெரிந்துகொண்டு சுற்றுலா மையங்களுக்குச் சென்று வருவதற்குரிய வாய்ப்புகள் எல்லாம் இதன்மூலம் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டிலுள்ள கோவில்களின் தொன்மைச் சிறப்புகளையும், கலைச் செல்வங்களையும், வன விலங்கு சரணாலயங்களையும், வளம் கொழிக்கும் இயற்கைக் காடுகளையும், மலைகளிலிருந்து விழும் நீர் வீழ்ச்சிகளையும் கண்டு களிக்க ஆண்டுதோறும் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்குச் சுற்றுலாப் பயணிகள் வந்துகொண்டிருக்கின்றார்கள். குற்றாலத்திற்கு வருகிறார்கள், சாரல் விழாவைக் காண வருகின்றார்கள். மதுரைக்கு வருகின்றார்கள், சித்திரைத் திருவிழாவைக் காண வருகின்றார்கள். உதகமண்டலத்திற்கு வருகின்றார்கள், கோடை விழா காண வருகின்றார்கள். மலைகளின் இளவரசி என்று சொல்லப்படுகின்ற, சுற்றுலாப்பயணிகளால் புகழ்ந்து பேசப்படுகின்ற, பெருமையோடு சொல்லிக்கொள்கின்ற எனது தொகுதியிலுள்ள கொடைக்கானலுக்கு கோடைகாலக் குளிர்ச்சியை அனுபவிப்பதற்காக உலகத்தின் அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலாப்பயணிகள் வந்தவண்ணமாக இருக்கின்றார்கள். வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் கோடை விழாவில் நடைபெறும் படகுப் போட்டியைக் காண வருகின்றார்கள். கோடை விழாவிலே நடைபெறுகின்ற படகுப்போட்டி, அதைப்போல மலர்கண்காட்சி, வாத்து பிடிக்கின்ற போட்டி இவைகளையெல்லாம் கண்டு களிக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், கொடைக்கானலில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை அபூர்வமாகப் பூக்குமே 'குறிஞ்சி மலர்' அந்த மலரையெல்லாம் சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்கின்றனர், ஆச்சரியப்படுகின்றனர்.

கொடைக்கானலுக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள், செண்பகனூருக்கு அருகிலேயே அங்கு இருக்கக் கூடிய 'சில்வர் காஸ்கேட்' என்று சொல்லக்கூடிய 'வெள்ளி நீர்வீழ்ச்சிக்கு' அருகிலேயே தங்கள் வந்த வாகனங்களை எல்லாம் நிறுத்திவிட்டு, அங்கே 50 அடி உயரத்திலிருந்து விழக்கூடிய அந்த நீர் வீழ்ச்சியில் குளித்துவிட்டுத்தான்



கொடைக்கானலுக்குச் செல்கின்றார்கள். அந்த நீர் வீழ்ச்சியில் பயணிகள் குளிப்பது பார்ப்பவர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. இந்த நீர் வீழ்ச்சியில் குற்றாலத்தைப் போல இன்னும் சிறப்பாக மலையை உடைத்து கம்பிகளைக் கட்டி பயணிகள் குளிப்பதற்கு வசதிகள் செய்து கொடுத்தால், அங்கே வரக்கூடிய அந்தச் சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொடைக்கானலுக்கு வசதி படைத்தவர்கள் மட்டும்தான் வந்து தங்கிச் செல்ல முடியும் என்ற எண்ணம் பரவலாக மக்களிடத்திலே இருக்கிறது. சாதாரண நடுத்தர மக்கள் அங்கு சென்று தங்க முடியாது. ஏனென்றால் தங்குவதற்குரிய அந்த விடுதிகளில் ஒரு நாள் தங்குவதற்கு 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை கொடுத்தால்தான் கொடைக்கானலில் தங்க முடியும். எனவே சாதாரண நடுத்தர மக்கள் கொடைக்கானலுக்குச் சென்று தங்க முடியாது என்கிற நிலை, என்கிற எண்ணம் மக்களிடத்திலே இருக்கிறது. அந்த எண்ணத்தை நீக்குகின்ற வகையில் சாதாரண நடுத்தர மக்களும் கொடைக்கானலுக்குச் சென்று தங்குவதற்கு வசதியாக சுற்றுலாத் துறையின் மூலமாக மிகக் குறைந்த கட்டணத்தில் அங்கே விடுதிகளைக் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எப்போதும் தண்ணீர் குறையாமல் நிறைந்து நிற்கும் கொடைக்கானல் ஏரியின் குறுக்கே சுற்றுலாத் துறையின் மூலமாக ஒரு தொங்கு பாலம் அமைத்துத் தந்தால் சுற்றுலாப் பயணிகளுடைய கவனத்தை மேலும் அது கவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

என்றைக்கும் வற்றாத, தண்ணீர் குறையாமல் இருக்கும் அந்த ஏரியில் நவீன படகுகள், அதைச் சுற்றிலும் செல்ல சொகுசு ரெயில் இப்படிப்பட்ட வசதிகளை எல்லாம் செய்து கொடுத்தால் உலக நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வாய்ப்பை உருவாக்கித் தந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடைக்கானல் மலையின் மேலிருந்து கீழே பார்த்தால் பெரியகுளம் அருகில் கும்பக்கரை அருவி தெரியும். அந்தக் கும்பக்கரை அருவியையும் சுற்றுலா மையமாக்கித் தர வேண்டும். அந்தக் கும்பக்கரை அருவிக்குத் தமிழகத்திலிருந்தும், பல்வேறு மாநிலங்களிலிருந்தும், இந்தியத் துணைக் கண்டத்திலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கும்பக்கரை அருவியிலிருந்து

கொடைக்கானலுக்கு ஏறத்தாழ 18 கி.மீ. தூரம் ஒரு சாலை அமைத்துத் தந்தால் அல்லது ஒரு இழுவை ரெயில் அமைத்துத் தந்தால் அந்தச் சுற்றுலாப் பயணிகள் பெரியகுளத்திலிருந்து கும்பக்கரை வழியாக கொடைக்கானலுக்கு 18 கி.மீ. தூரத்தில் செல்வதற்கு வசதியாக இருக்கும். தரைப்பகுதியிலிருந்து கொடைக்கானல் செல்ல வேண்டுமென்றால் 53 கி.மீ. தூரம் செல்ல வேண்டும். ஆனால் கும்பக்கரையிலிருந்து நேராக மலை மீது சாலை அமைத்துத் தந்தாலோ அல்லது இழுவை ரெயில் அமைத்துத் தந்தாலோ 18 கி.மீ.தூரத்தில், குறைந்த நேரத்தில், அங்கே வருகிற சுற்றுலாப் பயணிகள் கும்பக்கரையிலிருந்து கொடைக்கானலுக்கு செல்லலாம்.

அதைப்போல கொடைக்கானலிலிருந்து மூணாறு செல்ல சாலை வசதி செய்து கொடுத்தால் கேரளா மாநிலத்திலிருந்து சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானல் வருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைகளின் இளவரசி என்று சொல்லப்படும் கொடைக்கானலுக்கு உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இன்றையதினம் வாகனங்களில் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புதியதாக கொடைக்கானல் வருகிற காரணத்தால், சாலை அகலமில்லாத காரணத்தால் வளைவுகளில் பல்வேறு விபத்துகள் ஏற்படுகிற நிலை இருக்கிறது. எனவே கொடைக்கானலுக்குச் செல்கிற சாலையை அகலப்படுத்தி, நல்ல தார்ச் சாலையாக அமைத்துத் தருவதற்கான வாய்ப்பை எல்லாம் நம்முடைய அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் சுற்றுலாத் துறை மூலமாக நடத்தப்படுகிற விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கே சென்றாலும், எந்தச் சுற்றுலாத் தலத்திற்குச் சென்றாலும், அங்கே சுற்றுலாத் துறை மூலமாக நடத்தப்படுகிற விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகத் தங்குவதற்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சுற்றுலா விடுதிகளில் இலவசமாகத் தங்குவதற்கு வாய்ப்புத் தராவிட்டாலும் குறைந்த வாடகையில் தங்குவதற்காவது நீங்கள் வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானலைச் சுற்றிப் பார்க்க சுற்றுலாத் துறை மூலமாகக் குறைந்த



கட்டணத்தில் மினி பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய கொள்கைக் குறிப்பில் உதகமண்டலத்தில் பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல கொடைக்கானலுக்கும் 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து உதகமண்டலத்தில் எப்படி பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவோ, அதைப்போல அந்தத் திட்டங்களை எல்லாம் கொடைக்கானலிலும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இயற்கை வளம் மிக்க கொடைக்கானலை சர்வதேச சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. எல். மூக்கையா:** செய்தித் துறையைப் பொறுத்தவரையில் தமிழக அரசின் திட்டங்கள், மாண்புமிகு முதலமைச்சர் நலிந்த மக்களுக்குச் செய்கிற உதவிகள், இவைகள் எல்லாம் நாட்டுமக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் மூலம் எளிதில் சென்றடைவதற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிற துறையாகும். அந்தச் செய்தித் துறை சிறப்பாகச் செயல்பட்டால்தான் அரசினுடைய திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்று கருதமுடியும். அந்த வகையில் நம்முடைய அரசின் செய்தித் துறை இன்றையதினம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த செய்தித் துறை மூலம் நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்களுக்கு எல்லாம் சிலைகள் எழுப்பப்படுகின்றன. அந்தவகையில் நேர்மையாக, தூய்மையாக, எளிமையாக வாழ்ந்து மறைந்த திரு. பி. கக்கன் அவர்களுக்கு மதுரையில் சிலை நிறுவிட இருப்பதும், அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்த சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு பெரியகுளத்தில் சிலை நிறுவிட இருப்பதும் பாராட்டுக்குரியவை என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, செய்தி சுற்றுலாத் துறையின் மூலமாகப் பேச வாய்ப்பளித்ததற்காக உங்களுக்கு இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் கூறி எனது உரையைத் துவங்குகிறேன்.

இன்று நடைபெறுகின்ற செய்தி சுற்றுலாத் துறையினுடைய கொள்கை விளக்கக் கூட்டத்தில் என்னுடைய பகுதியைச் சார்ந்த சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் மாவட்டம் ஏற்காடு பகுதியில், ஏழைகளின் கோடை வீடு, எழில்மிகு ஏற்காடு என்று அழைக்கக்கூடிய, சாதாரண மக்கள் வந்து போகக்கூடிய ஏற்காடு நகரில் சுற்றுலாக் குடில்கள் கட்டுவதற்காக, நம்முடைய நிதிநிலை அறிக்கையில், ஆறு அறைகளைக் கொண்ட சுற்றுலாக் குடில்கள் கட்டுவதற்காக 26.28 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை வாழ்த்தி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு, அந்தப் பகுதியிலே (சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் தங்குவதற்கேற்ப சாதாரண அறைகளைக் கட்டிக் கொடுப்பதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாகச் செய்து கொடுக்க வேண்டி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். ஏழையெளிய மக்கள் வந்து செல்லக்கூடிய அந்தப் பகுதியில் அதைப்போன்ற அறைகளைக் கொண்ட மாடிவீடுகளைக் கட்டுவதற்காக அப்போதைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நாங்கள் நகர மன்ற உறுப்பினர்களாகவும் ஒன்றியக்குழு உறுப்பினர்களாகவும் இருந்த நேரத்தில் ஒரு கருத்தை எடுத்து வைத்திருந்தோம். அதற்குப் பின்னால் வந்த அ.இ.அ.தி.மு.க. அரசால் அது அலட்சியப்படுத்தப்பட்டு விட்டது.

தமிழ்நாடு ஓட்டல் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர தனியார் ஓட்டல்கள், தனியார் உயர்தரமான காஸ்ட்லி 'ஸ்டெர்லின்' ஓட்டல்-இதுபோன்ற இண்டர்நேஷனல் ஓட்டல்கள் ரூ. 500 முதல் ரூ. 1000, ரூ. 2000 வரை வாடகை வசூலிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே சாதாரண நடுத்தர மக்கள் ரூ 50, 100 ரூபாயில் வந்து தங்கக்கூடிய வாய்ப்பு இல்லாத நிலை இருக்கின்ற காரணத்தால் பேருந்து நிலையத்தினுடைய மத்தியில் நீங்கள்



சாதாரண அறைகளைக் கட்டிக் கொடுக்குமாறு கேட்டு அதை இந்த நிதியாண்டிலேயே ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அங்கு நல்ல ஏரி இருக்கின்றது. வருடந்தோறும் தண்ணீர் வற்றாமல் இருக்கக்கூடிய ஏரியாக இருக்கிறது. அந்த ஏரியில் படர் தாமரைகள் படர்ந்து நிறைந்து இருக்கின்றன. அதை அகலப்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏராளமான இடங்களில் இருக்கிறது. அந்தப் படர் தாமரைகளைச் சுத்தப்படுத்தி அகலப்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது அங்கே பெடல் படகுகள், துடுப்புப் படகுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளை விசைப் படகுகளாக மாற்றி, ஓரிரு விசைப் படகுகளையாவது இந்த நிதி ஆண்டிலேயே, வருகின்ற கோடை விழாவில், சுற்றுலாத் துறையின் மூலம் தரவேண்டுமென்று இந்த நேரத்திலேயே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று லேடீஸ் ஸீட் என்ற பகுதியில் தொலைநோக்குக்காட்டி பொருத்தப்பட்டிருக்கிறது. அங்கிருந்து பார்த்தால் மேட்டூர் அணையினுடைய தண்ணீர் தெரியும். சேலத்தைச் சுற்றியுள்ள 50, 100 கி.மீ. தூரமுள்ள கிராமங்களை அதன்மூலம் பார்த்து மகிழ்வதற்காக சுற்றுலாப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கு சக்தி வாய்ந்த டெலஸ்கோப் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய பகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்ற நேரத்தில் குழந்தைகள் விளையாடுவதற்கு வேண்டிய இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அங்கு மேலும் விளையாட்டுச் சாதனங்கள் அமைத்துத் தரவேண்டும். குட்டி ரயில் (மினி ரயில்), சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்ற நேரத்தில், கோடை விழா, மலர் கண்காட்சி நடக்கின்ற நேரத்தில் மட்டும் - 15 தினங்களுக்கு மட்டும் பொருத்தப்பட்டு, அதன் பின்னர் கழற்றி எடுத்துச் செல்கின்ற நிலை இருக்கிறது. தொடர்ந்து அந்தப் பகுதியில் நிரந்தரமாக சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிப்பதற்கு, பிள்ளைகள் வந்து செல்வதற்கு குட்டி ரயில் ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, ஏரியின் மத்தியிலே ஒரு தீவு இருக்கிறது. அதில் குட்டி 'ஜூ' அமைக்கக்கூடிய முயற்சியை இந்தச் சுற்றுலாத் துறை மூலம் செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சுற்றுலா மையமாக இருக்கின்ற அந்த இடங்களில் யூத் ஹாஸ்ட்டல் (மாணவர் விடுதி) இருக்கிறது. அது பற்றாக்குறையாக இருப்பதால் மேலும் ஒரு மாணவர் விடுதி அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னால் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியது போன்று, நானும் ஒன்றை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சி, மதுரை போன்ற இடங்களில் சுற்றுலா செல்லும்போது, ஓட்டல் தமிழ்நாடு போன்ற இடங்களில் வெள்ளை அடிக்காத, பெயின்ட் அடிக்காத ஒரு சுகாதாரக் குறைவான நிலை இருக்கிறது, படுக்கை விரிப்புகள் கூட மிகவும் பழுதுபட்ட நிலையில் இருக்கின்றன. அவைகளையெல்லாம் மாற்றி அமைத்துக் கொடுக்குமாறு கேட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று அங்கே தங்குவதற்கு இலவசமாக இல்லாவிட்டாலும், பொதுப்பணித் துறை மூலமாக கொடுக்கப்படுகின்ற சாதாரண கட்டிடத்திலேயாவது தங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட, மாநில அளவிலே குழுக்கள் அமைக்கப்பட்டு, அதைச் செயல்படுத்துவதற்காக நீங்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த கருத்துக்களை வரவேற்கிறேன். அதேபோன்று சுற்றுலாத் தலங்கள் இருக்கக்கூடிய சட்டமன்ற தொகுதிகளுக்கு வாய்ப்பு அளித்து நீங்கள் அதை ஏற்பாடு செய்திட வேண்டுமாய் இந்தநேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சேலம் ஒரு முக்கியமான தலைநகரம். வியாபாரிகளுடைய கேந்திரமாக அது இருக்கிறது. சேலத்திலும் இதுபோன்ற தமிழ்நாடு ஓட்டலை நீங்கள் ஏற்படுத்தி தர வேண்டுமாய் உங்களிடத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-20*

சேலம் மாவட்டத்தில் ஏற்காடு எப்படி இருக்கிறதோ, அதேபோன்று கொல்லிமலை என்பது வளர்ந்து வருகிற ஒரு பகுதி. அந்த கொல்லி மலையிலே நீங்கள் ஒரு சுற்றுலாத் தலத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.



**திரு.எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** சுற்றுலாத் துறையை அடுத்து செய்தித் துறை பற்றிய சில கருத்துகளை இரண்டு நிமிடங்களில் சொல்லி முடித்துக்கொள்கிறேன். செய்தித் துறை மூலமாகவும் இப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நல்ல கருத்தோவியங்களையும், நல்ல புத்தகங்களையும் எழுதி இருக்கிறார்கள். தமிழகத்திலே நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நல்ல நிலையில், அரசினுடைய கொள்கைகளை, திட்டங்களை விளக்குகின்ற வகையில் நல்ல செய்திப் படமாகத் திரையிடப்பட வேண்டும். மேலும் பெரியார், பேரறிஞர் அண்ணா, அம்பேத்கர், காயிதே மில்லத் போன்றவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கின்ற வகையில் செய்திப் படங்களைத் தயாரித்துக் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஜுன் 6–ஆம் தேதி, காயிதே மில்லத் அவர்களுடைய பிறந்த நாள் வருகிறது. நீங்கள் யார் யாருக்கோ என்னென்னவோ செய்து கொண்டிருக்கிறீர்கள். அந்த வகையில், காயிதே மில்லத் அவர்களுக்கும் - அவர்களுடைய பிறந்த நாளில் - ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரைப்பட உலகிலே இன்றையதினம் ஜாதி உணர்வுகளைத் தூண்டக்கூடிய கருத்துகளைத் தடுத்துவிட்டு, நல்ல கருத்துக்களைச் சொல்லக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் முதலிடம் வகுத்துத் தரவேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கின்ற சட்டமன்ற விடுதிகளிலே - நீங்கள் ஆங்காங்கு கிராமப்புறப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு எல்லாம் ஒரு டி.வி.யை வழங்கிக் கொண்டு இருக்கிறீர்கள் - செய்திகளை அவ்வப்போது தெரிந்து கொள்வதற்காக 234 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கிற இடத்தில், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், கலர் டி.வி. இல்லாவிட்டாலும்கூட, பிளாக் அன்ட் ஒயிட் டி.வி-யையாவது, வாங்கிக் கொடுப்பீர்களானால் செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கு வசதியாக வாய்ப்பாக இருக்கும். இதை ஏற்பாடு செய்து தரவேண்டுமாய் இந்த நேரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலேயும், செய்தித் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டு, இந்த நேரத்தில் வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து

எனது உரையை நிறைவு செய்து, விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** நன்றி. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் துரை. சந்திரசேகரன்.

***திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியங்களின் மீது பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கும், பேரவைக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் சுற்றுலாத் துறை என்பது இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு மிக முக்கிய பங்கை வகித்து வருகிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. 1995-96-ஆம் ஆண்டில், இந்தியாவினுடைய அன்னியச் செலாவணியாக 9186 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம் என்று குறிப்பிடுகின்ற, கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து பார்க்கும்போது, இந்தியாவில் சுற்றுலா ஒரு முக்கிய பங்கு வகித்து வருவதை நாம் எல்லோரும் மிக நன்றாக அறிகிறோம். எனவேதான் இதை ஒரு தொழிலாக இன்றையதினம் அங்கீகரித்து இருக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக இந்தியாவில் பழமையான கோவில்கள், புராதனச் சின்னங்கள், மலைகள், வளம் கொழிக்கின்ற இந்த பூமியைப் பார்க்க அயல் நாட்டினர் வருகின்றார்கள். அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு அதிகமாக வெளிநாட்டுப் பயணிகள் வந்து செல்கிறார்கள். எனவே, இப்படி வந்து செல்லுகின்ற பயணிகளுடைய எண்ணிக்கையைப் பெருக்குகின்ற வகையில் நடவடிக்கை எடுத்ததால் 1994-ஆம் ஆண்டில் 4.8 லட்சம் வெளிநாட்டுப் பயணிகள் பார்வையாளர்களாக வந்தவர்கள், 1996-ஆம் ஆண்டில் 6.14 லட்சமாக உயர்ந்திருக்கிறார்கள். அதேபோல் உள்நாட்டினர் 160 லட்சம் பேர்களாக 1994-ல் இருந்தவர்கள், 1996-ல் 182 லட்சமாக உயர்ந்து இருக்கிறார்கள். எனவே சிறப்பான முறையில் சுற்றுலாத் துறை, இந்தியாவில், அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் விளங்கி வருவதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். அகில உலக அளவில் சுற்றுலாத் தலங்களை எல்லாம் இணைக்கின்ற வகையில் 'இண்டர்நெட்' மூலமாக இணைக்கின்ற அந்தப் பணியை சுற்றுலாத் துறை செய்து வருவதை நான் மனதார வரவேற்கிறேன்.



அதேபோல் வெளிநாட்டிலிருந்து வருகிற பயணிகளை ஏமாற்றாத வகையில், அவர்கள் உரிய முறையில் வந்து பார்த்துவிட்டுச் செல்லுகின்ற வகையில், சுற்றுலாச் சட்டம் அமைப்பதை நான் வரவேற்கிறேன். மாவட்ட உலாத் தலம் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும், 2 அல்லது 3 தலங்களைத் தேர்வு செய்து, அதற்குரிய அடிப்படைத் தேவைகளை, குறிப்பாகக், குடிநீர் வசதி, சாலை வசதி, மின் விளக்கு, தங்கும் விடுதி, உணவு விடுதி, நவீன குளியல் அறை, கழிப்பறை போன்ற அடிப்படைத் தேவைகளைச், சுற்றுலாத் துறை செய்து தரவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில், நமது ஒப்பற்ற தலைவர், கலைஞர் அவர்கள் இளமைக் காலங்களில் திராவிடர் கழகக் கூட்டத்திற்கும், கழகத்தினுடைய பொதுக் கூட்டங்களுக்கும் செல்லுகின்றபோது, விரும்பி இரண்டு இடங்களில் அவர்கள் ஓய்வு எடுத்து, ஏராளமான கதை, திரைக்கதை வசனம் எழுதியிருக்கிறார்கள். அந்த இரண்டு தலங்களில் ஒன்றான திருவையாறு தொகுதியில் அமைந்துள்ள கல்லணையில் அவர் பலமுறை தங்கியிருக்கின்றார். இன்றைக்கு கல்லணை மிகவும் சீர்கெட்டு ஏராளமான பயணிகள் வந்தாலும் எந்தவிதமான அடிப்படை வசதியும் இன்றி இருப்பது எல்லோரும் அறிந்த உண்மை. எனவே மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரவர்கள் அதற்கு ஒரு தனிக் கவனம் செலுத்தி, கல்லணையை மேம்படுத்தி அங்கு தங்கும் விடுதி, உணவு விடுதி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோல, மல்லிப்பட்டினம் அருகே மிகச் சிறப்பான முறையில் அமைந்திருக்கின்ற மனோராவில் நமது தலைவர் கலைஞர் அவர்கள் ஒரே நாளில் புதையல் திரைப் படத்திற்கு கதை வசனத்தை எழுதிய பெருமை அந்த ஊருக்கு உண்டு. இன்றையதினம் அதுவும் நலிவுற்று, எந்தவிதமான அடிப்படைவசதியும் இல்லாமல் இருக்கின்றது. எனவே சுற்றுலாத் துறை அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உலாத்தலத் திட்டங்களின் மூலம் இந்த இரண்டு ஊர்களையும் எடுத்துக் கொண்டு வருகின்ற ஆண்டிலாவது அதற்குரிய அடிப்படை வசதிகளைச் செய்து தர நிதியை ஒதுக்கிட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, சுற்றுலா விழாக் கால நிகழ்ச்சிகள். தமிழகத்தில் இன்றையதினம் நாட்டிய விழாவாக மாமல்லபுரத்திலும், கோடை

விழாவாக உதகமண்டலத்திலும், தேயிலை விழாவாக உதகமண்டலத்திலும், நாட்டியாஞ்சலி விழாவாக சிதம்பரத்திலும், சித்திரைத் திருவிழாவாக மதுரையிலும், பொங்கல் விழாவாகவும், மாம்பழ விழாவாக கிருஷ்ணகிரியிலும், சாரல் விழாவாக குற்றாலத்திலும் கொண்டாடுகின்றோம். என்றாலும் 1971-ஆம் ஆண்டு அன்றைக்கு முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் புதிய பூம்புகாரைப் படைத்து அன்றைக்கு இந்திர விழா கொண்டாடினார்கள். அந்த இந்திர விழாவிற்கு நமது முரசொலியில் தமிழ்ச் சமுதாயத்தினர் அனைவரையும்

*"எட்டுச் சுவை பிட்டுத் தமிழ்*
*கட்டித் தயிர் கொட்டித் தர*
*சோழனூர் வருவீரே*
*சுவையமுதம் பெறுவீரே"*

என்று குரல் கொடுத்து அனைத்துத் தமிழ்ச் சமுதாயத்தையும் அழைத்து, ஒரு மிகப் பெரிய விழா நடத்தினார்கள். அந்த விழா அதற்குப் பிறகு நடத்தப்படவில்லை. எனவே மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரவர்கள் எதிர்காலத்தில் பூம்புகாரில் அத்தகைய விழாவை - இந்திர விழாவை—நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், திருவையாறில் தியாகராஜர் விழாவும், குமரியில் குமரிமுனை விழாவும், நடைபெறுவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். திருவையாறில் தியாகராஜர் விழாவை மரியாதைக்குரிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மூப்பனார் அவர்கள் தலைமையேற்று, மிகச் சிறப்பாக ஆண்டுதோறும் நடத்தி வருகின்றார்கள். அந்த விழாவில் 2,3 ஆண்டுகளுக்கு முன்பு மரியாதைக்குரிய மூப்பனாருக்குத் தெரியாமலேயே ஒரு தவறு நடைபெற்றது. அந்த விழாவில் பங்கேற்ற இசைக் கலைஞர்கள் எல்லாம் இருக்கும்பொழுது, அன்றைய முதலமைச்சருக்கு வேண்டிய அந்த நிர்வாகத்தில் உள்ள ஒரு செயலாளரும், அன்றைக்கு முதலமைச்சருக்கு வேண்டிய நடிகை ஒருவரும் யாருக்கும் தெரியாமல் ஒரு திரைப்படம் எடுத்தார்கள். எடுத்தது மட்டுமல்லாமல், அந்தத் திரைப்படம் எடுத்ததில் தவறேயில்லை என்றும் பத்திரிகையில் ஒரு பேட்டி கொடுத்தார்கள். அதற்குப் பிறகுதான் தலைவர் கலைஞர் அவர்கள், மிக அழகாக முரசொலியில் ஒரு கடிதம் மூலம் அவர்கள் அந்தத் தவறைத் திருத்திக் கொள்கின்ற ஒரு பணியையும் செய்தார்கள். தியாகராஜர் திருவையாறில் வாழ்கின்றபோது மன்னர் ஏராளமான பரிசுப் பொருட்களுடன் அவருடைய இல்லத்தில் வந்து



சந்தித்தார்கள். அப்படிச் சந்தித்தபொழுது தியாகராஜர் என்ன இதெல்லாம் என்று கேட்டார். நீங்கள் இராமரைப் பற்றிப் பாடுகிறீர்கள். என்னைப் பற்றி ஒரு பாட்டுப் பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்கு தியாகராஜர் மறுத்துவிட்டார். எனவே தியாகராஜருடைய உடன் பிறந்த சகோதரர் இராமர் சிலையைத் தூக்கி காவிரியாற்றிலே வீசியெறிந்து விட்டார்களாம். பரிசுப் பொருட்களையெல்லாம் திரும்ப எடுத்துச் செல்ல வேண்டுமென்று தியாகராஜர் சொல்லிவிட்டார். அதற்குப்பிறகு இராமர் சிலையை காவிரியாற்றிலிருந்து எடுத்து வந்து காவிரிக் கரையில் ஒரு கீர்த்தனை பாடியிருக்கிறார்.

*"நீதி சால சுகமோ-ராமுனிஸந்*

*நீதி சேவ சுகமோ"*

என்று ஒரு அழகான தெலுங்கு கீர்த்தனை பாடியிருக்கின்றார்.

தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலியில் அதே தலைப்பிட்டு மிக அருமையாக திருவையாறினுடைய தல வரலாற்றைக் குறிப்பிட்டு அவர் இளமைக் காலத்தில் அவருடைய தந்தையாரோடு சப்தஸ்தான திருவிழாவிற்கும், அதுவும் குறிப்பாகத் தியாகராஜருடைய விழாவிற்கும் வருகின்றபோது அன்றைக்கு அந்தக் கீர்த்தனையை நன்கு உணர்ந்த காரணத்தால், மரியாதைக்குரிய தியாகராஜர் அவர்கள் வாழ்கின்ற காலத்திலே பொன்னையும், பொருளையும் விரும்பாதவர் என்ற அளவில் அவருடைய விழாவில் இதுபோன்ற தவறுகள் நடக்கக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டினார். அந்த அடிப்படையில் அந்தத் தவறு களையப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதேபோல, திருவையாறில் தமிழிசை விழா 25 ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக இயங்கி வருகின்றது. நமது தொலைக்காட்சித் துறையினர் தொடர்ந்து தியாகராஜர் ஆராதனை விழாவை நேரடி ஒலிபரப்பின் மூலம் ஒலிபரப்பி வருகின்றார்கள். தமிழிசை நிகழ்ச்சியையும் வருகின்ற ஆண்டிலாவது, ஒரு குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளையாவது ஒலிபரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பூம்புகாரில் உள்ள சுற்றுலா மையத்திற்கு மிகச் சிறப்பான முறையில் நிதியை ஒதுக்கி, சுற்றுலாத் துறையில் தனிக் கவனம் செலுத்தி, அதை மீண்டும் பொலிவுறச் செய்திடல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

B 216652
V2,1;31 N97
N97.281

*பிற்பகல் 12 30*

அடுத்ததாக, செய்தித் துறையில் மக்கள் தொடர்பு அதிகாரிகள் பலர் தொடர்ந்து அரசாங்கத்தினுடைய திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற பணியைச் சிறப்பாகச் செய்யவில்லை என்பது வருந்த தக்கது. பல இடங்களில் அப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன. அதை அவர்கள் திருத்திக்கொண்டு, கடந்த ஆட்சியில் இருந்ததுபோல் அல்லாமல், சிறப்பான முறையில் குறிப்பாகத் தமிழக அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழகத்தில் 26 நினைவகங்களை நிர்வகித்து வருகின்ற செய்தித் துறை, தஞ்சை மாவட்டத்தில் பிறந்த, தமிழுக்கு உரமேற்றிய திரு. நா.மு. வேங்கடசாமி நாட்டார், நடுக்காவேரியில் பிறந்தவர், பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட அக்கிரகாரத்து அதிசய மனிதர் மரியாதைக்குரிய திரு வா.ரா. அவர்கள், அதேபோல் தமிழ்வேள் உமாமகேஸ்வரன் பிள்ளை, கரந்தையில் இருந்தவர்கள், தமிழுக்கு அரும்பாடு பட்டிருக்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் மக்கள் நலப் பணியில் அதிக அக்கறை செலுத்துகின்ற காரணத்தினால் எதிர் வரும் ஆண்டிலாவது நிச்சயமாக அவர்களுக்குச் சிலை அமைக்கின்ற பணியையும், அவர்கள் வாழ்ந்த இல்லங்களை அரசு நினைவு இல்லங்களாக ஆக்குகின்ற பணியையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் எழுதிய. . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** 10 நிமிடங்களாக பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:**....... நூல்களையும் அரசுடைமையாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்து, திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்தி திரைப்படத் தொழில் நுட்பம், சுற்றுலா மையம் என்னும் மானியத்தின் மீது நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன் வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இன்று, உலக நாடுகளில் சுற்றுலா என்பது ஒரு



சிறந்த சாதனமாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. வெளிநாடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் தங்களுடைய வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கைச் சுற்றுலா பயணம் மேற்கொள்வதற்காகவே இன்றையதினம் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் இந்தியாவில், தமிழகத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசினுடைய நிதி வருவாயைப் பெருக்குகின்ற பல்வேறு துறைகளில் சுற்றுலாத் துறை மிகப் பெரிய பங்கை வகிக்கின்ற காரணத்தினாலும், நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல இளைஞர் ஆகவும், இளம் தளபதியாகவும் இருக்கின்ற காரணத்தினாலும் இந்தத் துறையை மேம்படுத்துவதன் மூலம், கூடுதலாக நிதியைப் பெருக்கி, வருவாயை மேம்படுத்தி அரசுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மதுரை மாவட்டத்தில், மதுரை அழகர்கோயில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கோயிலாகும். இங்கே நாள்தோறும், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். மதுரை அழகர்கோயிலுக்கு பழமுதிர்ச்சோலை என்ற மற்றொரு சிறப்புப் பெயரும் உண்டு. எனவே, மதுரை அழகர் கோயிலை அரசு சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்னையில் எப்படி ஒரு மெரீனா கடற்கரை இருக்கிறதோ அதேபோல் மதுரையில் மற்றொரு மெரீனா என்று சொல்லக் கூடிய அளவிற்கு வண்டியூர் கண்மாய் அமைத்திருக்கின்றது. எனவே, அந்த வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தி, விரிவுபடுத்தி, நீரைத் தேக்கி படகுகள் விடவேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் ஆண்டிப்பட்டியில் வைகை அணை இருக்கின்றது. அந்த வைகை அணையில் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில், தங்கும் விடுதி சுற்றுலாத் துறையின் மூலம் கட்டவும், உணவு விடுதியும் கட்டவும் திட்டமிடப்பட்டு, அது பாதியிலேயே நிற்கின்றது. முழு அளவில் தங்கும் விடுதியையும், உணவு விடுதியையும் கட்டாமல் அதை நிறுத்தி வைத்துவிட்டார்கள். எனவே, பாதி அளவில் நிற்கின்ற அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான தொகை அ.தி.மு.க ஆட்சியால் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டதா என்பதை அரசின் மூலம் அறிய விரும்புகிறேன். எனவே, பாதி அளவுக்கு கட்டப்பட்டு நிற்கின்ற அந்த

தங்கும் விடுதியையும், உணவு விடுதியையும் மீண்டும் சிறப்பான முறையில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே, ஏற்கெனவே படகு விடப்பட்டு சென்று கொண்டு இருந்தது. மறுபடியும் அந்தப் படகு வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அணைப்பட்டி, பேரணையில் மக்கள் நூற்றுக்கணக்கான அளவில் வந்துகொண்டிருக்கிறார்கள், அது ஒரு சுற்றுலா மையமாகத் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. எனவே, அணைப்பட்டியில் இருக்கின்ற பேரணையைச் சுற்றுலா மையமாக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாடிப்பட்டி அருகே மற்றொரு குற்றாலம் என்று சொல்லுகின்ற அளவுக்கு ஒரு மிகப் பெரிய நீர்வீழ்ச்சி வருடம் முழுவதும் உருவாகிக் கொண்டிருக்கின்றது. வாடிப்பட்டி அருகே இருக்கின்ற அந்த நீர்வீழ்ச்சிக்குச் செல்வதற்கு சாலைகள் இல்லாத காரணத்தினால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே, அதையும் சுற்றுலா மையமாக அறிவித்து சாலை வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டிப்பட்டி, மேகமலைப் பகுதி மக்களைக் கவருகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அதையும் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று திரைப்படமானது இளைஞர்களைப் பாதிக்கின்ற அளவுக்கு இருக்கின்றது. இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டிய அந்தத் திரைப்படம் 'கமர்ஷியலுக்காக' பணத்திற்காக படம் எடுக்கப்பட்டு, இளைஞர்களுடைய ஆர்வத்தைத் தூண்டிவிட்டு, இளைஞர்களைத் தவறான வழிக்கு எடுத்துச் செல்கின்ற அளவுக்கு இருக்கின்ற காரணத்தினால், திரைப்படங்களை நல்ல படங்களாக எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். சென்னையிலே இருந்த திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர் அவர்களின் பெயரைச் சூட்டிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறேன். இன்றையதினம் எம்.ஜி.ஆரை முன்னிலைப்படுத்தி அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்று நினைக்கிற முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் அந்தத் திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர் பெயரைச் சூட்டாமல், தன்னுடைய பெயரையே சூட்டிக்கொள்கின்ற ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னை திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர் பெயரைச் சூட்டி ஒரு பொருத்தமான பெயரைச் சூட்டி ஒரு மிகப் பெரிய பாராட்டுதலை உருவாக்கியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அ.இ.அ.தி.மு.க.



ஆட்சியில் சினிமா தியேட்டர் உரிமையாளர்கள் ஒட்டுமொத்தமாகக் பணத்தை கட்டிவிட்டு, அவர்களே டிக்கெட்டை நிர்ணயம் செய்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு தியேட்டர் உரிமையாளரே டிக்கெட்டை நிர்ணயம் செய்கின்ற நிலைமை ஏற்பட்டால் மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு உணர்ந்து பார்க்கவேண்டும். அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட அந்த நிலை இன்றும் நீடிக்கிறதா இல்லை அது மாற்றியமைக்கப்பட்டுவிட்டதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

இன்றையதினம் பெண் சிசு படுகொலை எங்கு பார்த்தாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் பெண் சிசு கொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இன்று மத்திய மாநில அரசுகள் கடுமையான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றன. பெண் சிசு வதையைத் தடுத்து நிறுத்துவதற்காக மத்திய மாநில அரசுகள் முயற்சி எடுத்து ஒரு படம் தயாரித்தாலும் 'கருத்தம்மா' என்ற திரைப்படம் அளவிற்கு தயார் செய்ய முடியாது. அந்த அளவுக்கு 'கருத்தம்மா' என்னும் திரைப்படம் இன்று பெண் சிசு கொலையைத் தடுத்து நிறுவத்துவதற்கு ஒரு நல்ல விளம்பரத்தை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, நல்ல படங்களுக்கு நல்ல கலைஞர்களுக்கு பரிசு வழங்கிக் கொண்டிருக்கின்ற தமிழக அரசு 'கருத்தம்மா' என்னும் படத்தைத் தயார் செய்த இயக்குநர் பாரதிராஜாவுக்குப் பரிசு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு பி.என். வல்லரசு:** மாற்றுத் தலைவர் அவர்களே, அதே போன்று விளம்பரத் துறையில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 2 கோடி வரை தனியார் விளம்பர நிறுவனத்தின் மூலம் ஊழல் செய்திருக்கிறார்கள். அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். எல்லா பத்திரிகைகளுக்கும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் விளம்பரம் கொடுப்பதில் பாரபட்சம் காட்டினார்கள். இன்று கலைஞர் அவர்கள் சமமான விளம்பரம் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

இன்று தென் மாவட்டங்களில் ஒரு பரபரப்பான, பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. 'பாரதி கண்ணம்மா' என்ற திரைப்படத்தைப் பார்த்து தென் மாவட்டங்களில் இருக்கிற மக்கள்

பரபரப்பு அடைந்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினுடைய பண்பாட்டின்மீது திட்டமிட்டுத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. எனவே, 'பாரதி கண்ணம்மா' என்ற படத்தைத் தடை செய்யவேண்டும் என்று கூறி அங்கே போராட்டம் நடத்தி வருகிறார்கள். 'பாரதி கண்ணம்மா' படத்தை எதிர்த்து சுவரொட்டிகளை ஒட்டி வருகிறார்கள். என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் கூட ஒரு நாள் முழுவதும் பஸ் மறியல் நடைபெற்றிருக்கிறது. எனவே அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 'பாரதி கண்ணம்மா' படத்தைத் தடை செய்யவும் தடை செய்யாவிட்டாலும் கூட ஜாதிப் பெயர்களை வைத்து ஜாதி மோதலை ஏற்படுத்த வேண்டாம். மானப் பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம் என்று அரசு அறிவுறுத்தி அந்த ஜாதிப் பெயர்களை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் பி. வெங்கடசாமி.

***THIRU B. VENKATASAMY:** Madam Chairperson, I Thank you for the opportunity given to me to say a few words on the Tourism, Information and Film Technology Demands, in support of the cut motions given by me. Tamil Nadu has been endowed with many natural resources like hill stations, sea resorts and we have many temples with rich culture and architecture. But you must see that all these natural resources are exploited very well and they should be useful to the society and at the same time, the Government can also make a lot of money. We should also try to provide employment opportunities to the poor people in those areas.

There is economic development due to the tourist attraction and there are both direct and indirect benefits. In almost all tourist places handi-crafts and other local materials are manufactured and sold to the tourists. For example in Rameswaram, Tiruchendur, Kodaikanal, Madurai Meenakshiamman Temple, Thanjavur Brahadeeswara Temple, Courtallam, Ooty and other such places handicrafts are being produced and sold, I request the Hon. Minister to see that the handicrafts are made locally available through emporia and the economy of the area could be improved.

Further, the export of diamond and garments have fetched nearly Rs. 9,186 Crores to the Government of India. You must see that the State Government also earns equally by improving our local talents.



பிற்பகல் 12-40

The other point is the formation of a tourism advisory committee. By forming a tourism advisory committee we can get lot of ideas from different people, and it will be very useful to the Government, Sir.

Development of tourism through festivals is also very important. Allocation has been made to the Nilgiris to develop tourism. At the same time, you must see that the Yercaud Hills, Kolli Hills, which have been neglected, are developed. They should be exploited for their scenic beauty. You should see that these hills are also developed so that local people of that area can enjoy the climate of the hills.

Sir, Hosur is situated at 3,000 feet above the sea level. Besides, there is one area called Thalli. It is called as `Little England'. A lot of people are coming there. An International Tourist Resort Company has purchased about 500 acres of land nearer to the forest area, because it is very close to Bangalore. A lot of people are coming to Bangalore. That scheme is kept pending; I do not know the reasons for that. But, however, I request this Government to see that it is implemented, because a lot of rich people come there to spend their life nearer to the forest, which is having a very good climate without pollution. I request the Tourism Department to see that an International Tourist Resort also is constructed there, so that we can earn revenue.

Sir, privatisation in Tourism is also welcome. For example, there is the V.G.P. Golden Beach; others also have developed the tourism industry. You are giving capital subsidy and electricity rebate to them. But the number of hotels in the tourist centres is really not sufficient. So, you must encourage other private people also by giving the subsidy and other facilities to start hotels so that we can improve the tourist attraction.

Sir, tourism festivals are conducted according to the culture and climate in every district. It is very essential. Our State Government have sanctioned 12 schemes and the Government of India also have sanc-tioned about 9 schemes. I congratulate the Hon. Minister for having inculded Hosur also in the scheme for Rs.25.73 lakhs. He must also look at other possibilities. In places like Hosur, because of industrialisation, we can start rose cultivation. Already the people there are doing rose cultivation now. But we must do it in a scientific way. You must see that rose is also sold in every hotel, sir.

Sir, the Government of India has sanctioned Rs.200 lakhs for 8 projects. Our State Government has sanctioned 4 projects. Sir, Hogenakkal is one of the most important tourist centres. A lot of people from Bangalore are coming there. You must see that poor people also are enabled to go and stay in Hogenakkal. I request the Hon. Minister to see that more importance is given to Hogenakkal, which is one of the most important tourist centres.

Mention has been made in the Note that Tourist Information Centres are being opened at Bangalore, Hyderabad and Tiruvananthapuram. It is very good and it will attract a lot of tourists. Sir, economy measures are also found in the Budget. The Tourism Development Department has saved nearly Rs.15 lakhs by economising on expenditure, due to the prevention of cut-out culture. I congratulate the Hon.Minister for this. The money saved by this way can be spent for the betterment of the tourism industry and to give more facilities to the poor people.

I feel that the allocation which is given to the Tourism Department is very meagre. I request the Hon.Chief Minister to see that more funds are given, so that we can enrich our culture and, at the same time, employment opportunities are also given to so many people. By doing so, national integration can also be created. A lot of tourists are coming to our State. By that, they will have friendship with our people and national integration is also one of the aims for developing the tourism industry.

பிற்பகல் 12-45

Regarding Information and Film Technology, our Information Department is the most important organ through which the Government tells the people about its plans and policies, by way of Exhibitions, Government functions, and Memorials. We have got nearly 26 memorials and you are maintaining them properly. I wanted to tell one more thing sir. Rajaji Memorial which was started at Thorapalli, in my constituency, was inaugurated by the then Chief Minister of Tamil Nadu Hon'ble Dr. M. Karunanidhi. It is not being maintained properly. No improvement has taken place. When the previous Government removed the present Chief Minister's photograph I fought with the then Government and got it placed again. (The gong was sounded)

**HON. CHAIRPERSON** (Tmt. A.S. PONNAMMAL) : Sir, time is already over. Please finish your speech.



**THIRU B. VENKATASAMY:** Only two minutes please. Regarding 'Tamilarasu'...

**HON. CHAIRPERSON** (Tmt. A.S. PONNAMMAL): Only one minute more.

**THIRU B. VENKATASAMY:** Two minutes please. I will finish it. Regarding ``Tamilarasu", it is a very good publication and you must give more importance to agriculture, health and Government programmes in it. I came to know from policy Note that there is a Film and Television Institute in Tamil Nadu. I request the Hon'ble Minister for Information and publicity-he is not here because he is not doing well, he is from my district — to erect arches in border areas of Tamil Nadu. In Karnataka, in almost all the borders, they have erected arches like 'Welcome to Karnataka'. Like that, our State should also erect arches like 'Welcome to Tamil Nadu' and the arches must bear our state emblem. By doing so, the people who are entering Tamil Nadu from other States will feel happy and think — Oh Tamil Nadu is welcoming. We can erect such arches in border areas of Kerala, Karnataka and other States also.

**HON. CHAIRPERSON** (Tmt. A.S. PONNAMMAL) : Please finish your speech early.

**THIRU B. VENKATASAMY:** In Tamil Nadu, M.G.R. Film City is there. This has to be developed properly. It is not being properly developed at present. Regarding advertisements, I request the Hon'ble Minister to see that more importance is given to the films which depict the evils of drinking,dowry harassment, AIDS awareness, and Government Social Welfare Schemes. The people who are taking such documentary films must be given encouragement by way of financial aid. I request the Hon'ble Minister for Information and Publicity to see that the welcome arches welcoming people from Andhra Pradesh, Karnataka etc. are erected in all border areas of Tamil Nadu. With this, I Conclude my speech.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தை முடித்து வைக்க அரசு எடுத்த நடவடிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையிலே சிறப்புக் கவன ஈர்ப்பின் மூலமாகப் பேரவைக்குத் தகவல் சொன்ன முதலமைச்சர், இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு நடந்தவைகளை இப்போது அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை பேரவையில் லாரிகள் வேலைநிறுத்தம் காரணமாகத் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விரிவாகப் பேசப்பட்டது. பேசிய உறுப்பினர்கள் தங்களுடைய வேதனையையும், நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையையும் மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

அப்போது நான், தமிழகத்தைச் சேர்ந்த லாரி உரிமையாளர்களையெல்லாம் அழைத்துப் பேசுவதாக நேற்றையதினம் விடுத்திருந்த அழைப்பைச் சுட்டிக்காட்டி, இன்றையதினம் அவர்களோடு பேசுவதாக அறிவித்திருந்தேன். என்னுடைய அழைப்பினை ஏற்று இப்பொழுது பல லாரி உரிமையாளர்களின் சங்கத் தலைவர்கள் என்னைத் தலைமைச் செயலகத்திலே சந்தித்தார்கள். அவர்கள் வருமாறு:

திரு. எஸ்.வி.வி கோபால், பொதுச் செயலாளர், தமிழ்நாடு லாரி உரிமையாளர்கள் கூட்டமைப்பு, சென்னை ;

மதுரை லாரி உரிமையாளர்கள் கூட்டமைப்பின் செயலாளர் சுப்பிரமணியம்; அதன் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ்;

சண்முகம், தென் சென்னை லாரி உரிமையாளர் சங்கத் தலைவர்; சுத்திப்பாரா ஜனார்த்தனம், தென் சென்னை லாரி உரிமையாளர் சங்கத் தலைவர்;

ரங்கநாத நாயுடு, தென் சென்னை லாரி உரிமையாளர் சங்கத் துணைத் தலைவர்;

நடராஜன், லாரி உரிமையாளர் சங்கத் துணைத் தலைவர்; எஸ்.எஸ். மணி, தாம்பரம் லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர், விஜயகுமார், பொதுச் செயலாளர், தென் சென்னை லாரி





உரிமையாளர்கள் சங்கம், திரு. லட்சுமணன், திரிசூலம் டிப்பர் லாரி சங்கத் சங்கத் தலைவர், கிருஷ்ணக்குமார், திரிசூலம் டிப்பர் லாரி சங்கத் துணைத் தலைவர், சீத்தாராமன், தலைவர், தேசிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஒப்பந்தக்காரர், டிப்பர், ஓட்டுநர் மற்றும் உதவியாளர் யூனியன், சென்னை, திரு டி. மணி, பொதுச் செயலாளர் மேற்குறிப்பிட்ட யூனியனைச் சேர்ந்தவர்கள், பி. காமராஜ், கௌரவத் தலைவர், மேற்குறிப்பிட்ட யூனியனைச் சேர்ந்தவர்கள், எம்.டி. பாஸ்கர், செயலாளர், மேற்குறிப்பிட்ட யூனியனைச் சேர்ந்தவர்கள். இன்னும் ஒரு பகுதியினர் காலையில் வர இயலவில்லை என்றும் மாலையில் வருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். மாலை அவர்களைச் சந்தித்துப் பேச இருக்கின்றேன். காலையில் சந்தித்தவர்களுடன் ஏற்பட்டுள்ள உடன்பாட்டை இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

அப்போது பேசியபோது, சங்கத் தலைவர்கள், லாரிகள் மீது மத்திய அரசு விதித்திருக்கும் சர்வீஸ் வரியான 5 சதவீதத்தை ரத்து செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களிடம் நான், தமிழக அரசு சார்பாக, அந்தச் சர்வீஸ் வரியை ரத்து செய்ய என்னாலான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவேன் என்று கூறி, பொது மக்களின் நலனை மனதிலே கொண்டு அவர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப்பெற்று லாரிகளை உடனடியாக இயக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். என் வேண்டுகோளை ஏற்று, என்னைச் சந்தித்த லாரி உரிமையாளர்கள் உடனடியாக லாரிகள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு ஒப்புக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) கையெழுத்திட்டுத் தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண்48—செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்

### (ஆ) கோரிக்கை எண் 50—சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி, திரு ஜி.கே. மணி

**திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் துறை மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை இங்கே சுருக்கமாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொட்டதெல்லாம் துலங்கும், கை பட்டதெல்லாம் விளங்கும் என்பார்கள். அதைப் போல பட்ட மரம் துளுக்கும், பாளையிலும் நீர் சுரக்கும் என்பார்கள். அதைப்போல, இந்தச் செய்தி மற்றும் திரைப்பட தொழில் நுட்பவியல் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, இந்தத் துறைக்கு பெருமை சேர்க்கும் வகையிலே செயல்பட்டு வருகிறார்கள் என்பதைப் பெருமையாகச் சொல்லிக்கொண்டாலும்கூட, அவர் இவ்வளவு கஷ்டப்பட்டு இந்தத் துறைக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையிலே, அவருடைய மானியக் கோரிக்கையிலே இன்று வர இயலாத அளவில் உடல்நிலை குறைவாக இருப்பது பெரும் வருத்தத்திற்குரியது என்பதை நான் அந்த மாவட்டத்தைச் சார்ந்த பிரதிநிதி என்ற முறையிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் செய்தி மற்றும் திரைப்பட தொழில் நுட்பவியல் துறை இந்த நாட்டு மக்களுக்கு பிரச்சார சாதனமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். அந்த வகையிலே இந்த அரசினுடைய செயல் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும், மக்களுடைய மனதைப் பண்படுத்துவதற்கும், தமிழ் வளர்ச்சிக்கும் அறிவாற்றலை வளர்ப்பதற்கும், இந்த நாட்டு மக்களுக்கு பிரச்சார சாதனமாக உள்ளது இந்தத் துறை என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். அந்தவகையிலே திறமையாக நன்றாக நம்முடைய தமிழக முதலமைச்சர் கலைஞர் ஒத்துழைப்பிலே சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது என்று சொன்னாலும்கூட, இந்தத் துறைக்கு இன்னும் பெருமை சேர்க்கக்கூடிய வகையில் சில காரியங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று, ஒரு சிலவற்றை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்தச் செய்தித் துறை என்பது நாளடைவிலே வளர்ந்து வந்தாலும்கூட, இந்தச் செய்தித் துறையிலே, திரைப்படத் துறையிலே இளைஞர்கள் சமுதாயம் ஒரு சில வகையிலே சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறுத்துவிட முடியாது. ஆகவே, எந்த வகையிலேயும் நாட்டை உருவாக்கக்கூடிய எதிர்கால இளைஞர்கள் சமுதாயம் எவ்வளவு பண்பாடு உடையவர்களாக வளர வேண்டும், எந்த ஒழுக்கத்துடன்



வளர வேண்டும் என்பதற்காக இந்தத் துறை மிகவும் பயன்பட்டு வருகிறது. ஆகவே, அந்த வகையிலே இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரப் பெருமக்களையும், அமைச்சர் அவர்களையும் நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்று சொன்னார் வள்ளுவப் பெருந்தகை. அதைப் போல இந்த நாட்டு இளைஞர்களைப் பண்படுத்தி, மனப் பக்குவப்படுத்தி, நாட்டுப் பற்றுடையவர்களாக வளரக்கூடிய வகையிலே, கல்வி நிலையங்களிலும்கூட இன்று அரசு விழாக்கள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி, ஆசிரியர்கள் தினம், குழந்தைகள் தினம் போன்ற பல்வேறு அரசு விழாக்கள் எடுக்கப்பட்டு வந்தாலும் கூட, நாளடைவிலே அந்த விழாக்களுடைய முக்கியத்துவம் குறைந்து வருகிறது என்பதை நாம் மறுத்துவிட முடியாது. இன்னும் சொல்லப்போனால் இந்த விழாக்களில், நாட்டுக்குச் சுதந்திரம் வாங்குவதற்காகப் பாடுபட்ட தலைவர்களுடைய தியாகங்கள், அவர்களுடைய வரலாறுகள் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லும்பொழுது, அவர்களுடைய வரலாறுகளை ஒளி, ஒலி நாடாக்களின் வாயிலாகவும், சிறந்த கலை நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் எடுத்துச் சொல்வதன் மூலம், அந்த மாணவப் பருவத்திலுள்ள இளைஞர்கள், 'அவர்களைப் போல் நாமும் விளங்க வேண்டும்', இந்த நாட்டிற்குத் தியாகம் செய்ய வேண்டும், இது போன்ற உயர்ந்த தலைவர்களாக வர வேண்டும், நாட்டுப்பற்று உடையவர்களாக விளங்க வேண்டும் என்ற வகையில் அவர்களுடைய மனதைப் பக்குவப்படுத்துவதற்கும் இந்தத் துறை பெரிதும் உறுதுணையாக இருக்கின்றது. ஆகவே, அந்த வகையிலே இதை நான் சுட்டிக்காட்டுகிறேன். நான்கூட பத்து ஆண்டுகாலம் ஆசிரியராகப் பணியாற்றியதோடு, அதே போல் உயர்நிலைப் பள்ளி, ஒரு அனாதை மாணவரில்லம், ஹாஸ்டல் என்று சொல்லக்கூடிய விடுதிகள் போன்றவற்றை எல்லாம் ஒரு துறையோடு சேர்ந்து நடத்திய காரணத்தினாலே, அதன் வாயிலாகப் பட்ட அறிவை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி, எதிர்காலத்திலே இந்த நாட்டை உருவாக்கக்கூடிய இளைஞர் சமுதாயத்தைத் தெளிவுபடுத்துவது அவர்களுடைய மனதை வளப்படுத்துவது ஆகியவை இந்த அரசின் கடமையென்ற காரணத்தினாலே இதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அந்த வகையிலே இங்கே நம்முடைய

அரசு பல்வேறு தலைவர்களுக்கு எல்லாம் சிலையெடுக்கக்கூடிய நிலையை அறிவித்திருப்பது பெருமை அளிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. அதேபோல், மறைந்த தமிழகத்தினுடைய அமைச்சர், மரியாதைக்குரிய அமரர் கக்கன் அவர்களுக்கு மதுரையிலே திருவுருவச்சிலை அமைக்கப்படுவது வரவேற்கத்தக்கது. அவருடைய நினைவாக, அவர் இந்த நாட்டு மக்களுக்காக, பொது வாழ்க்கையிலே தான் எவ்வளவு நேர்மையாக, நாணயமாக நடந்துகாட்டினார்கள் என்பதை மற்றவர்களும் உணரக்கூடிய வகையிலே, அவருக்குச் சென்னை மாநகரிலேயும் சிலை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-55

அதேபோல், வள்ளுவருக்குப் பிறகு, திருக்குறளுக்குப் பெருமை சேர்க்கும் வகையிலே செயல்பட்டு, தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த மரியாதைக்குரிய அமரர் திரு. வி. முனுசாமி அவர்களுக்கு இங்கே, வள்ளுவர் கோட்டத்திலே ஒரு திருவுருவச்சிலை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சரவையிலே இருந்த, மறைந்த, பொதுவாழ்விலே நேர்மை, தியாகம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து, மாண்புமிகு அமைச்சர் பெருந்தகையாக விளங்கிய அமரர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கும், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம் என்று அவருடைய பெயராலேயே மாவட்டம் அமைந்திருந்தாலும்கூட, பெருந்தலைவர் இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கும்-ஆக, மிகப் பெரிய தலைவர்களான இந்த இருவருக்கும் விழுப்புரம் நகரிலே திருவுருவச்சிலை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல், தர்மபுரி மாவட்டத்திலேதான் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அதியமான் கோட்டை இருந்து வருகிறது. அவ்வைக்கு நெல்லிக்கனி தந்த அதியமானுடைய வரலாற்றைச் சித்தரிக்கின்ற வகையிலேயும், அவ்வையினுடைய பெருமையைச் சித்தரிக்கின்ற வகையிலேயும், அவ்வைக்கும் அதியமானுக்கும் அங்கே திருவுருவச்சிலைகள் வைத்துத் தருமாறு அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாவைப் பொறுத்தவரையிலே நிறைய சொல்ல வேண்டும் என்று இருந்தாலும்கூட.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசி முடியுங்கள் என்று சொன்னால், அடுத்த பொருளுக்குப் போகிறீர்களே? அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி உட்காருங்கள்.

**திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நான் உட்காருங்கள் என்று சொன்னால், நீங்கள் உட்கார வேண்டும். அடுத்து, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, 'தூரிகை சொல்லும் சித்திரம் ஆயிரம் வாசகத்திற்குச் சமமாகும்' என்பது சீனப் பழமொழி. அந்த வகையிலே இந்த அரசு செய்கின்ற நல்ல காரியங்களும், ஆற்றுகின்ற தொண்டுகளும் மக்களை சென்றடைகின்ற வகையிலே செயல்படும் இந்தச் செய்தித் துறை பற்றிய கருத்துக்களை நான் இங்கே சொல்ல விழைகின்றேன்.

1802-ஆம் ஆண்டு கட்டப்பட்ட இராஜாஜி ஹாலுக்கு ஏறக்குறைய 200 ஆண்டுகள் வயதாகிறது. இந்த மண்டபம் பல சிறந்த காரியங்களுக்குப் பயன்பட்டு வருவது நமக்கெல்லாம் தெரியும். ஆனாலும் அங்கே அரசியல் வரலாற்றைச் சித்தரிக்கும் வண்ணம் ஒரு நிரந்தரமான கண்காட்சியை நாம் உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசியல் சரித்திரத்தில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற அக்கறையைப் பற்றி இங்கே ஒரு உதாரணத்தோடு சொல்ல விரும்புகிறேன். மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் Time Capsule என்று சொல்லப்படுகின்ற காலப் பெட்டகத்தைப் புதைத்தபோது அதிலே வைக்கப்பட்டிருந்த விஷயங்களையெல்லாம் வெளியே சொல்லாமல் புதைத்துவிட்டார் என்ற பதபதைப்பின் காரணமாக அன்றைக்குத் தமிழக முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் அதைத் தன்னுடைய கடிதத்தின் மூலமாக வெளியிட்டிருந்தார்கள்.

*பிற்பகல் 1-00*

பொதுவாக, B-Capsules என்ற ஒரு மாத்திரையைப் போட்டால்கூட அதிலே என்ன இருக்கிறது என்று மேலே எழுதுகிறார்கள். அதாவது, *பி1, பி2, பி6* என்று அதிலே இருக்கிற கனிமங்கள் என்னவென்று எழுதுகிறார்கள். ஆனால், `Time Capsules'-என்று சொல்லப்படுகின்ற, காலப் பெட்டகத்தின் உள்ளே இருக்கின்ற செய்திகள் என்ன என்பதைத் தெரிவிக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அந்த வகையில், செய்திகளைச் சொல்கிறபோது, செய்திகளைப் பதிக்கிறபோது, கவனத்தை மெத்தச் செலுத்தவேண்டுமென்ற கவலையில்தான் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, தமிழக அரசியல் வரலாற்றைப் பற்றி எழுதுகின்றபோது, சரித்திரப் பூர்வமாக, ஆதாரப்பூர்வமாக அத்தகைய சரித்திரம் எழுதப்பட வேண்டும். ஆகவே, அந்தப் பணியைச் சீரிய முறையில் தமிழக அரசு செய்ய வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். வங்காளத்தில் இருக்கின்ற ஒரு கண்காட்சியை நான் பார்த்தேன். அதில் அரசியல் வரலாற்றைப் பற்றிப் பதித்திருக்கிறார்கள். அதுபோல தமிழக வரலாற்றைச் சித்தரிக்கும்வண்ணம், அரசியல் கண்காட்சி ஒன்றைப் புகைப்படங்கள் வாயிலாக இராஜாஜி மண்டபத்தில் நிரந்தரமாக நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது முதல்வர் அவர்கள் திரு.வி.க. அவர்கள் மீது மிகவும் பற்று உள்ளவர்கள். ஆண்டுதோறும் மணவழகர் மன்றம் என்ற பெயரில் விழா நடத்தி, அவருக்குப் பெருமை சேர்க்கின்றவர். எனவே, அவருக்கு, தகுந்த இடத்திலே ஒரு சிலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று திருச்சியில் முன்னாள் நகரசபைத் தலைவராக இருந்த தியாகி இரத்தினவேல் தேவர் அவர்களுக்கும் சிலை அமைத்து அவருக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரைப்படக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அண்ணா பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான *47,036* ஏக்கர் நிலத்தை அன்றைக்கு இருந்த அரசு திரைப்படக் கல்லூரிக்குத் தந்தது. அதை எதிர்த்து அண்ணா பல்கலைக் கழகத்தில் தனிப்பட்ட முறையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின்படி, இப்பொழுது இருக்கின்ற அரசு, அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்த அண்ணா பல்கலைக் கழகத்திற்கு அந்த நிலத்தைத் திருப்பித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிவியல் நகரத்தை அந்தப் பகுதியில்



உருவாக்கும் வண்ணம் அந்த நிலத்தை அண்ணா பல்கலைக் கழகத்திற்கு மீட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, வாரியார் சுவாமிகளைப் பற்றிச் சொன்னார்கள். வாரியார் சுவாமிகள் ஆன்மீகவாதியாக இருந்தாலும்கூட, மிகச் சிறந்த தமிழர் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்து, அகில உலகம் முழுவதும் பயணம் செய்து, தன்னுடைய சொற்பொழிவால் பலருடைய கவனத்தையும் ஈர்த்து, பலருடைய சிறப்பைப் பற்றியும் சொன்னவர் வாரியார் சுவாமிகள். எனவே, அவருடைய பிறந்த நாள் வருகின்றபோதோ, அல்லது நினைவு நாள் வருகின்றபோதோ, அவருக்கு நம்முடைய அரசு விழா எடுத்து, சென்னையில் ஒரு சிலையை அமைத்துத் தர ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, நீதிபதி சிங்காரவேலு அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, வாரியார் அவர்களுக்கு நினைவகத்தைக் கட்டுவதற்காக 10 ஆயிரம் சதுர அடி நிலத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை எலியட்ஸ் சாலையில் வழங்கவேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

பத்திரிகையாளர்களுக்கு விளம்பரத்தைத் தரும்போது ஒரு நெறிமுறையை நம்முடைய அரசு கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Audit Bureau of Circulation- என்ற அடிப்படையிலே, நாளிதழ்களுக்குச் சிறந்த நெறிமுறையில் விளம்பரங்களை வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, பத்திரிகையாளர்களுக்கு நன்மை செய்வதிலே இந்த அரசு யாருக்கும் சளைக்காதது என்பதில் சந்தேகம் இல்லை. 1989-லேயே நமது முதல்வர் அவர்கள் அப்போது முதல்வராக இருந்தபோதே, பத்திரிகையாளர்களுக்காகத் தனியாகக் கொட்டிவாக்கத்தில் ஒரு நிலத்தைக் கொடுத்தார்கள். அந்த நிலம் மேம்பாடு செய்யப்பட்டு இப்போது வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இருந்தாலும்கூட, அங்கே சமூகக் கூடம் இல்லை, ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் இல்லை. எனவே, அவற்றைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாதஸ்வரக் கலைஞர்களுக்கெல்லாம் சிறப்புச் சேர்த்தவர் பி.என். இராஜரத்தினம்பிள்ளை அவர்கள். தன்மான உணர்வோடு வாழ்வதற்கு அவர்கள் இலக்கணம் வகுத்தவர். அப்படிப்பட்டவரின் நினைவு நாளை நம்முடைய அன்புத் தலைவர் மூப்பனார் அவர்கள் இரண்டு ஆண்டுகள் கொண்டாடினார்கள். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூத்த உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் எல்லோருக்கும் வழிகாட்டியாக ஐந்து நிமிடத்திற்குள் பேசி முடிப்பார்கள். (சிரிப்பு)

*பிற்பகல் 1-05*

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்த உறுப்பினர் மூத்த உறுப்பினர் என்று என்னை ஒன்றுமே இல்லாமல் பண்ணிவிட்டீர்கள் எல்லோரும்; எல்லா அமைச்சர்களும் சரி, நீங்களும் சரி, எல்லோரும்; பரவாயில்லை. கடைசி நேரத்திலாவது பேசுவதற்கு 5 நிமிடம் கொடுத்ததற்கு நன்றி. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு அக்கா தொடர்ந்து அமைச்சர்கள் செய்யவில்லை, செய்யவில்லை என்று சொல்லிக்கொண்டே சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது நன்றாகவே தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நானே சாட்சி.

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலாத் துறை பற்றியும், செய்தித் துறை பற்றியும் பேச அனுமதி கொடுத்த தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவின் மூன்றாவது ஏற்றுமதித் தொழிலாக இருக்கிறது என்பதை அறிகிறேன். இந்த விவரங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆடைகள், வைரம், ஆபரணம் இவைகளையெல்லாம் தயார் செய்து வெளிநாடுகளுக்கு நிறைய ஏற்றுமதி செய்வதால், நிறைய அன்னியச்செலாவணி நமக்குக் கிடைக்கிறது என்பதை நினைத்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பட்டை தீட்டும் தொழிலில் நிறைய பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். வெள்ளைக் கற்களில் பட்டை தீட்டும் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள் அந்தத் தொழிலை ஊக்கப்படுத்தி, அவைகளையெல்லாம் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் வெளிநாடுகளிலிருந்து வரக்கூடியவர்கள் நம்முடைய பெருமையை மிகவும் பாராட்டி, போற்றக்கூடிய ஒரு நிலைமை உருவாகும். (குறுக்கீடு) நிலக்கோட்டை பற்றிப் பிறகு சொல்கிறேன்.



சிறுமலை பற்றி எப்போதும் பேசிக்கொண்டு, வேண்டுகோள் வைத்துக்கொண்டே இருப்பேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் கொஞ்சம் கருணை வைத்து, சிறுமலைத் திட்டத்தை சேங்ஷன் செய்திருக்கிறார்கள். மறுபடியும் அந்தத் திட்டத்தை நீட்டித்துக்கொண்டே போகாமல், அடிக்கல் நாட்டுவிழா உடனே நடத்த வேண்டும்.

வெள்ளியங்கிரி என்ற இடத்திலே வெள்ளிமலை ஆண்டவன் கோயில் இருக்கிறது. அந்த இடத்திற்கு நூற்றுக்கணக்கான மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். வரக்கூடிய அந்தப் பகுதியிலே, திருமலைசாமி நாயக்கர் என்பவர் மூன்று ஏக்கர் நிலத்தை அந்த ஆண்டவனுக்காகக் கொடுத்திருக்கிறார். அந்த இடத்தில் மரங்கள் இருக்கின்றன. குடையைப் போல விரிந்து கிடக்கும் அந்த மரங்களைப் பார்க்கும்போது உற்சாகமாக, அழகாக இருக்கிறது. புதூர் வரை ஒரு ரோடு இருக்கிறது. வெள்ளியங்கிரி வரை அந்த ரோட்டை நீட்டித்துக் கொடுத்தால் நிறைய சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து, அந்தக் காட்சிகளைக் காண வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்குள்ள மரங்களில் ஊஞ்சல்கள் கட்டித் தொங்கவிடலாம். குழந்தைகள் அதில் ஆடுவார்கள். வைகை டேமில் இருக்கிறதைப் போன்று, குழந்தைகள் ஊஞ்சல் ஆடக்கூடிய அளவிலே ஊஞ்சல் கட்டிவிட்டால் வருமானமும் கிடைக்கும், குழந்தைகள் உல்லாசமாக இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கவும் ஏதுவாகும். ஆகவே, அந்த இடத்தைச் சுற்றுலாத்தலமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். திரு. வல்லரசு அவர்கள் பேசினார்கள். நிலக்கோட்டை பக்கத்திலே சக்தி வாய்ந்த அனுமாரப்பன் இருக்கிறார். வைகை ஆற்றின் நடுவில் அந்தக் கோயில் இருக்கிறது. முல்லை ஆறும், வைகை ஆறும் இணைந்து அங்கே வருகின்றது. அந்த இடத்திலே கோயில் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தக் கோயிலைப் பார்த்திருக்கிறாரா என்பது தெரியவில்லை. முன்னர் மதுரை ஜில்லாவும் எங்கள் ஜில்லாவும் ஒன்றாக இருந்தன. தயவுசெய்து நீங்களெல்லாம் அங்கே போக வேண்டும். கீழே கோயில் இருக்கிறது. அங்கே மழை வரும் காலங்களில் தண்ணீர் கரைபுரண்டுவரும். மணல் எல்லாம் அடித்துக்கொண்டு போய், அந்த ஊர், வயலெல்லாம் மூழ்கி விடும். ஆனால் அந்தக் கோயிலுக்குள் மட்டும் தண்ணீர் இறங்கவே இறங்காது. அந்த அனுமாரப்பன்தான்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பழனிசாமி அவர்கள் மெத்த வருத்தத்தோடு தங்களிடத்திலே ஒரு முறையீடு செய்துகொண்டார்கள். மழை பெய்ததால் நீர் கோட்டைக்கு வந்து நூலகம் எல்லாம் வீணாகியிருக்கிறது என்று சொன்னார்கள். அக்காள் அவர்கள் சொல்வதைப்பார்த்தால் அந்த ஆஞ்சனேயரைக் கொண்டு வந்து கோட்டையிலே வைத்துவிட்டால், மழைத் தண்ணீர் உள்ளே வராமல் தடுக்கலாம் என்று கருதுகிறேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** சக்தி வாய்ந்த அனுமார், உங்களால் தூக்கமுடியாது. அரசாங்கம் அத்தனையும் சேர்த்து தூக்கினாலும் தூக்க முடியாது. அத்தனை சக்தி உடையவர் அவர். தண்ணீர் அந்தக் கோயிலுக்குள் வருவதில்லை. நாங்களெல்லாம் அங்கு சென்று படியிலே இறங்கி கும்பிட்டு வருவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுற்றுலாத்துறையைப் பற்றிப் பேசுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** அந்தக் கோயிலையும், அந்தப் பகுதியையும் சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். அந்த ஆஞ்சனேயர் உள்ள இடத்தைத் தயவுசெய்து சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டுமென்று உங்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வைகையில் கட்டப்பட்டுள்ள பாலம் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாலம். 100 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டிய அந்தப் பாலத்திலே கார் வேண்டுமானால் போகலாம் கார் போகும்போது நடந்து செல்லமுடியாது. பழுதான நிலையில் அந்தப் பாலம் இருக்கிறது. தயவுசெய்து அந்தப் பாலத்தை விரிவுபடுத்தித்தர வேண்டும். இந்த இடத்திற்கு பம்பாயிலிருந்து வருகிறார்கள், கல்கத்தாவிலிருந்து வருகிறார்கள்; பெங்களூரிலிருந்து வருகிறார்கள்; வெளி நாடுகளிலிருந்து நிறையப் பேர் வருகிறார்கள். ஆகவே அந்த இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதைப்போல, கொடை ரோட்டிலே சாலையோர விடுதி கட்டுவதற்கு இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ளது. அதற்காக மிக்க நன்றி. அந்த வழியாக பாண்டியன் எக்ஸ்பிரஸ் செல்கிறது. அந்த



பாண்டியன் எக்ஸ்பிரஸில் பார்ப்போமேயானால், மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் அந்த பாண்டியன் எக்ஸ்பிரஸ்ஸில் வந்தால், யாரும் அங்கே இறங்குவதே கிடையாது. இப்பொழுதெல்லாம் யாரும் இரயிலிலே வருவதில்லை. இங்கிருந்து பறந்து போய்விடுகின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த இரயிலில் போனால்கூட, காலை 5 மணி, 5¼ மணிக்கு அங்கே வருகின்றது, அதனால், அவர்களால், நிற்கின்ற அந்த 5 நிமிடங்களில் பார்த்திருக்க முடியாது. அந்த பாண்டியன் எக்ஸ்பிரஸ்ஸில் நூற்றுக்கணக்கான வெளிநாட்டுக்காரர்கள் வந்து இறங்குகிறார்கள். ஒரு நாள் அங்கே உள்ளவர்கள், அவர்களிடம் என்னைக் காட்டி, இவர்கள்தான் தொகுதி எம்.எல்.ஏ. அவர்களைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களெல்லாம் என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். என்ன, நீங்கள்தானே எம்.எல்.ஏ., இங்கே நாங்கள் வந்து தங்குவதற்கு இடமேயில்லையே இந்த வேலைகளையெல்லாம் நீங்கள் ஏன் செய்யக்கூடாது என்று கேட்டார்கள். ஆகையினால், தயவு செய்து, இந்த இரயில்வே ஸ்டேஷனையொட்டி, அதாவது இப்பொழுது இருக்கின்ற டி.பி.-ஐ ஒட்டி,— அதற்கு மேலே ஒரு சிறிய பசுமலை போன்றதொரு கரடு இருக்கின்றது. அது மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அந்த வழியாகச் செல்லும்போது பார்த்திருக்கலாம், அந்த இடம் தெரிந்திருக்கும் — தங்குவதற்கு இன்னும் சில விடுதிகளைக் கட்டி, அந்த பாரினர்ஸ் வந்து தங்குவதற்கு, 'ஃபாரின் ஸ்டைல்'-இல் கட்டிக் கொடுப்போமேயானால், அவர்கள் அங்கே வந்து நிம்மதியாகத் தங்குவார்கள். அவர்கள், அங்கேயிருந்து வெளியிலே செல்வதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பிறகு, கொடைக்கானலில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகின்றது. இன்னும் ஒரு நிமிடத்தில் நீங்கள் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னபடிக் கேட்டுத்தான் நான் அங்கே அமைதியாக உட்கார்ந்திருந்தேன். அதற்காக ஒரு 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காக 5 நிமிடமா? இல்லை. இன்னும் 2 நிமிடங்கள் பேச அனுமதிக்கிறேன் அதற்குள் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலிலே 8 குடில்கள் கட்டுவதற்கு நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால், அது போதாது. ஏனென்றால், அங்கே அதிகமான வெளிநாட்டுக்காரர்கள் வருகின்ற காரணத்தினாலே, இதை நான் கேட்கின்றேன். எனவே, இன்னும் 8 குடில்களைக் கொடைக்கானலிலே கட்டுவதற்கு ஒரு ஏற்பாட்டினை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, திரைப்படங்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரைப்படங்களுக்கெல்லாம் வசனம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய படங்களெல்லாம், சினிமாக்களெல்லாம் வந்திருக்கின்றன. மனோரமா, அப்படி இப்படி என்று, சினிமாவெல்லாம் வந்திருக்கிறது. (சிரிப்பு) பரவாயில்லை. மனோகரா என்ற சினிமாவெல்லாம் வந்திருக்கிறது. அதிலே, வசந்தசேனையைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மாண்புமிகு முதலமைச்சரைப் பற்றிப் பேசும் போது ஒழுங்காகப் பேசவேண்டும், அவதூறாகப் பேசினால் நான் நடவடிக்கை எடுப்பேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் இவர்களைப் பற்றியெல்லாம் முன்பு நாட்டு மக்களுக்கு அதிகமாகத் தெரியாது: அவ்வளவு சரியாகத் தெரியாது. ஏதோ, சரித்திரத்திலே, நானெல்லாம் படிக்கும்போது, 1947-லே போர்த் பார்ம் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது History of India, History of England என்று இருந்தது. தற்போது, 10-ஆம் வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி. என்று வந்த பிறகு, அதை 'சோசியல் ஸ்டடீஸ்' என்று மாற்றிவிட்டார்கள். அதனாலே, சரித்திரமே குழந்தைகளுக்கும் தெரிவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆகையினால், இந்த கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற சினிமாக்கள் வந்ததனால், நமக்கெல்லாம், ஜனங்களுக்கெல்லாம் நாட்டுப்பற்று ஏற்படக்கூடிய அளவிற்கு நாட்டுப்பற்றை மக்கள் உணரக்கூடிய அளவிற்கு அமைந்திருந்தது. இந்தத் திரைப்படங்களிலே நம்முடைய மதிப்பிற்குரிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் அவ்வளவு சிறப்பாக நடித்திருக்கிறார்கள். ஆகவே, நாட்டு மக்களுடைய உள்ளங்களிலே நன்கு பதிந்தது. அதேபோன்று,



ாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிய சினிமாவிலே வரும் வசந்தசேனை ன்ற பாத்திரம் பற்றி நினைக்கும்போதெல்லாம் இப்பொழுது அதே பான்ற வசந்தசேனாக்கள் நினைவிற்கு வருகின்றார்கள். அது, நம்முடைய ாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிய சினிமா. நம்முடைய மாண்புமிகு தல்வர் அவர்கள் நிறைய சினிமாக்களுக்கெல்லாம் வசனம் ழுதியிருக்கிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன்.

எனவே, before independence, after independence என்பதைப் பற்றிப் பாடப் புத்தகங்களை நீங்கள் கொண்டு வரவேண்டும், அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்யவேண்டும். அதாவது, சுதந்திரத்திற்கு முன்பு இந்தியா எப்படி இருந்தது; சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா எப்படி வளர்ந்திருக்கிறது; நாம் என்னென்ன காரியங்களை ஆற்றியிருக்கிறோம் என்பதைப் பற்றி நீங்கள், தயவுசெய்து, பாடப்புத்தகங்களாக ஆக்க வேண்டும். அப்பொழுதுதான், இந்த நாட்டின் நிலைமையை எதிர்காலச் சந்ததியினர், மாணவ, மாணவியர் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அது உங்களுடைய காலத்தில் தான் நடக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் ஒரு சிறந்த எழுத்தாளர். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளர். யாரை, எப்படி, எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்று, வைக்கக் கூடியவர்கள். ஆகையால், ஒரு சிறந்த எழுத்தாளர் முதல்வராகப் பதவி ஏற்றிருக்கின்ற காரணத்தினாலே, இந்தச் சரித்திரத்தை நீங்கள் எழுத வேண்டும். அல்லது, எழுத்தாளர்களை அழைத்து, அவர்களிடத்திலே பேசி, இதை எழுதிக் கொடுக்க வேண்டும்; இதைப் பாடமாக ஆக்க வேண்டும் என்று நாம் உருவாக்கினால்தான், இந்த நாட்டில் உள்ளவர்களிடம் நாட்டுப்பற்று வளரும். நாட்டுப்பற்றில் நீங்கள் எவ்வளவோ மிஞ்சிவிட்டீர்கள். ஒரு காலம் எப்படியோ இருந்தது. இப்பொழுது நாட்டுப்பற்று மிஞ்சி, ரொம்ப நன்றாக இருக்கிறது. அதையெல்லாம் பார்க்கும்போது, எங்களுடைய உள்ளங்களெல்லாம் பூரிப்பு அடைகின்றன. நாட்டுப்பற்று ஏற்பட்டு குழந்தைகளெல்லாம் படித்துவிட்டு, தைரியமாக வேலை பார்ப்பதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். ஆகவே, இதுபோன்ற புத்தகங்களை எழுத வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும்.

அதுமாத்திரமல்ல, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம், பேசி முடியுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் பேசி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றிரண்டு இருந்தால், அதை அப்புறம் சொல்லிக் கொள்ளலாம். பரவாயில்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்து விடுகிறேன். அதேபோல, பாரதிதாசன், பாரதியார் ஆகியோரைப் பற்றியெல்லாம் பாடங்கள் கொண்டு வரப்பட வேண்டும். ஏற்கெனவே, இங்கே நல்ல தலைவர்களுக்கெல்லாம் சிலை அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கே முன்னாள் முதலமைச்சராக இருந்தபோது, அவருக்கு சிலை அமைக்கப்பட்டிருந்தது. அது இடையிலே கொஞ்ச காலம் இல்லாமல் இருந்தது, கொஞ்சம் வருத்தமாககூட இருந்தது. ஆகையினால், மீண்டும் அதே இடத்திலே அவருடைய சிலையை அமைத்துக் கொடுத்தால், நான்கு முறை முதலமைச்சராக வந்து மக்கள் பணியாற்றக்கூடிய அவருக்கு - முதலில் இல்லை என்று சொல்லிவிட்டாலும்கூட, பிறகு, சரி, சரி என்று சொல்லிவிடுகிறார் அல்லவா, அதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்; அப்படி மக்கள் பணியாற்றக்கூடிய அவருக்கு - சிலை அமைப்பதற்காக மீண்டும் ஒரு முயற்சியினை, அரசாங்கமே அமைப்பதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

பிற்பகல் *1-15*

நம்முடைய மதிப்பிற்குரிய, கறைபடாத கரம் படைத்த திரு. கக்கன் அவர்களுக்குச் சிலை வைத்திருப்பதற்காக நான் மகிழ்ச்சியையும் பெருமையையும் அடைகிறேன். அவரைப் போன்ற அந்தத் தலைவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறீர்கள்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குச் சிலை வைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கெல்லாம் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

வத்தலக்குண்டிலே சுப்பிரமணிய சிவாவுக்கு — ஏனென்றால் அவர் பிறந்தது, வத்தலக்குண்டு; அவர் இருந்தது வத்தலக்குண்டு; ஆனால், கடைசி காலத்திலே, பாப்பாரப்பட்டிக்குச் சென்று விட்டார்; அவர் தன் வாழ்நாள் முழுவதையும் இந்த நாட்டிற்காகவே அர்ப்பணித்தவர்; விஷ ஊசி போட்டு, அதாவது தொழுநோய் வரக்கூடிய ஊசியைப் போட்டு சிறையிலே வைத்து (குறுக்கீடு) கலெக்டர் ஆபீஸுக்கு அவர் பெயரை வைத்துத் திறக்கும்போது, நான் நன்றி தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் அதற்கெல்லாம் மிகவும் நன்றி தெரிவித்திருக்கிறேன். 'சுப்பிரமணிய சிவா வளாகம்' என்று பெயர் வைத்ததற்கு நான் மனப்பூர்வமான நன்றியையும், அதற்காக நீங்கள் நன்றாக இருக்க வேண்டும்; உங்களுடைய பணி சிறக்க வேண்டும் என்பதற்காக ஆண்டவனைப் பிரார்த்தனை செய்கிறேன். வத்தலக்குண்டிலே, சுப்பிரமணிய சிவாவுக்கு — அவருடைய நினைவாக, அவர் குடியிருந்த வீட்டை நீங்கள் நினைவுச் சின்னமாக மாற்றுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** சரி. ஆகவே, இவ்வளவையும் செய்து கொடுக்க வேண்டுமாய் மீண்டும் கேட்டுக் கொண்டு, இரண்டு நிமிடங்கள் அதிகமாக எனக்கு அனுமதி கொடுத்ததற்கு, தலைவர் அவர்களுக்கும், தலைவர் அவர்களுடைய அப்பாவும் எனக்கு வேண்டியவர்; என்னை, பெற்றவளை மாதிரி வைத்திருந்தார்; அந்தத் தலைவருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான என் இலாகா சார்பான மானியக் கோரிக்கைக்கு பதிலளிக்கின்ற வாய்ப்பினை வழங்கிய, என் ஆசான் தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கியும், என் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்தும், தளபதியார் அவர்களின் ஆசியோடும் இந்த மானியக் கோரிக்கைக்கு பதிலளிக்கிறேன்.

"வறுமை என்னும் அச்சம் நீங்கினால்தான் இயலாமை போகும்; இல்லாமை நீங்கும்; அறிவு, தெளிவு ஏற்படும்" என்று அறிஞர் அண்ணா அவர்களின் பொன் மொழிக்கேற்ப, தமிழகத்தில் வறுமை என்ற அச்சம் போக வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு, தமிழக முதலமைச்சர், நிதிநிலை அறிக்கையை இந்த ஆண்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

என் அரசியல் அணுகு முறையிலும், என் இலாகா நிலையிலும் தெளிவு ஏற்பட்டு, தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி, அடியெடுத்து வைத்த காரணத்தினால், கடந்த ஆட்சியில் நட்டத்திலே இருந்த சுற்றுலாத் துறை, இன்றைக்கு இலாபத்தை ஈட்டக்கூடிய சுற்றுலாத் துறையாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு முதல் காரணம், தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இந்த அவையிலே பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1997-98-ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்தில், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வையகம் ஒரே குடும்பம் என்ற தத்துவத்தை, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கனியன் பூங்குன்றனார், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெரிவித்த கருத்து, இன்று தமிழக முதல்வர் அவர்களுடைய அறிவுரையையொட்டி, சுற்றுலாத் துறையின் வழிகாட்டி வாசகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை இங்கே எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலே, இயற்கையில், வற்றாத எழில் பூத்துக் குலுங்கும் வனங்கள், சரணாலயங்கள், அருவிகள், கடல் வளம், மலை வளம், அற்புத சிற்பங்கள், அருங் கலைகள், மரபையொட்டிய பண்டிகைகள், அழகான திருவிழாக்கள், சரித்திரச் சான்றுகள், இவை அனைத்தும் இங்கே இன்ப நடமாடும் மாநிலங்களில், தமிழகத்திற்கென்று ஒரு தனி இடமும் தகுதியும் உண்டு. இந்த வளங்களைக் கண்டுகளிக்க ஆண்டுதோறும் பெருகி வருகிற உல்லாசப் பயணிகளது எண்ணிக்கையே இதற்கு சான்று என்று கூறினால், இது மிகையாகாது. அந்த அளவுக்குத் தமிழகத்திலே சுற்றுலாப் பயணிகள், வருடத்திற்கு வருடம் அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள்.

இன்றைக்கு, மாமல்லபுரம் சிற்பக் கலையும், கடற்கரைக் கோயிலும் உலகப் பிரசித்தி பெற்றுள்ளவை.

பிற்பகல் 1-20

தஞ்சை பெரிய கோவிலின் விமானம், நந்தி, சிற்பங்கள், ஓவியங்கள் மற்றும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் வனப்பு, அங்கே இருந்த



தமிழ்ச் சங்கத்தின் அழியாச் சின்னங்கள் பெருமளவுக்கு கலை ஆர்வம் கொண்ட பயணிகளை ஈர்த்தவண்ணம் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள மெரீனாக் கடற்கரை உலகிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரையிலான மணற்பாங்கான கடற்கரை தமிழகத்திலே உள்ள சிறப்பாகும். அத்தனை பெருமைகளும், சிறப்புகளும் நமக்குண்டு. இவற்றை நாம் முழுமையாகச் சுற்றுலாவுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தற்காலத்திற்கு ஏற்றாற்போல் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சுற்றுலா ஒரு பொழுதுபோக்கு என்று சொல்லலாம். அதைவிட அதிகமாகச் சொல்லப்போனால் அறிவு வளர்ச்சியைக் கொடுக்கும் சாதனம் என்ற வகையிலும் காணலாம். நம் முன்னோர்கள் வாழ்க்கை முறையை வடித்துக்காட்டும் வாசகங்களாகவும் இதைக் காணலாம். மாநிலத்தில் சுற்றுலாச் சிறப்புகள் பரந்து விரிந்து நம் நாட்டு மக்கள் பல பகுதிகளிலிருந்து வந்து அனைத்தையும் காணவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதற்கேற்றாற்போல் இன்றைக்குச் சுற்றுலாத் துறையின் மூலமாகவும், தனியார் முன்வந்தால் அவர்களை ஊக்குவிக்கும் விதமாகவும் நட்சத்திர விடுதிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

அதைப்போன்று சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கேற்ப சீர்வசதிகள் செய்யப்பட்ட பேருந்துகள், கார்கள் இங்கே இருக்கின்றன. அதைப் பயன்படுத்தி சுற்றுலாப் பயணிகள் இங்கே வருவதால் நமக்கு டாலர்களாக வருமானம் கிடைக்கிறது. தமிழ்நாடு தற்போது அமைதிப் பூங்காவாக விளங்குகின்றது. உலகத்தில் எந்த மூலையிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வந்தாலும், எந்த மொழி பேசுபவராக இருந்தாலும் தமிழ்நாட்டில் பாதுகாப்பான சுற்றுலாவை மேற்கொள்ள முடிகிறது என்பதைப் பலர் தெரிவிக்கின்றனர். அந்த உத்தரவாதத்தைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சார்பில் என்னால் தரமுடிகிறது என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை ஆண்டுக்காண்டு கூடிக் கொண்டே வருகிறது. எந்த அளவுக்கு அது உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், 15 முதல் 20 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் சுற்றுலாத் துறை பணியாற்றி வருகிறது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு இட்டிருக்கிற கட்டளையும் அதுதான்.

மைய அரசின் சுற்றுலாத் துறை 9-வது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறையாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே

குறிப்பிட்டுள்ள ஒருசில கருத்துக்களை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், சுற்றுலாப் பெருவளாகங்கள் ஏற்படுத்தி அதில் சுற்றுலா வசதிகளை உருவாக்குதல், தனியார் மூலதனத்தை ஊக்குவித்து, சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது, சுற்றுலா வசதிகளை விரிவுபடுத்துவது, மனித வள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தருதல், ஆராய்ச்சி மற்றும் கணிப்பொறி உதவிகளை நாடுதல், சுற்றுப்புறச் சூழல் மற்றும் கலாச்சாரப் பெருமையைப் பாதுகாப்பது, சலுகைகள் வழங்குவது என விரிவான அறிக்கைகளை மைய அரசு நமக்கு அனுப்பியிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகுமுறையை அடிப்படையாக வைத்துக் கொண்டு நம்முடைய சுற்றுலாத் துறை மூலம் என்னென்ன மாற்றங்களைச் செய்ய முடியும் என்று ஆலோசனைகளை நடத்தி வருகிறோம்.

முக்கியமாக சுற்றுலா மையங்களின் தன்மைகளைப் பொறுத்து உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு உரிய வசதிகளைச் செய்வதில் நாம் முனைப்போடு இருந்து கொண்டிருக்கிறோம். சுற்றுலாத் திட்டங்களில் தனியார் முதலீட்டை விரைந்து பயன்படுத்த பல்வேறு அனுமதிகளை ஒரே இடத்தில் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதற்கான வழிமுறைகளைக் கண்டு வருகிறோம்.

மேலும் சொல்லப்போனால் நம் மாநிலத்திலுள்ள சிறப்புகளைப் பற்றி வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் விளம்பரம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம். ஆண்டு முழுவதும் பல மாவட்டத் தலைநகரங்களில் பலவிதமான சிறப்பு விழாக்கள் நடத்துவதன் மூலம் கலாச்சாரச் சுற்றுலாவை நாம் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருகிறோம். அப்படிச் செய்வதன் மூலம் வெளிநாட்டிலிருந்தும், நம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் திரளான பயணிகள் வந்து நம்முடைய கலாச்சாரத்தின் தன்மையைப் பார்த்துச் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

1996-97-ஆம் ஆண்டு செய்துள்ள சில பணிகளைப் பற்றிய விவரங்களைச் சுருக்கமாக இம்மாமன்றத்திற்குத் தெரியப்படுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு உதயமான பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்தில் ஒரு சுற்றுலா அலுவலகம் திறப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த அலுவலகம் விரைவில் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட பரவலாக்கத் திட்டங்களின்கீழ் பல்வேறு திட்டங்களுக்கு 24.5 இலட்ச ரூபாய் நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதைப்போல நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 61.75 இலட்ச ரூபாய் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. மத்திய அரசு சில சுற்றுலாத் திட்டங்களுக்கு 180 இலட்ச ரூபாய் நிதியை ஒதுக்கி ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதி போதுமானதாக இல்லை என்பதை மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி வரும் ஆண்டில் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்று கடிதம் மூலம் கேட்டிருக்கிறோம். அதுபோன்று இந்த மாதத்தில் மாநில சுற்றுலாத் துறை அமைச்சர்களுடைய மாநாடு டெல்லி மாநகரில் நடைபெறுவதாக இருந்தது. அது தற்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. எனவே வருகிற அந்த மாநாட்டில் நம்முடைய மாநிலத்தின் சார்பாக நாம் தீட்டும் திட்டங்களுக்குக் கூடுதலாக நிதியொதுக்கீடு வேண்டுமென்று வலியுறுத்துவேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-25

அதைப்போன்று சிறப்பு வாய்ந்த பூம்புகார் சுற்றுலா வளர்ச்சிக்கென்று, சுற்றுலாத் துறை கேட்காமலேயே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மனமுவந்து 62 இலட்ச ரூபாய்க்கு ஒப்பளிப்பு செய்திருக்கிறார்கள். அப்படி 62 இலட்ச ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டதன் மூலம் இன்றைக்கு பூம்புகாரில் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதில் 75 சதவிகிதப் பணிகள் முடிவடைந்து, வருகின்ற 15-ஆம் தேதிக்குள் அனைத்துப் பணிகளும் முடிவடையும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பாஞ்சாலங்குறிச்சி, வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டையை புதுப்பிக்க வேண்டி — சென்ற ஆட்சிக் காலத்தில் அது கவனிக்கப்படாமல் இருந்ததால் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த அலுவலர்களும், சுற்றுலாப் பயணிகளும் அங்கே போகமுடியாத ஒரு நிலைக்கு பாஞ்சாலங்குறிச்சி ஆக்கப்பட்டது — அதனை செம்மைப்படுத்த வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தின் காரணமாக நம்முடைய

முதல்வர் அவர்கள் அதற்காக 24 இலட்ச ரூபாய்க்கு ஒப்பளிப்பு செய்திருக்கிறார்கள். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அவைகள் எல்லாம் விரைவில் முடிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

அடுத்து, ஒக்கேனக்கல் நடைபாதை அமைத்தல், கழிப்பறை கட்டுதல், காட்சி முனை கட்டுதல் போன்ற பணிகளுக்காக ரூ. 10.50 இலட்சமும், வீடூர் அணையில் தங்குமிடம், கழிப்பறை மற்றும் அணைப் பகுதியில் மின்விளக்கு வசதிகள் செய்ய 7.00 இலட்ச ரூபாயும், குற்றாலத்தில் படகு இல்லம் கட்டுவதற்காக 10.00 இலட்ச ரூபாயும் நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையாகும்.

அடுத்து, புதிதாகத் தொடங்கப்பட்ட திருநெல்வேலி, கொடைக்கானல், தர்மபுரி போன்ற சுற்றுலா அலுவலகங்களுக்குத் தேவையான பணியாளர்களைக் கூடுதலாக நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத் தொழிலில் ஈடுபடுகின்றவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் மானியமாக 10 சதவீதம் கொடுக்கப்பட்டு வருகிறது. வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்களுக்கு அந்த மானியம் சென்று அடைய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு அதற்கான கள விளம்பரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971-ஆம் ஆண்டு 5 சுற்றுலா மாளிகைகள் மற்றும் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் இயக்கப்படும் 2 ஊர்திகள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டதாக உருவாக்கப்பட்டது. தற்பொழுது தென்னிந்தியாவில் தனிச்சிறப்புடன் கூடியதாக 33 விடுதிகளையும், 25 பேருந்துகளையும் கொண்டு இக்கழகம் சிறப்பாக நடைபெறுகின்றது.

அடுத்து, கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக சென்னையிலே ஆரம்பிக்கப்பட்ட சுற்றுலாப் பொருட்காட்சி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்த சுற்றுலா பொருட்காட்சி இப்போது முடிவடைந்து இருக்கிறது. இதுவரை இல்லாத அளவுக்கு இங்கே அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சுற்றுலா பொருட்காட்சி அதிகமான லாபத்தை ஈட்டி, முடிவடைந்திருக்கிறது.



சுமார் 50 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் அளவுக்கு அது லாபத்தை ஈட்டியிருக்கிறது என்கின்ற செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1997-98-ஆம் ஆண்டில் இத்துறையில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள் குறித்த விவரங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வரும் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் பெங்களூர், ஹைதராபாத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளில் சுற்றுலாத் தகவல் மையங்கள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகள் பெரும் பயன் அடைவார்கள் என்று நம்புகிறோம். நம்நாட்டின் சுற்றுலாப் பயணிகளையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் கவரும் சாதனமாக அமைந்து இருப்பது, ஒலி, ஒளிக்காட்சியாகும். அதன் வாயிலாக நம்முடைய வரலாறு, கலை, கலாச்சாரம் போன்றவற்றை நம்முடைய சந்ததியினர் நேரில் பார்த்து புலனறியும் வகையில் அமைக்கப்பட இருக்கிறது. இப்படிப்பட்ட அமைப்பு ஏற்கெனவே மதுரையில் திருமலை மன்னர் மகாலில் பல ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக வருகின்ற ஆண்டில் தஞ்சை பெரிய கோயிலையும் தற்காலத் தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்தி ஒலி, ஒளிக் காட்சி அமைக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பழம்பெருமையோடு எழும்பியிருக்கின்ற மாமல்லபுரம் மற்றும் நாம் அமர்ந்திருக்கின்ற மாமன்றத்தின் புனித ஜார்ஜ் கோட்டையையும் சேர்த்து ஒலி, ஒளிக் காட்சிகள் அமைக்கப்படுவதற்குத் தேவையான திட்ட அறிக்கைகளை வருகின்ற ஆண்டிலேயே செய்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலாப் பயணிகளின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த கம்பி வழி உல்லாசப் பயணத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களது ஆட்சியில் நிறைவேற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதகமண்டலத்தில் கம்பி வழிப் பயணம் அமைக்க வேண்டுமென்று கோரி மாண்புமிகு உறுப்பினர்கள் முபாரக் அவர்களும், மாண்புமிகு

உறுப்பினர் குண்டன் அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் வலியுறுத்தி வந்தனர். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று பணிகளை உடனே தொடங்குவதற்காக இந்த ஆண்டில் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி). உதகமண்டலம் சிறுவர் பூங்காவிலிருந்து படகு இல்லம் வரை 50 மீட்டர் நீளம் உள்ள கம்பி வழிப் பாதை அமைக்கப்படும். அதற்காக மொத்தம் 1.41 கோடி ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** அதை வருகிற நிதியாண்டிலே தொடங்குவதற்குரிய முயற்சிகளில் சுற்றுலாத் துறை ஈடுபடும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக, நீலகிரி மாவட்டத்தில் 30 இலட்சம் ரூபாய் செலவில் பல திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுலாத் துறையில் முதலீடு செய்ய, 'மல்ட்டி நேஷனல்' என்று சொல்லக்கூடிய பன்னாட்டு முதலீட்டாளர்கள், பெரிய திட்டங்களிலே முதலீடு செய்ய முன் வருகிறார்கள். நம் நாட்டிலுள்ள தொழில் முனைவோர்களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கூட்டுச் சேர்ந்து பெரிய அளவிலே முதலீடு செய்ய முன் வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள், மாநில அரசிடம் எதிர்பார்ப்பது எல்லாம் திட்டங்களை நிறைவேற்ற தயார் நிலையில் உள்ள பரந்த நிலம், குடிநீர் மற்றும் இணைப்புச் சாலைகள் என்பது தான். மேலும் பல துறைகளிலிருந்து கொடுக்கக்கூடிய அனுமதிகளைக் குறைந்த நாட்களில் அதாவது குறைந்தது 30 நாட்களில் கிடைக்கக்கூடிய வழிவகையைச் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அனுமதிகளையும் ஒரே ஆணையின் மூலம் பெறுவதற்கு வசதியாக 'சிங்கிள் விண்டோ கிளியரன்ஸ்' என்று ஒரு உயர் மட்டக் குழுவை நியமிக்க இந்த அரசு பரிசீலித்து வருகிறது. அப்படிப்பட்ட குழு ஏற்படுமேயானால், அதன் பரிந்துரையின் பேரில், தனியார் துறையில் சுற்றுலா வசதிகளை மேலும் பெருக்குவதற்கு ஏதுவாக எல்லாத் தடைகளும் நீக்கப்படும் என்று நம்புகிறேன். எனவே இந்த மாதிரியான குழப்பங்கள் எல்லாம் விரைவில் நீக்கப்படும் என்கிற உறுதியை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதேபோல, இங்கே 51 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே ஒரு சிலவற்றை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் இரண்டு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். நாகையில் சுற்றுலாத் தகவல் மையம் ஏற்படுத்துவதன் அவசியம் பற்றியும் மற்றும் நாகூர், வேளாங்கண்ணி, சிக்கல் ஆகியவற்றை இணைத்து சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். நாகையில் ஏற்கெனவே 'யாத்திரிக நிவாஸ்' என்று அது 21 அறைகள், உணவகத்துடன் தங்கும் விடுதி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக நாகையில் சுற்றுலா தகவல் மையம் ஏற்படுத்த இயலவில்லை. மேலும் பொதுவாக எந்த ஒரு தலத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகின்ற காரணத்தால், இடத்தைத் தேர்வு செய்து, அதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதுதான் சுற்றுலாத் துறையினுடைய பணி என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அந்த வகையில் இந்த மாவட்டத்தில் பூம்புகார் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இரு தலங்களில் 1996-97-ல் நிதி ஒதுக்கீடு செய்து வசதிகளைச் செய்ய சுற்றுலாத் துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் 4 வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்திருக்கின்றார்கள். அதிலே ஒன்று நஷ்டத்தில் இயங்கும் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஹோட்டல்களை குத்தகை அடிப்படையில் தனியாருக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்ற வெட்டுத் தீர்மானம் ஆகும். அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 33 விடுதிகளைக் கொண்டு நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது. நஷ்டத்தில் இயங்கி வருகின்ற உணவு விடுதிகளை நல்ல முறையிலே நடத்தி இலாபத்தை ஈட்டிக் கொண்டு வர என் துறை முயற்சி மேற்கொண்டு வருகிறது. இருந்தாலும் பல காரணங்களினால் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குகிற விடுதிகளைத் தனியாரிடம் விட்டுவிடலாம் என்ற கருத்தை நாங்கள் பரிசீலித்து வருகிறோம். அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தைக் கேட்டு அதற்கான அறிவிப்பையும் அதி விரைவில் அறிவிப்பேன் என்று கூற விரும்புகிறேன்.

அதேபோன்று திரு. வேலாயுதன் அவர்கள் நான்கு வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு 7, 8 மற்றும் 14 நாட்கள் என்று சுற்றுலாத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளுக்குக் காண்பிக்கப்படுகிறது என்கிற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிப் பற்றாக்குறை காரணமாக எல்லா இடங்களிலும் தனித்தனியாக சுற்றுலா வசதிகளைச் செய்ய இயலாது. கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு குறைந்த வாடகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்படும் 'இளைஞர் விடுதி' பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதேபோன்று விவேகானந்தா கேந்திரத்திலும் குறைந்த வாடகையில் தங்கும் வசதியுள்ளது என்கிற விவரத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் இரண்டு வெட்டுத் தீர்மானங்களை அளித்திருக்கின்றார்கள். 1996-97-ஆம் ஆண்டில் வேலூரில் சுற்றுலா விடுதி கட்ட மத்திய அரசின் நிதியுதவி கோரப்பட்டிருக்கிறது. எனினும், முன்னுரிமைத் திட்டத்தில் இடம் பெறவில்லை. சுற்றுலா விடுதி கட்ட சரியான நிலம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி கட்ட அரசு புறம்போக்கு நிலத்தை ஒதுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவரை இந்தத் துறை கேட்டுக்கொண்டிருக்கிறது. நிலம் பெற்ற பிறகு, வேலூரில் சுற்றுலா விடுதி கட்ட முயற்சிக்கலாம். அதேபோன்று வேலூர் கோட்டையை அழகுபடுத்த ரூ. 26.60 இலட்சத்தை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. முதல் தவணையாக ரூ. 9 இலட்சத்தைத் தற்போது மத்திய அரசு வழங்கியுள்ளது. பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. தமிழகத்தில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை உலகளவில் தெரிவிக்கும் நோக்கோடும், அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் தமிழ்நாட்டில் ஈர்க்கும் நோக்கத்தோடும் வெளிநாடுகளில் நடைபெறும் பொருட்காட்சிகளிலும், கருத்தரங்குகளிலும் சுற்றுலாத் துறை கலந்துகொண்டு சுற்றுலா வரைபடங்கள் மற்றும் கையேடுகள் போன்றவற்றை வழங்குகின்றன.

*பிற்பகல் 1-35*

மேலும், அயல்நாடுகளில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் மூலம் சுற்றுலாக் கையேடுகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம், தமிழகத்தில் உள்ள சுற்றுலாப் பகுதிகளைப் பற்றி உலக அளவில் தகவல்கள் பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.



சுற்றுலாத் துறைக்கு அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கனிவோடு ஏற்று, இந்த நிதியாண்டிலேயே நிறைவேற்ற அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1997-98-ஆம் ஆண்டு சுற்றுலாத் துறையின் விளம்பரத்திற்கென ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா வளர்ச்சிக்கான பெரும் திட்டங்களைத் தயாரிப்பதற்காக ரூ. 15 இலட்சமும், சுற்றுலாத் தலைமை அலுவலகம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட அலுவலகங்களின் தகவல் தொடர்பை நவீனப்படுத்துவதற்கான முயற்சிக்காக, கணிப்பொறி நிறுவுவதற்காக ரூ. 20 இலட்சமும், தமிழகச் சுற்றுலாத் தலைமையகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைமையகம் மற்றும் பிற மாநில சுற்றுலா அலுவலகங்கள் வளாகத்தினை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் உள்ள இடத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி பெற்றுக் கட்டுவதற்கு அடையாள ஒதுக்கீடாக ரூ. 20 இலட்சமும், தஞ்சை அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தில் ஒலி-ஒளிக் காட்சி அமைப்பதற்கான திட்டத்திற்கு ரூ. 50 இலட்சமும், தற்போது இயங்கிவரும் மன்னர் திருமலை நாயக்கர் மகால் ஒலி-ஒளிக் காட்சியைப் புதுப்பிப்பதற்கான திட்டத்திற்கு ரூ. 75 இலட்சமும், மாமல்லபுரம் மற்றும் சென்னை புனித ஜார்ஜ் கோட்டை ஒலி-ஒளிக் காட்சி அமைப்பதற்கான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ரூ. 5 இலட்சமும், மண்டபம் மற்றும் குருசடைத் தீவின் இயற்கை அழகினைச் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கின்ற வகையில் கண்ணாடி அடித்தளப் படகுகள் வாங்குவதற்காக ரூ. 30 இலட்சமும், அதற்கு முதற்கட்டமாக ரூ. 2 இலட்சமும் வழங்கப்பட உள்ளது.

சுற்றுலாப் பேருந்துகள், மினி வேன்கள் வாங்குவதற்கு முதுமலை, முண்டன்துறை, மற்றும் களக்காடு வன விலங்குகள் சரணாலயத்தில் குடில்கள் மேம்படுத்துதல் போன்ற செலவினங்களுக்கு ரூ. 20 இலட்சமும், சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டிகள் பயிற்சிக்கென ரூ. 5 இலட்சமும், தனியார் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்கு அளிக்கப்படும் மூலதனச் செலவு 10 விழுக்காடு மானியத் தொகையை முழுமையாகச் செயல்படுத்தவும், கடந்த 4 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள மானிய பாக்கித் தொகையைத் தனியாருக்கு அளிக்க ஏதுவாக ரூ. 150 இலட்சமும் அளிக்கலாம் என்ற சுற்றுலாத் துறையின் கோரிக்கையை மாண்புமிகு

முதல்வர் அவர்கள் கனிவோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மேலும், பூம்புகார் கடலரிப்பைத் தடுக்க, தடுப்புச் சுவர் கட்டுவதற்காக, சென்னைத் துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர் மற்றும் பொறியியல் வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதையும், பூம்புகாரில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைப்பதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் அத்தனையையும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயல்படுகின்ற நான் உடனடியாக நிறைவேற்ற முடியாமல் இருந்தாலும்கூட, அந்தக் கருத்துக்களையேற்று, வருங்காலத்தில் நிறைவேற்றுவேன் என்ற உறுதியை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். என்னால் முடிந்த அளவு என் துறையின் பணிகளைப் பற்றிய விளக்கங்களை அளித்திருக்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலும் விரிவான திட்டங்கள் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு, இருக்கின்ற தகவல்களின் அடிப்படையில் பதிலளித்துள்ளேன். என் விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உணவு, பொது வினியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களுடைய உடல்நலக் குறைவின் காரணமாக இந்த மானியக் கோரிக்கையை அவைமுன் என்னை வைக்கச்செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணல் கலைஞர் அவர்களை வணங்கி, இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்கின்றேன்.



அரசு ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. நல்ல திட்டங்களைத் தீட்டுவதோடு தேங்கிவிடாமல், இயற்றியதோடு நின்றுவிடாமல் உரியவர்களின் இல்லங்களுக்கு, அவர்களின் இதயங்களுக்கு எடுத்துச் செல்கின்ற பணி மிகவும் முக்கியமானது. அப்படிப்பட்ட திட்டங்களை உச்சரிக்கின்ற உதடுகளாக, எடுத்துச் செல்கின்ற கரங்களாக, செயல்படுகின்ற தன்மைகளைப் பார்க்கின்ற விழிகளாக, ஏழை எளிய மக்கள் கருத்துக்களைக் கேட்கின்ற செவிகளாகச் செயல்படுகின்ற இந்தத் துறை மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவூட்டுதலோடு மிகச் சிறப்பாக, சிக்கனமாக ஆனால் கஞ்சத்தனமில்லாமல் செயல்பட்டுக் கொண்டிருப்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-40*

கடந்த காலத்திலே விளம்பரம் என்று சொன்னால், பத்திரிக்கைகளின் விற்பனை அடிப்படையில் விளம்பரம் தராமல், ஏனோ தானோ என்று நடத்தப்படுகின்ற பத்திரிகைகளுக்கு மிக முக்கியமான விளம்பரங்களைத் தந்தனர். அந்த விளம்பரங்கள் மூலமாக அரசின் செய்திகள் மக்களைச் சென்றடையாமல், அதேநேரத்தில் அப்படிப்பட்ட விளம்பரங்கள் தந்ததன் மூலம் அரசினுடைய பணம் மாதம் ஒன்றிற்கு 162 இலட்சம் ரூபாய் செலவு என்ற அளவிலே, கடந்த கால அரசு செய்து கொண்டிருந்தது. அதை மாற்றி நல்ல தரமான பத்திரிகைகளுக்கு அதிக அளவிலே விற்பனையாகின்ற பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள், செய்திகள் தருவதன் மூலம், இப்படி நல்ல பத்திரிகைகளுக்குத் தந்தும்கூட 142 இலட்ச ரூபாய்தான், இந்தத் துறையிலே விளம்பரத்திற்கு ஒரு மாதத்திற்குச் செலவு செய்யப்படுகிறது. அதிலே மாதம் 20 இலட்ச ரூபாய் செலவைக் குறைத்து, அதேநேரத்தில் சிறப்பாகவும் செயல்படுகிறது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் துறையின் சார்பாக, நினைவகங்களைப் பராமரிப்பது, தமிழரசு இதழை நடத்துவது, திரைப்படத் துறையை நடத்துவது, திரைப்படக் கல்லூரியை நடத்துவது போன்ற பல்வேறு பணிகளை நிறைவேற்ற வேண்டியிருந்தாலும், மற்றவர்களை மதிக்கத் தெரிந்த தலைவர், மற்றவர்களுடைய தியாகங்களைப் புரிந்துகொண்ட தலைவர் என்ற காரணத்தால், அண்ணாவின் உண்மையான தம்பி என்ற காரணத்தால், 4-வது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன்

அண்ணா சதுக்கத்தை 1½ கோடி ரூபாய் செலவிலே புதுப்பிப்பதற்கு உரிய பணத்தைத் தந்து, பொதுப் பணித்துறை மூலமாக அப்பணி நிறைவேற்றப்பட இருக்கிறது.

வான்புகழ் கொண்ட வள்ளுவருக்குக் கோட்டம் அமைத்தவர் கலைஞர் அவர்கள். அந்தக் கோட்டம் பல்லாண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது. அந்தக் கோட்டத்தைச் சிறப்பாக ஆக்கிடுவதற்கு ரூ. 85 இலட்சம் ஒதுக்கித் தந்து புதுப்பித்துச் சிறப்பிக்க இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அவர் சிறந்த இலக்கியவாதி என்ற காரணத்தால், பாரதியினுடைய இல்லத்தினை மேம்படுத்துவதற்காக 8 இலட்ச ரூபாய் செலவு செய்து, அதிலே 500 பேர் இருக்கை கொண்ட ஒரு அரங்கை அமைத்து இலக்கிய நிகழ்ச்சிகள் — வெறும் ரூ. 500 தந்தால்போதும், இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தலாம் என்று — நடைபெற ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தமிழரசு இதழ் ஏதோ முதலமைச்சருடைய புகழைப் பாடுவதற்கு மட்டுமே என்று இருந்ததை மாற்றி, நல்ல கருத்துப் பெட்டகமாக, அரசு செயல்படுத்தும் நல்ல பல திட்டங்கள் மக்களுக்குச் சென்றடைகிற வகையில் செயல்படச் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஏழை எளிய மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய, கிராமத்திலே இருக்கின்றவர்களும் புரிந்துகொள்ளக்கூடிய சுவர் விளம்பரப் பத்திரிகை ஒன்று, இந்தத் துறையின் சார்பாக வரும் புத்தாண்டு தினத்திலிருந்து ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பத்திரிகைகளை மதிக்கத் தெரிந்த முதல்வர் அவர்கள், 1989-ஆம் ஆண்டு பொறுப்பேற்றவுடனே முதலிலே சந்தித்தது பத்திரிக்கையாளர்களைத்தான். அவர்களை அழைத்து முதன்முதலில் பேசிய முதல்வர் அவர்கள், பத்திரிக்கையாளர்களுக்கு இருக்க இடம் ஒதுக்கித் தந்ததோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து இருபதாண்டுகள் பணியாற்றியவர்கள் இறந்துபோனால், அவர்கள் குடும்பத்திற்கு ரூ. 25,000 நிதி வழங்கப்படும் என்று சொல்லி இருக்கின்றார்கள். இந்தத் துறையில் பத்திரிக்கையாளர்கள் 200 பேருக்கு பஸ் பாஸ் வழங்கியதை மேலும் 100 பேருக்கு அதிகப்படுத்தி பஸ் பாஸ் வழங்கியிருக்கிறார்கள்.

பத்திரிக்கையாளர்களுக்கு இருக்க இடம், அவர்களுக்கு பஸ் பாஸ் போன்றவற்றை வழங்கியதோடு, மட்டுமல்லாமல், பொருட்காட்சியின் மூலமாக இந்த அரசு நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது.



கடந்த ஆட்சிக் காலத்தில், பொருட்காட்சி என்பது ஏதோ அவர்களுடைய விளம்பரச் சாதனமாக இருந்து வந்தது. அந்த நிலைமையை மாற்றி, பொருட்காட்சியை அரசின் திட்டங்களை மட்டுமே நிறைவேற்றக்கூடிய அளவிற்கு, மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு நடத்துகிறோம். ஒவ்வோரு ஆண்டும் செலவு 10 சதவிகிதம், 10 சதவிகிதம் அதிகப்படுத்தி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையை ஏற்று, இந்த ஆண்டு 10 சதவிகிதம் செலவைக் குறைத்து, இந்தத் துறை பொருட்காட்சியை நடத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் 4½ இலட்ச ரூபாய் நஷ்டம் என்றால், இன்றைக்கு 1½ இலட்ச ரூபாய் லாபம் தரக்கூடிய அளவிற்கு பொருட்காட்சி நடந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்ற போது ஒன்றைச் சொன்னார்கள். வேலூர் நகராட்சியில் பொருட்காட்சி நடத்துகிறார்கள்; அப்படி நடத்துகிறபோது நகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய 50 சதவிகிதம் கடந்த காலத்திலே தரப்படவில்லை; அது தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன், ஏற்கெனவே எங்கெங்கே பொருட்காட்சி நடைபெற்றதோ அங்கெல்லாம் நகராட்சிக்குச் சேர வேண்டிய 50 சதவிகித பணம் வழங்கப்பட்டுவிட்டது என்று.

அடுத்து திரைப்பட நகரம், இன்றைக்கு இயக்குநர் அமிர்தம் அவர்களை இயக்குநராகக் கொண்டு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்லூரியிலே மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் படிப்பதற்காக இருந்த விடுதி கட்டப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படவே இல்லை. 5, 6 ஆண்டு காலமாக அவர்கள் வெளியிலே தங்கி பட்டப் படிப்பை முடிப்பதற்குக்கூட வழி இல்லாமல் இருந்தவர்களை, ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், 6, 7 லட்ச ரூபாய் செலவிலே அந்த விடுதியைப் புதுப்பித்து, மாணவர்கள் அந்த விடுதியில் தங்கிப் படிக்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு அது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-45

அதுமட்டுமல்ல, அந்தத் துறையின் சார்பாக இருக்கின்ற கருவிகளைச் சிறப்பாக வைப்பதற்கு 17 லட்ச ரூபாய் இன்றைக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அங்கு இருக்கின்ற கருவிகளைப் பராமரிப்பதற்காக ஆண்டுக்கு 7 ஆயிரம் ரூபாய் மட்டுமே பணம் தந்து

இருக்கிறார்கள். ஆனால், முதல்வர் அவர்கள் இப்போது ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை அதற்கு பணம் தந்து, இன்றைக்கு அந்தக் கருவிகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன. இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 37 ஆண்டு காலம் ஆகிறது. ஆனால், இதுவரை, இந்த 37 ஆண்டு காலத்தில், ஒரு பட்டயப் படிப்பு என்பது 3 ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டும் என்றால், 3 ஆண்டுகளில் முடிப்பதே இல்லை, 5 ஆண்டுக்காலம் படிக்கின்ற ஒரு நிலைமை இருந்தது; இப்போது 3 ஆண்டுகளிலே படிப்பை முடித்து, அவர்கள் எல்லாம் பட்டயம் பெறுவதற்குரிய அந்தத் தகுதியை இந்தக் கல்லூரி பெற்று இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, 44-வது தேசியத் திரைப்பட விழா டில்லியிலே நடைபெற இருக்கிறது. அதிலே இதுவரை, 37 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, இந்தக் கல்லூரியில் படித்த மாணவர்களால் 6 பட்டயப் படங்கள் நமது சார்பாக திரையிடப்பட இருக்கின்றன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அந்தத் திரைப்படத் துறையிலே அந்தக் கல்லூரியிலே பாடத் திட்டங்களைப் புதுப்பிப்பதற்காக ஒரு குழுவை அமைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையோடு, அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே திரைப்படத் துறையிலே நன்கு பணியாற்றிய நன்கு தெரிந்தவர்களை உறுப்பினராகக் கொண்டு அங்கு இருக்கின்ற பாடத்தைப் புதுமையாக இன்றைக்கு இயற்றுவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல நல்ல படங்களை எடுப்பவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, திரைப்படங்களை 25 காப்பிகளுக்கு மிகாமல், 25 காப்பிகளுக்கு அதிகப்படாமல் எடுக்கின்ற அந்த திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு இதுவரை 3 லட்ச ரூபாய் வழங்கியதை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனிவரும் காலங்களில் 5 லட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்க இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, நல்ல தரமான படங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வருங்கால இளைஞர் சமுதாயத்தை நல்ல முறையில் வளர்ப்பதற்கு இந்தத் துறை பாடுபட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நல்ல படங்களை எடுக்கின்றவர்களுக்கு 4 வாரம் கேளிக்கை வரியிலிருந்து



அவர்களுக்கு விலக்கு அளிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, படம் எடுக்கின்றவர்களுக்கு வாடகையைக் குறைத்து, 5000 என்று இருந்ததை 1000 ஆகவும், 1000 என்று இருந்ததை 500 ஆகவும், 2500 என்று இருந்ததை 500 ஆகவும் குறைத்து, அவர்களுக்கு படம் எடுக்கின்ற செலவைக் குறைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே, அந்த திரைப்படத் துறை 15, 16 கோடி ரூபாய் கடனிலே இருக்கிறது. ஆனால், அதை நிர்வகிக்கக்கூடிய செலவு ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டு இருக்கிறது. அங்கே சிறுவர் பூங்கா ஒன்று இருக்கிறது. அந்தச் சிறுவர் பூங்காவை நிர்வகிக்கக்கூடிய செலவு — அதில் மாதம் 50 ஆயிரம் ரூபாய் வருகிறது; அதிலிருந்து வருகிற வருவாய் அதற்கே பற்றவில்லை; அதற்காக, அதனுடைய வருவாயை அதிகப்படுத்துவதற்காகவும், செலவைக் குறைப்பதற்காகவும், அந்தச் சிறுவர் பூங்காவைத் தனியாருக்கு டெண்டர் மூலமாக இன்றைக்கு விடுவதற்காக முடிவு செய்யப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சிறுவர் பூங்காவுக்காக வாங்கப்பட்ட ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட பொருட்கள் பராமரிக்கப்படாமலே இருந்தன. இன்றைக்கு அவை நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு இருக்கின்றன. இதனால் மட்டுமே, இப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலமாக மட்டுமே, இந்தத் துறைக்கு 28 லட்ச ரூபாய்க்கு மேல் ஒரு மாதத்திற்குச் செலவு குறைந்து இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்குப் புதிய மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படத் தொடங்கி இருக்கின்றன. இராஜாஜி மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், பன்னீர்செல்வம் மாவட்டம், வீரன் அழகுமுத்து மாவட்டம் போன்ற புதிய மாவட்டங்களுக்கு பி.ஆர்.ஓ. பணியிடங்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அத்தனை பொருட்களும், ஜீப், கேமரா போன்ற பொருட்களும் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே 53 உறுப்பினர்களுக்கு மேல் வெட்டுத் தீர்மானங்கள் தந்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, ஏ.பி.ஆர்.ஓ. நியமிக்கப்படும்போது, நேரடியாக வேலை வாய்ப்புத் துறை மூலம் நியமிக்கப்பட வேண்டும் என்று இங்கே

சொன்னார்கள். இந்தத் துறையின் சார்பாக, இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்கு, ஏ.பி.ஆர்.ஓஸ். 50 சதவீதம் பேரை பணி உயர்வு என்ற அளவிலேயும், மீதி 50 சதவீதம் பேரை நேரடியாக நியமிக்கவும் இந்தத் துறை நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இங்கே உரையாற்றிய திரு. இராமன் அவர்கள் திருச்சியில் ரத்தினத்தேவர் அவர்களின் சிலையை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த ரத்தினத்தேவர் சிலை வைப்பதற்கு அங்கே இருக்கிறவர்கள் முயற்சி செய்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தேதி கேட்டிருக்கிறார்கள். அவர்கள் திருச்சிக்கு வரும்போது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அப்படித்தான் ஒவ்வொரு உறுப்பினரும், அந்தந்தப் பகுதியிலே, இந்த நாட்டுக்காகப் பணியாற்றிய, தமிழ் மொழிக்காகப் பணியாற்றிய தலைவர்களையெல்லாம் உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்தந்தப் பகுதிகளில் சிலைகள் வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-50

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்களும், பெங்களூரிலிருந்து தமிழ்நாட்டுக்கு வருகிறபோது, எல்லையில் தமிழ்நாடு என்ற வகையில் ஒரு சிறந்த வரவேற்பு வளைவு கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். இப்படி இதிலே 11 உறுப்பினர்கள் பேசியிருந்தாலும், குறிப்பிட்ட நான்கைந்து உறுப்பினர்கள்தான் செய்தித்துறை பற்றிப் பேசினார்கள். அப்படிப்பட்ட உங்களுடைய கருத்துக்களையெல்லாம் நாங்கள் இந்தத் துறைக்கு மேலும் வலிவூட்டுகின்ற வகையில் எடுத்துக்கொண்டு சிறப்பாக வருங்காலத்தில் செயல்படுவோம் என்று சொல்லி, வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கின்ற உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கோரிய தொகையை இந்தத் துறைக்கு அளிக்க நீங்கள் எல்லாம் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் நடந்த பொருட்காட்சிக்கு வந்த வருவாயில் 50 சதவீதப் பங்குத்தொகை நகராட்சிக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது என்ற பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்காக அன்றைய ஆட்சியில் அரசு விழாவில் நான் பேசியபோது, அங்கே அமைச்சர்கள் முன்னிலையிலேயே என்னை அடிக்க வந்தார்கள். அதற்குப் பிறகு போராட்டம் எல்லாம் நடந்தது. சாலை மறியல் எல்லாம் செய்திருக்கிறோம். இன்னும் எங்களுக்கு அந்தப் பணம் வந்து சேரவில்லை. காரணம், அது ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்ட் இடத்தில் அந்தப் பொருட்காட்சி நடந்தது என்ற ஒரு காரணத்தைக் காட்டினார்கள். எப்போதுமே அந்தக் கோட்டை மைதானத்தில்தான் பொருட்காட்சிகள் நடக்கும். அந்தப் பொருட்காட்சி அப்படி அந்த தொல் பொருள் ஆராய்ச்சித் துறைக்குச் சொந்தமான இடத்தில் நடந்தது என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பணம் வந்து சேரவில்லை என்பதோடு முடித்துக் கொள்ளுங்கள். அதை விடுத்து, திரும்பவும் ஒரு உரையா? பணம் கொடுத்தாகிவிட்டது என்று அமைச்சர் சொல்கிறார். நீங்கள் வரவில்லை என்கிறீர்கள். அதற்கு நீங்கள் விளக்கம் கேட்கிறீர்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்குத் தரப்பட்ட குறிப்பிலே, கடந்த ஆட்சியிலே பொருட்காட்சி நடைபெற்றதால் நகராட்சிக்குத் தரவேண்டிய 50 சதவீதப் பங்குத்தொகை தரப்படாமல் இருந்தது, நாம் வந்தபின் தந்திருக்கிறோம் என்ற குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே வேலூரில் நடைபெற்ற பொருட்காட்சிக்காக பங்குத்தொகையை வேலூர் நகராட்சிக்குத் தந்துவிட்டது அரசு, என்று சொல்லியிருந்தேன். ஆனால் வேலூரில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் நடத்தாமல், மத்திய அரசுக்குச் சொந்தமான இடத்தில் அது நடைபெற்ற காரணத்தால், அவர்களுக்கு அந்தப் பணம் தரத் தேவையில்லை, அதனால் இதுவரை தரவில்லை என்று இப்போது தெரிவித்திருக்கிறார்கள். அதை அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: என்ன முக்கியமான விஷயம்? 15 நிமிடம் 20 நிமிடம் பேசியுமா முக்கியமான விஷயம் இருக்கிறது? (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டே இப்படி எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு) மைக் இல்லாமல் பேசக் கூடியவர்தானே, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குச் சொந்தமான இடத்திலே அது நடந்தாலும் கூட, அந்தப் பொருட்காட்சிக்குத் தண்ணீர் வழங்குவது, சுகாதாரக் கேடுகளை அகற்றுவது, பெருக்குவது போன்ற எல்லாப் பணிகளையும் வேலூர் நகராட்சிதான் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இடம் மட்டும் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தாலேயே எங்களைப் பழிவாங்கி விடாதீர்கள். எங்களுக்குக் கொடுக்கவேண்டிய அந்தப் பணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு தயவுசெய்து உடனடியாகப் பரிவோடு வழங்கவேண்டும். எங்களுடைய நகராட்சி மிகவும் பின்தங்கியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த 9 லட்சம் ரூபாயான எங்கள் பங்கைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஞானசேகரன் கேட்டால், அதிலிருந்துதானா கொடுக்க வேண்டும்? எப்படியாவது தருவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் வேலை செய்கிற 83 தொழிலாளர்கள் கடந்த 1-2-1997-லிருந்து முன்னறிவிப்பின்றி வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு வந்தபிறகு, அந்த இடத்தில் புதிதாக ஆட்களை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். ஆகவே, அந்த 83 பேருக்கு மீண்டும் வேலை கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பின்பு முதல்வர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் கூறும்போது நடிகர் சங்கம் கடனில் இருக்கிறது. அந்தக் கடனை அடைப்பதற்கு அரசு முன்வரும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த நடிகர் சங்கத்தின் கடனையும் அடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நடிகர் சங்க விழா நடக்கின்றபொழுது, நடிகர் சங்கத்திற்குக் கடன் இருப்பதாகவும்,



25 லட்சம் ரூபாய் பெற்றிருந்த கடன், வட்டி, வட்டிக்கு வட்டி என்ற அளவில் பெருகிக் கொண்டிருப்பதாகவும், அதைத் தீர்க்க வேண்டுமென்றும் என்னிடத்திலே கேட்டார்கள். நான் உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே, பின்னால் திரும்பி அவர்களைப் பார்த்து, எவ்வளவு ரூபாய் கடன் இருக்கிறது என்று கேட்டேன். ஒரு கோடி ரூபாய் என்று சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய் என்பது, வட்டி, வட்டிக்கு வட்டி ஆகி, ஒரு கோடி ரூபாயாக ஆகியிருக்கிறது என்று நடிகர் சங்க நிர்வாகிகள் என்னிடத்திலே சொன்னார்கள். நான் உடனே சொன்னேன், ஒரு கோடி என்றால் அதை அரசின் சார்பிலேயே தீர்த்து வைத்து, உங்கள் நடிகர் சங்கத்திற்கு ஒரு சுதந்திரமான நிலையை உருவாக்கித் தரக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொன்னேன். அதற்குப் பிறகு வங்கியிலே விசாரிக்கும்போது, நடிகர் சங்க நிர்வாகிகளிடத்திலே பேசும்போது, 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் கடன் இருப்பதாகச் சொல்லப்பட்டது.

பிற்பகல் 1-55

அந்த 2 கோடியே 35 இலட்ச ரூபாயும் அரசின் சார்பிலேயே தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டபோது நான், 'உங்கள் முன்னிலையிலே உறுதி அளித்தது ஒரு கோடி ரூபாய்தான். எனவே அந்த ஒரு கோடி ரூபாய் வேண்டுமானால் அரசின் சார்பில் கடனாக அல்ல, உங்களுக்கு மானியமாகவே தரத் தயாராக இருக்கிறோம். மீதமுள்ள ஒரு கோடியே 35 இலட்சத்தில் வட்டி ஓரளவு கழிக்கப்பட்டு மிச்சம் ஒரு கோடி ரூபாய்க்கு நடிகர் சங்கத்தினுடைய பத்திரங்கள் அரசாங்கத்திலே இருக்கட்டும். பத்திரங்கள் அரசாங்கத்திலே இருக்கிற அந்தக் காலகட்டத்தில் அரசு நிகழ்ச்சிகளுக்கு நடிகர் சங்கத்திலே வருஷத்திலே குறிப்பிட்ட சில நாட்கள், எல்லா நாட்களிலும் அல்ல, குறிப்பிட்ட சில நாட்கள் அரசு நிகழ்ச்சிகளுக்கு நடிகர் சங்கத்திலே இடம் தரவேண்டும். மீதமுள்ள நாட்கள் எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் அந்த ஒரு கோடி ரூபாயை மீதமுள்ள ஒரு கோடியை அரசுக்கு அடைத்துவிட்டு—இரண்டு கோடியிலே ஒரு கோடி மானியம், இன்னொரு கோடி கடன்—அதை நீங்கள் மெல்லமெல்ல தவணை முறையில் அடைத்துவிட்டால் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்' என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு அந்தச் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை. இன்றைக்கு நடிகர் சங்கத்தினுடைய பொதுக் குழுவிலே அதை வைத்து, அதைத் தீர்மானமாக நிறைவேற்றி

ஏற்றுக்கொள்வார்களேயானால் அந்தக் கடன் அந்த வகையிலே அடைக்கப்படும்.

**திரு. மு. அப்பாவு:** தலைவர் அவர்களே....

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே 2 பேர் என்று சொல்லி 3 பேர் பேசிவிட்டார்கள். இப்போது விளக்கம் கேட்பது மூன்று பேர். சீக்கிரம் விளக்கம் கேட்டு முடியுங்கள் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிற்காக உழைத்த தலைவர்களுடைய பெயரை நிலைநாட்டுவதற்காக அண்ணா அவர்களுக்கும், எம்.ஜி.ஆர். போன்றவர்களுக்கு எல்லாம் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, தென் கோடியிலே கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராஜருடைய மணி மண்டபம் ஆரம்பிக்கப்பட்டு, அங்கே காந்தி மண்டபத்திற்கு இடது புறத்தில், மிக மோசமான நிலையில் இருக்கின்றது. இந்த ஆண்டே, பெருந்தலைவர் காமராஜரை கௌரவிக்கின்ற இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள், பெருந்தலைவர் காமராஜருடைய மணி மண்டபத்தை நல்ல முறையிலே கட்டித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லித்தான் காமராஜருடைய மகத்துவத்தையும், மாண்பினையும் நாங்கள் உணர்ந்து அதற்காக மண்டபங்கள் எழும்ப வேண்டும் என்றில்லை. ஏற்கெனவே காமராஜர் அவர்களுடைய பெயரால் மாவட்டம், சாலைகள், பல்கலைக்கழகம் அத்தனையும் இருக்கின்றன. கன்னியாகுமரி கடற்கரையில் மண்டபங்கள் கட்டுவதை அன்னை இந்திராகாந்தி அவர்களே விரும்பவில்லை என்பதும், அது அந்தக் கடற்கரைத் தோற்றத்தை, பொலிவைக் கெடுக்கிறது என்பதும் அவர்களாலேயே பல நேரங்களில் சொல்லப்பட்ட கருத்தாகும். அவர்கள் இப்போது இல்லை. அவர்கள் இல்லாத நேரத்திலே சொல்கிறார் என்று யாரும் கேட்கக் கூடும். அத்தகைய கருத்தை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் கொண்டிருந்தார்கள். கன்னியாகுமரியிலே காமராஜருடைய பெயரால் ஒரு மண்டபம் கட்டத் தயாராக இருக்கிறோம். ஆனால் கடற்கரை ஓரத்திலே மண்டபங்களை எழுப்பி — ஏற்கெனவே காந்தி மண்டபம் இருப்பதுகூட. சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. அதுபற்றிப் பொறியாளர்களைக் கேட்டால் சொல்வார்கள். இப்போது விவேகானந்தருடைய மண்டபமும், நாம் அரசின் சார்பிலே அங்கே நிறுவ இருக்கின்ற திருவள்ளுவர் சிலை இவைகளுக்கு இடையிலே காமராஜருடைய மண்டபத்தையும் கடற்கரை ஓரத்திலே கட்டாமல் கன்னியாகுமரியிலே கட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்,

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய சுதந்திரத்திற்காகச் சிறந்த தீரராகச் செயல்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் சென்னை தி. நகரிலே இருக்கின்ற ஜீவா பூங்காவிலே கடந்த காலத்திலே சுதந்திர வேட்கையை உருவாக்குவதற்காகப் பேசியதாக வரலாறு இருக்கிறது. எனவே, இந்த அரசு சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கின்றபோது, அவர்களுக்கு அங்கே சிலை எழுப்புவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, நேதாஜியினுடைய நூற்றாண்டு விழாவில் நேதாஜியின் சிலை வைக்கப்படும் என்று இந்த அவையிலே என்னால் அறிவிக்கப்பட்டு சிலை தயாராகிக் கொண்டிருக்கிறது. அந்தச் சிலையை எங்கே வைப்பது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் கூறுவதுபோல தி.நகரில் அல்ல, 'தியாகராய நகரில்'. ஏனென்றால் தியாகராயருடைய பெயர் வரக்கூடாது என்பதற்காகவே தி. நகர் என்று ஆக்கிவிட்டார்கள். கேட்டால் பெயர் நீளமாக இருக்கிறது. ஆகவே தி. நகர் என்று ஆக்கிவிட்டோம் என்று சொன்னார்கள். ட்ரிபிளிகேன் - திருவல்லிக்கேணி என்பது கூட நீளமாகத்தான் இருக்கிறது. ஆனால் யாரும் அதை டி.கேன் என்று சொல்வதில்லை. வேண்டுமென்றே தியாகராயர் பெயர் வரக்கூடாது என்பதற்காகவே டி.நகர் என்று ஆக்கிவிட்டார்கள். இனிமேலும் தலைவர்களை மதிக்கிற செல்லக்குமார் அவர்கள் டி.நகர் என்று சொல்லாமல் தியாகராயர் நகர் என்றே சொல்ல வேண்டும்.

பிற்பகல் 2-00

அவர் சொல்கிற பகுதி நேதாஜி அவர்கள் உரையாற்றிய பகுதியாக அது இருக்குமானால் ஆராய்ந்து நேதாஜி சிலை வைப்பதற்கு ஏற்ற

இடமாக இருந்தால் அங்கே வைக்கப்படும். எனினும் எப்படி இருந்தாலும் இந்த நூற்றாண்டு விழாவில் நேதாஜி அவர்களுடைய சிலை வைப்பதற்கு ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. சிலை வடிவமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலை எப்படி இருக்க வேண்டுமென்று கல்கத்தாவில் உள்ள ஜோதி பாசு அவர்களிடத்திலேகூட தொடர்பு கொண்டு, அவர் மூலம்கூட படத்தைப் பெற்று, அந்தச் சிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

**(அ) கோரிக்கை எண் 46-செய்தி, திரைப்படத்தொழில் நுட்பவியல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண் 46 செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு.கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு.ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய 46-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.13,09,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு,



பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 50 சுற்றுலா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50, சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற திரு. தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி** : இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி. கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி** : இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுலா பற்றிய 50-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,12,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

135. ஓவியர்கள், பாடகர்கள் மற்றும் எழுத்தாளர்கள் ஆகியோர் பதிப்புரிமைகளின் விற்பனைக்காக செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-10-1996-ஆம் நாளிட்ட 375-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

136. திருச்சிராப்பள்ளி, திருவாளர்கள் இந்து மிஷன் மருத்துவமனையினரால் 12-11-1996 முதல் வாங்கப்படும் மருந்துகள் மற்றும் கருவிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12-11-1996-ஆம் நாளிட்ட 410-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

137. 1996-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 1) (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

138. 1996-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண். 3) (சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

139. தமிழ்நாடு அரசின் 1995-96-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

140. தமிழ்நாடு அரசின் 1995-96-ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

108. மானியக் கோரிக்கை எண் 46-செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

109. மானியக் கோரிக்கை எண். 50 - சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98-(தமிழ், ஆங்கிலம்)

110. 1996-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகள் ஒரு கண்ணோட்டம். (தமிழ்)

111. மனுக்கள் குழுவின் ஒன்றாவது அறிக்கை, 1996-97.

112. மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1996-97.

113. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1996-97.

114. மனுக்கள் குழுவின் நான்காவது அறிக்கை, 1196-97.



## இணைப்பு - 1

(73-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**மானியக் கோரிக்கை எண்-46**

**செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்**

## கொள்கை விளக்கக் குறிப்பு

**1997-98**

### முன்னுரை

அரசின் செவிகளாகவும், கண்களாகவும், செயல்படுகிறது செய்தித்துறை. அரசின் ஒவ்வொரு செயல்பாடும் மக்களின் மனதில் பதியம் போடப்படுவதற்கு அச்சாணியாக விளங்கி, நலத்திட்டங்களையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும், அரும்பணிகளையும் அனைவரும் அறியும்படி செய்கிறது.

தகவல் தொடர்புத் துறையில் மகத்தான முன்னேற்றம் நிகழ்ந்து மனிதவள மேம்பாட்டையே நிர்ணயிக்கும் வண்ணம் வளர்ச்சியடைந்திருக்கிறது. திட்டங்கள் தீட்டப்படுவதோடு நின்றுவிடாமல், மக்களுடைய இல்லங்களுக்கும், அவர் தம் இதயங்களுக்கும் எடுத்துச் செல்லப்படும்போதுதான், அவற்றின் பயன் முழுமையடைகின்றன.

அரசின் அறிவிப்புகளை அன்றாடம் பொதுத்தொடர்பு சாதனங்கள் வாயிலாக மக்கள் மத்தியில் வைத்தல்;

செய்தி மலர்களைத் திரையிட்டு ஒலி, ஒளி ஊடகத்தின் ஊடாக அவர் தம் நெஞ்சங்களில் ஊடுருவச் செய்தல்;

பொருட்காட்சி அரங்குகள் மூலம் அவற்றை விழிகள் மூலமாய் அவர்களை உணர வைத்தல்;

வளர்ச்சிப் பணிகளுக்கான பல்வேறு விளம்பரங்களை வெளியிட்டு ஆக்கப்பணிகளுக்கு வழி வகுத்தல்;

[1997 ஏப்ரல் 4

அச்சு வடிவத்தில் அவற்றை அரசின் பருவ இதழ்களாய பவனி வரச் செய்தல்:

என்று கோட்டையில் நடப்பவற்றை குக்கிராமங்களில் எதிரொலிக்கச் செய்கிற மிகுந்த பொறுப்புணர்வு, செய்தித்துறைக்கு இருக்கின்றது.

அரசு ஏழை எளிய மக்களுக்காகப் பல உதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சலுகைகளையும், சமூக நல உதவிகளையும் உரியவர்கள் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

திரைத்துறையையும், நினைவிடங்களையும், வரலாறு படைத்த வான்புகழ் தலைவர்கள் சிலைகளையும், ஒருங்கிணைத்து உள்ளடக்கியதாய் தமிழகத்துப் பண்பாட்டைப் பாதுகாக்கும் அரிய முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைகளின்படி நிறைவேற்றி வருகிற துறையாகத் தன்னைத் தொடர்ந்து இத்துறை புதுப்பித்துக்கொள்கிறது.



1997 ஏப்ரல் 4]

**அத்தியாயம் - 1**

## செய்தி மக்கள் தொடர்புத் துறை

செய்திமக்கள் தொடர்புத்துறை இயக்ககம் தலைமைச் செயலகத்தில் இயக்குநரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. இயக்குநர், அலுவலால் இணைச்செயலாளராகவும் பணியாற்றி வருகிறார். இவரின் கீழ் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், செய்திமக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

### மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் இத்துறையின் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் செயல்படுத்துகிறவர்களாக இருக்கிறார்கள் அவர்கள் அரசின் திட்டங்கள், கொள்கைகள், சாதனைகள் அனைத்து மக்களுக்கும் சென்று சேரும் வகையிலும் மத்திய மாநில அரசுகளின் திட்டங்களை விளம்பரப் படுத்தும் வகையிலும் பணியாற்றுகிறார்கள்.

அரசின் நோக்கம், செயல்பாடுகள், திட்டங்கள் போன்றவற்றை மக்களுக்கு உடனுக்குடன் தெரிவித்து மக்களிடையே விழிப்புணர்வையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்தி, அரசின் திட்டங்களின் பலன்கள் மக்களிடையே சென்றடைவதற்கு செய்தி வெளியீடுகள், திரைப்படப் பிரிவின் திரைப்படங்கள், பொருட்காட்சிகள், வீடியோ சாதனங்கள் போன்ற பல்வேறு மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் அரிய பணி ஆற்றி வருகிறார்கள்.

### புதிய மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

இந்த அரசு பதவி ஏற்ற பிறகு, புதிதாக உருவாக்கப்பட்ட இராஜாஜி மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், வைகை வீரன் அழகு முத்து மாவட்டம், ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் ஆகிய நான்கு புதிய மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஒரு உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), ஒரு உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்), ஒரு கணக்கர், ஒரு இளநிலை எழுத்தர் மற்றும் தட்டச்சர், இரண்டு ஓட்டுநர்கள், ஒரு பதிவுரு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

[1997 ஏப்ரல் 4

## எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

அரசின் வளர்ச்சிப் பணிகளைப் புரிந்துகொண்டு சமூக நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மக்கள் தீவிரப் பங்கு கொள்வதுதான் அத்திட்டங்கள் வெற்றி பெற ஏதுவாகும். திட்டங்கள் துவக்கப்பட்ட காலத்திலிருந்து இந்தக் கருத்தானது முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. திட்டங்களின் செயல்முறை விவரங்களை மக்களுக்குப் பரவலாகக் கொண்டு செல்வதுதான், செய்தி மற்றும் விளம்பரத்துறையின் மகத்தான பணியாகும்.

வளர்ச்சிப் பணிக்கு, தகவல் தொடர்பு ஒரு முக்கிய சாதனம் என்றும், ஒலி மற்றும் ஒளி சாதனங்கள் மூலம் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை அதிகமாகப் புகுத்த வேண்டும் என்றும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இவைகள் அன்னியில், வரலாற்று நிகழ்ச்சிகளையும், பெரிய தலைவர்களின் தியாகங்களையும், மக்களுக்கு, குறிப்பாக இளைய தலைமுறையினருக்குத் தெரியப்படுத்தவும் மற்றும் அறிவுறுத்தவும், அவர்களின் பிறந்தநாள் விழாக்களும் மற்றும் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

## ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டம்

நமது நாடு சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகளாகும் இந்த ஆண்டில், ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டம் துவங்கப்படவிருக்கிறது. நமது மாநிலம் சமூகப் பொருளாதார வளர்ச்சியினை சரியான பாதையில் வகுக்க இது ஒரு பொருத்தமான நேரமாகும். மக்கள் நலத் திட்டத்தினை முக்கிய நோக்கமாகக் கொள்வது ஒரு புதிய வரலாறாகும். அத்தகைய திட்டங்க்ளில் அரசு மட்டுமல்லாது அதிகமான பொது மக்களும், குறிப்பாக ஏழை மக்களும் முழுமையாகப் பங்கேற்க முடியும்.

சென்னையில் உள்ள மாநில திட்டக் குழுவின் வழிகாட்டுதல்படி, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை உருவாக்குவதற்கு செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலரின் தலைமையின்கீழ் ஒரு அலுவல் குழுவும் மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநரின் தலைமையின்கீழ் ஒரு துணைக் குழுவும், செய்தி மற்றும் மக்கள் தொடர்பின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டுள்ளது. அச்சு மற்றும் மின்னணு தகவல் சாதனம் மற்றும் திரைப்படத் துறையில் உள்ள வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கு தங்களின் மேலான ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.



1997 ஏப்ரல் 4]

### அத்தியாயம்-2

## பொருட்காட்சி

"பல புத்தகங்களைப் படிப்பதைவிட, ஒரு பொருட்காட்சியால் விளையும் பயன் மகத்தானதாக இருக்கும்" என்றார் அறிஞர் அண்ணா. அந்த வகையில், நம் தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும் நலத்திட்டங்களையும் அறிவிப்புகளையும், ஆக்கப்பணிகளையும் விளக்கும் வண்ணம் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் மாநிலத்தின் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அரசுத்துறைகளும், அரசுச் சார்பு நிறுவனங்களும் அரங்குகளை அமைக்கும் இந்தப் பொருட்காட்சிகள் மக்களுக்கு மகிழ்வூட்டுவது மட்டுமல்லாமல், அரசுத் திட்டங்களையும், ஆக்கப்பணிகளையும் அறியச் செய்யவும் பயன்படுகின்றன.

இத்துறை 1978-ஆம் ஆண்டு முதல், இதுவரை 91 பொருட்காட்சிகள் நடத்தியுள்ளது. இப்பொருட்காட்சிகள் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுத் திகழ்வதுடன் இதுவரை ரூ.5.77 கோடி நிகர லாபத்தை அரசுக்கு ஈட்டித் தந்துள்ளன.

மதுரை, சேலம், கோவை ஆகிய மாநகராட்சிகளில் அரசுப் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. வேலூர், திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இரண்டாண்டுகளுக்கொரு முறை அரசுப் பொருட்காட்சிகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமல்லாது, அரிய பல செய்திகளைத் தெரிவிக்கும் அற்புதச் சாதனமாகவும் திகழவேண்டும். இந்நோக்குடன் பொருட்காட்சிகளில் கட்-அவுட்களும், வெறும் புகைப்படங்களும் மட்டுமே முக்கியத்துவம் பெற்றதாக இல்லாமல், அரசுத் துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விளக்கங்களை நவீன அமைப்பிலான சாதனங்கள் வாயிலாக எடுத்துச் சொல்லும் வகையில் அரசுத்துறை அரங்குகளை அமைக்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகரில் நடைபெறும் இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்கிறது. புதுடில்லியில் நடத்தப்படும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப்

பொருட்காட்சியிலும் கலந்துகொண்டு தமிழ்நாடு அரங்கில் பல்வேறு அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கு கொள்ளும் பொருட்காட்சியினை ஆண்டுதோறும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை சிறப்புற நடத்துகிறது. தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் டெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணிவிழாவில் இத்துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள், கிராமியக் கலை நிகழ்ச்சிகள், விழா நிகழ்ச்சிக்கான நேர்முக வர்ணனை ஏற்பாடு போன்ற முக்கிய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

1994-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த ஆண்டு புதுடெல்லியில், நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பில் தமிழ்நாடு அரசு சார்பில் அலங்கார ஊர்தி அனுப்பும்பொருட்டு தேர்வு செய்யப்பட்டு, மாமல்லபுரத்தில் உள்ள ஐவர் ரதம் போன்ற அமைப்பை அலங்கார ஊர்தியாக அமைத்து அணிவகுப்பில் பங்கேற்றது.



## அத்தியாயம் - 3

## அரசு விழாக்கள்

இந்த நாட்டின் விடுதலைக்கும் விழிப்புணர்வுக்கும் அருந்தொண்டாற்றிய பெருந்தலைவர்கள் பலராவர். அவர்களில், தமிழ் மண்ணில் பிறந்த தகைமையாளர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையிலும், அத்தகைய தலைவர்களின் நாட்டுப்பற்றையும், சமுதாய உணர்வையும், அருந்தொண்டினையும், நாட்டு மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையிலும், பெருந்தலைவர்களின் பிறந்தநாள் போன்ற நிகழ்ச்சிகள் அரசு விழாக்களாக - மாநில அளவிலான விழாக்களாகவும், மாவட்ட அளவிலான விழாக்களாகவும் கொண்டாடப்படுகின்றன.

அவ்வாறு கடந்த ஆண்டில் *(1996-97)* கீழ்க்காணும் விழாக்கள் மாநில அளவிலான விழாக்களாகக் கொண்டாடப்பட்டுள்ளன:

1. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா
2. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா
3. மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா
4. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா

வரும் ஆண்டிலும் *(1997-98)* இத்தகைய முக்கிய தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடப்படும். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும்.

மேலும் *15-8-1997* அன்று நமது இந்திய நாடு விடுதலை பெற்று *50* ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, தமிழ்நாட்டில் விடுதலை நாள் பொன்விழா நிகழ்ச்சிகள் ஓராண்டு காலத்துக்கு *(15-8-1997-15-8-1998)* மிகச் சிறப்பாக நடத்தப்படும். விழாவினை சிறப்புடன் நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் விழாக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – 4

## நினைவகங்கள்

நலிவுற்றுக் கிடந்த நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள், அரசியல் தலைவர்கள், கலை, மொழி, இனம் ஆகியவற்றுக்காக உழைத்த தியாகிகளை நாட்டு மக்களும், அரசும் என்றென்றும் நினைவுகூரும் வகையில், தமிழ்நாடு அரசு அவர்களுக்கு நினைவகங்கள் மற்றும் திருவுருவச் சிலைகளை நிறுவி வருகின்றது. இதன் அடிப்படையில் இதுவரையில், தமிழ்நாடு அரசால் 26 நினைவகங்கள் கட்டப்பட்டு, அவைகள் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சிறப்புற நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதில் 16 நினைவகங்கள் மாவட்ட அளவிலும் மற்றவை சென்னை மாநகரத்திலும் அமைக்கப் பெற்றுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

1. வள்ளுவர் கோட்டம், சென்னை.
2. காந்தி மண்டபம், சென்னை.
3. காந்தி மண்டபம், கன்னியாகுமரி.
4. பெரியார் நினைவகம், வைக்கம், கேரளா.
5. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு.
6. அண்ணா சதுக்கம், சென்னை.
7. அண்ணா நினைவகம், காஞ்சிபுரம்
8. இராஜாஜி நினைவகம், சென்னை.
9. இராஜாஜி மண்டபம், சென்னை.
10. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி.
11. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம், சென்னை.
12. காமராசர் இல்லம், சென்னை.
13. காமராசர் இல்லம், விருதுநகர்.
14. காமராசர் நினைவகம், சென்னை.
15. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், சென்னை.
16. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம்.
17. பாரதி இல்லம், எட்டயபுரம்.



18. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம்.
19. வ.வே.சுப்பிரமணியம் நினைவு இல்லம் திருச்சிராப்பள்ளி.
20. கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி.
21. மருது சகோதரர்கள் நினைவகம், திருப்பத்தூர்.
22. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர்.
23. செய்குத்தம்பி பாவலர் நினைவகம், நாகர்கோவில்.
24. வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி.
25. இலங்கையின் கடைசித் தமிழ மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், வேலூர்.
26. அண்ணா அருங்காட்சியகம், அண்ணா சதுக்கம், சென்னை.

### திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி

உலகப் பொதுமறையாம் திருக்குறள் தந்த வான் புகழ் வள்ளுவர் பெருந்தகைக்கு கன்னியாகுமரியில் - விவேகானந்தர் பாறையை அடுத்துள்ள சிறிய பாறை மீது 133 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவ முடிவெடுக்கப்பட்டது. இப்பணி 27-1-1991-ல் தொடங்கப்பட்டது. இப்பணிக்காக இதுவரை 2.315 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. சிலையின் ஆதார பீடம், சுற்றுச் சுவர், சிலையின் உட்பகுதி, சிலையின் திருமேனி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை கல் செதுக்கும் பணி சம்பந்தப்பட்ட வேலைகள் 55 சதவிகிதப் பணி நிறைவேறியுள்ளது. மீதமுள்ள 45 சதவிகிதப் பணிகள் மேலும் தொடங்குவதற்கு தற்போது அரசு ரூ.15 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இனி, இந்தப் பணி தீவிரமாக முடுக்கி விடப்படும்.

### மொழிப்போர் தியாகி சங்கரலிங்கனார் திருவுருவச்சிலை, சென்னை

மொழிப்போர் தியாகி சங்கரலிங்கனார் நினைவைப் போற்றும் வகையில், தியாகி சங்கரலிங்கனார் திருவுருவச் சிலையினை சென்னையில் நிறுவிட அரசு ரூ.1.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. சிலை வடிவமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. விரைவில் சிலை சென்னையில் நிறுவப்படும்.

### தமிழ்த் தென்றல் திரு.வி.க. திருவுருவச் சிலை, சென்னை

தமிழ்த் தென்றல், திரு. வி. க. நினைவைப்போற்றும் வகையில் திரு. வி. க. வின் திருவுருவச் சிலையினை சென்னையில் நிறுவிட அரசு

ரூ.1.40 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. சிலை வடிவமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. விரைவில் சிலை சென்னையில் நிறுவப்படும்.

### தியாக வீரர் செண்பகராமன் திருவுருவச் சிலை, சென்னை

விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் நினைவாகச் சென்னையில் இவரது திருவுருவச் சிலை நிறுவ அரசு முடிவு செய்து, சிலை வடிக்கும் பணிக்காகவும், பீடம் அமைக்கும் பணிக்காகவும் ரூ.2.20 இலட்சம் நிதி ஒப்புதல் அளித்து சிலை வடிக்கும் பணி முடிவுற்று நிறுவுவதற்குத் தயார் நிலையில் உள்ளது. சிலை விரைவில் நிறுவப்படும்.

### திரு. பி. கக்கன் சிலை, மதுரை

விடுதலைப் போராட்ட வீரர், தியாகி அமரர் திரு. பி. கக்கன் திருவுருவச் சிலையினை அரசு சார்பில் மதுரையில் நிறுவிட முடிவு செய்யப்பட்டது. இச்சிலை வடிக்கும் பணிக்காக ரூ.2.40 இலட்சம் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டு சிலை வடிக்கும் பணி முடிவுற்று நிறுவுவதற்குத் தயார் நிலையில் உள்ளது.

### வள்ளுவர் கோட்டம், சென்னை

உலகம் போற்றும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்கு நினைவுச் சின்னமாக சென்னை மாநகரின் நடுப்பகுதியாக விளங்கும் நுங்கம்பாக்கத்தில் ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள பரந்த வெளியில் தென்றல் வீசும் தெற்குத் திசை நோக்கிக் கட்டப்பட்ட வள்ளுவர் கோட்டம் 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாள் திறந்து வைக்கப்பட்டது.

இக்கோட்டம், பொதுமக்கள் பார்வையிட காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை திறந்து வைக்கப்படுகிறது. நுழைவுக் கட்டணமாகப் பெரியவர்களுக்கு ரூ.1-ம், சிறுவர், சிறுமியர் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு ரூ.0.50 காசுகளும் வசூலிக்கப்படுகிறது. நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிடுகின்றனர்.

தற்போது மேம்பாட்டுப்பணி மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ரூ.84.94 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப்பணித் துறையின் சிறப்பு கட்டடப் பிரிவினரால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வனப்போடு திகழ்ந்திடும் வள்ளுவர் கோட்டத்தின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு சிற்பத் தேரில் செதுக்கப்பட்டுள்ள





குறள் விளக்கக் காட்சிகளை முழுமையாகச் செதுக்கவும் மற்றும் அரங்கத்தின் தரைத் தளப்பகுதியினைச் செப்பனிடவும் மேம்பாட்டுப்பணிகளும், செப்பனிடும் பணிகளும் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### இராஜாஜி மண்டபம், சென்னை

சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள 18 தேசியத் தலைவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் மன்னர்கள், தலைவர்களின் திரு உருவப் படங்கள் மிகவும் பழுதடைந்த நிலையிலிருந்ததைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணிக்கென ரூ.80,000/- செலவினத்திற்கு அரசு ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### அமரர் ஜீவா நினைவகம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தோழர் அமரர் ஜீவானந்தம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலிலுள்ள சி.பி. இராமசாமி பூங்காவில் நினைவு மண்டபம் கட்டப்படும் என அறிவித்தார்கள். நினைவு மண்டபம் கட்ட மொத்தம் ரூ.15.50 இலட்சம் தொகைக்கு புதிய பணித்திட்டத்தின்கீழ் அரசு அனுமதி அளித்துள்ளது. இந்நினைவு மண்டபத்தில் அமரர் ஜீவாவின் சிலையொன்று நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் திருவுருவச் சிலை

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 10 அடி உயர வெண்கலச் சிலையினை ரூ.3.00 இலட்சம் செலவில் நிறுவிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டு சிலை வடிவமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. சிலை விரைவில் சென்னையில் முக்கிய இடத்தில் நிறுவப்படும்.

### பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்திலுள்ள பேரறிஞர் அண்ணா நினைவகத்தின் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காகப் பொதுப்பணித்துறைக்கு ரூ.4.20 இலட்சம் தொகைக்கு அரசு நிதி ஒப்புதல் அளித்துள்ளது.

### பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா மற்றும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோரின் மார்பளவுச் சிலைகள்

சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டப முகப்பில் அவரது மார்பளவுச் சிலையும், மூதறிஞர் இராஜாஜி நினைவாலயத்தில் அவரது

மார்பளவுச் சிலையும் இருப்பது போல், பெருந்தலைவர் காமராசர் நினைவிடத்தில் பெருந்தலைவர் காமராசரின் மார்பளவுச் சிலையினை விரைவில் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சிலை வடிவமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நினைவிட முகப்பில் முறையே பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோரின் மார்பளவுச் சிலைகள் நிறுவுவதற்காக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் திருவுருவச் சிலை

சென்னையிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமான சிங்காரவேலர் மாளிகையின் முன்புறத்தில், அமரர் சிங்காரவேலரின் சிலையினை நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள். ரூ.2.40 இலட்சம் அரசு நிதி ஒப்பளிப்பில் சிலை வடிவமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

### டாக்டர் சென்னாரெட்டி நினைவுச் சின்னம்

முன்னாள் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், சென்னையில் டாக்டர் சென்னா ரெட்டிக்கு ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்படும் என மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### டாக்டர் அம்பேத்கர் சிலை

தாழ்த்தப்பட்டோர் தலைநிமிரச் செய்த, சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் திருவுருவச் சிலை, வீரன் அழகு முத்து வைகை மாவட்டத்திலுள்ள பெரியகுளத்தில் நிறுவப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள். சிலை விரைவில் நிறுவப்பட உள்ளது.

### மகாகவி பாரதியார் நினைவு இல்லம், சென்னை

மகாகவி பாரதியார் இறுதிக் காலத்தில் வாழ்ந்து மறைந்த திருவல்லிக்கேணியில் உள்ள வீட்டைத் தனியாரிடமிருந்து அரசாங்கம்



வாங்கி 2-10-1993-ல் பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது. இதில் பாரதியார் தொடர்புடைய மிக முக்கியமான புகைப்படங்களும், பாரதியாரின் கையெழுத்து வடிவங்களும் 'லேமினேட்' செய்யப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் ஆணையின் பேரில் 1996-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ஒரு படிப்பகம் (Reading Room) தினசரி நாளேடுகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

இத்துடன் தேசியகவி பாரதியார் நூல்கள், பாரதி பற்றிய நூல்கள், பாரதி காலத்திய நூல்கள், தமிழாய்ந்த பெருமக்களின் நூல்கள், எனச் சுமார் ரூ. 80,000/- மதிப்பில் 3,000 நூல்கள் பெறப்பட்டு பாரதி நூலகம் செயல்படவிருக்கின்றது.

இந்த அரசு அமைந்தபின் பாரதியார் வாழ்க்கை வரலாறு கூறும் 16 எம்.எம். திரைப்படம் வாரம் மூன்று முறை திரையிடப்படுகிறது. இதையே நாள்தோறும் டி.வி.டெக் மூலமாகப் பாரதியார் பற்றிய திரைப்படங்கள், விடுதலை உணர்வு மிக்க திரைப்படங்கள், தேசப்பற்று மிக்க திரைப்படங்கள் திரையிட டி.வி.டெக் வாங்கவும், பாரதியார் பற்றிய பாடல்கள் நாள்தோறும் 'பி.ஏ. சிஸ்டம்' மூலம் ஒலிபரப்பிடவும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்குள்ள திறந்த வெளியில் இலக்கியக் கூட்டங்கள் நடத்திட இருக்கை, ஒலிப் பெருக்கி வசதிகளுடன் கூடிய அரங்கம் ஒன்று விரைவில் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த மேம்பாட்டுப் பணிகளை ரூ. 8,30,000 மதிப்பில் நிறைவேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டு நடைபெற்று வருகின்றன.

### பேரறிஞர் அண்ணா நினைவகம், அண்ணா சதுக்கம், மேம்பாட்டுப் பணிகள்

சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக எழுப்பப்பட்டுள்ள அண்ணா சதுக்கத்தைப் பளிங்குக் கூடமாக மேம்படுத்துவதற்காக ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கீழ்க்கண்டுள்ள முக்கிய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:

(1) தற்போதுள்ள 2.5 மீட்டர் அகலமுள்ள நடைபாதையை 18 மீட்டர் நடைபாதையாக அகலப்படுத்துதல்.

(2) நுழைவு வாசலில் வெப்பத்தடுப்பு தரையோடுகள் 100 மீட்டர் நீளத்திற்கு அமைத்தல்.

(3) அண்ணா சமாதியின் இருபுறமும் வேலைப்பாடுள்ள வளைவு, கூரைத் தளம் அமைத்தல் மற்றும் தரமிக்க சலவைக் கல்லால் ஆன நடைபாதை அமைத்தல்.

(4) அண்ணா சமாதியின் இருபுறமும் எண்கோண மண்டபம் மற்றும் வட்ட வடிவமான மண்டபம் அமைத்தல்.

(5) நீரூற்றுகள், புல்வெளிகள், தோட்டங்கள் அழகுற அமைத்தல்.

(6) ஏற்கெனவே நல்ல நிலையில் இல்லாத அமைப்புகளை சீரமைத்தல்.

(7) இம்மதிப்பீட்டில் ரூபாய் 20 இலட்சம் மின்சாதன அமைப்புகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## அத்தியாயம் - 5

# தமிழரசு மற்றும் தமிழரசு அச்சகம்

## 'தமிழரசு' இதழ்

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான!..." என்று பத்திரிகையைப் பாராட்டினார் பாவேந்தர் பாரதிதாசன். அந்த வகையில், தமிழ் மணக்கும் பூக்காடாய், கருத்துப் பெட்டகமாய், கவிதைப் பேழையாய், கதையின் புதையலாய் அரசின் சார்பில் அழகுற வெளிவருவது தமிழரசு ஏடு தமிழரசு என்பது தமிழ்நாடு அரசின் குரல். தமிழ் நாடும் அரசின் குரல்.

இது அரசுக்கும் மக்களுக்கும் இடையே அமைந்த பாலம். இந்தப் பாலத்தின் மீது பயணிக்கும் கருத்துக்கள் பல்லாயிரம். அரசின் கொள்கைகள், கோட்பாடுகள், திட்டங்கள், வளர்ச்சிப்பணிகள், சகல துறைகளின் சாதனைகள் ஆகியவற்றை ஏந்திச் செல்லும் எழுத்துத் தூதுவனாக இயங்கி வருகிறது தமிழரசு. அரசு விழாக்களின் நிகழ்ச்சித் தொகுப்புகளையும், அங்கு மேடையில் வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக மிதந்துவரும் மேன்மக்களின் உரைகளையும் தாங்கி வருவது தமிழரசு. வேளாண்மை, மருத்துவம், தொழில் வளர்ச்சி, கல்வி, சமூகநலம் போன்ற பல்வேறு வளர்ச்சித் துறைகள் பற்றிய கட்டுரைகளோடு, அறிஞர் தம் இதயவோடை ஆழத்திலிருந்து மொண்டுதரும் அரிய கருத்தோவியங்களும், வாழ்வாங்கு வாழ்ந்தோரின் வனப்போடும் வெளி வருகிறது தமிழரசு.

தமிழில் திங்கள் இருமுறை இதழாகவும், ஆங்கிலத்தில் மாத இதழாகவும், தமிழரசு வெளிவந்து கொண்டிருக்கிறது. தற்போது தமிழில் 30,000 பிரதிகளும், ஆங்கிலத்தில் 2,000 பிரதிகளும் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

தற்போது தமிழரசு இதழ் கணிப்பொறி மூலமாக மேம்பட்ட நவீன யுகத்தின் நுண்ணறிவை வெளிக்கொணரும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு, ஓவியங்கள் வடிவமைப்பு செய்யப்பட்டு, எளிய மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணமும், கலைஞர்கள் கண்டுகளிக்கும் கலையுணர்வூட்டும் வரைபடங்கள் உள்ளடக்கி, படிப்பவரைத் தன்பால் ஈர்க்கும் வகையில் விஞ்ஞான நுண்ணறிவு, அறிவியல் போன்ற கட்டுரைகளைக் கொண்டு தேன் தமிழ் மணம் வீசும் வண்ணம் தெளிவுற வெளியிடப்படுகிறது.

[1997 ஏப்ரல் 4

பல்வேறு பொருள்கள் பற்றிய கட்டுரைகள், புதுக்கவிதைகள் எல்லாம் கொண்டு, இணையற்ற பொலிவோடு தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும் 'தமிழரசு' இந்நாளில், அனைவராலும் விரும்பப்படும் பத்திரிகை என்கிற நிலையை அடைந்துள்ளது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

அரசுத் தரப்பு செய்திகளை மட்டுமே முன்வைப்பதோடு நின்று விடாமல் வாசகர்களுடைய ஊர்ப்பிரச்சினைகளையும் முன்வைக்க களன் உருவாக்கித் தந்து 'எங்களூர்ப் பிரச்சினை' என்கிற பகுதியில் சம்மந்தப்பட்ட அலுவலர்களை அணுகி அவற்றிற்கான தீர்வையும் வெளியிடுகிற புதுமையையும் புகுத்தியிருக்கிறது இந்த அரசு.

## தமிழரசு அச்சகம்

தமிழரசு அச்சகத்தில் கீழ்க்காணும் இதழ்கள் புதுப்பொலிவுடன் அச்சிடப்படுகின்றன:

1. தமிழரசு (தமிழ்) - மாதமிருமுறை
2. தமிழரசு (ஆங்கிலம்) - மாதம் ஒருமுறை
3. திருக்கோயில் (தமிழ்) - மாத இதழ்
   (இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை)

மேலும் அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் விளக்கும் கையேடு, மடிப்பேடு மற்றும் சிறப்பு வெளியீடுகளும் 'தமிழரசு' அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

தமிழரசின் உட்பக்கங்களைப் பல வண்ணங்களில் அச்சிட ரூ. 1 கோடி செலவில் ஒரு புதிய நவீன பல வண்ண 'வெப் ஆப்செட்' இயந்திரம் விரைவில் வாங்கப்படவிருக்கிறது.

## தமிழரசு இலக்கிய மலர்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டு வெள்ளிவிழா ஆண்டைக் கடந்து வெளிவந்து கொண்டிருக்கும் தமிழரசு இதழின் நெடிய பயணத்திற்கு மேலும் பெருமை கூட்டுவதாக, வரும் தமிழ்ப் புத்தாண்டையொட்டி ஏப்ரல் திங்களில் சிறப்பு மலராக, இலக்கிய மலர் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய மேதைகள், கவிஞர்கள், கதாசிரியர்களின் இலக்கியக் கட்டுரைகள், கரும்பு நிகர்க் கவிதைகள், கருத்தாழமிக்க கதைகள், புகழ்மிக்க



1997 ஏப்ரல் 4]

ஓவியர்களின் கைவண்ணங்கள் 'தமிழரசு' இலக்கியமலருக்குச் சுவை ஊட்ட உள்ளன.

'தமிழரசு' இலக்கிய மலர், இலக்கிய வரலாற்றின் சாட்சியாக இலக்கிய ஆர்வலர்களின் கரங்களில் தவழும். இன்றைய தமிழ் இலக்கிய வளர்ச்சிகளையும், இலக்குகளையும் பதிவு செய்யும் வகையில் வெளியிடப்படும்.

[1997 ஏப்ரல் 4

**அத்தியாயம் - 6**

## தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், சென்னை

இந்தியாவில் உள்ள திரைப்படத் தொழில் நுட்பங்களைக் கற்றுத்தரும் இரு கல்வி நிலையங்களில், சென்னையில் உள்ள நம் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனமும் ஒன்றாகும்.

நமது நாட்டிலேயே, திரைப்படம் பதனிடுதல் குறித்த தொழில் நுட்பங்களைக் கற்றுத்தருகின்ற நிறுவனம் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுதான் என்று கூறினால் அது மிகையாகாது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் பயின்று பட்டயம் பெற்ற மாணவர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் மிகுந்த தொழில்நுட்ப வல்லுநர்களாகப் புகழுடன் விளங்குகிறார்கள். போற்றத்தக்க கலையுலகச் சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள்.

இந்த நிறுவனத்தில் திரைப்படம் இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல், திரைப்படப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல், படம் பதனிடுதல் மற்றும் படத்தொகுப்பு ஆகிய மூன்றாண்டு பட்டயப் படிப்பு ஒவ்வொன்றிலும் 12 மாணவர்களுக்கும், திரைப்பட நடிப்பில் ஓராண்டு சான்றிதழ் படிப்பு 20 மாணவர்களுக்கும் போதனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்திற்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் 1996-97 நிதி ஆண்டில் இரண்டு 'வெஸ்ட்ரெக்ஸ்' புதிய திரைப்படம் ஓட்டும் கருவி ரூ. 6 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு, தற்போது இயங்கிவருகிறது.

மாணவர்களுக்கான படப்பிடிப்புப் பயிற்சிக்கான தொகையை ரூ. 10.00 இலட்சத்திலிருந்து ரூ. 15.00 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 9-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திரைப்படக் கல்லூரிக்கு ரூ. 3.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்து புதிய நவீன இயந்திரங்கள் வாங்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரைப்படக் கல்லூரி மாணவர்கள் விடுதியை, ஜெ.ஜெ. திரைப்பட நகரமாக இருந்தபோது முன்பிருந்த அரசினர் அதன் உபயோகத்திற்காக



1997 ஏப்ரல் 4]

எடுத்துக்கொண்டார்கள். அதனால் மாணவர்கள் தங்குவதற்கு இடமில்லாமல் அவதிப்பட்டார்கள். அதை உணர்ந்து இந்த அரசு பதவி ஏற்றபின் எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என்று பெயர் மாற்றம் செய்ததோடு இல்லாமல், மாணவர்கள் விடுதியை இந்நிறுவனத்திற்கு மாற்றம் செய்து அதனை மாணவர்கள் தேவைக்கான வசதிகளைச் செய்வதற்காக ரூ. 6.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் விடுதிப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மாணவர்கள் விடுதி திறக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒலித்துறையில் நவீனமான 8 ட்ராக் மற்றும் 2 ட்ராக் டிஜிட்டல் ஆடியோ டேப் ரிக்கார்டர்கள் ரூ. 5 இலட்சத்திற்கு மாணவர்கள் பயிற்சிக்காக வாங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதல் தடவையாக மாணவர்கள் பயிற்சிக்காக ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள கலர் பிக்சர் நெகட்டிவ் பிராசசிங் இயந்திரம் ஒன்று படச்சுருள் பதனிடுதல் பிரிவுக்காக வாங்கப்பட்டுள்ளது.

நடிப்புப் பிரிவில் ரூ. 1 இலட்சம் செலவில் வீடியோ மற்றும் ஆடியோ கருவிகள் நடிப்புத்துறை மாணவர்கள் பயிற்சிக்காக வாங்கப்பட்டது.

## அத்தியாயம் - 7

# தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

### செய்தி மலர் தயாரிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலம் முழுவதிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களையும் படமெடுக்கிறது. அவ்வாறு எடுக்கப்பட்ட படத்தினைத் தொகுத்து மாதம் ஒரு முறை பத்து நிமிடம் ஓடக்கூடிய செய்திமலர் வெளியிடுகிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை 412 செய்தி மலர்கள் தயாரித்துள்ளது. 1986-ஆம் ஆண்டு முதல் செய்தி மலர்கள் வண்ணத்தில் எடுக்கப்பட்டு மத்திய அரசின் திரைப்படப்பிரிவிற்குக் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசு திரைப்படப் பிரிவு இந்தப் பிரதிகளை மாநிலம் முழுவதிலும் உள்ள திரையரங்குகளில் வெளியிடுகிறது. இந்த 147 பிரதிகளும் அனைத்து திரையரங்குகளையும் சுற்றி வருவதற்கு சுமார் 4 முதல் 5 மாதம் வரை ஆகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி தற்பொழுது சுமார் 5 நிமிடத்திற்குச் செய்தி நிகழ்ச்சிகளும், 5 நிமிடத்திற்குச் சிறு கருத்துக்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் திட்டம், செயல்பாடுகள் குறித்தும் கருத்துப் படமாக வெளியிட சீரிய முறையில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

### விளக்கப்படம் தயாரிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மக்கள் பயனடையக்கூடிய வகையில் பொதுவான பொருட்கள் - அதாவது குடும்பநலம், சமூகக் காடுகள், வேளாண்மை, சுகாதாரம், வனப்பாதுகாப்பு, கூட்டுறவு மற்றும் இதர துறைகள் குறித்து விளக்கப்படங்கள் தயாரித்து வருகிறது. பல்வேறு துறைகள் அளிக்கும் நிதிக்கு ஏற்றாற்போல் 35 மி.மீ. படம் தயாரித்துக் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இது வரை 126 விளக்கப்படங்கள் தயாரித்து வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தாமே விளக்கப்படங்கள் தயாரிப்பதுடன், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் படத் தயாரிப்பாளர்களையும், பயன்படுத்துகிறது. செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் நிதி ஒதுக்கீட்டில்,



சில தேசியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றுப படம் எடுக்கப்பட்டது போல், வாழும்போதே வரலாறான பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றை 20 நிமிட வண்ணப் படமாகத் தயார் செய்து திரையரங்குகளில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஒளிநாடா செய்தி மலர்கள்

1988-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு திரைப்படப்பிரிவில் ஒளி நாடாப் பிரிவு சிறு அளவில் செயல்பட ஆரம்பித்து ஒளிநாடா செய்தி மலர்களை 1989-ஆம் ஆண்டு முதல் தயாரிக்கத் துவங்கியது. 60 முதல் 90 நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த மலர்களில் அரசின் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் சிறுகதைகள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைக் காட்சிகள் மூலமாக மிகவும் சுவையாகத் தயாரித்து வழங்கப்படுகிறது. இந்த மலர்கள் மாவட்டங்களில் கள விளம்பரப் பணிக்காக உள்ள 20 ஒளிநாடா ஊர்தி மூலமாகவும் திரையிடப்படுகிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு இதுவரை 13 மலர்கள் தயாரித்துள்ளது.

### ஒளிநாடா விளக்கப்படங்கள்

நமது தமிழ்நாடு திரைப்படப் பிரிவானது குடும்ப நலம், உடல் நலம், சாலை விபத்து காடு வளர்ப்பு, சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, போன்ற பொருட்களிலும் மற்றும் விளம்பரப் படங்களும் ஒளி நாடா விளக்கப்படங்களாகத் தயாரித்துள்ளது. இதுவரை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 216 ஒளிநாடா விளக்கப்படங்கள் தயாரித்துள்ளது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று சுமார் 30 நிமிடம் ஓடக்கூடிய வீடியோ படங்களைத் தயாரித்து தனியார் ஒளிபரப்பு நிறுவனங்கள் மூலம் ஒளிபரப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்கள் நல்வாழ்வு, குழந்தை நலம், கல்வி, வேளாண்மை, குடிநீர், சுற்றுப்புறச் சூழ்நிலை பராமரிப்பு, மரங்கள் வளர்த்தல், காடுகளைப் பாதுகாத்தல், வனவிலங்கு சரணாலயம், பெண்கள் முன்னேற்றம், போதைப் பொருட்களால் தீமை போன்ற பல்வேறு மையக் கருத்துக்களைக் கொண்டு இப்படங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்படங்களை ஒளிபரப்புவதோடு வி.எச்.எஸ். பிரதிகள் எடுத்து மாவட்டங்களிலுள்ள ஒளிநாடா ஊர்திகள் மூலம் கள விளம்பரம் செய்யவும் ஏதுவாகும்.

[1997 ஏப்ரல் 4

## ஒளி நாடா செய்தி மலர்கள் படப்பிடிப்பு

தமிழ்நாடு முழுவதிலும் நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ஒளி நாடாவில் படமெடுக்கிறது. இவை ஒளிநாடா செய்திமலர் தயாரிப்புக்குப் பயன்படுவது போக, சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினருக்கு ஒளிபரப்பிடத் தருவதற்கும் பயன்படுகிறது. திரைப்படப் பிரிவில் நவீன ஒளிநாடா கருவிகளின் மூலம் எடுக்கப்படும் வீடியோ தயாரிப்புக்களின் தரம் சிறந்தவையாகவும், சென்னைத் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்புக்கு அனுப்பும் வகையிலுள்ளதாகவும் வனப்புற அமைந்துள்ளன.



1997 ஏப்ரல் 4]

### அத்தியாயம் - 8

## சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம்

1968-ஆம் ஆண்டு முதல் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. விருதுக்குரிய சிறந்த திரைப்படங்கள், கலைஞர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களைத் தெரிவு செய்வதற்கென ஒரு குழுவை ஒவ்வொரு ஆண்டும் அரசு ஏற்படுத்துகிறது. இக்குழுவின் பரிந்துரைகளின்படி நல்ல திரைப்படங்கள் மூன்றிற்குப் பரிசுகளும், சிறப்புப் பரிசு ஒன்றும் ஆக நான்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1995-ஆம் ஆண்டிற்கான விருதிற்குரிய தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர்கள் மற்றும் கலைஞர்களைத் தேர்வு செய்து விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. குழந்தை நட்சத்திரம் ஒருவருக்கு 1994-ஆம் ஆண்டு முதல் புதிதாக விருது ஏற்படுத்தப்பட்டு இந்த அரசால் வழங்கப்பட்டது. 1995-ஆம் ஆண்டுக்கு புதிதாக சிறந்த வில்லன் நடிகர் ஒருவருக்கும், சிறந்த நகைச்சுவை நடிகர் ஒருவருக்கும் விருதுகள் வழங்க முடிவு செய்து, விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 1995-ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் இந்தப் புதிய இரண்டு விருதுகளும் வழங்கப்படும்.

### சிறந்த தமிழ்த் திரைப்படம்

| | | |
|---|---|---|
| 1. முதல் பரிசு | .. | ரூ.1,25,000 மற்றும் கேடயம் |
| 2. இரண்டாம் பரிசு | .. | ரூ.75,000 மற்றும் கேடயம் |
| 3. மூன்றாவது பரிசு | .. | ரூ.50,000 மற்றும் கேடயம் |
| 4. சிறப்புப் பரிசு | .. | ரூ.50,000 மற்றும் கேடயம் |

நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும். 1995 ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்கிய பின் 1996-ஆம் ஆண்டிற்கான மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டம் இந்த நிதியாண்டிலேயே செயல்படுத்தப்படும்.

[1997 ஏப்ரல் 4

## கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள்

தம் எழுத்தாலும், பேச்சாலும், இணையற்ற நடிப்பாலும் கலையுலகை நிலை உலகாக்கிய அறிஞர் அண்ணா, கவிஞர் கண்ணதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர் ஆகியோரின் பெயரால் கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வித்தகர் விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 1995 ஆம் ஆண்டிற்கான விருதுகள் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் திரைப்படங்களில் பெண்களை இழிவுபடுத்துவதைத் தவிர்க்க பெண்கள் நிலையை உயர்த்திக் காட்டும் திரைப் படங்களுக்கு ரூ. 1.25 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கவும் ஆணையிட்டுள்ளது.

## தமிழ்த் திரைப்படங்களுக்கு உதவித்தொகை (Subsidy) வழங்கும் திட்டம்

சமுதாய நோக்குடன் கூடிய நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. அரசால் அமைக்கப்படும் தேர்வுக் குழு தரமான தமிழ்ப் படங்களைத் தேர்ந்தெடுத்து உதவித்தொகை வழங்க அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. 1994-ஆம் ஆண்டிற்கு மானியத்திற்கென வந்த 43 படங்களில் 35 படங்களுக்கு மானியம் வழங்கியுள்ளது. 8 பிரதிகளுக்குக் குறையாமல் 25 பிரதிகளுக்கு மிகாமல் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படம் ஒன்றுக்கு 17-7-1996 முதல் அரசு மானியத் தொகையை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம் வீதம் உயர்த்தி 75 திரைப்படங்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. 1995-ஆம் ஆண்டிற்கு நல்ல தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்து அரசிற்குப் பரிந்துரை செய்ய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கையை அரசு எதிர்பார்க்கின்றது.

அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றை ஆங்கில மொழியில் திரைப்படமாக எடுக்கத் தனியார் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு



1997 ஏப்ரல் 4]

வருகின்றன. அந்தப் படத்தைத் தமிழாக்கம் செய்து வெளியிடப்படுமேயானால், தமிழக அரசின் உதவித்தொகையாக ரூ. 10 இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

## திரைப்படத் துறையினருக்கான சலுகைகள்

தரமான திரைப்படங்களுக்கான உதவித்தொகை (Subsidy) வழங்கும் திட்டத்தில் மிகச் சீரிய மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(1) குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு 12 முதல் 30 பிரதிகள் எடுக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப்படங்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் முன்பு உதவி பெறத் தகுதியுடையனவாக இருந்தன.

தற்போது 8 பிரதிகளுக்குக் குறையாமல் 25 பிரதிகளுக்கு மிகாமல் எடுக்கப்பட்டு குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் திரைப்படங்கள் தகுதியுடையவை என அரசு முடிவு செய்துள்ளது.

(2) அரசு இந்த உதவித் தொகையை 1992-ஆம் ஆண்டு முதல் ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக 50 படங்களுக்கு உயர்த்தி இதற்கென ரூ. 1.50 கோடியை ஒதுக்கியது.

(3) 1993ஆம் ஆண்டு முதல் உதவித்தொகை பெறும் திரைப்படங்களின் எண்ணிக்கை 50-லிருந்து 75-ஆக மேலும் உயர்த்தப்பட்டு இதற்கென ரூ. 2.25 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.

(4) 17-7-1996 முதல் மானியத் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(5) தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் அதுபோன்ற இடங்களில் படத் தயாரிப்பாளர்கள் படப்பிடிப்பு நடத்த முன்பு கட்டணம் ஒரு இடத்திற்கு ரூ.5000 ஆகவும், ஏனைய இடங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.2500 ஆகவும் இருந்ததை, முறையே ரூ.1000 எனவும் ரூ.500 எனவும் குறைத்து ஆணையிட்டுள்ளது.

(6) குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அரசு மானியம் பெறத் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்கள் வெளியிடப்பட்ட முதல் நான்கு வாரங்களுக்குக்

[1997 ஏப்ரல் 4]

## படப்பிடிப்பு நடத்த ஒரே இடத்தில் அனுமதி வழங்கும்முறை (Single Window System)

அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த முன்பு படத் தயாரிப்பாளர்கள் அரசின் பல்வேறு துறைகளுக்குச் சென்று தடையில்லாச் சான்றிதழ் பெற்று அனுமதி பெற வேண்டி இருந்தது. இது படத் தயாரிப்பாளர்களுக்குப் பெரும் சிரமமாய் இருந்தது. தற்போது தடையில்லாச் சான்றிதழ் இன்றி ஒரே இடத்தில் அரசுக்குச் சொந்தமான அனைத்து இடங்களிலும் படப்படிப்பு நடத்த அனுமதி வழங்க ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறை (Single Window System) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் திரைப்பட உலகினரால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

## தனியார் கேபிள் டி.வி. தொழிலை முறைப்படுத்துதல்

மத்திய கேளிக்கை வரிச் சட்டத்திற்கு ஏற்றவாறு தனியார் கேபிள் டி.வி. மூலம் திரையிடும் தொழிலினை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள சட்டத்திற்கு முரண்படாமல், தமிழ்நாட்டிற்கு ஏற்றவாறு தேவையான திருத்தங்களுடன் கூடிய சட்டமுன்வடிவு கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது.

கேபிள் டி.வி.க்கான கேளிக்கை வரியானது, தற்போது மொத்த வசூலில் 20 சதவீதமாக உள்ளது. இனி சந்தாதாரர் ஒருவருக்கு, மாநகராட்சிப் பகுதிகளுக்கு மாதம் ரூ.20/- என்றும், நகராட்சிப் பகுதிகளுக்கு மாதம் ரூ.15/- என்றும், பிற பகுதிகளுக்கு மாதம் ரூ.10/- என்றும் வசூலிக்கப்படும். தற்போது கேபிள் டி.வி. உரிமத்தில் உள்ள 100 சந்தாதாரர் என்ற வரம்பு 500 ஆக உயர்த்தப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்கள்.

[1997 ஏப்ரல் 4

## அத்தியாயம் 9

# செய்தி வெளியீட்டுப்பிரிவு

செய்தித் துறையின் முக்கியப் பிரிவுகளில் செய்தி வெளியீட்டுப் பிரிவும் குறிப்பிடத்தக்கதாகும். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் அலுவலகங்களிலிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள் மற்றும் அனைத்துத் துறைகளிலிருந்தும் பெறப்படுகின்ற செய்தி வெளியீடுகள், அரசின் திட்டப்பணிகள், ஆக்கப் பணிகள், சாதனைகள் ஆகியவற்றை அனைத்து நாளிதழ்களிலும், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கும் சீரிய பணியினை, செய்தி வெளியீட்டுப் பிரிவு, விடுமுறை நாட்கள் உட்பட 24 மணி நேரமும் ஆற்றி வருகிறது.

75-க்கும் மேற்பட்ட நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சுமார் 10-க்கும் மேற்பட்ட தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு, அரசின் அறிவிப்புகள், செய்திக்குறிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் அவ்வப்போது செய்தியாளர்களுக்கு நேரிலும், தொலைபேசியிலும், பேக்ஸ் மூலமும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களுக்கு அவசரமான மற்றும் முக்கியமான அரசின் செய்திக்குறிப்புகளையும், செய்தி வெளியீடுகளையும், அறிவிப்புகளையும் அவர்கள் உடனுக்குடன் உள்ளூரில் உள்ள நாளிதழ்களுக்கும் தெரிவிக்கும் வகையில், மாவட்டங்களிலுள்ள மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு 'பேக்ஸ்' மூலமாகவும் அனுப்பி வைக்கப்படுகிறது.

இதுமட்டுமின்றி அனைத்து அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் சென்று கலந்துகொள்ளும் வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் இப்பிரிவே செய்து வருகிறது.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பத்திரிகையாளர் கூட்டம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் நடத்தப்பெறும் பத்திரிகையாளர் கூட்டம், ஆகியவற்றிற்கு அவ்வப்போது உரிய ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

### நாளிதழ் செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம்

சென்னை மாநகரிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வெளியாகும் நாளிதழ்களில் சென்னைச்



1997 ஏப்ரல் 4]

செய்தியாளர்கள், செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள், அரசு துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, புகைப்படப் பிரிவு, திரைப்படப்பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒலி, ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு அரசால் அமைக்கப்பட்ட செய்தியாளர் அங்கீகாரக் குழுவினால் பரிசீலனைக்குப் பின் பரிந்துரைக்கப்பட்டு, இத்துறையினால் ஆண்டுதோறும் அரசு அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு 73-க்கும் மேற்பட்ட நிறுவனங்களைச் சார்ந்த 300-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு, அரசு அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு அங்கீகார அட்டைகள் பெற்றுள்ளவர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசப் பயண அட்டை, இரயில் பயணத்தில் 50 சதவிகிதக் கட்டணச் சலுகை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்பு மற்றும் மாதாந்திரத் தவணைத் திட்டத்தின் மூலம் வீடுகள் வாங்குதல் ஆகியவற்றில் தனி ஒதுக்கீடு, வீட்டிற்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவன செய்தியாளர்களுக்கான செய்தியாளர் அட்டை

அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று செய்திகள் சேகரிப்பதற்கு ஏதுவாக, செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குமாறு பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களிடமிருந்து அரசுக்கு வரப்பெற்ற கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்று, 'செய்தியாளர் அட்டை' பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு வழங்கிட ஆணையிட்டார். அதன்பேரில், அதற்கென ஒரு பரிந்துரைக்குழு அமைக்கப்பட்டு சனவரி 1997 முதல் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு 36 பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களைச் சார்ந்த 87 நபர்களுக்குச் செய்தியாளர் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 4

## செய்தியாளர்கள் குடியிருப்பு

செய்தியாளர்களுக்கென மாவட்டங்களிலும் தனியாகச் செய்தியாளர்கள் குடியிருப்பு அமைத்திட வேண்டும் என்று மாவட்டங்களில் பணிபுரியும் செய்தியாளர்கள் அரசுக்கு விடுத்த கோரிக்கையினை, அரசு பரிவுடன் பரிசீலித்து வருகிறது.

ஏற்கெனவே, சென்னைக்கு அருகே கொட்டிவாக்கத்தில் 5.5 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் 136 செய்தியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு, தற்பொழுது சென்னைச் செய்தியாளர்கள் அங்கே வசித்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## செய்தியாளர் பயணம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் முக்கிய அரசு நிகழ்ச்சிகளுக்குச் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் சென்று வர அனைத்து வசதிகளையும், இத்துறை செய்து கொடுக்கிறது. மேலும், அரசின் ஆக்கப்பணிகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப்பணிகள் ஆகியவை எவ்விதம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நேரில் சென்று பார்த்து பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி மூலமாக மக்களுக்கு எடுத்தியம்பும் வகையில் அவ்வப்போது செய்தியாளர் சுற்றுப்பயணங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

## பத்திரிகையாளர் ஓய்வூதியம்

ஓய்வு பெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் 1986-ஆம் ஆண்டு முதல் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்கள் 41 பேர் தற்பொழுது ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில் 1-8-1996 முதல், ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்த தொகையான ரூ. 500-ஐ உயர்த்தி ரூ. 1,000-ஆக வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில் வருமான வரம்பு விதிகளை மேலும் தளர்த்தி, அவர்களின் வருட வருமான வரம்பு ரூ. 5,000-லிருந்து, ரூ. 12,000 ஆகவும், ஓய்வுபெறும் போது, பெறுகின்ற பணிக்கொடையின் வரம்பு ரூ. 10,000 லிருந்து ரூ. 25,000 ஆகவும், பணியில் இருந்தபோது எந்த ஒரு குறிப்பிட்ட



1997 ஏப்ரல் 4]

ஆண்டிலும பெற்ற வருமான வரம்பு ரூ. 24,000 ஆக இருக்க வேண்டுமென்ற விதியினைத் தளர்த்தி ரூ. 40,000 ஆக இருக்கலாம் எனவும் விதி தளர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேலும் 100 ஓய்வுபெற்ற, ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்கள் பயன் பெற வாய்ப்புக்கள் உள்ளன.

## பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் தொடர்ந்து இருபதாண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர் இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 25,000 நிதி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 20-3-1997 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சிறப்பு நேர்வாக அண்மையில் இயற்கை எய்திய பழம் பெரும் பத்திரிகையாளர் திரு. வேம்புசாமி அவர்களின் துணைவியாருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 27-3-1997 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியினை வழங்கினார்.

## புகைப்படப் பிரிவு

செய்தி வெளியீட்டுப் பிரிவுடன் இணைந்து புகைப்படப் பிரிவும் விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் சுழற்சி முறையில் பணியாற்றி வருகிறது. அரசின் திட்டப் பணிகள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொள்ளும் விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்து உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலங்களிலும், சென்னையில் தலைமைச் செயலகத்திலும், புதுடெல்லியில் அமைந்துள்ள தமிழ்நாடு இல்லத்திலும் மற்றும் அரசுப் பொருட்காட்சிகளிலும், பொதுமக்களின் பார்வைக்காகத் தமிழக அரசின் பல்வேறு துறைகளின் நலப்பணிகளையும், சாதனைகளையும் விளக்கும் புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

## மாநில செய்தி நிலையம், சென்னை

மாநில செய்தி நிலையம், தலைநகர மக்களுக்கான செய்தித் தொடர்புச் சேவை மையமாக மட்டுமன்றிப் பத்திரகையாளர்கள், கல்வியாளர்கள்,

மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோருக்கும் உரிய விவரங்களைத் தந்து உதவுகின்றது.

இம்மையத்தில் அமைந்துள்ள நூலகத்தில் 12,500க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. அதில் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, சரித்திரம், அறிவியல், கலை மற்றும் இலக்கியம் தொடர்பான நூல்களும் அடங்கும். இங்கும் பல்வேறு பருவ வெளியீடுகளும், நாளிதழ்களும் பொதுமக்களால் தினந்தோறும் படிக்கப்படுகின்றன.

இம்மையத்தில் படச்சுருள் நூலகமும் உள்ளது. இங்கு கல்வி மற்றும் தகவல் தொடர்பான 300க்கும் மேற்பட்ட 16 மி.மீ படச் சுருள்கள் உள்ளன. கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் கோரும்போது, இச்செய்தி நிலையத்தின் மூலம் படக்காட்சி நடத்தப்படுகிறது.





## அத்தியாயம்-10

## விளம்பரம்

மாநில அரசின் அனைத்துத் துறைகள், அரசின் பொறுப்பிலுள்ள பல்வேறு கழகங்கள் மற்றும் அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடும் மைய நிறுவனமாகச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயங்கி வருகிறது.

முந்தைய ஆட்சியில் விளம்பரங்கள் வெளியிடுவதற்காக நடைமுறையில் இருந்த அரசாணையில் (எண்.617 பொதுப் பணித் துறை நாள் 16-3-1990) வகுக்கப்பட்டிருந்த நெறிமுறைகள் பின்பற்றப்படாததால் அதிக அளவு விளம்பரச் செலவினம் ஏற்பட்டிருந்தது. ஒப்பந்தப்புள்ளி போன்ற முக்கிய விளம்பரங்கள் அதிக அளவு விற்பனையுள்ள பெரிய நாளிதழ்களுக்கு வழங்கப்படாமல், சிறிய நாளிதழ்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தன. அதே சமயத்தில் விழாக்கள் தொடர்பான வடிவமைப்பு விளம்பரங்கள் எல்லா நாளிதழ்களுக்கும் வழங்கப்பட்டன.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு இந்நிலை முற்றிலுமாக மாற்றப்பட்டு தேவையின் அடிப்படையில் மட்டும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை, முக்கியத்துவம், போய்ச் சேர வேண்டிய மக்கள் பகுதி ஆகியவற்றின் அடிப்படையில் விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளி போன்ற முக்கிய விளம்பரங்கள் அதிக அளவு விற்பனையாகும் நாளிதழ்களில் வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரச் செலவுகளில் முடிந்த அளவு சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வகையில் புதிய அரசாணை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், விளம்பரச் செலவினம் கணிசமாகக் குறைந்துள்ளது. இவ்வாணையின்படி பொதுப் பணித் துறை மட்டும் பின்பற்றி வந்த நெறி முறைகள் மாற்றி அமைக்கப்பட்டு, அனைத்துத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களும் புதிய நெறிமுறைகளை பின்பற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக விளம்பரக் கட்டணங்கள் உயர்த்தி நிர்ணயம் செய்யப்படாத 31 நாளிதழ்களின் கோரிக்கையை ஏற்று 1-8-1996 முதல் விளம்பரக் கட்டணங்கள் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 22 பருவ இதழ்களுக்கு விளம்பரக் கட்டணங்கள் 10-9-1996 முதல் உயர்த்தி நிர்ணயம் செய்யபட்டது. இருப்பினும் கடந்த ஆட்சிக் காலத்தைவிட தற்போது விளம்பரச் செலவு கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது.

## தகவல் பெறும் உரிமைச் சட்டம்

மக்களுக்கு நிர்வாகம் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமையை வழங்க "தகவல் பெறும் உரிமைச் சட்டம்" (Rights to information Act) ஒன்றை இயற்ற அரசு முடிவு செய்து, இதற்கான சட்டம் இயற்ற தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## அத்தியாயம்-11

## வாகனங்கள்

அரசின் சாதனைகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலத் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் வீடியோ படங்களை மாவட்டங்களில் காண்பிப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்துக்கும் ஒரு வீடியோ வாகனமும், பத்திரிகையாளர் பயணம், செய்தி வெளியீடு, பொருட்காட்சி, விழாக்கள் போன்ற பணிகளைக் கவனிப்பதற்காக மற்றொரு 'டெம்போ டிராக்ஸ்' வாகனமும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில் கடந்த ஆண்டில் (1996-97) புதிதாக 10 'டெம்போ டிராக்ஸ்' வாகனங்களும் ஒரு வீடியோ வாகனமும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

அதைத் தொடர்ந்து 1997-98 பகுதி-2 திட்டத்தின்கீழ் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் புதிதாக 7 வீடியோ வாகனங்கள் வாங்குவதற்கும், தலைமையிடத்தில் உள்ள பழைய அம்பாசிடர் கார்களுக்குப் பதிலாக புதிதாக 3 அம்பாசிடர் கார்கள் வாங்குவதற்கும் செலவுத் தொகை ரூ.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், 4 புதிய மாவட்டங்களில் பயன்படுத்துவதற்குப் புதிதாக 4 'டெம்போ டிராக்ஸ்' வாகனங்கள் வாங்குவதற்கும் செலவுத் தொகை ரூ. 13 இலட்சம் ஒப்பளிக்கப்படும்.

[1997 ஏப்ரல் 4

**அத்தியாயம்-12**

## தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம், எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்

சென்னை தரமணியில் 86 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 26.12 கோடி திட்ட முதலீட்டில் உருவாக்கப்பட்டது எம்.ஜி.ஆர் திரைப்பட நகர். இந்நகரில் உட்புற மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்பு இடங்கள் யாவும் ஒரே இடத்தில் எல்லாவிதமான வசதிகளுடன் கிடைக்கும்படியாக உள்ளன. உலகத் தரத்திற்கேற்ற வகையில் இந்தத் திரைப்பட நகரத்தில் படப்பிடிப்பு முடிந்த பிறகு படத் தயாரிப்புக்குத் தேவையான டப்பிங் தியேட்டர் மற்றும் வீடியோ ஸ்டுடியோ ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திரைப்பட மற்றும் வீடியோ தயாரிப்பாளர்கள் இங்கு மிகவும் பாதுகாப்பாகவும் எந்தவித இடையூறும் இல்லாமலும் வெளியிடங்களில் இருக்கும் படப்பிடிப்பு நிலையங்களைவிடக் குறைந்த செலவில் பல்வேறு சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இத்திரைப்பட நகரில் படப்பிடிப்பிற்குத் தேவையான அரங்கம் முழுவதும் குளிர்சாதனம் பொருத்திய மற்றும் இருபத்திநான்கு ஒப்பனை அறைகளுடன் கூடிய ஒரு தள அமைப்பு உள்ளது. மேலும், படப்பிடிப்புக்குத் தேவையான வெளிப்புறக் காட்சிகளான கிராமம், நகர்ப்புறம், கோயில், கிறித்துவ ஆலயம், மசூதி, அஞ்சல் நிலையம், வகுப்பறை, அறுவைச் சிகிச்சை அரங்குடன் கூடிய சிறிய மருத்துவமனை, காவல் நிலையம், புகைவண்டி நிலையம், சிறைச்சாலை, நீதிமன்றம் மற்றும் பல அமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

படகுத்துறையுடன் கூடிய அழகான ஏரி மற்றும் செயற்கை நீர்வீழ்ச்சி, அருகிலுள்ள ஒரு தீவுடன் மூங்கில் பாலத்தால் மிக நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ளது.

ஊட்டி, கொடைக்கானலில் உள்ளது போல் இங்கேயும் பெரிய புல்வெளிகள் உள்ளன. மொகலாயத் தோட்டம், இத்தாலியத் தோட்டம் மற்றும் ஜப்பானியத் தோட்டங்கள் இத் திரைப்பட நகரில் உருவாக்கப்பட்டுள்ளன.

நவீன அமைப்புகளும் வசதிகளும் கொண்ட குளிர்சாதன வசதி பொருந்திய நாட்டிய மண்டபம் அழகிய ஒப்பனை அறைகளுடன் மிகச் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 4]

திரைப்பட நகரின் மற்றுமொரு சிறப்பு அம்சம் நான்கு நட்சத்திர விடுதிகளுக்கு இணையாகத் தங்கும் விடுதிகள் இயற்கைச் சூழ்நிலையில் எல்லாவிதமான நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதாகும்.

இங்கு டென்னிஸ், பில்லியார்ட்ஸ் முதலியவற்றுடன் நீரினுள் படம் எடுப்பதற்குண்டான வசதியுடன் கூடிய நீச்சல் குளம் போன்ற அனைத்து வசதிகளும் உள்ளன. இங்கு உருவாக்கப்பட்டுள்ள குடில்கள் திரைப்படம் மற்றும் வீடியோ தயாரிப்பாளர்கள் தங்குவதற்கும், திரைக்கதை ஆலோசனை மற்றும் திரைப்படத் தொழில் தொடர்பான கலந்துரையாடல்களுக்கும் குறைந்த செலவில் மிகவும் வசதியாக இருக்கின்றன. குடில்களில் ஏனைய வெளிநபர்களும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

எம்.ஜி.ஆர் திரைப்பட நகரில் குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா ஒன்றும் எழில்மிகு இயற்கையான நில அமைப்போடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் இப்பூங்காவில் குழந்தைகள் விளையாடி மகிழ்வதற்காக மோதி விளையாடும் கார், குழந்தைகள் நீச்சல் குளத்துடன் இணைக்கப்பட்ட வளைந்து வளைந்து மேலிருந்து கீழே வரும் தண்ணீர்ச் சறுக்கப் படுக்கை, குதித்து விளையாடுவதற்கான வட்டத் தண்ணீர்ப் படுக்கை, சிறிய இரயில் வண்டி மற்றும் பல குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய விளையாட்டுச் சாதனங்களில் சில இலவசமாகவும் மற்றும் சில குறைந்த கட்டணத்திலும் குழந்தைகள் விளையாட அனுமதிக்கப்படுகின்றனர்.

பொதுமக்களும் திரைப்பட நகரைப் பார்க்க நபருக்கு ரூ. 15 என்ற கட்டண வீதத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் 12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் அனுமதிக் கட்டணத்தில் 50 சதவிகிதம் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இத்திரைப்பட நகருக்குச் சுற்றுலா வருவதன் காரணமாகக் கணிசமான வருவாய் பெறப்பட்டு வருகிறது.

### மேம்பாட்டுத் திட்டங்கள்

உட்புறப்படப்பிடிப்பு இடங்களில் கூடுதலாக ஒரு செல்வந்தர் மாளிகை அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் பண்ணையார் வீடு, கிராமச் சந்தை, மருத்துவமனை, பொருட்காட்சி அரங்கு, மேல் அதிகாரியின் அலுவலக அறை, சிறிய விருந்தினர் மாளிகை, கட்டுமானப்பணி முடிவு

பெறாத நான்கு குடில்கள், டேபிள் டென்னிஸ் விளையாட்டு அரங்கினை முழுமைப்படுத்துவது மற்றும் பல மேம்பாட்டுத் திட்டங்கள் இத்திரைப்பட நகரில் மேம்பட்ட வகையிலே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



### அத்தியாயம்-13

## சினிமாக்கள், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு கூட்டமைப்புகள்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திரைப்படத் தொழில் மிகவும் பெரிய தொழில்களில் ஒன்றாகும். ஆகையால் திரைப்படத் தொழில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற ஒரு நிதி ஆதாரமாக இருந்து வருகிறது.

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு நிறைய சலுகைகள் திரைப்படத் துறைக்கு அளித்து வருகிறது. அதிலும் குறிப்பாக ஏழை மக்களுக்கும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கும் முக்கியமான பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக திரைப்படம் தொடர்ந்து இருந்து வருகின்றது.

தமிழ்நாட்டில் மொத்தம் 2,540 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவைகளாவன.

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நிரந்தர திரையரங்குகள் | 1,513 |
| 2. | பகுதி நிரந்தர திரையரங்குகள் | 206 |
| 3. | திறந்த வெளி திரையரங்குகள் | 15 |
| 4. | நடமாடும் திரையரங்குகள் | 806 |
| | மொத்தம் | 2,540 |

திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொது மக்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டிட நிறை நலத்தன்மை, முறையான பராமரிப்பு இவைகளைத் தருகின்ற வகையில் 1955-ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957-ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்கு முறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன.

முந்தைய அரசு, 1994-ஆம் ஆண்டில், திரையரங்கு, நிர்வாகம் நுழைவுக் கட்டணத்தினை தேவைக்கேற்ப அதிகரித்துக் கொள்ளவோ அல்லது

குறைத்துக்கொள்ளவோ, (கடைசி வகுப்பினரைத் தவிர இதர வகுப்புகளுக்கு) உரிமம் வழங்கும் அதிகாரிக்கும், வணிக வரித் துறை அதிகாரிக்கும் முன்னறிவிப்பு கொடுத்து மாற்றிக் கொள்ள அனுமதி அளித்திருந்தது. ஆனால் மேற்கூறப்பட்ட கட்டண விகித மாற்றம் 28-10-94-க்கு முன்பு இருந்த நுழைவுக் கட்டண விகிதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும் இந்த ஆணை திரையரங்குகளின் நுழைவுச் சீட்டினை கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதை தடுக்கும்பொருட்டும் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமான நபர்களை அனுமதிப்பதை தடுக்கும் பொருட்டும் வெளியிடப்பட்டது.

தற்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் திரையரங்குகளில் கடைசி வகுப்பைத் தவிர ஏனைய வகுப்புகளுக்கான நுழைவுக் கட்டணத்திற்கு ஒரு உச்சவரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அரசு கருதியது. அதன்படி திரையரங்கு உரிமைதாரர்கள் நுழைவுக் கட்டண விகிதங்களை உயர்த்தும்போது 28-10-94-க்கு முன்பு இருந்த நுழைவுக் கட்டண விகிதங்களுடன் கூடுதலாக 75 விழுக்காடுகளுக்கு மிகாமல் நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் திரைப்படத் துறையைச் சார்ந்த பல்வேறு பிரிவினர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் புதிய திரைப்படங்களை வெளியிடும்போது மட்டும், சிறப்பு நுழைவுக் கட்டணம் நிர்ணயித்துக் கொள்ளலாம் எனவும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

அந்த சிறப்பு நேர்வுகளில் திரையரங்கு உரிமையாளர்கள் வசூலிக்கும் நுழைவுக்கட்டண விகிதங்கள் மிகவும் அதிகமாக உள்ளது என்று பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் இருந்ததால், மேற்கூறிய சிறப்பு நேர்வில் வழங்கப்பட்ட சலுகையை அரசு ரத்து செய்துவிட்டது.

அதே நேரத்தில் திரையரங்குகளில் கடைசி வகுப்பு கட்டணத்தை மாற்றிக்கொள்ள திரையரங்கு உரிமைதாரர்கள் விரும்பினால் அவர்கள் தங்களது கோரிக்கைகளை தகுந்த காரணங்களுடன் உரிமம் வழங்கும் அதிகாரி மற்றும் நில நிர்வாக சிறப்பு ஆணையர் மூலமாக அரசின் முடிவிற்கு அனுப்பி வைக்கலாம்.

திரைப்படத் துறையைச் சார்ந்த பல்வேறு தரப்பினரிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் கோரிக்கைகளை அரசு பரிவுடன் பரிசீலித்து ஆணை பிறப்பித்தாலும், திரையரங்குகள், விதிகளில் கூறியுள்ளபடி சரியாக பராமரிக்கப்படுவதில்லை, நிர்ணயிக்கப்பட்ட நுழைவுக்



கட்டணங்களுக்குக் கூடுதலாக கள்ளச் சந்தையில் நுழைவுச் சீட்டுகளை விற்பது, நிர்ணயம் செய்யப்பட்ட இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அதிகமான நபர்களை அனுமதிப்பது போன்ற குறைபாடுகள் பற்றிய முறையீடுகள் அரசுக்கு வந்த வண்ணம்தான் உள்ளன. இதுபோன்ற புகார் மனுக்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், திடீர் சோதனை மேற்கொண்டு விதிகளுக்குப் புறம்பாக செயல்படும் திரையரங்கு உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து உரிமம் வழங்கும் அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் கருத்தில் கொண்டு குற்றத்தின் தன்மையை, கடுமையாக்கி தண்டனைகளை வழங்குவது குறித்து 1955-ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டத்திற்குத் திருத்தங்கள் மேற்கொள்ள, இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே இதற்கான சட்டமுன்வடிவு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**வீடியோ தொடர்பான சட்டமும் விதிகளும்:**

தமிழ்நாடு மாநிலத்தில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப்படுத்துவதற்காகவும் இதற்கு இடை நிகழ்வாகவும், தொடர்புடையதாகவும் உள்ள விஷயங்களுக்காகவும், 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம், வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியாருக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்டங்கள் மட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில் காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டுப் பயனுக்காக, வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படம் போட்டுப் பார்ப்பதற்கு உரிமம் எதுவும் அவசியமில்லை. இம்மாநிலத்தில், தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற 1213 வீடியோ நூலகங்களும், 3 வீடியோ திரையரங்குகளும் உள்ளன.

**வீடியோ திருட்டு:**

வீடியோ திருட்டைத் தடை செய்வதற்காக தமிழ்நாடு அரசு, 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலமும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு மூலமும் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டத்தின் கீழ் வீடியோ நூலகங்கள், வீடியோ திரையரங்குகள் ஆகியவை உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். உரிமத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளை மீறுபவர்களுக்குத் தண்டனைகள் விதிப்பதற்காக, வீடியோ தொடர்பான சட்டம் மற்றும் விதிகளில் போதிய விதிமுறைகள் இயற்றப்பட்டுள்ளன.

திருட்டு வீடியோக்களை கட்டுப்படுத்துவதற்காக மாநிலக் காவல்துறை இயக்குநர் (குற்றப்பிரிவு) கட்டுப்பாட்டின் கீழ் காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் அரசு தனிப்பிரிவு ஒன்றினை 1995-ஆம் ஆண்டு ஏற்படுத்தியுள்ளது. இப்பிரிவு, வீடியோ கேசட்டுகள் மூலமாகத் திரைப்படப் பதிப்பு உரிமைகளை மீறுதல், ஏனைய பதிப்பு உரிமை மீறுதல்கள் தொடர்பான புகார்களைப் புலனாய்வு செய்யும்.

பதிப்புரிமைச் சட்ட மீறல்களைத் தடுப்பதற்கு திடீர் சோதனை இடவும், பத்திரிகைகளில் இதற்கான உரிய விளம்பரங்கள் செய்யவும் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**கேபிள் தொலைக்காட்சி இணைப்பு முறை:**

கேபிள் தொலைக்காட்சி மூலமாக, திரைப்படங்களைத் திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு 1991 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தை இயற்றியுள்ளது. இத் திருத்தச் சட்டம் 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்தது.

கேபிள் டி.வி. அமைப்பு முறையை நெறிப்படுத்த மத்திய அரசு கேபிள் டி.வி. அமைப்பு ஒழுங்குபடுத்துதல் சட்டம் மற்றும் விதிகள், 1995-ஐ இயற்றியுள்ளது. இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்தும். இச்சட்டத்தின்படி தலைமை அஞ்சல் அதிகாரி பதிவு செய்யும் அலுவலர் ஆவார். இச்சட்டத்தின் 18 மற்றும் 19-ம் பிரிவுகளுக்கு சென்னை



நீங்கலாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் சென்னை மாநகர காவல் ஆணையரையும் அங்கீகாரம் பெற்ற அதிகாரியாக மாநில அரசு நியமித்துள்ளது. இச்சட்டத்தின்படி பதிவு செய்யப்படாத கேபிள் டி.வி. அமைப்புகளை பறிமுதல் செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 4

# இணைப்பு-2

(74-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## சுற்றுலா

### மானியக் கோரிக்கை எண். 50
### கொள்கை விளக்கக் குறிப்பு

### 1997-98

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம்தரும் நாடு".

என்ற வள்ளுவர் பெருந்தகை வாய்மொழிக்கொப்ப எல்லா வளங்களும் தன்னகத்தே கொண்டு திகழும் நாடு. தமிழ்நாடு. தமிழகக் கோயில்களின் தொன்மைச் சிறப்பையும், கலைச் செல்வங்களைக் கண்டு இன்புறவும், மலை மற்றும் கடல் வளம் காணவும், வனவிலங்குச் சரணாலயங்களைப் பார்த்து இன்புறவும், மஞ்சு சூழ் சோலை மலையில் அருவி நீராடவும், புனல் விளையாட்டுகளில் ஈடுபடவும், ஆண்டு தோறும் வெளிநாட்டிலிருந்தும், நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் இலக்கியத்தில் சொல்லப்பட்டதன் அடிப்படையில் அதன் பொருள் உணர்ந்து, 1996-97-ம் ஆண்டை உலகச் சுற்றுலா நிறுவனம், "சுற்றுலா என்பது சகிப்புத் தன்மைக்கும் அமைதிக்கும் ஒரு எடுத்துக்காட்டு" என்று அறிவித்துள்ளது.

சுற்றுலா ஒரு தொழிலாக இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சியின் மூலம் ஒரு நாடு பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடிகிறது. அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்ட முடிகிறது. எண்ணற்ற மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியது சுற்றுலா. இதன் அடிப்படையில் நம்முடைய அரசின் சுற்றுலா. வளர்ச்சி பற்றிய கொள்கைகள் வகுக்கப்படுகின்றன.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், நாம் திட்ட முதலீடாக ரூ. 5.25 கோடி செலவிடத் திட்டமிட்டோம். ஆனால் அக்கால



1997 ஏப்ரல் 4]

கட்டத்தில் நம் திட்டச் செலவாக ரூ. 13.74 கோடி செலவு செய்திருக்கிறோம். ஆக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிட்டதை விட இரண்டரை மடங்கு கூடுதலாக நாம் செலவு செய்திருக்கிறோம் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் இந்தப் பின்னணியில் நாம் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எதிர்நோக்க வேண்டும். இவற்றை கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சியில் அரசு தனிக் கவனம் கொண்டுள்ளது.

மைய அரசின் சுற்றுலாத் துறை ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட அணுகுமுறையாக இதற்காக வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழே கண்டவற்றைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.
2. சுற்றுலாவிற்காக பெரும் வளாகங்கள் ஏற்படுத்தி, அதில் சுற்றுலா வசதிகளை உருவாக்குதல்.
3. தனியார் மூலதனத்தை ஊக்குவித்து, சுயதொழில் வாய்ப்பை உருவாக்குதல்.
4. சுற்றுலா வசதிகளை விரிவுபடுத்துதல்.
5. மனித வள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தருதல்.
6. ஆராய்ச்சி மற்றும் கணிப்பொறி மயமாக்குதல்.
7. சுற்றுப்புறச் சூழல் மற்றும் கலாச்சாரப் பெருமையைப் பாதுகாத்தல்.
8. சலுகைகளை வழங்குதல்.
9. ஆய்வு மற்றும் மதிப்பிடுதல்
10. அமைப்புகளை விரிவுபடுத்துதல்

இதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் அணுகுமுறை இருக்க வேண்டுமென்றே தமிழக அரசும் கருதுகிறது.

### இந்தியாவில் சுற்றுலா

1951-ல் சர்வதேச சுற்றுலாவினர் வருகை 16,829 நபர்களாக இருந்தது. இது 1995-ல் 2.12 மில்லியனாக அதிகரித்துள்ளது. இது ஆண்டிற்கு 17.6%

என்ற கூட்டு விகிதத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியச் சுற்றுலா என்பது முக்கியமாக உள்நாட்டு சுற்றுலா வகையைச் சார்ந்ததாகும். 1994ல் 100 மில்லியன் சுற்றுலாவினர் உள்நாட்டு சுற்றுலாவினராகத் தங்கிச் சென்றுள்ளனர். மேலும் 150 மில்லியன் மக்கள் கட்டணத்துடன் கூடிய விடுதிகளில் தங்குதல் மற்றும் யாத்திரை சுற்றுலாவாக வந்து சென்றுள்ளனர்.

வைரம், ஆபரணம் மற்றும் ஆயத்த உடை தயாரித்தல் ஆகியவற்றிற்கு அடுத்தாற்போல், சுற்றுலா இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதித் தொழிலாகக் கருதப்படுகிறது. (வைர, ஆபரணத் தொழிலைப் பொறுத்தவரை இதில் இறக்குமதிப் பொருட்கள் பகுதி அதிகமாகும்) சுற்றுலா மூலமாக அந்நியச் செலாவணியாக இந்தியாவிற்கு 1995-96-ல் கிடைத்த தொகை ரூ. 9,186 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (2928 மில்லியன் அமெரிக்க டாலர்கள்)

## தமிழ்நாட்டில் சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா பயணிகளுக்கு ஒரு அமைதிப் பூங்காவாகத் தோன்று தொட்டு விளங்கி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் விபரம் பின்வருமாறு.

| சுற்றுலாப் பயணிகள் வகை | (ஆண்டுகள்) 1994 | 1995 | 1996 | 1996-ல் விகிதாச்சார உயர்வு |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை இலட்சத்தில் | | | |
| உள்நாட்டினர் | 160.00 | 172.00 | 182.00 | 6% |
| வெளிநாட்டினர் | 4.89 | 5.86 | 6.14 | 5% |

அரசு ஆண்டுதோறும் நிதி ஆதாரத்திற்கு ஏற்ப, சுற்றுலா வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இது தவிர, சுற்றுலா வளர்ச்சியில் தனியார் முதலீட்டை ஈர்ப்பதற்கும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தனியார் முதலீடு செய்ய முன்வரும்போது, அவர்களுக்குச் சரியான நிலம் கிடைப்பதில்லை. மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வடிகால



அமைத்திடும் பணிக்கு பல துறைகளின் நிர்வாக ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. மேலும், பல்வேறு காரணங்களால் பல துறைகளில் ஒப்புதல் பெறக் கால தாமதம் ஏற்படுகிறது. காலதாமதத்தைத் தவிர்த்து, சம்பந்தப்பட்ட துறைகள் ஒப்புதல் பெற, சுற்றுலாத்துறை முயற்சிகள் செய்து வருகிறது.

## ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்திற்குச் சுற்றுலாப் பணிக்குழு

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1997-2002) சுற்றுலா வளர்ச்சி குறித்து விவாதிக்க, மாநில திட்டக் குழுவின் பரிந்துரையின் பேரில் நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழு விரிவான அறிக்கை ஒன்றை விரைவில் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு சுற்றுலா கொள்கை

திட்டமிடுதலின் போது சுற்றுலாவை மேம்படுத்த பின்வரும் அணுகுமுறைகள் தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்படுகின்றன.

1. சுற்றுலா மையங்களின் தன்மையைப் பொறுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு உரிய வசதிகள் செய்தல்.

2. சுற்றுலாத் தலத்தின் ஈர்க்கும் தன்மையைப் பொறுத்து அந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து வளர்ச்சியடையச் செய்தல்.

3. சுற்றுலாத் திட்டங்களில் தனியார் முதலீட்டை விரைந்து பயன்படுத்த பல்வேறு அனுமதிகளை ஒரே இடத்தில் வழங்க ஏற்பாடு செய்தல்.

4. தமிழ்நாட்டின் சுற்றுலாச் சிறப்புக்களைப் பற்றி வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் விளம்பரப் படுத்துதல்.

5. ஒருங்கிணைந்த திட்டங்களின் மூலம் சுற்றுலா வளர்ச்சியைக் கண்காணித்தல்.

6. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சுற்றுலா வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்துதல்.

7. விழாக்கள் நடத்துவதன் மூலம் கலாச்சார சுற்றுலாவை ஊக்குவித்தல்.

உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்தவும், பொது மக்களிடையே சுற்றுலா விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சுற்றுலாத் தலங்களுக்கு வருகை

தரும் பயணிகளுக்குத் தகவல்களைத் தருவதற்கும் தருமபுரி, கொடைக்கானல், மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிய சுற்றுலா அலுவலகங்கள் கடந்த ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. சுற்றுலா வளர்ச்சிக்கான சுற்றுலாத் துறையின் கீழ் தமிழ்நாட்டில் 14 இடங்களிலும், புதுதில்லி, கல்கத்தா, மும்பை, கோவா ஆகிய இடங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. எல்லா மாவட்டங்களிலும் சுற்றுலா அலுவலகங்கள் தொடங்க இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தின் தலைமையகம் பெரம்பலூரில் இயங்கி வருகிறது. 1996-97-ம் ஆண்டில் இந்த மாவட்டத்தில் சுற்றுலா அலுவலகம் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த அலுவலகத்திற்கு பணியாளர்கள் மற்றும் அலுவலர் பதவிகள் ஏற்படுத்த வேண்டும். இதன் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**சுற்றுலா வளர்ச்சிக்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு**

தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் மைய அரசின் சிறப்புத் திட்டமான மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

1996-97-ல் உதகை ஏரியின் குறுக்கே தொங்கு பாலம் அமைத்தல் உள்பட பல திட்டங்களுக்கு ரூ. 61.75 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

1997-98-ம் ஆண்டு ரூ. 80.00 இலட்சத்திற்கு பின்வரும் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:—

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | உதகமண்டலம் சிறுவர் பூங்காவிலிருந்து படகு இல்லம் வரை உல்லாச கம்பி வழிப் பயணம் அமைத்தல் | 50.00 |
| 2. | கூடலூரில் இளைஞர் விடுதி உணவகத்துடன் சாலையோர வசதி விடுதியாக கட்டுதல் | 15.00 |





| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 3. | உதகமண்டலம் சுற்றுலாத் தகவல் மையத்தில் கணிப்பொறி வசதி செய்தல் | 1.50 |
| 4. | தொட்டபெட்டா காட்சி முனையில் தொலைநோக்கி நிறுவுதல் | 3.00 |
| 5. | முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் உள்ள தெப்பக்காடு இளைஞர் விடுதியில் குழந்தைகள் விளையாட்டுச் சாதனங்கள் அமைத்தல் மற்றும் வாகனம் நிறுத்தும் இடத்தை மேம்படுத்துதல் | 1.50 |
| 6. | சிறப்புத் திட்டங்கள் | 9.00 |
| | மொத்தம் | 80.00 |

(ரூபாய் என்பது இலட்சம்)

**மாவட்ட பரவலாக்கத் திட்டம்**

மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்துத் துறைகளுக்கும் நிதியை ஒதுக்கி திட்டங்களை செயல்படுத்துகிறார்கள். 1996-97 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் கீழ்கண்ட சுற்றுலாத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன:—

(ரூ. இலட்சத்தில்

| | | |
|---|---|---|
| 1. | பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் கங்கை கொண்ட சோழபுரத்தில் சுற்றுலா வசதிகள் செய்தல் | 5.00 |
| 2. | இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏர்வாடியில் இளைப்பாறுமிடம், கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதி செய்தல் | 5.00 |
| 3. | பெரியார் மாவட்டத்தில் சிவன் மலையில் சுற்றுலா வசதிகள் செய்தல் | 2.00 |

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 4. தர்மபுரி மாவட்ட ஒகேனக்கல்லில் சுற்றுலா வசதிகள் செய்தல். | 4.90 |
| 5. மன்னர் திருமலை மாவட்டம், கொடைக்கானலில் காட்சி கோபுரம் கட்டுதல் | 5.00 |
| 6. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் பூம்புகார் சுற்றுலா வளாக வடக்குப் பகுதியில் சாலை அமைக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் சாலை அமைக்கும் பணி வடிகால் பணி மற்றும் கட்டணக் கழிப்பறை பழுது பார்க்கும் பணி. | 2.15 |

மேலும், உள்நாட்டு சுற்றுலாவை வளர்த்திட இத்திட்டத்தின் கீழ் இனிவரும் ஆண்டுகளில் சுற்றுலா வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கக் கோரி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

## தனியார் நிறுவனங்களின் பங்கு

1. தமிழ்நாட்டில் 1992-ல் சுற்றுலாவை ஒரு தொழிலாக அரசு அங்கீகரித்து, பல்வேறு சலுகைகளும், மானியங்களும், உணவகங்களுக்கும், சுற்றுலா திட்டங்களுக்கும், பொழுது போக்கு பூங்காக்கள் அமைக்கவும், குளிர்சாதன வசதியூட்டப்பட்ட சுற்றுலா பேருந்துகள் வாங்கவும் அளிக்கப்படுகின்றன. புதிய சுற்றுலா திட்டங்களுக்கு மூலதன மானியம், விற்பனை வரி தள்ளி வைப்பு, ஆடம்பர அறைகளுக்கான வரியில் 50% தள்ளுபடி, மின் சலுகைகள் போன்றவை தற்போதைய சுற்றுலாக் கொள்கையின்படி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு அரசு சுற்றுலாக் கொள்கையில் மற்ற இனங்களுடன், சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டை ஊக்குவித்தல் முக்கிய நோக்கமும், கோட்பாடும் ஆகும்.

3. சுற்றுலா வளர்ச்சிக்கு போதுமான இடவசதியை ஏற்படுத்தித் தருவது மிக அவசியமான ஒன்றாகும். நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதற்குத் தகுதியுள்ள இனங்கள் பரிந்துரை செய்வதன் மூலம் தனியார் துறையினர் ஓட்டல்களை அமைப்பதற்கு அரசு ஊக்குவிக்கிறது. இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் பெரும் முயற்சியாக இது அமையும்.



4. தமிழகத்தில் சுற்றுலாவை தொழிலாக அறிவித்து, மேலும் மேம்படுத்த சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகராட்சி தவிர்த்த ஏனைய நகரங்களில் உள்ள ஓட்டல்களுக்கு மூலதனம் மற்றும் மின் உற்பத்தி எந்திரம் வாங்க உதவிகளை தனியார் ஓட்டல்களுக்கு இத்துறை வழங்குவதால் ஓட்டல்கள் தமிழகத்தில் ஊக்குவிக்கப்படுவதோடு நல்ல வரவேற்பும் உள்ளது. இதனால் ஆங்காங்கே ஓட்டல்கள் புதிதாக தொடங்கப்பட்டு வருகின்றன. 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 29.87 இலட்சம், மூலதன மற்றும் மின் உற்பத்தி மானியமாக, ஆறு ஓட்டல்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

5. சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமான இடவசதி கிடைக்கும்படி செய்வது சுற்றுலா மேம்பாட்டிற்கு இன்றியமையாததாகும். எனவே தனியார் துறையில் தகுதி வாய்ந்த ஓட்டல்களுக்குக் கடனுதவி அளிக்குமாறு நிதியுதவி நிறுவனங்களுக்குப் பரிந்துரைப்பதன் மூலம் அரசு ஓட்டல்களை அமைக்க ஊக்குவிக்கிறது.

## விளம்பரம்

1997-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சுற்றுலா விடுதிகள் விபரம் கொண்ட கையேட்டை சுற்றுலாத் துறை வெளியிட்டுள்ளது.

தமிழகம் தலை சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்க, அனைத்து விளம்பர சாதனங்களையும் கொண்டு, ஒருங்கிணைந்த விளம்பரங்கள் செய்வது இன்றியமையாதது ஆகும். தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்பியல்புகளையும், விழாக்களையும் விளக்கும் வகையில் வண்ணம் மற்றும் கருப்பு வெள்ளை விளம்பரங்கள், உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் அச்சடிக்கப்படுகின்றன. சுற்றுலா தொழில் சார்ந்த சஞ்சிகைகள், தினசரிகள் மற்றும் நாளேடுகளில் வெளியிடப்படுகிறது. முக்கியமாக வண்ண விளம்பரங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளை அதிக அளவில் ஈர்க்க உதவும்.

தமிழகத்தில் மிகுந்து காணப்படும் சுற்றுலா சிறப்பியல்புகள், விழாக்கள் மற்றும் வசதிகள் அறியும் வண்ணம், பல வண்ணக் கையேடுகள், சுவரொட்டிகள், வரைபடங்கள் போன்றவற்றை அச்சடித்து, அவை சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலா தகவல் மையங்கள், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள இந்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள், ஏர் இந்தியா நிறுவனங்கள் மற்றும் உலகெங்கும் பரவியுள்ள சுற்றுலா தொழில் தொடர்புகள் வாயிலாக பயணிகளுக்கு வழங்கப்படுகின்றன.

சுற்றுலா பற்றிய கருத்தரங்கம், கருத்தாய்வுகள் மற்றும் கலந்தாலோசித்தல் ஏற்பாடு செய்வதன் மூலம் தமிழக சுற்றுலா பற்றி அதிக அளவில் விற்பனை செய்யவும் ஏதுவாக உள்ளது. மேலும், பசிபிக் பயண சங்கம், இந்திய பயண முகவர்கள் சங்கம், இந்திய பயண சுற்றுலா அமைப்பு போன்ற சுற்றுலா சார்ந்த நிறுவனங்கள் ஏற்பாடு செய்யும் கருத்தரங்குகளில் ஆலோசனைக் கூட்டங்களில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொள்வதால் தமிழக சுற்றுலா சிறப்பியல்புகளையும், வசதிகளையும் சிறந்த முறையில் வெளிப்படுத்தும் வாய்ப்பாக உள்ளது.

விளம்பரக் கூட்டங்கள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாப் பயணிகளை தமிழ் நாட்டிற்கு தருவிக்கின்ற நகரங்களில் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களில் பயண முகவர்கள், பத்திரிகையாளர் போன்றோர் வரவழைக்கப்பட்டு தமிழகம் பற்றி நேர்முக தகவல் அளிக்கப்படுகின்றன. இதனால் தமிழ் நாட்டிற்கு அதிக அளவில் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் கவரப்படுகின்றார்கள்.

சென்ற ஆண்டு விளம்பர விளக்க முகாம்கள் ஆக்ரா, அகமதாபாத், பெங்களூர், ஹைதராபாத், மும்பை, கோவா ஆகிய நகரங்களில் நடத்தப்பட்டன.

கம்ப்யூட்டர் யுகமாக மாறிய இக்காலத்தில் கம்ப்யூட்டர் மூலம் இத்துறையைப் பற்றிய தகவல்கள் வழங்க உலகெங்கும் உள்ள இண்டர்நெட் வழி வெளிப்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

## தமிழக சுற்றுலா விழாக்கள்

இசை, நடனம் மற்றும் நாடகம் ஆகியவை தமிழக மக்களின் ஒருங்கிணைந்த வாழ்க்கையின் பகுதியாக அமைந்துள்ளன. பரத நாட்டியம் பல நூற்றாண்டு காலமாக காலத்தால் அழிக்க முடியாமல் நடைமுறையில் இருந்து வரும் ஒரு கலை தமிழ்நாட்டில் பண்பாட்டுச் சுற்றுலாவை மேம்படுத்த பின்வரும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன:

1. மாமல்லபுரத்தில் நாட்டிய விழா.
2. உதகமண்டலத்திலும், ஏனைய மலை வாசஸ்தலங்களிலும் கோடை விழா.
3. உதகையில் தேயிலை மற்றும் சுற்றுலா விழா.
4. சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா





5. மதுரையில் சித்திரைத் திருவிழா.
6. முக்கியமான சுற்றுலா மையங்களில் பொங்கல் விழா
7. கிருஷ்ணகிரியில் மாம்பழ விழா.
8. குற்றாலத்தில் சாரல் திருவிழா.

இவ்விழாக்களில் முதல் ஐந்து விழாக்களை நடத்துவதற்கு மத்திய அரசு நிதியுதவி செய்கிறது. இவ்விழாக்கள் மட்டுமின்றி திருவையாறில் தியாகராஜ ஆராதனை விழா, கன்னியாகுமரியில் 'குமரிமுனை' விழா முதலிய விழாக்களிலும் இத்துறை பங்கேற்கிறது.

## சுற்றுலாச் சட்டம்

தமிழக சுற்றுலா மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு சுற்றுலாப் பயணிகள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி, சுற்றுலா தொழிலில் ஈடுபடும் தங்கும் விடுதிகள் நடத்துவோர், பயண முகவர்கள், வழிகாட்டிகள் மற்றும் கைவினைப் பொருள் விற்பன்னர்கள் முதலியோர் தவறிழைப்பதை தடுத்திடவும், கட்டுப்படுத்தவும், 'தமிழக சுற்றுலாச் சட்டம்' கொண்டுவரப்பட உள்ளது. ஹிமாசலபிரதேசம், ஜம்மு-காஷ்மீர், கோவா முதலிய மாநிலங்களில் உள்ளது போன்று சட்டமியற்ற ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## உணவுக்கலை பயிற்சி நிறுவனம்-மனித வள மேம்பாடு

திருச்சி-தஞ்சை நெடுஞ்சாலையில் துவாக்குடியில் உள்ள உணவுக் கலை நிறுவனம், சுற்றுலாத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. 1994-95 ஆம் ஆண்டு முதல் 'மூன்றாண்டு பட்டயப் படிப்பு' வழங்கும் சுயநிதி நிறுவனமாக இயங்கி வருகிறது. மூன்று ஆண்டு உணவக மேலாண்மை மற்றும் உணவுக் கலை பயிற்றுவிக்கப்படுகிறது.

மேலும், ஓராண்டு முழு நேரப் பயிற்சி சான்றிதழ் வகுப்புகள் கீழ்கண்ட துறைகளில் நடத்தப்படுகின்றன:

1. ஓட்டல் வரவேற்பு, கணக்கு வைப்பு முறை மற்றும் இல்லப் பராமரிப்பு.
2. சிற்றுண்டிச் சாலைகளில் உணவு பரிமாறும் முறை.
3. ரொட்டி மற்றும் இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல்

4. உணவு உற்பத்தி செய்யும் முறைகள்

5. இல்லப் பராமரிப்பு.

ஒவ்வொரு ஆண்டும், இந்த நிறுவனத்திற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டும் ரூ. 12.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**மத்திய அரசு நிதி உதவித் திட்டம்-நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள்**

(அ) கீழ்க்கண்ட சுற்றுலா விடுதிகளின் கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன:

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1. சாலையோர வசதி விடுதி, ஸ்ரீபெரும்புதூர் (2 அறைகள் மற்றும் உணவகம்) | 22.16 |
| 2. சுற்றுலா விடுதி, விருதுநகர் (10 அறைகள் மற்றும் உணவகம்) | 28.78 |
| 3. சுற்றுலா வளாகம், சேலம் (20 அறைகள் மற்றும் உணவகம், சுற்றுலா அலுவலகம்) | 38.00 |
| 4. சுற்றுலா விடுதி, நாமக்கல் (16 அறைகள் மற்றும் உணவகம்) | 23.25 |
| 5. சுற்றுலா விடுதி, குற்றாலம் (14 அறைகள் மற்றும் உணவகம்) | 40.00 |
| 6. கிருஷ்ணகிரி சுற்றுலா வளாகம் விரிவுபடுத்துதல் (18 அறைகள் மற்றும் கூட்ட அரங்கம்) | 17.00 |
| 7. சுற்றுலா வளாகம், திருநெல்வேலி (14 அறைகள், உணவகம் மற்றும் சுற்றுலா அலுவலகம்) | 47.00 |
| 8. சுற்றுலா விடுதி, புதுக்கோட்டை (8 அறைகள் மற்றும் உணவகம்) | 19.00 |



| | |
|---|---|
| 9. யாத்ரி நிவாஸ், இராமேஸ்வரம் (15 அறைகள்) | 44.78 |

ஆ. கீழ்க்கண்ட இடங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1. கொடைக்கானலில் குடில்கள் (8 குடில்கள்) | 30.40 |
| 2. யாத்ரி நிவாஸ், சமயபுரம்/ஸ்ரீரங்கம் (12 அறைகள் மற்றும் உணவகம்) | 46.00 |
| 3. சுற்றுலா வரவேற்பு மையம், தரங்கம்பாடி. (4 அறைகள்) | 29.49 |
| 4. சுற்றுலா விடுதி, விழுப்புரம் (8 அறைகள் மற்றும் உணவகம்) | 18.78 |
| 5. சுற்றுலா வரவேற்பு மையம், தஞ்சாவூர் (8 அறைகள் - சுற்றுலா அலுவலகம்) | 13.00 |
| 6. யாத்ரி நிவாஸ், திருவண்ணாமலை (9 அறைகள் மற்றும் உணவகம்) | 39.10 |
| 7. சுற்றுலா வளாகம், காஞ்சிபுரம் (6 அறைகள்) | 24.60 |
| 8. சுற்றுலா குடில்கள், ஏற்காடு (6 அறைகள்) | 26.28 |
| 9. கடற்கரைக் குடில்கள், திருச்செந்தூர் (8 அறைகள்) | 26.28 |
| 10. சுற்றுலா வளாகம், ஒசூர் (6 அறைகள்) | 25.73 |
| 11. சுற்றுலா வளாகம், வேடந்தாங்கல் (6 அறைகள்) | 25.36 |
| 12. உதகமண்டலம் ஏரிக்கு படகுகள் வாங்குதல் | 8.30 |

1996-97 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது :

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சாலையோர வசதி விடுதி, வட்டக்கோட்டை | 20.00 |
| 2. | சாலையோர வசதி விடுதி, பெரம்பலூர் | 20.00 |
| 3 | சாலையோர வசதி விடுதி, கொடைரோடு | 20.00 |
| 4 | சாலையோர வசதி விடுதி, திருத்தணி | 20.00 |
| 5 | காட்சி கோபுரம், கன்னியாகுமரி | 30.00 |
| 6 | வேலூர் கோட்டையில் சுற்றுலா வசதிகள் | 40.00 |
| 7 | பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் சுற்றுலா வசதிகள் | 30.00 |
| 8. | சுற்றுலா பேருந்துகள் வாங்குதல் | 20.30 |
| | மொத்தம் | 200.30 |

1997-98 ஆம் ஆண்டில் கூடுதல் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

**மாவட்ட உலாத்தலம்**

நமது மக்களுக்குச் சுற்றுலா விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சுற்றுலா ஆர்வத்தைத் தூண்டவும் மாவட்ட உலாத்தலத் திட்டம் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு அல்லது மூன்று மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குடிநீர், கழிப்பறை, குளியல் அறை மற்றும் உடை மாற்றும் அறை, மின் விளக்கு ஆகிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. 1983-84 முதல் 1995-96 வரை 18 மாவட்ட உலாத்தலங்களை மேம்படுத்த இதுவரை ரூ. 67.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



**பூம்புகார் சுற்றுலா வளாகம்**

பண்டைத் தமிழரின் நாகரீகம், கடல் வாணிகம், வரலாறு ஆகிய தொன்மைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டு பூம்புகார். தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் நகர் பூம்புகார் இங்குள்ள எழுநிலை மாடத்துடன் கூடிய கலைக்கூடம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம் மற்றும் நெடுங்கல் மன்றம் முதலியவை மிக நுணுக்கமான சிற்ப வேலைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டு. இம்மாநிலத்தின் அழகிய சுற்றுலாத் தலங்களுள் பூம்புகாரும் ஒன்றாகும்.

சிறப்புத்திட்டமாக, பூம்புகார் சுற்றுலா வளர்ச்சிக்கென்று கீழ்க்கண்ட பணிகள் ரூ. 62.00 இலட்சத்திற்கு ஒப்பளிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

1. கலைக்கூடம், கொற்றப்பந்தல் மற்றும் சுற்றுலா விடுதிகளை சீரமைப்பு செய்து வண்ணம் பூசுதல்
2. தோட்டத்தை மேம்படுத்துதல்.
3. புதிய மின் டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.
4. நினைவுச் சின்னங்களை ஒளியூட்டுதல்.
5. சங்குக் குடிலை சீரமைப்பு செய்து சீர்வனி செய்தல்.
6. வளைவு சாலை, கடற்கரை சாலை பழுதுபார்த்தல், சிறு பாலங்கள் கட்டுதல் மற்றும் சிமெண்ட் சாலை கட்டுதல்
7. குடிநீர் வழியை பழுதுபார்த்து குடிநீர் வசதி செய்தல்
8. நெடுங்கல் மன்றத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்புதல் மற்றும் கழிப்பறை கட்டுதல்.
9. மின் ஆக்கி வாங்குதல் மற்றும் மின் ஆக்கி அறை கட்டுதல்
10. சுற்றுலா அலுவலகம் மற்றும் குடியிருப்புகளை பழுது பார்த்தல்.
11. தோட்டக்காரர்களுக்கும், காவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டுதல்.
12. சுவரொட்டிகள் மற்றும் மடிப்பேடுகள் அச்சடித்தல்
13. இலஞ்சி மன்றத்தைச் சுற்றி தற்காலிக கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல்.

[1997 ஏப்ரல் 4

## வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டை, பாஞ்சாலக்குறிச்சி

வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட முதல் சுதந்திரப் போராளி வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக 1974-ல் கட்டப்பட்ட நினைவுச் சின்னம் பாஞ்சாலக்குறிச்சியில் சுற்றுலாத் துறையினால் பராமரிக்கப்படுகிறது. இங்கு ஆங்கிலேய ஆட்சியில் கோட்டை இடிக்கப்பட்ட போதிலும், சில பகுதிகள் தொல்பொருள் ஆராய்ச்சி துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இங்கு பழமை வாய்ந்த தேவி ஜக்கம்மாள் ஆலயம் உள்ளது. இந்தக் கோட்டையில் கீழ்கண்ட பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு ரூ. 24.00 இலட்சம் சிறப்பு திட்டமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1. குடிநீர் வசதி.
2. நிலச்சீரமைப்பு மற்றும் குழந்தைகள் விளையாட்டுச் சாதனங்களுடன் பூங்கா அமைத்தல்.
3. கழிப்பறை கட்டுதல்.
4. நுழைவுச் சீட்டு கொடுக்கும் அறை கட்டுதல்.
5. கம்பி அரண் அமைத்தல்.
6. ஆறு அலங்கார வளைவுகளை பழுது பார்த்து வண்ணம் பூசுதல்.
7. தங்குமிடத்தை பராமரித்து புதுப்பித்தல்.
8. இதர பராமரிப்பு பணிகள்.
9. சுவரொட்டிகள் மற்றும் மடிப்பேடுகள் அச்சடித்தல்.

## மாநில அரசு நிதியில் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | ஒகேனக்கல்லில் நடைபாதை அமைத்தல், கழிப்பறை கட்டுதல், காட்சி முனை கட்டுதல் ஆகியவை | 10.50 |
| 2. | வீடூர் அணையில் தங்குமிடம், கழிப்பறை மற்றும் அணைப்பகுதியில் மின் விளக்கு வசதிகள் செய்தல் | 7.00 |
| 3. | குற்றாலத்தில் படகு இல்லம் கட்டுதல் | 10.00 |
| 4. | முக்கொம்பில் சுற்றுலா வசதிகள் செய்தல் | 10.00 |



1997 ஏப்ரல் 4]

## 1997-98-ம் ஆண்டு பகுதி 2 திட்டங்கள்

1997-98 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயற்படுத்தபடவுள்ளன:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பெங்களூரில் சுற்றுலா தகவல் நிலையம் திறத்தல் | 3.39 |
| 2. | ஹைதராபாத்தில் சுற்றுலா தகவல் நிலையம் திறத்தல் | 3.39 |
| 3. | திருவனந்தபுரம் விமான நிலையத்தில் சுற்றுலா தகவல் நிலையம் திறத்தல். | 3.39 |

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971ஆம் ஆண்டு 5 சுற்றுலா மாளிகைகள் மற்றும் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன் இயக்கப்படும் 2 ஊர்திகள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டதாக உருவாக்கப்பட்டது. தற்பொழுது தென்னிந்தியாவில் தனிச்சிறப்புடன் கூடியதாக 33 விடுதிகளைக் கொண்டுள்ளது. தற்சமயம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட சுற்றுலா வசதிகளைப் பெற்றுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | விடுதிகள் | 33 |
| 2. | இளைஞர் விடுதிகள் (நடுத்தர சுற்றுலாப் பயணிகளுக்காக) | 8 |
| 3. | படகுத் துறைகள் | 7 |
| 4. | சிற்றுண்டியகங்கள் | 3 |
| 5. | தொலைநோக்கி இல்லங்கள் | 4 |
| 6. | இயங்கும் சிற்றுண்டியகங்கள் | 2 |
| 7. | தேநீரகம் | 2 |
| 8. | பூங்காக்கள் | 3 |
| 9. | சுற்றுலா சேவை மையம் (பெட்ரோல் பங்க்) | 1 |

இளைஞர் விடுதிகள் நடுத்தரச் சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்ல வசதிகள் பல படுக்கை அறைகள் கொண்டதாக குறைந்த வாடகையில நடத்தும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 1996-97 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்:

1. போக்குவரத்துப் பிரிவு பழைய பேருந்துகளால் சில வருடங்களாக பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வந்தது. எனவே, இவ்வருடம் 10 புதிய பேருந்துகள் வாங்க, ஒரு கோடி ரூபாய் போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்திலிருந்து கடன் பெறப்பட்டுள்ளது. இதில் 7 புதிய பேருந்துகள் தற்போது உபயோகத்தில் உள்ளன. மற்றும் மீதமுள்ள புதிய பேருந்துகள் மார்ச் மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதிகப்பட்சம் 3½ வயது கொண்ட புதிய பேருந்துகளைக் கொண்டு சுற்றுலாவை நடத்தும். இது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது.

2. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்கால தொழில் நுட்பத்தைக் கொண்டு 3 புதிய பேருந்துகளில் காற்று மூலம் பேருந்து அதிர்வை கட்டுப்படுத்தும் நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால், மோசமான சாலையில் செல்லும்போது பேருந்தில் அசதியடையாமல் சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியும்.

3. தரமான பொருட்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுரைப்படி வெளிப்படையான டெண்டர் மூலம் குறைந்த விலையில் வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4. இதைப் போலவே சிக்கன நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்தியன் மூலம் தேவையற்ற செலவுகளை குறைத்து இவ்வாண்டு பொருட்காட்சியில் மட்டும் ரூ. 15.00 இலட்சத்தை பெரிய அளவு கட்-அவுட்களை தவிர்த்ததின் மூலம் சேமித்துள்ளது. இதுபோன்றே விடுதி மற்றும் போக்குவரத்திலும் ரூ. 60.00 இலட்சம் சேமிக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்தும், பேருந்துகளும்

போக்குவரத்துக்கென 4 சீர்வளி வசதியுடன் கூடிய பேருந்துகளுடன் மொத்தம் 25 பேருந்துகள் இக்கழகத்தால் இயக்கப்படுகிறது.



## ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சுற்றுலாக்கள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட சுற்றுலாக்களை இயக்குகிறது:—

1. சென்னை மாநகரை சுற்றிப் பார்ப்பதற்கானது.
2. ஒரு நாள் சென்னை புறநகர்ச் சுற்றுலா.
3. மாமல்லபுரம் - காஞ்சிபுரம் சுற்றுலா.
4. திருப்பதி சுற்றுலா.
5. திருத்தணி, திருப்பதி, திருச்சானூர், காளஹஸ்தி சுற்றுலா.
6. வார இறுதிச் சுற்றுலா.
7. 8 நாட்கள் தமிழகச் சுற்றுலா.
8. அறுபடை வீடு தமிழக சுற்றுலா.
9. ஆறு நாட்கள் மூகாம்பிகை சுற்றுலா.
10. 7 நாட்கள் கோவா - மந்திராலயம் சுற்றுலா.
11. 6 நாட்கள் தென்னிந்தியச் சுற்றுலா.
12. 7 நாட்கள் மேற்கு கடற்கரைச் சுற்றுலா.
13. 14 நாட்கள் கொண்ட தென்னிந்தியச் சுற்றுலா.

இது தவிர தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாணவர்களுக்கென சிறப்பு சுற்றுலாக்களை சலுகைக் கட்டணத்தில் நடத்துகிறது.

மேலும், மேற்கண்ட ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சுற்றுலாக்களைத் தவிர வெளிநாடு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தனியே அவரவர் தேவைக்கென சிறப்புச் சுற்றுலாக்களையும் அளிக்கிறது.

அரசுப் பணியாளர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகையில் சென்றுவர சிறப்புச் சுற்றுலாவையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிறது.

## விற்பனை முன்னேற்றம் மற்றும் சந்தை வசதிகள்

*1.* விடுதிகளில் குழுவாக தங்குவதற்கான பதிவுகளையும், சிறப்பு சுற்றுலாக்களை நிறுவனங்களின் பணியாளர்களின் வசதிக்கா இயங்குவதற்கும் ஒரு தனிச் சந்தைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் மும்பையிலுள்ள ஒரு பயண முகவர் ரூ. 12.0 இலட்சத்திற்கான வியாபாரத்தை ஏற்கெனவே *1996-97* ஆம் ஆண் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கொடுத்துள்ளார். இதுபோல் வியாபாரம் அகமதாபாத் மற்றும் மும்பையிலுள்ள புகழ் வாய் பயண முகவர்கள் கொடுத்துள்ளனர்.

*2.* குஜராத் மற்றும் மராட்டிய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விற்பனை முகவர்களா அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த முயற்சியால் வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் கழகத்தின் வியாபாரம் வெகுவாக முன்னேறும்.

## நிதி நிலைச் செயல்பாடு

*1995-96* ஆம் ஆண்டின் பணப்புழக்கம் ரூ. *19.24* கோடி *1996-97* ஆம் ஆண்டின் பணப்புழக்கம் ரூ. *20.50* கோடியை ஒப்பிடும் *1996-97* ஆம் ஆண்டில் *7%* வளர்ச்சியடைந்துள்ளது.

---

D
V24,3'N97
N97 . 28 ; 216652